உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

சைவசமயாசாரியராகிய

மாணிக்கவாசகசுவாமிகள்

அருளிச்செய்த

திருவாசகம்,

திருக்கோவையார்.

இவை

யாழ்ப்பாணத்து நல்லூர்

ஆறுமுகநாவலரவர்கள்

முன்னிலையிற் பரிசோதித்து,

சிதம்பர சைவப்பிரகாசவித்தியாசாலைத் தருமபரிபாலகர்

விசுவநாதபிள்ளையால்

சென்னபட்டணம்

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

இரண்டாம் பதிப்பு.

துந்துபிஞு ஐப்பசிமீ.

1863

ப தி க வ க ரா தி.

ஆகத்திருப்பதிகங்கள் - ருக.

உ

கணபதி துணை.

சிவமயம்.

தமிழ்வேதமாகிய

திருவாசகம்.

நூற்சிறப்பு.

நேரிசை வெண்பா.

திருச்சிற்றம்பலம்.

தொல்லை யிரும்பிறவிச் சூழுந்தளை நீக்கி
யல்லலறுத் தானந்த மாக்கியதே—யெல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
றிருவா சகமென்னுந் தேன்.

சிவமயம்.

சி வ பு ரா ண ம்.

சிவனது நாதிமுறைமையானபழமை.

திருப்பெருந்துறையிலருளிச்செய்யப்பட்டது.

கலிவெண்பா.

திருச்சிற்றம்பலம்.

நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க
விமைப்பொழுது மென்னெஞ்சி னீங்காதான் றாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் றாள்வாழ்க
வாகம மாகிநின் றண்ணிப்பான் றாள்வாழ்க
வேக னநேக னிறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க
வீசனடி போற்றி யெந்தை யடிபோற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கு மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
யாராத வின்ப மருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையு ணின்ற வதனா
லவனரு ளாலே யவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுது மோய வுரைப்பனியான்
கண்ணுதலான் றன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
யெண்ணுதற் கெட்டா வெழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியா
யெண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்

பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்து
ளெல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றே
னுய்யவென் னுள்ளத்து ளோங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்க
ளையா வெனவோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியா யியமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
யெஞ்ஞான மில்லாதே னின்பப் பெருமானே
யஞ்ஞானந் தன்னை யகல்விக்கு நல்லறிவே
யாக்க மளவிறுதி யில்லா யனைத்துலகு
மாக்குவாய் காப்பா யழிப்பா யருடருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பி
னாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுட் டேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கு மெங்கள் பெருமா
னிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் றன்னை
மறைந்திட மூடிய மாய விருளை
யறம்பாவ மென்னு மருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகு
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த வடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே

தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கு மாரியனே
நேச வருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
யாரா வமுதே யளவிலாப் பெம்மானே
யோராதா ருள்ளத் தொளிக்கு மொளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
யின்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
யன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
யாதியனே யந்த நடுவாகி யல்லானே
யீர்த்தென்னை யாட்கொண்ட வெந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தி
னோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்விலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
யாற்றின்ப வெள்ளமே யத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையு
ளூற்றான வுண்ணா ரமுதே யுடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
வாற்றேனெம் மையா வரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளி னட்டம் பயின்றாடு நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
யல்லற் பிறவி யறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து. ௧

திருச்சிற்றம்பலம்.

கீர்த்தித்திருவகவல்.

சிவனது திருவருட்புகழ்ச்சிமுறைமை.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

நிலைமண்டலவாசிரியப்பா.

திருச்சிற்றம்பலம்.

தில்லை மூதூ ராடிய திருவடி
பல்லுயி ரெல்லாம் பயின்றன னாகி
யெண்ணில் பல்குண மெழில்பெற விளங்கி
மண்ணும் விண்ணும் வானோ ருலகுந்
துன்னிய கல்வி தோற்றியு மழித்து
மென்னுடை யிருளை யேறத் துரந்து
மடியா ருள்ளத் தன்புமீ தூரக்
குடியாக் கொண்ட கொள்கையுஞ் சிறப்பு
மன்னு மாமலை மகேந்திர மதனிற்
சொன்ன வாகமந் தோற்றுவித் தருளியுங்
கல்லா டத்துக் கலந்தினி தருளி
நல்லா ளோடு நயப்புற வெய்தியும்
பஞ்சப் பள்ளியிற் பான்மொழி தன்னொடு
மெஞ்சா தீண்டு மின்னருள் விளைத்துங்
கிராத வேடமொடு கிஞ்சுக வாயவள்
விராவு கொங்கை நற்றடம் படிந்துங்
கேவேட ராகிக் கெளிறது படுத்து
மாவேட் டாகிய வாகமம் வாங்கியு
மற்றவை தம்மை மகேந்திரத் திருந்
துற்றவைம் முகங்க ளாற்பணித் தருளியு
நந்தம் பாடியி னான்மறை யோனா
யந்தமி லாரிய னாயமர்ந் தருளியும்
வேறுவே றுருவும் வேறுவே றியற்கையு
நூறுநூ றாயிர மியல்பின தாகி
யேறுடை யீசனிப் புவனியை யுய்யக்
கூறுடை மங்கையுந் தானும்வந் தருளிக்

குதிரையைக் கொண்டு குடநா டதன்மிசைச்
சதுர்படச் சாத்தாய்த் தானெழுந் தருளியும்
வேலம் புத்தூர் விட்டே றருளிக்
கோலம் பொலிவு காட்டிய கொள்கையுந்
தர்ப்பண மதனிற் சாந்தம் புத்தூர்
விற்பொரு வேடற் கீந்த விளைவு
மொக்கணி யருளிய முழுத்தழன் மேனி
சொக்க தாகக் காட்டிய தொன்மையு
மரியொடு பிரமற் களவறி யொண்ணு
னரியைக் குதிரை யாக்கிய நன்மையு
மாண்டுகொண் டருள வழகுறு திருவடி
பாண்டி யன்றனக் குப்பரி மாவிற்
றீண்டு கனக மிசையப் பெறாஅ
தாண்டா னெங்கோ னருள்வழி யிருப்பத்
தூண்டு சோதி தோற்றிய தொன்மையு
மந்தண னாகி யாண்டுகொண் டருளி
யிந்திர ஞாலங் * காட்டிய வியல்பு
மதுரைப் பெருநன் மாநக ரிருந்து
குதிரைச் சேவக னாகிய கொள்கையு
மாங்கது தன்னி லடியவட் காகப்
பாங்காய் மண்சுமந் தருளிய பரிசு
முத்தர கோச மங்கையு ளிருந்து
வித்தக வேடங் காட்டிய வியல்பும்
பூவண மதனிற் பொலிந்திருந் தருளித்
தூவண மேனி காட்டிய தொன்மையும்
வாத வூரினில் வந்தினி தருளிப்
பாதச் சிலம்பொலி காட்டிய பண்புந்
திருவார் பெருந்துறைச் செல்வ னாகிக்
கருவார் சோதியிற் கரந்த கள்ளமும்
பூவல மதனிற் பொலிந்தினி தருளிப்
பாவ நாச மாக்கிய பரிசுந்
தண்ணீர்ப் பந்தர் சயம்பெற வைத்து
நன்னீர்ச் சேவக னாகிய நன்மையும்
விருந்தின னாகி வெண்கா டதனிற்
குருந்தின் கீழன் றிருந்த கொள்கையும்
பட்ட மங்கையிற் பாங்கா யிருந்தங்
கட்டமா சித்தி யருளிய வதுவும்

* இந்திரசாலம் இந்திரஞாலமெனத் திரிந்தது.

வேடுவ னாகி வேண்டுருக் கொண்டு
காடது தன்னிற் கரந்த கள்ளமு
மெய்க்காட் டிட்டு வேண்டுருக் கொண்டு
தக்கா னொருவ னாகிய தன்மையு
மோரி யூரி னுகந்தினி தருளிப்
பாரிரும் பாலக னாகிய பரிசும்
பாண்டூர் தன்னி லீண்ட விருந்துந்
தேவூர்த் தென்பாற் றிகழ்தரு தீவிற்
கோவார் கோலங் கொண்ட கொள்கையுந்
தேனமர் சோலைத் திருவா ரூரின்
ஞானந் தன்னை நல்கிய நன்மையு
மிடைமரு ததனி லீண்ட விருந்து
படிமப் பாதம் வைத்தவப் பரிசு
மேகம் பத்தி னியல்பா யிருந்து
பாகம் பெண்ணோ டாயின பரிசுந்
திருவாஞ் சியத்திற் சீர்பெற விருந்து
மருவார் குழலியொடு மகிழ்ந்த வண்ணமுஞ்
சேவக னாகித் திண்சிலை யேந்திப்
பாவகம் பலபல காட்டிய பரிசுங்
கடம்பூர் தன்னி லிடம்பெற விருந்து
மீங்கோய் மலையி லெழிலது காட்டியு
மையா றதனிற் சைவ னாகியுந்
துருத்தி தன்னி லருத்தியோ டிருந்துந்
திருப்பனை யூரில் விருப்ப னாகியுங்
கழுமல மதனிற் காட்சி கொடுத்துங்
கழுக்குன் றதனில் வழுக்கா திருந்தும்
புறம்பய மதனி லறம்பல வருளியுங்
குற்றா லத்துக் குறியா யிருந்து
மந்தமில் பெருமை யழலுருக் கரந்து
சுந்தரவேடத் தொருமுத லுருவுகொண்
டிந்திர ஞாலம் போலவந் தருளி
யெவ்வெவர் தன்மையுந் தன்வயிற் படுத்துத்
தானே யாகிய தயாபர னெம்மிறை
சந்திர தீபத்துச் சாத்திர னாகி
யந்தரத் திழிந்துவந் தழகமர் பாலையுட்
சுந்தரத் தன்மையொடு துதைந்திருந் தருளியு
மந்திர மாமலை மகேந்திர வெற்ப
னந்தமில் பெருமை யருளுடை யண்ண

லெந்தமை யாண்ட பரிசது பகரி
ஞற்ற லதுவுடை யழகமர் திருவுரு
நீற்றுக் கோடி * நிமிர்ந்து காட்டியு
மூனந் தன்னை யொருங்குட னறுக்கு
மானந் தம்மே யாறு வருளியு
மாதிற் கூறுடை மாப்பெருங் கருணைய
ஞதப் பெரும்பறை நவின்று கறங்கவு
மழுக்கடை யாம லாண்டுகொண் டருள்பவன்
கழுக்கடை தன்னைக் கைக்கொண் டருளியு
மூல மாகிய மும்மல மறுக்குந்
தூய மேனிச் சுடர்விடு சோதி
காதல ஞகிக் கழுநீர் மாலை
யேலுடைத் தாக வெழில்பெற வணிந்து
மரியொடு பிரமற் களவறி யாதவன்
பரிமா வின்மிசைப் பயின்ற வண்ணமு
மீண்டு வாரா வழியருள் புரிபவன்
பாண்டி நாடே பழம்பதி யாகவும்
பத்திசெய் யடியரைப் பரம்பரத் துய்ப்பவ
னுத்தர கோச மங்கையூ ராகவு
மாதி மூர்த்திகட் கருள்புரிந் தருளிய
தேவ தேவன் திருப்பெய ராகவு
மிருள்கடிந் தருளிய வின்ப வூர்தி
யருளிய பெருமை யருண்மலை யாகவு
மெப்பெருந் தன்மையு மெவ்வெவர் திறமு
மப்பரி சதனு லாண்டுகொண் டருளி
நாயி னேனை நலமலி தில்லையுட்
கோல மார்தரு பொதுவினில் வருகென
வேல வென்னை யீங்கொழித் தருளி
யன்றுடன் சென்ற வருள்பெறு மடியவ
ரொன்ற வொன்ற வுடன்கலந் தருளியு
மெய்தவந் திலாதா ரெரியிற் பாயவு
மாலது வாகி மயக்க மெய்தியும்
பூதல மதனிற் புரண்டுவீழ்ந் தலறியுங்
கால்விசைத் தோடிக் கடல்புக மண்டி
நாத நாத வென்றமு தாற்றிப்
பாத மெய்தினர் பாத மெய்தவும்
பதஞ்சலிக் கருளிய பரமநா டகவென்

* கொடி கோடியென நீட்டல் விகாரம்பெற்று நின்றது.

நிதஞ்சலிப் பெய்தரின் றேங்கின ரேங்கவு
மெழில்பெறு மிமயத் தியல்புடை யம்பொற்
பொலிதரு புலியூர்ப் பொதுவினி னடாவில்
கனிதரு செவ்வா யுமையொடு காளிக்
கருளிய திருமுகத் தழகுறு சிறுநகை
யிறைவ னீண்டிய வடியவ ரோடும்
பொலிதரு புலியூர்ப் புக்கினி தருளின
னொலிதரு கைலை யுயர்கிழ வோனே.

திருச்சிற்றம்பலம்.

திருவண்டப்பகுதி.

சிவனது தூலசூக்குமத்தை!வியந்தது.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

இணைக்குறளாசிரியப்பா.

திருச்சிற்றம்பலம்.

அண்டப் பகுதியி னுண்டைப் பிறக்க
மளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
யொன்றனுக் கொன்று நின்றெழில் பகரி
னூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
வின்னுழை கதிரின் றுன்னணுப் புரையச்
சிறிய வாகப் பெரியோன் றெரியின்
வேதியன் றொகையொடு மாலவன் மிகுதியுந்
தோற்றமுஞ் சிறப்பு மீற்றொடு புணரிய
மாப்பே ரூழியு நீக்கமு நிலையுஞ்
சூக்கமொடு தூலத்துச் சூறை மாருதத்
தெறியது வளியிற்
கொட்கப் பெயர்க்குங் குழகன் முழுவதும்
படைப்போற் படைக்கும் பழையோன் படைத்தவை
காப்போற் காக்குங் கடவுள் காப்பவை
கரப்போன் கரப்பவை கருதாக்
கருத்துடைக் கடவு டிருத்தகு

மறுவகைச் சமயத் தறுவகை யோர்க்கும்
வீடுபே றாய்நின்ற விண்ணோர் பகுதி
கீடம் புரையுங் கிழவோ னாடொறு
மருக்கனிற் சோதி யமைத்தோன் றிருத்தகு
மதியிற் றண்மை வைத்தோன் றிண்டிறற்
றீயின் வெம்மை செய்தோன் பொய்தீர்
வானிற் கலப்பு வைத்தோன் மேதகு
காலி னூக்கங் கண்டோ னிழறிகழ்
நீரி லின்சுவை நிகழ்ந்தோன் வெளிப்பட
மண்ணிற் றிண்மை வைத்தோ னென்றென்
றெனைப்பல கோடி யெனைப்பல பிறவு
மனைத்தனைத் தவ்வயி னடைத்தோ னஃதான்று
முன்னோன் காண்க முழுதோன் காண்க
தன்னே ரில்லோன் றானே காண்க
வேனத் தொல்லெயி றணிந்தோன் காண்க
கானப் புலியுரி யரையோன் காண்க
நீற்றோன் காண்க நினைதொறு நினைதொறு
மாற்றேன் காண்க வந்தோ கெடுவே
னின்னிசை வீணையி லிசைந்தோன் காண்க
வன்னதொன் றவ்வயி னறிந்தோன் காண்க
பரமன் காண்க பழையோன் காண்க
பிரமன்மால் காணாப் பெரியோன் காண்க
வற்புதன் காண்க வநேகன் காண்க
சொற்பதங் கடந்த தொல்லோன் காண்க
சித்தமுஞ் செல்லாச் சேட்சியன் காண்க
பத்தி வலையிற் படுவோன் காண்க
வொருவ னென்னு மொருவன் காண்க
விரிபொழின் முழுதாய் விரிந்தோன் காண்க
வணுத்தருந் தன்மை யிலையோன் காண்க
விணைப்பரும் பெருமையி லீசன் காண்க
வரியதி லரிய வரியோன் காண்க
மருவியெப் பொருளும் வளர்ப்போன் காண்க
நூலுணர் வுணரா நுண்ணியோன் காண்க
மேலொடு கீழாய் விரிந்தோன் காண்க
வந்தமு மாதியு மகன்றோன் காண்க
பந்தமும் வீடும் படைப்போன் காண்க
நிற்பதுஞ் செல்வது மானோன் காண்க
கற்பமு மிறுதியுங் கண்டோன் காண்க

யாவரும் பெறவுறு மீசன் காண்க
தேவரு மறியாச் சிவனே காண்க
பெண்ணா ணலியெனும் பெற்றியன் காண்க
கண்ணா லியானுங் கண்டேன் காண்க
வருணனி சுரக்கு மமுதே காண்க
கருணையின் பெருமை கண்டேன் காண்க
புவனியிற் சேவடி தீண்டினன் காண்க
சிவனென யானுந் தேறினன் காண்க
வவனெனை யாட்கொண் டருளினன் காண்க
குவளைக் கண்ணி கூறன் காண்க
வவளுந் தானு முடனே காண்க
பரமா னந்தப் பழங்கட லதுவே
கருமா முகிலிற் றோன்றித்
திருவார் பெருந்துறை வரையி லேறித்
திருத்தகு மின்னொளி திசைதிசை விரிய
வைம்புலப் பந்தனை வாளர விரிய
வெந்துயர்க் கோடை மாத்தலை கரப்ப
நீடெழிற் றோன்றி வாளொளி மிளிர
வெந்தம் பிறவியிற் கோப மிகுத்து
முரசெறிந்து மாப்பெருங் கருணையின் முழங்கிப்
பூப்புரை யஞ்சலி காந்தள் காட்ட
வெஞ்சா வின்னரு ணுண்டுளி கொள்ளச்
செஞ்சுடர் வெள்ளந் திசைதிசை தெவிட்ட வரையுறக்
கேதக் குட்டங் கையற வோங்கி
யிருமுச் சமயத் தொருபேய்த் தேரினை
நீர்நசை தரவரு நெடுங்கண் மான்கணந்
தவப்பெரு வாயிடைப் பருகித் தளர்வொடு
மவப்பெருந் தாப நீங்கா தசைந்தன
வாயிடை வானப் பேரியாற் றகவயிற்
பாய்ந்தெழுந் தின்பப் பெருஞ்சுழி கொழித்துச்
சுழித்தெம் பந்தமாக் கரைபொரு தலைத்திடித்
தூழூ ழோங்கிய நங்க
ளிருவினை மாமரம் வேர்பறித் தெழுந்
துருவ வருணீ ரோட்டா வருவரைச்
சந்தின் வான்சிறை கட்டி மட்டவிழ்
வெறிமலர்க் குளவாய் கோலி நிறையகின்
மாப்புகைக் கரைசேர் வண்டுடைக் குளத்தின்
மீக்கொள மேன்மேன் மகிழ்தலி னோக்கி

யருச்சனை வயலு ளன்புவித் திட்டுத்
தொண்ட வுழவ ராரத் தந்த
வண்டத் தரும்பெறன் மேகன் வாழ்க
கரும்பணக் கச்சைக் கடவுள் வாழ்க
வருந்தவர்க் கருளு மாதி வாழ்க
வச்சந் தவிர்த்த சேவகன் வாழ்க
நிச்சலு மீர்த்தாட் கொள்வோன் வாழ்க
சூழிருந் துன்பந் துடைப்போன் வாழ்க
வெய்தினர்க் காரமு தளிப்போன் வாழ்க
கூரிருட் கூத்தொடு குனிப்போன் வாழ்க
பேரமைத் தோளி காதலன் வாழ்க
வேதிலர்க் கேதிலெம் மிறைவன் வாழ்க
காதலர்க் கெய்ப்பினில் வைப்பு வாழ்க
நச்சர வாட்டிய நம்பன் போற்றி
பிச்செமை யேற்றிய பெரியோன் போற்றி
நீற்றெடு தோற்ற வல்லோன் போற்றி நாற்றிசை
நடப்பன நடாஅய்க் கிடப்பன கிடாஅய்
நிற்பன நிறீஇச்
சொற்பதங் கடந்த தொல்லோ
னுள்ளத் துணர்ச்சியிற் கொள்ளவும் படாஅன்
கண்முதற் புலனாற் காட்சியு மில்லோன்
விண்முதற் பூதம் வெளிப்பட வகுத்தோன்
பூவி னாற்றம் போன்றுயர்ந் தெங்கு
மொழிவற நிறைந்து மேவிய பெருமை
யின்றெனக் கெளிவந் தருளி
யழிதரு மாக்கை யொழியச் செய்த வொண்பொரு
ளின்றெனக் கெளிவந் திருந்தனன் போற்றி
யளிதரு மாக்கை செய்தோன் போற்றி
யூற்றிருந் துள்ளங் களிப்போன் போற்றி
யாற்றாவின்ப மலர்ந்தலை செய்யப்
போற்றா வாக்கையைப் பொறுத்தல் புகலேன்
மரகதக் குவாஅன் மாமணிப் பிறக்க
மின்னொளி கொண்ட பொன்னொளி திகழத் ௬0
திசைமுகன் சென்று தேடினர்க் கொளித்து
முறையுளி யொற்றி முயன்றவர்க் கொளித்து
மொற்றுமை கொண்டு நோக்கு முள்ளத்
துற்றவர் வருந்த வுறைப்பவர்க் கொளித்து
மறைத்திற நோக்கி வருந்தினர்க் கொளித்து

யித்தந் திரத்திற் காண்டுமென் றிருந்தோர்க்
கத்தந் திரத்தி னவ்வயி னொளித்து
முனிவற நோக்கி நனிவரக் கௌவி
யாணெனத் தோன்றி யலியெனப் பெயர்ந்து
வாணுதற் பெண்ணென வொளித்துஞ் சேண்வயி
னைம்புலன் செலவிடுத் தருவரை தொறும்போய்த்;
துற்றவை துறந்த வெற்றுயி ராக்கை
யருந்தவர் காட்சியுட் டிருந்த வொளித்து
மொன்றுண் டில்லை யென்றறி வொளித்தும்
பண்டே பயிறொறு மின்றே பயிறொறு
மொளிக்குஞ் சோரனைக் கண்டன
மார்மி னார்மி னாண்மலர்ப் பிணையலிற்
றடடளை யிடுமின்
சுற்றுமின் சூழ்மின் றொடர்மின் விடேன்மின்
பற்றுமி னென்றவர் பற்றுமுற் றொளித்துந்
தன்னே ரில்லோன் றானே யான தன்மை
யென்னே ரனையோர் கேட்கவந் தியம்பி
யறைகூவி யாட்கொண் டருளி
மறையோர் கோலங் காட்டி யருளலு
முளையா வன்பென் புருக வோலமிட்
டலைகடற் றிரையி னார்த்தார்த் தோங்கித்
தலைதடு மாறா வீழ்ந்துபுரண் டலறிப்
பித்தரின் மயங்கி மத்தரின் மதித்து
நாட்டவர் மருளவுங் கேட்டவர் வியப்பவுங்
கடக்களி றேற்றாத் தடப்பெரு மதத்தி
னாற்றே னாக வவயவஞ் சுவைதரு
கோற்றேன் கொண்டு செய்தன
னேற்றார் மூதூ ரெழினகை யெரியின்
வீழ்வித் தாங்கன்
றருட்பெருந் தீயி னடியோ மடிக்குடி
லொருத்தரும் வழாமை யொடுக்கினன்
றடக்கையி னெல்லிக் கனியெனக் காயினன்
சொல்லுவ தறியேன் வாழி முறையோ
தரியே னாயேன் றானெனைச் செய்தது
தெரியே னாவா செத்தே னடியேற்
கருளிய தறியேன் பருகியு மாரேன்
விழுங்கியு மொல்லகில் லேன்
செழுந்தண் பாற்கடற் றிரைபுரைவித்

துவாக்கட னள்ளுநீ ருள்ளகந் ததும்ப
வாக்கிறந் தமுத மயிர்க்கா றோறுந்
தேக்கிடச் செய்தனன் கொடியே னூன்றழை
குரம்பை தோறு நாயுட லகத்தே
குரம்பைகொண் டின்றேன் பாய்த்தி நிரம்பிய
வற்புத மான வமுத தாரைக
ளெற்புத் துளைதொறு மேற்றின னுருகுவ
துள்ளங் கொண்டோ ருருச்செய் தாங்கெனக்
கள்ளூ றாக்கை யமைத்தன னொள்ளிய
கன்னற் கனிதேர் களிறெனக் கடைமுறை
யென்னையு மிருப்ப தாக்கின னென்னிற்
கருணை வான்றேன் கலக்க
வருளொடு பராவமு தாக்கினன்
பிரமன்மா லறியாப் பெற்றி யோனே.

திருச்சிற்றம்பலம்.

போற்றித்திருவகவல்.

சகத்திநுற்பத்தி.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

நிலைமண்டலவாசிரியப்பா.

திருச்சிற்றம்பலம்.

நான்முகன் முதலா வானவர் தொழுதெழ
வீரடி யாலே மூவுல களந்து
நாற்றிசை முனிவரு மைம்புலன் மலரப்
போற்றிசெய் கதிர்முடித் திருநெடு மாலன்
றடிமுடி யறியு மாதர வதனிற்
கடுமுர ணேன மாகி முன்கலந்
தேழ்தல முருவ விடந்து பின்னெய்த்
தூழி முதல்வ சயசய வென்று
வழுத்தியுங் காணா மலரடி யிணைகள்
வழுத்துதற் கெளிதாய் வார்கட லுலகினில்
யானை முதலா வெறும்பீ றாய
வூனமி லியோனியி னுள்வினை பிழைத்து
மானுடப் பிறப்பினுண் மாதா வுதரத்
தீனமில் கிருமிச் செருவினிற் பிழைத்து
மொருமதித் தான்றியி னிருமையிற் பிழைத்து
மிருமதி விளைவி னொருமையிற் பிழைத்து
மும்மதி தன்னு ளம்மதம் பிழைத்து
மீரிரு திங்களிற் பேரிருள் பிழைத்து
மஞ்சு திங்களின் முஞ்சுதல் பிழைத்து
மாறு திங்களி னூறலர் பிழைத்து
மேழு திங்களிற் றாழ்புவி பிழைத்து
மெட்டுத் திங்களிற் கட்டமும் பிழைத்து
மொன்பதில் வருதரு துன்பமும் பிழைத்துந்
தக்க தசமதி தாயொடு தான்படுந்
துக்க சாகரத் துயரிடைப் பிழைத்து
மாண்டுக டோறு மடைந்தவக் காலை
யீண்டியு மிருத்தியு மெனைப்பல பிழைத்துங்
காலை மலமொடு கடும்பகற் பசிநிசி

வேலை மித்திரை யாத்திரை பிழைத்துங்
கருங்குழற் செவ்வாய் வெண்ணகைக் கார்மயி
லொருங்கிய சாய னெருங்கியுண் மதர்த்துக்
கச்சற நிமிர்ந்து கதிர்த்து முன்பணைத்
தெய்த்திடை வருந்த வெழுந்து புடைபரந்
தீர்க்கிடை போகா விளமுலை மாதர்தங்
கூர்த்த நயனக் கொள்ளையிற் பிழைத்தும்
பித்த வுலகர் பெருந்துறைப் பரப்பினுண்
மத்தக் களிறெனு மவாவிடைப் பிழைத்துங்
கல்வி யென்னும் பல்கடற் பிழைத்துஞ்
செல்வ மென்னு மல்லலிற் பிழைத்து
நல்குர வென்னுந் தொல்விடம் பிழைத்தும்
புல்வரம் பாய பலதுறை பிழைத்துந்
தெய்வ மென்பதோர் சித்தமுண் டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலு
மாறு கோடி மாயா சத்திகள்
வேறு வேறுதம் மாயைக டொடங்கின
வாத்த மானா ரயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்
சுற்ற மென்னுந் தொல்பசுக் குழாங்கள்
பற்றி யழைத்துப் பதறினர் பெருகவும்
விரத மேபர மாகவே தியருஞ்
சரத மாகவே சாத்திரங் காட்டினர்
சமய வாதிக டத்த மதங்களே
யமைவ தாக வரற்றி மலைந்தனர்
மிண்டிய மாயா வாத மென்னுஞ்
சண்ட மாருதஞ் சுழித்தடித் தாஅர்த்
துலோகா யதமெனு மொண்டிறற் பாம்பின்
கலாபே தத்த கடுவிட மெய்தி
யதிற்பெரு மாயை யெனைப்பல சூழவுந்
தப்பா மேதாம் பிடித்தது சலியாத்
தழலது கண்ட மெழுகது போலத்
தொழுதுள முருகி யழுதுடல் கம்பித்
தாடியு மலறியும் பாடியும் பரவியுங்
கொடிறும் பேதையுங் கொண்டது விடாதெனும்
படியே யாகிநல் லிடையறு வன்பிற்
பசுமரத் தாணி யறைந்தாற் போலக்
கசிவது பெருகிக் கடலென மறுகி

யகங்குழைந் தனுகுல மாய்மெய் விதிர்த்துச்
சகம்பே யென்று தம்மைச் சிரிப்ப
நாணது வொழிந்து நாடவர் பழித்துரை
பூணது வாகக் கோணுத லின்றிச்
சதுரிழந் தறிமால் கொண்டு சாருங்
கதியது பரமா வதிசய மாகக்
கற்ற மனமெனக் கதறியும் பதறியு
மற்றோர் தெய்வங் கனவிலு நினையா
தருபரத் தொருவ னவனியில் வந்து
குருபர னாகி யருளிய பெருமையைச்
சிறுமையென் றிகழாதே திருவடி யிணையைப்
பிறிவினை யறியா நிழலது போல
முன்பின் னாகி முனியா தத்திசை
யென்புநைந் துருகி நெக்குநெக் கேங்கி
யன்பெனு மாறு கரையது புரள
நன்புல னொன்றி நாதவென் றரற்றி
யுரைதடு மாறி யுரோமஞ் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித் திருதய மலரக்
கண்களி கூர நுண்டுளி யரும்பச்
சாயா வன்பினை நாடொறுந் தழைப்பவர்
தாயே யாகி வளர்த்தனை போற்றி
மெய்தரு வேதிய னாகி வினைகெடக்
கைதர வல்ல கடவுள் போற்றி
யாடக மதுரை யரசே போற்றி
கூட லிலங்கு குருமணி போற்றி
தென்றில்லை மன்றினு ளாடி போற்றி
யின்றெனக் காரமு தானாய் போற்றி
மூவா நான்மறை முதல்வா போற்றி
சேவார் வெல்கொடிச் சிவனே போற்றி
மின்னா ருருவ விகிர்தா போற்றி
கன்னா ருரித்த கனியே போற்றி
காவாய் கனகக் குன்றே போற்றி
யாவா வென்றனக் கருளாய் போற்றி
படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி
யிடரைக் களையு மெந்தாய் போற்றி
யீச போற்றி யிறைவ போற்றி
தேசப் பளிங்கின் றிரளே போற்றி
யரைசே போற்றி யமுதே போற்றி

விரைசேர் சரண விகிர்தா போற்றி
வேதி போற்றி விமலா போற்றி
யாதி போற்றி யறிவே போற்றி
கதியே போற்றி கனியே போற்றி
நதிசேர் செஞ்சடை நம்பா போற்றி
யுடையாய் போற்றி யுணர்வே போற்றி
கடையே னடிமை கண்டாய் போற்றி
யையா போற்றி யணுவே போற்றி
சைவா போற்றி தலைவா போற்றி
குறியே போற்றி குணமே போற்றி
நெறியே போற்றி நினைவே போற்றி
வானோர்க் கரிய மருந்தே போற்றி
யேனோர்க் கெளிய விறைவா போற்றி
மூவேழ் சுற்ற முரணுறு நரகிடை
யாழா மேயரு ளரசே போற்றி
தோழா போற்றி துணைவா போற்றி
வாழ்வே போற்றியென் வைப்பே போற்றி
முத்தா போற்றி முதல்வா போற்றி
யத்தா போற்றி யரனே போற்றி
யுரையுணர் விறந்த வொருவ போற்றி
விரிகட லுலகின் விளைவே போற்றி
யருமையி லெளிய வழகே போற்றி
கருமுகி லாகிய கண்ணே போற்றி
மன்னிய திருவருண் மலையே போற்றி
யென்னையு மொருவ னாக்கி யிருங்கழற்
சென்னியில் வைத்த சேவக போற்றி
தொழுதகை துன்பந் துடைப்பாய் போற்றி
யழிவிலா வானந்த வாரி போற்றி
யழிவது மாவதுங் கடந்தாய் போற்றி
முழுவது மிறந்த முதல்வா போற்றி
மானேர் நோக்கி மணாளா போற்றி
வானகத் தமரர் தாயே போற்றி
பாரிடை யைந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை யொன்றாய் விளைந்தாய் போற்றி
யளிபவ ருள்ளத் தமுதே போற்றி

கனவிலுந் தேவர்க் கரியாய் போற்றி
நனவிலு நாயேற் கருளினை போற்றி
யிடைமரு துறையு மெந்தாய் போற்றி
சடையிடைக் கங்கை தரித்தாய் போற்றி
யாரு ரமர்ந்த வரசே போற்றி
சீரார் திருவை யாறா போற்றி
யண்ணா மலையெம் மண்ணா போற்றி
கண்ணா ரமுதக் கடலே போற்றி
யேகம் பத்துறை யெந்தாய் போற்றி
பாகம் பெண்ணுரு வானாய் போற்றி
பராய்த்துறை மேவிய பரனே போற்றி
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி
மற்றோர் பற்றிங் கறியேன் போற்றி
குற்றா லத்தெங் கூத்தா போற்றி
கோகழி மேவிய கோவே போற்றி
யீங்கோய் மலையெம் மெந்தாய் போற்றி
பாங்கார் பழனத் தழகா போற்றி
கடம்பூர் மேவிய விடங்கா போற்றி
யடைந்தவர்க் கருளு மப்பா போற்றி
யித்தி தன்னின் கீழிரு மூவர்க்
கத்திக் கருளிய வரசே போற்றி
தென்னா டுடைய சிவனே போற்றி
யெந்நாட் டவர்க்கு மிறைவா போற்றி
யேனக் குருளைக் கருளினை போற்றி
மானக் கயிலை மலையாய் போற்றி
யருளிட வேண்டு மம்மான் போற்றி
யிருள்கெட வருளு மிறைவா போற்றி
தளர்ந்தே னடியேன் றமியேன் போற்றி
களங்கொளக் கருத வருளாய் போற்றி
யஞ்சே லென்றிங் கருளாய் போற்றி
நஞ்சே யமுதா நயந்தாய் போற்றி
யத்தா போற்றி யையா போற்றி
நித்தா போற்றி நிமலா போற்றி
பத்தா போற்றி பவனே போற்றி
பெரியாய் போற்றி பிரானே போற்றி
யரியாய் போற்றி யமலா போற்றி
மறையோர் கோல நெறியே போற்றி
முறையோ தரியேன் முதல்வா போற்றி

யுறவே போற்றி யுயிரே போற்றி
சிறவே போற்றி சிவமே போற்றி
மஞ்சா போற்றி மணாளா போற்றி
பஞ்சே ரடியாள் பங்கா போற்றி
யலந்தே னுயே னடியேன் போற்றி
யிலங்கு சுடரெம் மீசா போற்றி
கவைத்தலை மேவிய கண்ணே போற்றி
குவைப்பதி மலிந்த கோவே போற்றி
மலைநா டுடைய மன்னே போற்றி
கலையா ரரிகே சரியாய் போற்றி
திருக்கழுக் குன்றிற் செல்வா போற்றி
பொருப்பமர் பூவணத் தரனே போற்றி
யருவமு முருவமு மானாய் போற்றி
மருவிய கருணை மலையே போற்றி
துரியமு மிறந்த சுடரே போற்றி
தெரிவரி தாகிய தெளிவே போற்றி
தோளா முத்தச் சுடரே போற்றி
யாளா னவர்கட் கன்பா போற்றி
யாரா வமுதே யருளே போற்றி
பேரா யிரமுடைப் பெம்மான் போற்றி
தாளி யறுகின் றாராய் போற்றி
நீளொளி யாகிய நிருத்தா போற்றி
சந்தனச் சாந்தின் சுந்தர போற்றி
சிந்தனைக் கரிய சிவமே போற்றி
மந்திர மாமலை மேயாய் போற்றி
யெந்தமை யுய்யக் கொள்வாய் போற்றி
புலிமுலை புல்வாய்க் கருளினை போற்றி
யலைகடன் மீமிசை நடந்தாய் போற்றி
கருங்குரு விக்கன் றருளினை போற்றி
யிரும்புலன் புலர விசைந்தனை போற்றி
படியுறப் பயின்ற பாவக போற்றி
யடியொடு நடுவீ றானாய் போற்றி
நரகொடு சுவர்க்க நானிலம் புகாமற்
பரகதி பாண்டியற் கருளினை போற்றி
யொழிவற நிறைந்த வொருவ போற்றி
செழுமலர்ச் சிவபுரத் தரசே போற்றி
கழுநீர் மாலைக் கடவுள் போற்றி
தொழுவார் மைய றுணிப்பாய் போற்றி

பிழைப்பு வாய்ப்பொன் றறியா நாயேன்
குழைத்தசொன் மாலை கொண்டருள் போற்றி
புரம்பல வெரித்த புராண போற்றி
பரம்பரஞ் சோதிப் பரனே போற்றி
போற்றி போற்றி புயங்கப் பெருமான்
போற்றி போற்றி புராண காரண
போற்றி போற்றி சயசய போற்றி.

திருச்சிற்றம்பலம்.

திருச்சதகம்.

பத்தி வைராக்கிய விசித்திரம்.

திருப்பெருந்துறையிலருளிச்செய்யப்பட்டது.

கட்டளைக்கலித்துறை.

திருச்சிற்றம்பலம்.

மெய்தா னரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்
கைதான் றலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் றவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றியென்னுங்
கைதா னெகிழ விடேனுடை யாயென்னைக் கண்டுகொள்ளே. (க)

கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினு
நள்ளே னினதடி யாரொடல் லானர கம்புகினு
மெள்ளேன் திருவரு ளாலே யிருக்கப் பெறினிறைவா
வுள்ளேன் பிறதெய்வ முன்னையல் லாதெங்க ளுத்தமனே. (உ)

உத்தம னத்த னுடையா னடியே நினைந்துருகி
மத்த மனத்தொடு மாலிவ னென்ன மனநினைவி
லொத்தன வொத்தன சொல்லிட வூரூர் திரிந்தெவருந்
தத்த மனத்தன பேசவெஞ் ஞான்றுகொல் சாவதுவே. (ங)

சாவமுன் னாட்டக்கன் வேள்வித் தகர்தின்று நஞ்சமஞ்சி
யாவவெந் தாயென் றவிதா விடுநம் மவரவரே
மூவரென் றேயெம் பிரானொடு மெண்ணிவிண் ணாண்டுமண்மேற்
றேவரென் றேயிறு மாந்தென்ன பாவந் திரிதவரே. (ச)

தவமே புரிந்திலன் றண்மல ரிட்டுமுட் டாதிறைஞ்சே
னவமே பிறந்த வருவினை யேனுனக் கன்பருள்ளாஞ்
சிவமே பெறுந்திரு வெய்திற்றி லேனின் றிருவடிக்காம்
பவமே யருளுகண் டாயடி யேற்கெம் பரம்பரனே. (௫)

பரந்துபல் லாய்மல ரிட்டுமுட் டாதடி யேயிறைஞ்சி
யிரந்தவெல் லாமெமக் கேபெற லாமென்னு மன்பருள்ளங்
கரந்துநில் லாக்கள்வ னேநின்றன் வார்கழற் கன்பெனக்கு
நிரந்தர மாயரு ளாய்நின்னை யேத்த முழுவதுமே. (௬)

முழுவதுங் கண்டவ னைப்படைத் தான்முடி சாய்த்துமுன்னாட்
செழுமலர் கொண்டெங்குந் தேடவப் பாலனிப் பாலெம்பிரான்
கழுதொடு காட்டிடை நாடக மாடிக் கதியிலியா
யுழுவையின் றோலுடுத் துன்மத்த மேல்கொண் டுழிதருமே. (௭)

உழிதரு காலுங் கனலும் புனலொடு மண்ணும்விண்ணு
மிழிதரு காலமெக் காலம் வருவது வந்ததற்பி
னுழிதரு காலத்த வுன்னடி யேன்செய்த வல்வினையைக்
கழிதரு காலமு மாயவை காத்தெம்மைக் காப்பவனே. (௮)

பவனெம் பிரான்பனி மாமதிக் கண்ணிவிண் ணோர்பெருமான்
சிவனெம் பிரானென்னை யாண்டுகொண் டானென் சிறுமைகண்டு
மவனெம் பிரானென்ன நானடி யேனென்ன விப்பரிசே
புவனெம் பிரான்றெரி யும்பரி சாவ தியம்புகவே. (௯)

புகவே தகேனுனக் கன்பருள் யானென்பொல் லாமணியே
தகவே யெனையுனக் காட்கொண்ட தன்மையெப் புன்மையரை
மிகவே யுயர்த்திவிண் ணோரைப் பணித்தியெண் ணுவமுதே
நகவே தகுமெம் பிரானென்னை நீசெய்த நாடகமே. (௧0)

அறிவுறுத்தல்.

தரவுகொச்சகக்கலிப்பா.

நாடகத்தா லுன்னடியார் போனடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றே
னாடகச்சீர் மணிக்குன்றே யிடையறா வன்புனக்கென்
னூடகத்தே நின்றுருகத் தந்தருளெம் முடையானே. (௧௧)

யானேதும் பிறப்பஞ்சே னிறப்பதனுக் கென்கடவேன்
வானேயும் பெறில்வேண்டேன் மண்ணாள்வான் மதித்துமிரேன்
றேனேயு மலர்க்கொன்றைச் சிவனேயெம் பெருமானெம்
மானேயுன் னருள்பெறுநா ளென்றென்றே வருந்துவனே. (கஉ)

வருந்துவனின் மலர்ப்பாத மவைகாண்பா னுயடியே
னிருந்துநல மலர்புனையே னேத்தேனுத் தழும்பேறப்
பொருந்தியபொற் சிலைகுனித்தா யருளமுதம் புரியாயேல்
வருந்துவனத் தமியேன்மற் றென்னேநா னுமாறே. (கங)

ஆமாறுன் றிருவடிக்கே யகங்குழையே னன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமானின் றிருக்கோயி றூகேன்மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே. (கச)

வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி
யூனாகி யுயிராகி யுண்மையுமா யின்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே. (கரு)

வாழ்த்துவதும் வானவர்க டாம்வாழ்வான் மனநின்பாற்
றாழ்த்துவதுந் தாமுயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டிச்
சூழ்த்துமது கரமுரலுந் தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானுமுன்னைப் பரவுவனே. (கசு)

பரவுவா ரிமையோர்கள் பாடுவன நால்வேதங்
குரவுவார் குழன்மடவாள் கூறுடையா ளொருபாகம்
விரவுவார் மெய்யன்பி னடியார்கண் மேன்மேலுன்
னரவுவார் கழலிணைகள் காண்பாரோ வரியானே. (கஎ)

அரியானே யாவர்க்கு மம்பரவா வம்பலத்தெம்
பெரியானே சிறியேனை யாட்கொண்ட பெய்கழற்கீழ்
விரையார்ந்த மலர்தூவேன் வியந்தலறே னயந்துருகேன்
றரியேனு னுமாறென் சாவேனுன் சாவேனே. (கஅ)

வேனில்வேண் மலர்க்கணைக்கும் வெண்ணகைச்செவ் வாய்க்கரிய
பானலார் கண்ணியர்க்கும் பதைத்துருகும் பாழ்நெஞ்சே
யூனெலா நின்றுருகப் புகுந்தாண்டா னின்றுபோய்
வானுளான் காணாய்நீ மாளாவாழ் கின்றாயே. (ககூ)

வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்
டாழ்கின்றா யாழாமற் காப்பானை யேத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீயவலக் கடலாய வெள்ளத்தே. (உ0)

சுட்டறுத்தல்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே யெனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தா ழுறுபுனலிற் கீழ்மே லாகப்
பதைத்துருகு மவர்நிற்க வென்னை யாண்டாய்க்
குள்ளந்தா ணின்றுச்சி யளவு நெஞ்சா
யுருகாதா லுடம்பெல்லாங் கண்ணா யண்ணா
வெள்ளந்தான் பாயாதா னெஞ்சங் கல்லாங்
கண்ணிணையு மரமாந்தீ வினையி னேற்கே. (உக)

வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று
போதுநான் வினைக்கேட னென்பாய் போல
வினையறு னென்றுன்னை யறிவித் தென்னை
யாட்கொண்டெம் பிரானானாய்க் கிரும்பின் பாவை
யனையநான் பாடேனின் றாடே னந்தோ
வலறிடே னுலறிடே னாவி சோரேன்
முனைவனே முறையோநா னான வாறு
முடிவறியேன் முதலந்த மாயி னானே. (உஉ)

ஆயநான் மறையவனு நீயே யாத
லறிந்தியா னியாவரினுங் கடைய னாய
நாயினே னாதலையு நோக்கிக் கண்டு
நாதனே நானுனக்கோ ரன்ப னென்பே
னாயினே னாதலா லாண்டு கொண்டா
யடியார்தா மில்லையே யன்றி மற்றோர்
பேயனே னிதுதானின் பெருமை யன்றே
யெம்பெருமா னென்சொல்லிப் பேசு கேனே. (உரு)

பேசிற்றா மீசனே யெந்தா யெந்தை
பெருமானே யென்றென்றே பேசிப் பேசிப்
பூசிற்றான் றிருநீறே நிறையப் பூசிப்
போற்றியெம் பெருமானே யென்று பின்றா

நேசத்தாற் பிறப்பிறப்பைக் கடந்தார் தம்மை
யாண்டானே யவாவெள்ளக் கள்வ னேனை
மாசற்ற மணிக்குன்றே யெந்தா யந்தோ
வென்னைநீ யாட்கொண்ட வண்ணந் தானே. (உச)

வண்ணந்தான் சேயதன்று வெளிதே யன்ற
நேகனேக னணுவணுவி லிறந்தா யென்றங்
கெண்ணந்தான் றடுமாறி யிமையோர் கூட்ட
மெய்துமா றறியாத வெந்தா யுன்றன்
வண்ணந்தா னதுகாட்டி வடிவு காட்டி
மலர்க்கழல்க ளவைகாட்டி வழியற் றேனைத்
திண்ணந்தான் பிறவாமற் காத்தாட் கொண்டா
யெம்பெருமா னென்சொல்லிச் சிந்திக் கேனே. (உரு)

சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன்
கண்ணிணைநின் றிருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையு மம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்க ளார
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தனிய னேற்கே. (உசு)

தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையா லெற்றுண்டு பற்றொன் றின்றிக்
கனியைநேர் துவர்வாயா ரென்னுங் காலாற்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்
டினியென்னே யுய்யுமா றென்றென் றெண்ணி
யஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை
முனைவனே முதலந்த மில்லா மல்லற்
கரைகாட்டி யாட்கொண்டாய் மூர்க்க னேற்கே. (உஎ)

கேட்டாரு மறியாதான் கேடொன் றில்லான்
கிளையிலான் கேளாதே யெல்லாங் கேட்டா
னாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத் துள்ளே
நாயினுக்குத் தவிசிட்டு நாயி னேற்கே
காட்டா தனவெல்லாங் காட்டிப் பின்னுங்
கேளா தனவெல்லாங் கேட்பித் தென்னை
மீட்டேயும் பிறவாமற் காத்தாட் கொண்டா
னெம்பெருமான் செய்திட்ட விச்சை தானே. (உஅ)

விச்சைதா னிதுவொப்ப துண்டோ கேட்கின்
மிகுகாத லடியார்தம் மடிய னுக்கி
யச்சந்தீர்த் தாட்கொண்டா னமுத மூறி
யகநெகவே புகுந்தாண்டா னன்பு கூர
வச்சனுண் பெண்ணலியா காச மாகி
யாரழலா யந்தமா யப்பா னின்ற
செச்சைமா மலர்புரையு மேனி யெங்கள்
சிவபெருமா னெம்பெருமான் றேவர் கோவே. (உக)

தேவர்கோ வறியாத தேவ தேவன்
செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாதாளும் பாகத் தெந்தை
யாவர்கோ னென்னையும்வந் தாண்டு கொண்டான்
யாமார்க்குங் குடியல்லோம் யாது மஞ்சோ
மேவினோ மவனடியா ரடியா ரோடு
மேன்மேலுங் குடைந்தாடி யாடு வோமே. (கூo)

ஆத்துமசுத்தி.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலை யென்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை செய்வதொன் றறியேனே.

அறிவி லாத வெனைப்புகுந் தாண்டுகொண் டறிவதை யருளிமே
னெறியெ லாம்புல மாக்கிய வெந்தையைப் பந்தனையறுப் பானைப்
பிறிவி லாதவின் னருள்கள்பெற் றிருந்துமாறுடுதி பிணநெஞ்சே
கிறியெ லாமிகக் கீழ்ப்படுத்தாய் கெடுத்தாயென்னைக் கெடுமாறே.

மாறி நின்றெனைக் கெடக்கிடந் தனையையெம் மதியிலிமடநெஞ்சே
தேறு கின்றில மினியுனைச் சிக்கெனச் சிவனவன் றிரடோண்மே
னீறு நின்றது கண்டனை யாயினு நெக்கிலை யிக்காயங்
கீறு கின்றிலை கெடுவதுன் பரிசிது கேட்கவுங் கில்லேனே. ()

கிற்ற வாமன மேகெடு வாயுடை யானடி நாயேனை
விற்றெ லாமிக வாள்வதற் குரியவன் விரைமலர்த் திருப்பாத
முற்றி லாவிளந் தளிர்பிரிந் திருந்துநீ யுண்டன வெல்லாமுன்
னற்ற வாறுநின் னறிவுநின் பெருமையு மளவறுக் கில்லேனே.

அளவ றுப்பதற் கரியவ னிமையவர்க் கடியவர்க் கெளியானங்
களவ றுத்துநின் றாண்டமை கருத்தினுட் கசிந்துணர்ந்திருந்தேயு
முளக றுத்துனை நினைந்துளம்பெருங்களன்செய்ததுமிலைநெஞ்சே
பளக றுத்துடை யான்கழல் பணிந்திலை பரகதி புகுவானே. ()

புகுவ தாவதும் போதர வில்லதும் பொன்னகர் புகப்போதற்
குருவ தாவதுமெந்தையெம்பிரானென்னை யாண்டவன்கழற்கன்பு
நெகுவ தாவது நித்தலு மமுதொடு தேனொடு பால்கட்டி
மிகுவ தாவதுமின்றெனின்மற்றிதற்கென்செய்கேன்வினையேனே.

வினையென் போலுடை யார்பிற ராருடை யானடி நாயேனைத்
தினையின் பாகமும் பிரிவது திருக்குறிப் பன்றுமற் றதனாலே
முனைவன் பாதநன் மலர்பிரிந் திருந்துநான் முட்டிலேன்றலைகீறே
னினையன்பாவனையிரும்புகன்மனஞ்செவியின்னதென்றறியேனே.

ஏனை யாவரு மெய்திட லுற்றுமற் றின்னதென் றறியாத
தேனை யானெயைக்கரும்பினின்றேறலைச்சிவனையென்சிவலோகக்
கோனை மானன நோக்கிதன் கூறனைக் குறுகிலே னெடுங்கால
மூனை யானிருந் தோம்புகின் றேன்கெடு வேனுயி ரோயாதே. ()

ஒய்வி லாதன வுவமனி விறந்தன வொண்மலர்த் தாடந்து
நாயி லாகிய குலத்தினுங் கடைப்படு மென்னைநன் னெறிகாட்டித்
தாயி லாகிய வின்னருள் புரிந்தவென் றலைவனை நனிகாணேன்
றீயில்வீழ்கிலேன்றிண்வரையுருள்கிலேன்செழுங்கடல்புகுவேனே

வேனில் வேள்கணை கிழித்திட மதிசுடு மதுதனை நினையாதே
மானி லாவிய நோக்கியர் படிறிடை மத்திடு தயிராகித்
தேனி லாவிய திருவருள் புரிந்தவென் சிவனகர் புகப்போகே
னூனி லாவியை யோம்புதற்பொருட்டினுமுண்டுடுத்திருந்தேனே.

கைம்மாறுகொடுத்தல்.

கலிவிருத்தம்.

இருகை யானையை யொத்திருந் தென்னுளக்
கருவை யான்கண்டி லேன்கண்ட தெவ்வமே
வருக வென்று பணித்தனை வானுளோர்க்
கொருவ னேகிற்றி லேன்கிற்ப னுண்ணவே. (௪௧)

உண்டொ ரொண்பொரு ளென்றுணர் வார்க்கெலாம்
பெண்டி ராணலி யென்றறி யொண்கிலை

தொண்ட னேற்குள்ள வாவந்து தோன்றினுய்
கண்டுங் கண்டிலே னென்னகண் மாயமே. (சஉ)

மேலை வானவ ரும்மறி யாததோர்
கோல மேயெனை யாட்கொண்ட கூத்தனே
ஞால மேவிசும் பேயிவை வந்துபோங்
கால மேயுனை யென்றுகொல் காண்பதே. (சங)

கான லாம்பர மேகட் கிறந்ததோர்
வாணி லாப்பொரு ளேயிங்கொர் பார்ப்பெனப்
பாண னேன்படிற் றாக்கையை விட்டுனைப்
பூணு மாறறி யேன்புலன் போற்றியே. (சச)

போற்றி யென்றும் புரண்டும் புகழ்ந்துநின்
ருற்றன் மிக்கவன் பாலழைக் கின்றிலே
னேற்று வந்தெதிர் தாமரைத் தாளுறுங்
கூற்ற மன்னதொர் கொள்கையென் கொள்கையே. (சரு)

கொள்ளுங் கில்லெனை யன்பரிற் கூய்ப்பணி
கள்ளும் வண்டு மறுமலர்க் கொன்றையா
னள்ளுங் கீழுளு மேலுளும் யாவுளு
மெள்ளு மெண்ணெயும் போனின்ற வெந்தையே. (சசு)

எந்தை யாயெம் பிரான்மற்று மியாவர்க்குந்
தந்தை தாய்தம் பிரான்றனக் கஃதிலான்
முந்தி யென்னுள் புகுந்தனன் யாவருஞ்
சிந்தை யாலு மறிவருஞ் செல்வனே. (சஎ)

செல்வ நல்குர வின்றிவிண் ணோர்புழுப்
புல்வ ரம்பின்றி யார்க்கு மரும்பொரு
ளெல்லை யில்கழல் கண்டும் பிரிந்தனன்
கல்வ கைமனத் தேன்பட்ட கட்டமே. (சஅ)

கட்ட றுத்தெனை யாண்டுகண் ணாரநீ
றிட்ட வன்பரொ டியாவருங் காணவே
பட்டி மண்டப மேற்றினை யேற்றினை
யெட்டி னோடிரண் டும்மறி யேனையே. (சகூ)

அறிவ னேயமு தேயடி நாயினே
னறிவ னாகக்கொண் டோவெனை யாண்டது
வறிவி லாமையன் றேகண்ட தாண்டநா
ளறிவ னோவல்ல னோவரு ளீசனே. (ருo)

அநுபோகசுத்தி.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஈச னேயென் னெம்மானே யெந்தை பெருமா னென்பிறவி
நாச னேநான் யாதுமொன் றல்லாப் பொல்லா நாயான
நீச னேனை யாண்டாய்க்கு நினைக்க மாட்டேன் கண்டாயே
தேச னேயம் பலவனே செய்வ தொன்று மறியேனே. (இக)

செய்வ தறியாச் சிறுநாயேன் செம்பொற் பாத மலர்காணப்
பொய்யர் பெறும்பே றத்தனையும் பெறுதற் குரியேன் பொய்யிலா
மெய்யர் வெறியார் மலர்ப்பாத மேவக் கண்டுங் கேட்டிருந்தும்
பொய்ய னேனு னுண்டுடுத்திங் கிருப்ப தானேன் போரேறே. ()

போரே றேநின் பொன்னகர்வாய் நீபோந் தருளி யிருணீக்கி
வாரே றிளமென் முலையாளோ டுடன்வந் தருள வருள்பெற்ற
சீரே றடியார் நின்பாதஞ் சேரக் கண்டுங் கண்கெட்ட
வூரே றாயிங் குழல்வேனோ கொடியே னுயிர்தா னுலவாதே. ()

உலவாக் காலந் தவமெய்தி யுறுப்பும்வெறுத்திங்குனைக்காண்பான்
பலமா முனிவர் நனிவாடப் பாவி யேனைப் பணிகொண்டாய்
மலமாக் குரம்பை யிதுமாய்க்க மாட்டேன்மணியேயுனைக்காண்பா
னலவா நிற்கு மன்பிலே னென்கொண் டெழுகே னெம்மானே. ()

மானேர் நோக்கி யுமையாள் பங்கா வந்திங் காட்கொண்ட
தேனே யமுதே கரும்பின் றெளிவே சிவனே தென்றில்லைக்
கோனே யுன்றன் றிருக்குறிப்புக் கூடு வார்நின் கழல்கூட
வூனா் புழுக்கூ டிதுகாத்திங் கிருப்ப தானே னுடையானே. (ருடு)

உடையா னேநின் றனையுள்கி யுள்ள முருகும் பெருங்காத
லுடையா ருடையாய் நின்பாதஞ் சேரக் கண்டிங் கூர்நாயிற்
கடையா னேனெஞ் சுருகாதேன் கல்லா மனத்தேன் கசியாதேன்
முடையார் புழுக்கூ டிதுகாத்திங் கிருப்ப தாக முடித்தாயே. ()

முடித்த வாறு மென்றனக்கே தக்க தேமுன் னடியாரைப்
பிடித்த வாறுஞ் சோராமற் சோர னேனிங் கொருத்திவாய்
துடித்த வாறுந் துகிலிறையே சோர்ந்த வாறு முகங்குறுவேர்
பொடித்த வாறு மிவையுணர்ந்து கேடென் றனக்கே சூழ்ந்தேனே.

தேனைப் பாலைக் கன்னலின் றெளியை யொளியைத் தெளிந்தார்த
மூனை யுருக்கு முடையானை யும்ப ரானை வம்பனே

ஞானின் னடியே னீயென்னை யாண்டா யென்று லடியேற்குத்
தானுஞ் சிரித்தே யருளலாந் தன்மை யாமென் றன்மையே. (ங௮)

தன்மை பிறரா லறியாத தலைவா பொல்லா நாயான
புன்மை யேனை யாண்டையா புறமே போக விடுவாயோ
வென்னை நோக்கு வார்யாரே யென்னான் செய்கேனெம்பெருமான்
பொன்னே திகழுந் திருமேனி யெந்தா யெங்குப் புகுவேனே. ()

புகுவே னெனதே நின்பாதம் போற்று மடியா ருண்ணின்று
நகுவேன் பண்டு தோணோக்கி நாணமில்லா நாயினே
னெகுமன் பில்லை நினைக்காண நீயாண் டருள வடியேனுந்
தகுவ னேயென் றன்மையே யெந்தா யந்தோ தரியேனே. (௬0)

காருணியத்திரங்கல்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தரிக்கிலேன் காய வாழ்க்கை சங்கரா போற்றி வான
விருத்தனே போற்றி யெங்கள் விடலையே போற்றி யொப்பி
லொருத்தனே போற்றி யும்பர் தம்பிரான் போற்றி தில்லை
நிருத்தனே போற்றி யெங்க ணின்மலா போற்றி போற்றி. (௬௧)

போற்றியோ நமச்சி வாய புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றியோ நமச்சி வாய புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றியோ நமச்சி வாய புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றியோ நமச்சி வாய சயசய போற்றி போற்றி. (௬௨)

போற்றியென் போலும் பொய்யர் தம்மை யாட்கொள்ளும் வள்ளல்
போற்றிநின் பாதம் போற்றி நாதனே போற்றி போற்றி
போற்றிநின் கருணை வெள்ளப் புதுமதுப் புவனநீர்தீக்
காற்றிய மானன் வான மிருசுடர்க் கடவு ளானே. (௬௩)

கடவுளே போற்றி யென்னைக் கண்டுகொண் டருளு போற்றி
விடவுளே யுருக்கி யென்னை யாண்டிட வேண்டும் போற்றி
யுடலிது களைந்திட் டொல்லை யும்பர்தந் தருளு போற்றி
சடையுளே கங்கை வைத்த சங்கரா போற்றி போற்றி. (௬௪)

சங்கரா போற்றி மற்றோர் சரணிலேன் போற்றி கோலப்
பொங்கரா வல்குற் செவ்வாய் வெண்ணகைக் கரிய வாட்கண்
மங்கையோர் பங்க போற்றி மால்விடை யூர்தி போற்றி
யிங்கிவாழ் வாற்றகில்லே னெம்பிரா னிழித்திட் டேனே. (௬௫)

இழித்தன னென்னை யானே யெம்பிரான் போற்றி போற்றி
பழித்திலே னுன்னை யென்னை யாளுடைப் பாதம் போற்றி
பிழைத்தவை பொறுக்கை யெல்லாம் பெரியவர் கடமை போற்றி
யொழித்திடிவ் வாழ்வு போற்றி யும்பர்நாட் டெம்பிரானே. (௬௬)

எம்பிரான் போற்றி வானத் தவரவ ரேறு போற்றி
கொம்பரார் மருங்குன் மங்கை கூறவெண் ணீற போற்றி
செம்பிரான் போற்றி தில்லைத் திருச்சிற்றம் பலவ போற்றி
யும்பரா போற்றி யென்னை யாளுடை யொருவ போற்றி. (௬௭)

ஒருவனே போற்றி யொப்பி லப்பனே போற்றி வானோர்
குருவனே போற்றி யெங்கள் கோமளக் கொழுந்து போற்றி
வருகவென் றென்னை நின்பால் வாங்கிட வேண்டும் போற்றி
தருகநின் பாதம் போற்றி தமியனேன் றனிமை தீர்த்தே. (௬௮)

தீர்ந்தவன் பாய வன்பர்க் கவரினு மன்ப போற்றி
பேர்ந்துமென் பொய்மை யாட்கொண் டருளிடும்பெருமைபோற்றி
வார்ந்தநஞ் சயின்று வானோர்க் கமுதமீ வள்ளல் போற்றி
யார்ந்தநின் பாதநாயேற் கருளிட வேண்டும் போற்றி. (௬௯)

போற்றியிப் புவன நீர்தீக் காலொடு வான மானாய்
போற்றியெவ் வுயிர்க்குந் தோற்ற மாகிநீ தோற்ற மில்லாய்
போற்றியெல் லாவுயிர்க்கு மீறாயீ றின்மை யானாய்
போற்றியைம் புலன்க ணின்னைப் புணர்கிலாப் புணர்க்கையானே.

ஆனந்தத்தழுந்தல்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

புணர்ப்ப தொக்க வெந்தை யென்னை யாண்டு பூண நோக்கினாய்
புணர்ப்ப தன்றிதென்ற போது நின்னொ டென்னொ டென்னிதாம்
புணர்ப்ப தாக வன்றி தாக வன்பு நின்க ழற்கணே
புணர்ப்ப தாக வங்க ணாள புங்க மான போகமே. (எக)

போகம் வேண்டி வேண்டி லேன்பு ரந்த ராதி யின்பமு
மேக நின்க ழலி ணைய லாதி லேனெ னெம்பிரா
னாகம் விண்டு கம்பம் வந்து குஞ்சி யஞ்ச லிக்கணே
யாக வென்கை கண்க டாரை யாற தாக வையனே. (எ௨)

ஐய நின்ன தல்ல தில்லை மற்றோர் பற்று வஞ்சனேன்
பொய்க லந்த தல்ல தில்லை பொய்ம்மை யேனெ னெம்பிரான்

மைக லந்த கண்ணி பங்க வந்து நின்க ழற்கணே
மெய்க லந்த வன்ப ரன்பெ னக்கு மாக வேண்டுமே. (எ௩)

வேண்டு நின்க ழற்க ணன்பு பொய்மை தீர்த்து மெய்ம்மையே
யாண்டு கொண்டு நாயி னேனை யாவ வென்ற ருளுநீ
பூண்டு கொண் டடிய னேனும் போற்றி போற்றி யென்று மென்று
மாண்டு மாண்டு வந்து வந்து மன்ன நின்வ ணங்கவே. (எச)

வணங்கு நின்னை மண்ணும் விண்ணும் வேத நான்கு மோலமிட்
டுணங்கு நின்னை யெய்த லுற்று மற்றொ ருண்மை யின்மையின்
வணங்கி யாம்வி டேங்க ளென்ன வந்து நின்ற ருளுதற்
கிணங்கு கொங்கை மங்கை பங்க வென்கொ லோநி னைப்பதே. ()

நினைப்ப தாக சிந்தை செல்லு மெல்லை யேய வாக்கினாற்
றினைத்த னையு மாவ தில்லை சொல்ல லாவ கேட்பவே
யனைத் துலகு மாய நின்னை யைம்பு லன்கள் காண்கிலா
வெனைத்தெ னைத்த தெப்பு றத்த தெந்தை பாத மெய்தவே. (எசு)

எய்த லாவ தென்று நின்னை யெம்பி ரானிவ் வஞ்சனேற்
குய்த லாவ துன்க ணன்றி மற்றொ ருண்மை யின்மையிற்
பைத லாவ தென்று பாது காத்தி ரங்கு பாவியேற்
கீத லாது நின்க ணொன்றும் வண்ண மில்லை யீசனே. (எஎ)

ஈச னேநீ யல்ல தில்லை யிங்கு மங்கு மென்பதும்
பேசி னேனொர் பேத மின்மை பேதை யேனை னெம்பிரா
னீச னேனை யாண்டு கொண்ட நின்ம லாவொர் நின்னலாற்
றேச னேயொர் தேவ ருண்மை சிந்தி யாது சிந்தையே. (எஅ)

சிந்தை செய்கை கேள்வி வாக்குச் சீரி லைம்பு லன்களான்
முந்தை யான கால நின்னை யெய்தி டாத மூர்க்கனேன்
வெந்தை யாவி ழுந்தி லேனெ னுள்ளம் வெள்கி விண்டிலே
னெந்தை யாய நின்னை யின்ன மெய்த லுற்றி ருப்பனே. (எகு)

இருப்பு நெஞ்ச வஞ்ச னேனை யாண்டு கொண்ட நின்னதாட்
கருப்பு மட்டு வாய்ம டுத்தெ னைக்க லந்து போகவு
நெருப்பு முண்டி யானு முண்டி ருந்த துண்ட தாயினும்
விருப்பு முண்டு நின்க ணென்க ணென்ப தென்ன விச்சையே. ()

ஆனந்தபரவசம்.

கலிநிலைத்துறை.

விச்சுக் கேடுபொய்க் காகா தென்றிங் கெனைவைத்தா
யிச்சைக் கானா ரெல்லாரும் வந்துன்றாள் சேர்ந்தா

ரச்சத் தாலே யாழ்ந்திடு கின்றே னுருமெம்
பிச்சைத் தேவா வென்னான் செய்கேன் பேசாயே. (அக)

பேசப் பட்டே னின்னடி யாரிற் றிருநீறே
பூசப் பட்டேன் பூதல ராலுன் னடியானென்
றேசப் பட்டே னினிப்படு கின்ற தமையாதா
லாசைப் பட்டே னாட்பட் டேனுன் னடியேனே. (அஉ)

அடியே னல்லேன் கொல்லோ தானெனை யாட்கொண் டிலைகொல்
வடியா ரானா ரெல்லாரும் வந்துன் றாள்சேர்ந்தார் [லோ
செடிசே ருடலஞ் சிதைக்க மாட்டே னெங்கள் சிவலோகா
கடியே னுன்னைக் கண்ணாரக் காணுமாறு காணேனே. (அ௩)

காணு மாறு காணே னுன்னை யந்நாட் கண்டேனும்
பாணே பேசி யென்றன்னைப் படுத்த தென்ன பரஞ்சோதி
யானே பெண்ணே யாரமுதே யத்தா செத்தே போயினே
னேனா னில்லா நாயினே னென்கொண்டெழுகே னெம்மானே. ()

மானேர் நோக்கி யுடையாள் பங்கா மறையீ றறியா மறையோனே
தேனே யமுதே சிந்தைக் கரியாய் சிறியேன் பிழைபொறுக்குங்
கோனே சிறிதே கொடுமை பறைந்தேன் சிவமா நகர்குறுகப்
போனா ரடியார் யானும் பொய்யும் புறமே போந்தோமே. (அரு)

புறமே போந்தோம் பொய்யும் யானு மெய்யன்பு
பெறவே வல்லே னல்லா வண்ணம் பெற்றேன்யா
னறவே நின்னைச் சேர்ந்த வடியார் மற்றொன் றறியாதார்
சிறவே செய்து வழிவந்து சிவனே நின்றாள் சேர்ந்தாரே. (அசு)

தாரா யுடையா யடியேற் குன்றா ளிணையன்பு
பேரா வுலகம் புக்கா ரடியார் புறமே போந்தேன்யா
னூரா யிலக்கக் குருட்டா மிலைத்திங் குன்றா ளிணையன்புக்
காரா யடியே னயலே மயல்கொண் டழுகேனே. (அஎ)

அழுகே னின்பா லன்பா மனமா யழல்சேர்ந்த
மெழுகே யன்னார் மின்னார் பொன்னார் கழல்கண்டு
தொழுதே யுன்னைத் தொடர்ந்தா ரோடுந் தொடராதே
பழுதே பிறந்தே னென்கொண் டுன்னைப் பணிகேனே. (அஅ)

பணிவார் பிணிதீர்த் தருளிப் பழைய வடியார்க்குன்
னணியார் பாதங் கொடுத்தி யதுவு மரிதென்றாற்
றிணியார் மூங்கி லனையேன் வினையைப் பொடியாக்கித்
தணியார் பாதம் வந்தொல்லை தாராய் பொய்தீர் மெய்யானே. ()

யானே பொய்யென் னெஞ்சும் பொய்யென் னன்பும்பொய்
யானால் வினையே னழுதா லுன்னைப் பெறலாமே
தேனே யமுதே கரும்பின் றெளிவே தித்திக்கு
மானே யருளா யடியே னுனைவந் துறுமாறே. (௩0)

ஆனந்தாதீதம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மாறி லாதமாக் கருணை வெள்ளமே
வந்து முந்திநின் மலர்கொ டாளிணை
வேறி லாப்பதப் பரிசு பெற்றநின்
மெய்மை யன்பருன் மெய்மை மேவினு
ரீறி லாதநீ யெளியை யாகிவந்
தொளிசெய் மானுட மாக நோக்கியுங்
கீறி லாதநெஞ் சுடைய நாயினேன்
கடைய நாயினேன் பட்ட கீழ்மையே. (௩௧)

மையி லங்குநற் கண்ணி பங்கனே
வந்தெ னைப்பணி கொண்ட பின்மழக்
கையி லங்குபொற் கிண்ண மென்றலா
லரியை யென்றுனைக் கருது கின்றிலேன்
மெய்யி லங்குவெண் ணீற்று மேனியாய்
மெய்மை யன்பருன் மெய்மை மேவினர்
பொய்யி லங்கெனைப் புகுத விட்டுநீ
போவ தோசொலாய் பொருத்த மாவதே. (௩௨)

பொருத்த மின்மையேன் பொய்மை யுண்மையேன்
போத வென்றெனைப் புரிந்து நோக்கவும்
வருத்த மின்மையேன் வஞ்ச முண்மையேன்
மாண்டி லேன்மலர்க் கமல பாதனே
யரத்த மேனியா யருள்செ யன்பரு
நீயு மங்கெழுந் தருளி யிங்கெனை
யிருத்தி னாய்முறை யோவெ னெம்பிரான்
வம்ப னேன்வினைக் கிறுதி யில்லையே. (௩௩)

இல்லை நின்கழற் கன்ப தென்கணே
யேல மேலுநற் குழலி பங்கனே
கல்லை மென்கனி யாக்கும் விச்சைகொண்
டென்னை நின்கழற் கன்ப னாக்கினு

யெல்லை யில்லைநின் கருணை யெம்பிரா
   னேது கொண்டுநா னேது செய்யினும்
வல்லை யேயெனக் கின்னு முன்கழல்
   காட்டி மீட்கவும் மறுவில் வானனே. (௧௪)

வான நாடரு மறியொ ணாதநீ
   மறையி லீறுமுன் றொடரொ ணாதநீ
யேனை நாடருந் தெரியொ ணாதநீ
   யென்னை யின்னிதா யாண்டு கொண்டவா
ஊனை நாடக மாடு வித்தவா
   வுருகி நானுனைப் பருக வைத்தவா
ஞான நாடக மாடு வித்தவா
   நைய வையகத் துடைய விச்சையே. (௧௫)

விச்ச தன்றியே விளைவு செய்குவாய்
   விண்ணு மண்ணக முழுதும் யாவையும்
வைச்சு வாங்குவாய் வஞ்ச கப்பெரும்
   புலைய னேனையுன் கோயில் வாயிலிற்
பிச்ச னாக்கினாய் பெரிய வன்பருக்
   குரிய னாக்கினாய் தாம்வ ளர்த்ததோர்
நச்சு மாமர மாயி னுங்கொலார்
   நானு மங்ஙனே யுடைய நாதனே. (௧௬)

உடைய நாதனே போற்றி நின்னலாற்
   பற்று மற்றெனக் காவ தொன்றினி
யுடைய னேபணி போற்றி யும்பரார்
   தம்ப ராபரா போற்றி யாரினுங்
கடைய னாயினேன் போற்றி யென்பெருங்
   கருணை யாளனே போற்றி யென்னைநின்
னடிய னாக்கினாய் போற்றி யாதியு
   மந்த மாயினாய் போற்றி யப்பனே. (௧௭)

அப்ப னேயெனக் கமுத னேயா
   னந்த னேயக நெகவள் ளூறுதே
னொப்ப னேயுனக் குரிய வன்பரி
   லுரிய னாயுனைப் பருக நின்றதோர்
துப்ப னேசுடர் முடிய னேதுணை
   யாள னேதொழும் பாள ரெய்ப்பினில்
வைப்ப னேயெனை வைப்ப தோசொலாய்
   நைய வையகத் தெங்கண் மன்னனே. (௧௮)

மன்ன வெம்பிரான் வருக வென்னெனை
மாலு நான்முகத் தொருவன் யாரினு
முன்ன வெம்பிரான் வருக வென்னெனை
முழுதும் யாவையு மிறுதி யுற்றநாட்
பின்ன வெம்பிரான் வருக வென்னெனைப்
பெய்க ழற்கணன் பாயெ னாவினாற்
பன்ன வெம்பிரான் வருக வென்னெனைப்
பாவ நாசநின் சீர்கள் பாடவே. (௯௯)

பாட வேண்டுநான் போற்றி நின்னையே
பாடி நைந்துநைந் துருகி நெக்குநெக்
காட வேண்டுநான் போற்றி யம்பலத்
தாடு நின்கழற் போது நாயினேன்
கூட வேண்டுநான் போற்றி யிப்புழுக்
கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்
வீட வேண்டுநான் போற்றி வீடுதந்
தருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே. (௧௦௦)

திருச்சிற்றம்பலம்.

நீத்தல்விண்ணப்பம்.

பிரபஞ்சவைராக்கியம்.

உத்தரகோசமங்கையிலருளிச்செயப்பட்டது.

கட்டளைக்கலித்துறை.

திருச்சிற்றம்பலம்.

கடையவனேனைக்கருணையினாற்கலந்தாண்டுகொண்ட
விடையவனேவிட்டிடுதிகண்டாய்விறல்வேங்கையின்றோ
லுடையவனேமன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
சடையவனேதளர்ந்தேனெம்பிரானென்னைத்தாங்கிக்கொள்ளே.()

கொள்ளேர்பிளவகலாத்தடங்கொங்கையர்கொவ்வைச்செவ்வாய்
விள்ளேனெனினும்விடுதிகண்டாய்நின்விழுத்தொழும்பி
னுள்ளேன்புறமல்லேனுத்தரகோசமங்கைக்கரசே
கள்ளேனொழியவுங்கண்டுகொண்டாண்டதெக்காரணமே. (௨)

காருறுகண்ணியரைம்புலனாற்றங்கரைமரமாய்
வேருறுவேனைவிடுதிகண்டாய்விரைக்குந்திருவா
ருருறைவாய்மன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
வாருறுபூண்முலையாள்பங்கவென்னைவளர்ப்பவனே. (௩)

வளர்கின்றநின்கருணைக்கையில்வாங்கவுநீங்கியிப்பான்
மிளிர்கின்றவென்னைவிடுதிகண்டாய்வெண்மதிக்கொழுந்தொன்
றொளிர்கின்றநீண்முடியுத்தரகோசமங்கைக்கரசே
தெளிகின்றபொன்னுமின்னும்மன்னதோற்றச்செழுஞ்சுடரே. (௪)

செழிகின்றதீப்புகுவிட்டிலிற்சின்மொழியாரிற்பன்னாள்
விழுகின்றவென்னைவிடுதிகண்டாய்வெறிவாயறுகா
லுழுகின்றபூமுடியுத்தரகோசமங்கைக்கரசே
வழிநின்றுநின்னருளாரமுதூட்டமறுத்தனனே. (௫)

மறுத்தனன்யானுன்னருளறியாமையிலென்மணியே
வெறுத்தெனைநீவிட்டிடுதிகண்டாய்வினையின்றொகுதி
யொறுத்தெனையாண்டுகொளுத்தரகோசமங்கைக்கரசே
பொறுப்பரன்றேபெரியோர்சிறுநாய்கடம்பொய்யினையே. (௬)

பொய்யவனேனைப்பொருளெனவாண்டொன்றுபொத்திக்கொண்ட
மெய்யவனேவிட்டிடுதிகண்டாய்விடமுண்மிடற்று
மையவனேமன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
செய்யவனேசிவனேசிறியேன்பவந்தீர்ப்பவனே. (௭)

தீர்க்கின்றவாறென்பிழையைநின்சீருளென்கொலென்று
வேர்க்கின்றவென்னைவிடுதிகண்டாய்விரவார்வெருவ
வார்க்கின்றதார்விடையுத்தரகோசமங்கைக்கரசே
யீர்க்கின்றவஞ்சொடச்சம்வினையேனையிருதலையே. (௮)

இருதலைக்கொள்ளியினுள்ளெறும்பொத்துநினைப்பிரிந்த
விரிதலையேனைவிடுதிகண்டாய்வியன்மூவுலகுக்
கொருதலைவாமன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
பொருதலைமூவிலைவேல்வலனேந்திப்பொலிபவனே. (௯)

பொலிகின்றநின்றாள்புகுதப்பெற்றாக்கையைப்போக்கப்பெற்று
மெலிகின்றவென்னைவிடுதிகண்டாயளிதேர்விளரி
யொலிகின்றபூம்பொழிலுத்தரகோசமங்கைக்கரசே
வலிநின்றதிண்சிலையாலெரித்தாய்புரமாறுபட்டே. (௧௦)

மாறுபட்டஞ்சென்னைவஞ்சிப்பயானுன்மணிமலர்த்தாள்
வேறுபட்டேனைவிடுதிகண்டாய்வினையேன்மனத்தே

பூறுமட்டேமன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
நீறுபட்டேயொளிகாட்டும்பொன்மேனிநெடுந்தகையே. (௧௧)

நெடுந்தகைநீயென்னையாட்கொள்ளயானைம்புலன்கள்கொண்டு
விடுந்தகையேனைவிடுதிகண்டாய்விரவார்வெருவ
வடுந்தகைவேல்வல்லவுத்தரகோசமங்கைக்கரசே
கடுந்தகையேனுண்ணுந்தெண்ணீரமுதப்பெருங்கடலே. (௧௨)

கடலினுணாய்நாக்கியாங்குன்கருணைக்கடலினுள்ளம்
விடலரியேனைவிடுதிகண்டாய்விடலில்லடியா
ருடலிலமேமன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
மடலின்மட்டேமணியேயமுதேயென்மதுவெள்ளமே. (௧௩)

வெள்ளத்துணுவற்றியாங்குன்னருள்பெற்றுத்துன்பத்தின்றும்
விள்ளக்கிலேனைவிடுதிகண்டாய்விரும்பும்மடியா
ருள்ளத்துள்ளாய்மன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
கள்ளத்துளேற்கருளாய்களியாதகளியெனக்கே. (௧௪)

களிவந்தசிந்தையொடுன்கழல்கண்டுங்கலந்தருள
வெளிவந்திலேனைவிடுதிகண்டாய்மெய்ச்சுடருக்கெல்லா
மொளிவந்தபூங்கழலுத்தரகோசமங்கைக்கரசே
யெளிவந்தவெந்தைபிரானென்னையாளுடையென்னப்பனே. (௧௫)

என்னையப்பாவஞ்சலென்பவரின்றிநின்றெய்த்தலைந்தேன்
மின்னையொப்பாய்விட்டிடுதிகண்டாயுவமிக்கின்மெய்யே
யுன்னையொப்பாய்மன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
யன்னையொப்பாயெனக்கத்தனொப்பாயென்னரும்பொருளே. ()

பொருளேதமியேன்புகலிடமேநின்புகழிகழ்வார்
வெருளேயெனைவிட்டிடுதிகண்டாய்மெய்ம்மையார்விழுங்கு
மருளேயணிபொழிலுத்தரகோசமங்கைக்கரசே
யிருளேவெளியேயிகபரமாகியிருந்தவனே. (௧௭)

இருந்தென்னையாண்டுகொள் விற்றுக்கொளொற்றிவையென்னினல்லால்
விருந்தினனேனைவிடுதிகண்டாய்மிக்கநஞ்சமுதா
வருந்தினனேமன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
மருந்தினனேபிறவிப்பிணிப்பட்டுமடங்கினர்க்கே. (௧௮)

மடங்கவென்வல்வினைக்காட்டைநின்மன்னருட்டீக்கொளுவும்
விடங்கவென்றன்னைவிடுதிகண்டாயென்பிறவியைவே
ரொடுங்களைந்தாண்டுகொளுத்தரகோசமங்கைக்கரசே
கொடுங்கரிக்குன்றுரித்தஞ்சுவித்தாய்வஞ்சிக்கொம்பினையே. (௧௯)

கொம்பரில்லாக்கொடிபோலலமந்தனன்கோமளமே
வெம்புகின்றேனைவிடுதிகண்டாய்விண்ணர்நண்ணுகில்லா
வும்பருள்ளாய்மன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
யம்பரமேநிலனேயனல்காலொடப்பானவனே. (௨0)

ஆனைவெம்போரிற்குறுந்தூறெனப்புலனாலலைப்புண்
டேனையெந்தாய்விட்டிடுதிகண்டாய்வினையேன்மனத்துத்
தேனையும்பாலையுங்கன்னலையும்மமுதத்தையுமொத்
தூனையுமென்பினையும்முருக்காநின்றவொண்மையனே. (௨௧)

ஒண்மையனேதிருநீற்றையுத்தூளித்தொளிமிளிரும்
வெண்மையனேவிட்டிடுதிகண்டாய்மெய்யடியவர்கட்
கண்மையனேயென்றுஞ்சேயாய்பிறர்க்கறிதற்கரிதாம்
பெண்மையனேதொன்மையாண்மையனேயலிப்பெற்றியனே. ()

பெற்றதுகொண்டுபிழையேபெருக்கிச்சுருக்குமன்பின்
வெற்றடியேனைவிடுதிகண்டாய்விடிலோகெடுவேன்
மற்றடியேன்றன்னைத்தாங்குநரில்லையென்வாழ்முதலே
யுற்றடியேன்மிகத்தேறிநின்றேனெனக்குள்ளவனே. (௨௩)

உள்ளனவேநிற்கவில்லனசெய்யுமையற்றுமுனி
வெள்ளனலேனைவிடுதிகண்டாய்வியன்மாத்தடக்கைப்
பொள்ளனல்வேழத்துரியாய்புலனின்கட்போதலொட்டா
மெள்ளனவேமொய்க்குநெய்க்குடந்தன்னையெறும்பெனவே. (௨௪)

எறும்பிடைநாங்கூழெனப்புலனாலரிப்புண்டலந்த
வெறுந்தமியேனைவிடுதிகண்டாய்வெய்யகூற்றொடுங்க
வுறுங்கடிப்போதவையேயுணர்வுற்றவரும்பரும்பர்
பெறும்பதமேயடியார்பெயராதபெருமையனே. (௨௫)

பெருநீறறச்சிறுமீன்றுவண்டாங்குநினைப்பிரிந்த
வெருநீர்மையேனைவிடுதிகண்டாய்வியன்கங்கைபொங்கி
வருநீர்மடுவுண்மலைச்சிறுதோணிவடிவின்வெள்ளைக்
குருநீர்மதிபொதியுஞ்சடைவானக்கொழுமணியே. (௨௬)

கொழுமணியேர்நகையார்கொங்கைக்குன்றிடைச்சென்றுகுன்றி
விழுமடியேனைவிடுதிகண்டாய்மெய்ம்முழுதுங்கம்பித்
தழுமடியாரிடையார்த்துவைத்தாட்கொண்டருளியென்னைக்
கழுமணியேயின்னுங்காட்டுகண்டாய்நின்புலன்கழலே. (௨௭)

புலன்கடிகைப்பிக்கயானுந்திகைத்திங்கொர்பொய்ந்நெறிக்கே
விலங்குகின்றேனைவிடுதிகண்டாய்விண்ணுமண்ணுமெல்லாங்

கலங்கமுந்நீர்நஞ்சமுதுசெய்தாய்கருணாகரனே
துலங்குகின்றேனடியேனுடையாயென்றொழுகுலமே. (உ௮).

குலங்களைந்தாய்களைந்தாயென்னைக்குற்றங்கொற்றச்சிலையாம்
விலங்கலெந்தாய்விட்டிடுதிகண்டாய்பொன்னின்மின்னுகொன்
யலங்கலந்தாமரைமேனியப்பாவொப்பிலாதவனே [றை
மலங்களைந்தாற்சுழல்வன்றயிரிற்பொருமத்துறவே. (உக).

மத்துறுதண்டயிரிற்புலன்றீக்கதுவக்கலங்கி
வித்துறுவேனைவிடுதிகண்டாய்வெண்டலைமிலைச்சிக்
கொத்துறுபோதுமிலைந்துகுடர்நெடுமாலைசுற்றித்
தத்துறுநீறுடனாரச்செஞ்சாந்தணிசச்சையனே. (௩0).

சச்சையனேமிக்கதண்புனல்விண்காலினிலநெருப்பாம்
விச்சையனேவிட்டிடுதிகண்டாய்வெளியாய்கரியாய்
பச்சையனேசெய்யமேனியனேயொண்படவரவக்
கச்சையனேகடந்தாய்தடந்தாளவடற்கரியே. (௩க).

அடற்கரிபோலைம்புலன்களுக்கஞ்சியழிந்தவென்னை
விடற்கரியாய்விட்டிடுதிகண்டாய்விழுத்தொண்டர்க்கல்லாற்
றொடற்கரியாய்சுடர்மாமணியேசுடுதீச்சுழலக்
கடற்கரிதாயெழுநஞ்சமுதாக்குங்கறைக்கண்டனே. (௩உ)

கண்டதுசெய்துகருணைமட்டுப்பருகிக்களித்து
மிண்டுகின்றேனைவிடுதிகண்டாய்நின்விரைமலர்த்தாள்
பண்டுதந்தாற்போற்பணித்துப்பணிசெயக்கூவித்தென்னைக்
கொண்டெனெந்தாய்களையாய்களையாயகுதுகுதுப்பே. (௩௩).

குதுகுதுப்பின்றிநின்றென்குறிப்பேசெய்துநின்குறிப்பில்
விதுவிதுப்பேனைவிடுதிகண்டாய்விரையார்ந்தினிய
மதுமதுப்போன்றென்னைவாழைப்பழத்தின்மனங்கனிவித்
தெதிர்வதெப்போதுபயில்விக்கயிலைப்பரம்பரனே. (௩௪).

பரம்பரனேநின்பழவடியாரொடுமென்படிறு
விரும்பரனேவிட்டிடுதிகண்டாய்மென்முயற்கறையி
னரும்பரனேர்வைத்தணிந்தாய்பிறவியைவாயரவம்
பொரும்பெருமான்வினையேன்மனமஞ்சிப்பொதும்புறவே. (௩௫).

பொதும்புறுதீப்போற்புகைந்தெரியப்புலன்றீக்கதுவ
வெதும்புறுவேனைவிடுதிகண்டாய்விரையார்நறவந்
ததும்புமந்தாரத்திற்றாரம்பயின்றுமந்தம்முரல்வண்
டதும்புங்கொழுந்தேனவிர்சடைவானத்தடலரைசே. (௩௬).

அரைசேயறியாச்சிறியேன்பிழைக்கஞ்சலென்னினல்லால்
விரைசேர்முடியாய்விடுதிகண்டாய்வெண்ணகைக்கருங்கட்
டிரைசேர்மடந்தைமணந்ததிருப்பொற்பதப்புயங்கா
வரைசேர்ந்தடர்ந்தென்னவல்வினைதான்வந்தடர்வனவே. (௩எ)

அடர்புலனாற்பிரிந்தஞ்சியஞ்சொனல்லாரவர்தம்
விடர்விடலேனைவிடுதிகண்டாய்விரிந்தேயெரியுஞ்
சுடரனையாய்சுடுகாட்டரசேதொழும்பர்க்கமுதே
தொடர்வரியாய்தமியேன்றனிநீக்குந்தனித்துணையே. (௩அ)

தனித்துணைநீநிற்கயான்றருக்கித்தலையானடந்த
வினைத்துணையேனைவிடுதிகண்டாய்வினையேனுடைய
மனத்துணையேயென்றன்வாழ்முதலேயெனக்கெய்ப்பில்வைப்பே
தினைத்துணையேனும்பொறேன்றுயராக்கையின்றிண்வலையே. ()

வலைத்தலைமானன்னநோக்கியர்நோக்கின்வலையிற்பட்டு
மிலைத்தலைந்தேனைவிடுதிகண்டாய்வெண்மதியினொற்றைக்
கலைத்தலையாய்கருணாகரனேகயிலாயமென்னு
மலைத்தலைவாமலையாண்மணவாளவென்வாழ்முதலே. (௪0)

முதலைச்செவ்வாய்ச்சியர்வேட்கைவெந்நீரிற்கடிப்பமூழ்கி
விதலைச்செய்வேனைவிடுதிகண்டாய்விடக்கூன்மிடைந்த
சிதலைச்செய்காயம்பொறேன்சிவனேமுறையோமுறையோ
திதலைச்செய்பூண்முலைமங்கைபங்காவென்சிவகதியே. (௪க)

கதியடியேற்குன்கழறந்தருளவுமூன்கழியா
விதியடியேனைவிடுதிகண்டாய்வெண்டலைமுழையிற்
பதியுடைவாளரப்பார்த்திறைபைத்துச்சுருங்கவஞ்சி
மதிநெடுநீரிற்குளித்தொளிக்குஞ்சடைமன்னவனே. (௪உ)

மன்னவனேயொன்றுமாறறியாச்சிறியேன்மகிழ்ச்சி
மின்னவனேவிட்டிடுதிகண்டாய்மிக்கவேதமெய்ந்நூல்
சொன்னவனேசொற்கழிந்தவனேகழியாத்தொழும்பர்
முன்னவனேபின்னுமானவனேயிம்முழுதையுமே. (௪௩)

முழுதயில்வேற்கண்ணியரென்னுமூரித்தழன்முழுகும்
விழுதனையேனைவிடுதிகண்டாய்நின்வெறிமலர்த்தா
டொழுதுசெல்வானத்தொழும்பரிற்கூட்டிடுசோற்றெம்பிரான்
பழுதுசெய்வேனைவிடேலுடையாயுன்னைப்பாடுவனே. (௪௪)

பாடிற்றிலேன்பணியேன்மணிநீயொளித்தாய்க்குப்பச்சூன்
வீடிற்றிலேனைவிடுதிகண்டாய்வியந்தாங்கலறித்

தேடிற்றிலேன்சிவனெவ்விடத்தானெவர்கண்டனரென்
றோடிற்றிலேன்கிடந்துள்ளுருகேனின்றுழைத்தனனே. (சரு)

உழைதருநோக்கியர்கொங்கைப்பலாப்பழத்தீயினொப்பாய்
விழைதருவேனைவிடுதிகண்டாய்விடின்வேலைநஞ்சுண்
மழைதருகண்டன்குணமிலிமானிடன்றேய்மதியன்
பழைதருமாபரனென்றென்றறைவன்பழிப்பினையே. (சசு)

பழிப்பினின்பாதப்பழந்தொழும்பெய்திவிழப்பழித்து
விழித்திருந்தேனைவிடுதிகண்டாய்வெண்மணிப்பணிலங்
கொழித்துமந்தாரமந்தாகினிதுந்தும்பந்தப்பெருமை
தழிச்சிறைநீரிற்பிறைக்கலஞ்சேர்தருதாரவனே. (சஎ)

தாரகைபோலுந்தலைத்தலைமாலைத்தழலரப்பூண்
வீரவென்றன்னைவிடுதிகண்டாய்விடிலென்னைமிக்கா
ராரடியானென்னினுத்தரகோசமங்கைக்கரசின்
சீரடியாரடியானென்றுநின்னைச்சிரிப்பிப்பனே. (சஅ)

சிரிப்பிப்பன்சீறும்பிழைப்பைத்தொழும்பையுமீசற்கென்று
விரிப்பிப்பனென்னைவிடுதிகண்டாய்விடின்வெங்கரியி
னுரிப்பிச்சன்றோலுடைப்பிச்சனஞ்சூண்பிச்சனூர்ச்சுடுகாட்
டெரிப்பிச்சனென்னையுமாளுடைப்பிச்சனென்றேசுவனே. (சகூ)

ஏசினும்யானுன்னையேத்தினுமென்பிழைக்கேகுழைந்து
வேசறுவேனைவிடுதிகண்டாய்செம்பவளவெற்பிற்
றேசுடையாயென்னையாளுடையாய்சிற்றுயிர்க்கிரங்கிக்
காய்சினவாலமுண்டாயமுதுண்ணக்கடையவனே. (ருo)

திருச்சிற்றம்பலம்.

திருவெம்பாவை.

சத்தியை வியந்தது.

திருவண்ணாமலையிலருளிச்செயப்பட்டது.

வெண்டளையான்வந்த இயற்றரவிணைக்கொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

ஆதியுமந்தமுமில்லாவரும்பெருஞ்
சோதியையாம்பாடக்கேட்டேயும்வாட்டடங்கண்
மாதேவளருதியோவன்செவியோநின்செவிதான்
மாதேவன்வார்கழல்கள்வாழ்த்தியவாழ்த்தொலிபோய்

வீதிவாய்க்கேட்டலுமேவிம்மிவிம்மிமெய்ம்மறந்து
போதாரமளியின்மேனின்றும்புரண்டிங்ங
னேதேனுமாகாள்கிடந்தாளென்னேயென்னே
யீதேயெந்தோழிபரிசேலோரெம்பாவாய். (௧)

பாசம்பரஞ்சோதிக்கென்பாயிராப்பகனாம்
பேசும்போதெப்போதிப்போதாரமளிக்கே
நேசமும்வைத்தனையோநேரிழையாய்நேரிழையீர்
சீசியிவையுஞ்சிலவோவிளையாடி
யேசுமிடமீதோவிண்ணோர்களேத்துதற்குக்
கூசுமலர்ப்பாதந்தந்தருளவந்தருளுந்
தேசன்சிவலோகன்றில்லைச்சிற்றம்பலத்து
ளீசனார்க்கன்பார்யாமாரேலோரெம்பாவாய். (௨)

முத்தன்னவெண்ணகையாய்முன்வந்தெதிரெழுந்தென்
னத்தனானந்தனமுதனென்றள்ளூறித்
தித்திக்கப்பேசுவாய்வந்துன்கடைதிறவாய்
பத்துடையீரீசன்பழவடியீர்பாங்குடையீர்
புத்தடியோம்புன்மைதீர்த்தாட்கொண்டாற்பொல்லாதோ
வெத்தோநின்னன்புடைமையெல்லோமறியோமோ
சித்தமழகியார்பாடாரோநஞ்சிவனை
யித்தனையும்வேண்டுமெமக்கேலோரெம்பாவாய். (௩)

ஒண்ணித்திலநகையாயின்னம்புலர்ந்தின்றோ
வண்ணக்கிளிமொழியாரெல்லாரும்வந்தாரோ
வெண்ணிக்கொடுள்ளவாசொல்லுகோமவ்வளவுங்
கண்ணைத்துயின்றவமேகாலத்தைப்போக்காதே
விண்ணுக்கொருமருந்தைவேதவிழுப்பொருளைக்
கண்ணுக்கினியானைப்பாடிக்கசிந்துள்ள
முண்ணெக்குநின்றுருகயாமாட்டோநீயேவந்
தெண்ணிக்குறையிற்றுயிலேலோரெம்பாவாய். (௪)

மாலறியாநான்முகனுங்காணாமலையினைநாம்
போலறிவோமென்றுள்ளபொக்கங்களேபேசும்
பாலூறுதேன்வாய்ப்படிறீகடைதிறவாய்
ஞாலமேவிண்ணேபிறவேயறிவரியான்
கோலமுநம்மையாட்கொண்டருளிக்கோதாட்டுஞ்
சீலமும்பாடிச்சிவனேசிவனேயென்
றோலமிடினுமுணராயுணராய்கா
ணேலக்குழலிபரிசேலோரெம்பாவாய். (௫)

மானேநீநென்னலைநாளைவந்துங்களை
நானேயெழுப்புவனென்றலுநாணுமே
போனதிசைபகராயின்னம்புலர்ந்தின்றோ
வானேநிலனேபிறவேயறிவரியான்
றானேவந்தெம்மைத்தலையளித்தாட்கொண்டருளும்
வான்வார்கழல்பாடிவந்தோர்க்குன்வாய்திறவா
யூனேயுருகாயுனக்கேயுறுமெமக்கு
மேனோர்க்குந்தங்கோனைப்பாடேலோரெம்பாவாய். (சு)

அன்னேயிவையுஞ்சிலவோபலவமர
ருன்னற்கரியானொருவனிருஞ்சீரான்
சின்னங்கள்கேட்பச்சிவனென்றேவாய்திறப்பாய்
தென்னாவென்னாமுன்னந்தீசேர்மெழுகொப்பா
யென்னானையென்னரையனின்னமுதென்றெல்லோமுஞ்
சொன்னோங்கேள்வெவ்வேறாயின்னந்துயிலுதியோ
வன்னெஞ்சப்பேதையர்போல்வாளாகிடத்தியா
லென்னே துயிலின்பரிசேலோரெம்பாவாய். (எ)

கோழிசிலம்பச்சிலம்புங்குருகெங்கு
மேழிலியம்பவியம்பும்வெண்சங்கெங்கும்
கேழில்பரஞ்சோதிகேழில்பரங்கருணை
கேழில்விழுப்பொருள்கள்பாடினோங்கேட்டிலையோ
வாழியீதென்னவுறக்கமோவாய்திறவா
யாழியானன்புடைமையாமாறுமிவ்வாறோ
வூழிமுதல்வனாய்நின்றவொருவனை
யேழைபங்காளனையேபாடேலோரெம்பாவாய். (அ)

முன்னைப்பழம்பொருட்குமுன்னைப்பழம்பொருளே
பின்னைப்புதுமைக்கும்பேர்த்துமப்பெற்றியனே
யுன்னைப்பிரானாகப்பெற்றவுன்சீரடியோ
முன்னடியார்தாள்பணிவோமாங்கவர்க்கேபாங்காவோ
மன்னவரேயெங்கணவராவாரவருகந்து
சொன்னபரிசேதொழும்பாய்ப்பணிசெய்வோ
மின்னவகையேயெமக்கெங்கோனல்குதியே
லென்னகுறையுமிலோமேலோரெம்பாவாய். (கூ)

பாதாளமேழினுங்கீழ்சொற்கழிவுபாதமலர்
போதார்புனைமுடியுமெல்லாப்பொருண்முடிவே
பேதையொருபாற்றிருமேனியொன்றல்லன்
வேதமுதல்விண்ணோருமண்ணுந்துதித்தாலு

மோதவுலவாவொருதோழன்றொண்டருளன்
    கோதில்குலத்தான்றன்கோயிற்பிணாப்பிள்ளைகா
ளேதவனூரேதவன்பேராருற்றாராரயலா
    ரேதவனைப்பாடும்பரிசேலோரெம்பாவாய். (௧௦)

மொய்யார்தடம்பொய்கைபுக்குமுகேரென்னக்
    கையாற்குடைந்துகுடைந்துன்கழல்பாடி
யையாவழியடியோம்வாழ்ந்தோங்காணாரழல்போற்
    செய்யாவெண்ணீறாடிசெல்வாசிறுமருங்குன்
மையார்தடங்கண்மடந்தைமணவாளா
    வையாநீயாட்கொண்டருளும்விளையாட்டி
னுய்வார்களுய்யும்வகையெல்லாமுய்ந்தொழிந்தோ
    மெய்யாமற்காப்பாயெமையேலோரெம்பாவாய். (௧௧)

ஆர்த்தபிறவித்துயர்கெடநாமார்த்தாடுந்
    தீர்த்தனற்றில்லைச்சிற்றம்பலத்தேதீயாடுங்
கூத்தனிவ்வானுங்குவலயமுமெல்லோமுங்
    காத்தும்படைத்துங்கரந்தும்விளையாடி
வார்த்தையும்பேசிவளைசிலம்பவார்கலைக
    ளார்ப்பரவஞ்செய்யவணிகுழன்மேல்வண்டார்ப்பப்
பூத்திகழும்பொய்கைகுடைந்துடையான்பொற்பாத
    மேத்தியிருஞ்சுனைநீராடேலோரெம்பாவாய். (௧௨)

பைங்குவளைக்கார்மலராற்செங்கமலப்பைம்போதா
    லங்கங்குருகினத்தாற்பின்னுமரவத்தாற்
றங்கண்மலங்கழுவுவார்வந்துசார்தலினா
    லெங்கள்பிராட்டியுமெங்கோனும்போன்றிசைந்த
பொங்குமடுவிற்புகப்பாய்ந்துபாய்ந்துநஞ்
    சங்கஞ்சிலம்பச்சிலம்புகலந்தார்ப்பக்
கொங்கைகள்பொங்கக்குடையும்புனல்பொங்கப்
    பங்கயப்பூம்புனல்பாய்ந்தாடேலோரெம்பாவாய். (௧௩)

காதார்குழையாடப்பைம்பூண்கலனாடக்
    கோதைகுழலாடவண்டின்குழாமாடச்
சீதப்புனலாடிச்சிற்றம்பலம்பாடி
    வேதப்பொருள்பாடியப்பொருளாமாபாடிச்
சோதிதிறம்பாடிச்சூழ்கொன்றைத்தார்பாடி
    யாதிதிறம்பாடியந்தமாமாபாடிப்
பேதித்துநம்மைவளர்த்தெடுத்தபெய்வளைதன்
    பாதத்திறம்பாடியாடேலோரெம்பாவாய். (௧௪)

ஓரொருகாலெம்பெருமானென்றென்றேநம்பெருமான்
சீரொருகால்வாயோவாள்சித்தங்களிகூர
நீரொருகாலோவாநெடுந்தாரைகண்பனிப்பப்
பாரொருகால்வந்தனையாள்விண்ணோரைத்தான்பணியாள்
பேரரையற்கிங்ஙனேபித்தொருவராமாறு
மாரொருவரிவ்வண்ணமாட்கொள்ளும்வித்தகர்தாள்
வாருருவப்பூண்முலையீர்வாயாரநாம்பாடி
யேருருவப்பூம்புனல்பாய்ந்தாடேலோரெம்பாவாய். (கரு)

முன்னிக்கடலைச்சுருக்கியெழுந்துடையா
ளென்னத்திகழ்ந்தெம்மையாளுடையாளிட்டிடையின்
மின்னிப்பொலிந்தெம்பிராட்டிதிருவடிமேற்
பொன்னஞ்சிலம்பிற்சிலம்பித்திருப்புருவ
மென்னச்சிலைகுலவிநந்தம்மையாளுடையா
டன்னிற்பிரிவிலாவெங்கோமானன்பர்க்கு
முன்னியவணமக்குமுன்சுரக்குமின்னருளே
யென்னப்பொழியாய்மழையேலோரெம்பாவாய். (கசு)

செங்கணவன்பாற்றிசைமுகன்பாற்றேவர்கள்பா
லெங்குமிலாததோரின்பநம்பாலதாக்
கொங்குண்கருங்குழலிநந்தம்மைக்கோதாட்டி
யிங்குநம்மில்லங்கடோறுமெழுந்தருளிச்
செங்கமலப்பொற்பாதந்தந்தருளுஞ்சேவகனை
யங்கணரசையடியோங்கட்காரமுதை
நங்கள்பெருமானைப்பாடிநலந்திகழப்
பங்கயப்பூம்புனல்பாய்ந்தாடேலோரெம்பாவாய். (கஎ)

அண்ணாமலையானடிக்கமலஞ்சென்றிறைஞ்சும்
விண்ணோர்முடியின்மணித்தொகைவீறற்றாற்போற்
கண்ணாரிரவிகதிர்வந்துகார்கரப்பத்
தண்ணாரொளிமழுங்கித்தாரகைகடாமகலப்
பெண்ணாகியாணாயலியாய்ப்பிறங்கொளிசேர்
விண்ணாகிமண்ணாகியித்தனையும்வேறாகிக்
கண்ணாரமுதமுமாய்நின்றான்கழல்பாடிப்
பெண்ணேயிப்பூம்புனல்பாய்ந்தாடேலோரெம்பாவாய். ()

உங்கையிற்பிள்ளையுனக்கேயடைக்கலமென்
றங்கப்பழஞ்சொற்புதுக்குமெம்மச்சத்தா
லெங்கள்பெருமானுனக்கொன்றுரைப்போங்கே
ளெங்கொங்கைநின்னன்பரல்லார்தோள்சேரற்க

வெங்கையுனக்கல்லாதெப்பணியுஞ்செய்யற்க
கங்குல்பகலெங்கண்மற்றொன்றுங்காணற்க
விங்கிப்பரிசேயெமக்கெங்கோனல்குதியே
லெங்கெழிலென்ஞாயிறெமக்கேலோரெம்பாவாய். (கக)

போற்றியருளுகநின்னாதியாம்பாதமலர்
போற்றியருளுகநின்னந்தமாஞ்செந்தளிர்கள்
போற்றியெல்லாவுயிர்க்குந்தோற்றமாம்பொற்பாதம்
போற்றியெல்லாவுயிர்க்கும்போகமாம்பூங்கழல்கள்
போற்றியெல்லாவுயிர்க்குமீறாமிணையடிகள்
போற்றிமாலுன்முகனுங்காணாதபுண்டரிகம்
போற்றியாமுய்யவாட்கொண்டருளும்பொன்மலர்கள்
போற்றியாமார்கழிநீராடேலோரெம்பாவாய். (உ0)

திருச்சிற்றம்பலம்.

திருவம்மானை.

ஆனந்தக்களிப்பு.

திருவண்ணாமலையிலருளிச்செயப்பட்டது.

ஒப்புமைபற்றிவந்தவாறடித்தரவுகொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

செங்கணெடுமாலுஞ்சென்றிடந்துங்காண்பரிய
பொங்குமலர்ப்பாதம்பூதலத்தேபோந்தருளி
யெங்கள்பிறப்பறுத்திட்டெந்தரமுமாட்கொண்டு
தெங்குதிரள்சோலைத்தென்னன்பெருந்துறையா
னங்கணனந்தணனாயறைகூவிவீடருளு
மங்கருணைவார்கழலேபாடுதுங்காணம்மானாய். (க)

பாரார்விசும்புள்ளார்பாதாளத்தார்புறத்தா
ராராலுங்காண்டற்கரியானெமக்கெளிய
பேராளன்றென்னன்பெருந்துறையான்பிச்சேற்றி
வாராவழியருளிவந்தென்னுளம்புகுந்த
வாராவமுதாயலைகடல்வாய்மீன்விசிறும்
பேராசைவாரியனைப்பாடுதுங்காணம்மானாய். (உ)

இந்திரனுமாலயனுமேனோரும்வானோரு
மந்தரமேநிற்கச்சிவனவனிவந்தருளி
யெந்தரமுமாட்கொண்டுதோட்கொண்டநீற்றனாய்ச்
சிந்தனையைவந்துருக்குஞ்சீரார்பெருந்துறையான்
பந்தம்பரியப்பரிமேற்கொண்டான்றந்த
வந்தமிலாவானந்தம்பாடுதுங்காணம்மானாய். (௧)

வான்வந்ததேவர்களுமாலயனோடிந்திரனுங்
கானின்றுவற்றியும்புற்றெழுந்துங்காண்பரிய
தான்வந்துநாயேனைத்தாய்போற்றலையளித்திட்
டுன்வந்துரோமங்களுள்ளேயுயிர்ப்பெய்து
தேன்வந்தமுதின்றெளிவினொளிவந்த
வான்வந்தவார்கழலேபாடுதுங்காணம்மானாய். (௨)

கல்லாமனத்துக்கடைப்பட்டநாயேனை
வல்லாளன்றென்னன்பெருந்துறையான்பிச்சேற்றிக்
கல்லைப்பிசைந்துகனியாக்கித்தன்கருணை
வெள்ளத்தழுத்திவினைகடிந்தவேதியனைத்
தில்லைநகர்புக்குச்சிற்றம்பலமன்னு
மொல்லைவிடையானைப்பாடுதுங்காணம்மானாய். (௩)

கேட்டாயோதோழிகிறிசெய்தவாறொருவன்
றீட்டார்மதில்புடைசூழ்தென்னன்பெருந்துறையான்
காட்டாதனவெல்லாங்காட்டிச்சிவங்காட்டித்
தாட்டாமரைகாட்டித்தன்கருணைத்தேன்காட்டி
நாட்டார்நகைசெய்யநாமேலைவீடெய்த
வாட்டான்கொண்டாண்டவாபாடுதுங்காணம்மானாய். (௪)

ஓயாதேயுள்குவாருள்ளிருக்குமுள்ளானைச்
சேயானைச்சேவகனைத்தென்னன்பெருந்துறையின்
மேயானைவேதியனைமாதிருக்கும்பாதியனை
நாயானநந்தம்மையாட்கொண்டநாயகனைத்
தாயானதத்துவனைத்தானேயுலகேழு
மாயானையாள்வானைப்பாடுதுங்காணம்மானாய். (௫)

பண்சுமந்தபாடற்பரிசுபடைத்தருளும்
பெண்சுமந்தபாகத்தன்பெம்மான்பெருந்துறையான்
விண்சுமந்தகீர்த்திவியன்மண்டலத்தீசன்
கண்சுமந்தநெற்றிக்கடவுள்கலிமதுரை

மண்சுமந்துகூலிகொண்டக்கோவான்மொத்துண்டு
புண்சுமந்தபொன்மேனிபாடுதுங்காணம்மானாய். (அ)

அண்டப்பிறையான்மறையான்பெருந்துறையான்
கொண்டபுரிநூலான்கோலமாஊர்தியான்
கண்டங்கரியான்செம்மேனியான்வெண்ணீற்றா
னண்டமுதலாயினானந்தமிலாவானந்தம்
பண்டைப்பரிசேபழவடியார்க்கீந்தருளு
மண்டம்வியப்புறுமாபாடுதுங்காணம்மானாய். (க)

விண்ணாளுந்தேவர்க்குமேலாயவேதியனை
மண்ணாளுமன்னவர்க்குமாண்பாகிநின்றானைத்
தண்ணார்தமிழளிக்குந்தண்பாண்டிநாட்டானைப்
பெண்ணாளும்பாகனைப்பேணுபெருந்துறையிற்
கண்ணார்கழல்காட்டிநாயேனையாட்கொண்ட
வண்ணாமலையானைப்பாடுதுங்காணம்மானாய். (க0)

செப்பார்முலைபங்கன்றென்னன்பெருந்துறையான்
றப்பாமேதாளடைந்தார்நெஞ்சுருக்குந்தன்மையினா
னப்பாண்டிநாட்டைச்சிவலோகமாக்குவித்த
வப்பார்சடையப்பனானந்தவார்கழலே
யொப்பாகவொப்புவித்தவுள்ளத்தாருள்ளிருக்கு
மப்பாலைக்கப்பாலைப்பாடுதுங்காணம்மானாய். (கக)

மைப்பொலியுங்கண்ணிகேண்மாலயனோடிந்திரனு
மெப்பிறவியுந்தேடவென்னையுந்தன்னின்னருளா
லிப்பிறவியாட்கொண்டினிப்பிறவாமேகாத்து
மெய்ப்பொருட்கட்டோற்றமாய்மெய்யேநிலைபெறு
மெப்பொருட்குந்தானேயாயாவைக்கும்வீடாகு
மப்பொருளாஞ்சிவனைப்பாடுதுங்காணம்மானாய். (கஉ)

கையார்வளைசிலம்பக்காதார்குழையாட
மையார்குழல்புரளத்தேன்பாயவண்டொலிப்பச்
செய்யானைவெண்ணீறணிந்தானைச்சேர்ந்தறியாக்
கையானையெங்குஞ்செறிந்தானையன்பர்க்கு
மெய்யானையல்லாதார்க்கல்லாதவேதியனை
யையாறமர்ந்தானைப்பாடுதுங்காணம்மானாய். (கங)

ஆனையாய்க்கீடமாய்மானுடராய்த்தேவரா
யேனைப்பிறவாய்ப்பிறந்திறந்தெய்த்தேனை
யூனையுநின்றுருக்கியென்வினையையோட்டுகந்து

தேனையும்பாலையுங்கன்னலையுமொத்தினிய
கோனவன்போல்வந்தென்னைத்தன்றொழும்பிற்கொண்டருளும்
வானவன்பூங்கழலேபாடுதுங்காணம்மானாய். (௧௪)

சந்திரனைத்தேய்த்தருளித்தக்கன்றன்வேள்வியினி
லிந்திரனைத்தோணெரித்திட்டெச்சன்றலையரிந்
தந்தரமேசெல்லுமலர்கதிரோன்பற்றகர்த்துச்
சிந்தித்திசைதிசையேதேவர்களையோட்டுகந்த
செந்தார்ப்பொழில்புடைசூழ்தென்னன்பெருந்துறையான்
மந்தாரமாலையேபாடுதுங்காணம்மானாய். (௧௫)

ஊனாயுயிராயுணர்வாயென்னுட்கலந்து
தேனாயமுதமுமாய்த்தீங்கரும்பின்கட்டியுமாய்
வானோரறியாவழியெமக்குத்தந்தருளுந்
தேனார்மலர்க்கொன்றைச்சேவகனார்சீரொளிசே
ரானாவறிவாயளவிறந்தபல்லுயிர்க்குங்
கோனாகிநின்றவாகூறுதுங்காணம்மானாய். (௧௬)

சூடுவேன்பூங்கொன்றைசூடிச்சிவன்றிரடோள்
கூடுவேன்கூடிமுயங்கிமயங்கிநின்
றூடுவேன்செவ்வாய்க்குருகுவேனுள்ளுருகித்
தேடுவேன்றேடிச்சிவன்கழலேசிந்திப்பேன்
வாடுவேன்பேர்த்துமலர்வேனனலேந்தி
யாடுவான்சேவடியேபாடுதுங்காணம்மானாய். (௧௭)

கிளிவந்தமென்மொழியாள்கேழ்கிளரும்பாதியனை
வெளிவந்தமாலயனுங்காண்பரியவித்தகனைத்
தெளிவந்ததேறலைச்சீரார்பெருந்துறையி
லெளிவந்திருந்திரங்கியெண்ணரியவின்னருளா
லொளிவந்தென்னுள்ளத்தினுள்ளேயொளிதிகழ
வளிவந்தவந்தணனைப்பாடுதுங்காணம்மானாய். (௧௮)

முன்னானைமூவர்க்குமுற்றுமாய்முற்றுக்கும்
பின்னானைப்பிஞ்ஞகனைப்பேணுபெருந்துறையின்
மன்னானைவானவனைமாதியலும்பாதியனைத்
தென்னானைக்காவானைத்தென்பாண்டிநாட்டானை
யென்னானையென்னப்பனென்பார்கட்கின்னமுதை
யன்னானையம்மானைப்பாடுதுங்காணம்மானாய். (௧௯)

பெற்றிபிறர்க்கரியபெம்மான்பெருந்துறையான்
கொற்றக்குதிரையின்மேல்வந்தருளித்தன்னடியார்
குற்றங்களீக்கிக்குணங்கொண்டுகோதாட்டிச்
சுற்றியசுற்றத்தொடர்வறுப்பான்றொல்புகழே
பற்றியிப்பாசத்தைப்பற்றறநாம்பற்றுவான்
பற்றியபேரானந்தம்பாடுதுங்காணம்மாணய். (உ0)

திருச்சிற்றம்பலம்.

திருப்பொற்சுண்ணம்.

ஆனந்தமனோலயம்.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

முத்துநற்றாமம்பூமாலைதூக்கி
முளைக்குடந்தூபநற்றீபம்வைம்மின்
சத்தியுஞ்சோமியும்பார்மகளு
நாமகளோடுபல்லாண்டிசைமின்
சித்தியுங்கௌரியும்பார்ப்பதியுங்
கங்கையும்வந்துகவரிகொண்மி
னத்தனையாறனம்மானைப்பாடி
யாடப்பொற்சுண்ணமிடித்துநாமே. (க)

பூவியல்வார்சடையெம்பிராற்குப்
பொற்றிருச்சுண்ணமிடிக்கவேண்டு
மாவின்வடுவகிரன்னகண்ணீர்
வம்மின்கள்வந்துடன்பாடுமின்கள்
கூவுமின்றொண்டர்புறநிலாமே
குனிமின்றொழுமினெங்கோனெங்கூத்தன்
றேவியுந்தானும்வந்தெம்மையாளச்
செம்பொன்செய்சுண்ணமிடித்துநாமே. (உ)

சுந்தரநீறணிந்தும்மெழுகித்
தூயபொன்சிந்திநிதிபரப்பி

யிந்திரன்கற்பகநாட்டியெங்கு
    மெழிற்சுடர்வைத்துக்கொடியெடுமி
னந்தரர்கோனயன்றன்பெருமா
    ளாழியானாதனல்வேலன்றாதை
யெந்தரமாளுமையாள்கொழுநற்
    கேய்ந்தபொற்சுண்ணமிடித்துநாமே. (ந)

காசணிமின்களுலக்கையெல்லாங்
    காம்பணிமின்கள்கறையுரலை
நேசமுடையவடியவர்க
    ணின்றுநிலாவுகவென்றுவாழ்த்தித்
தேசமெல்லாம்புகழ்ந்தாடுங்கச்சித்
    திருவேகம்பன்செம்பொற்கோயில்பாடிப்
பாசவினையைப்பறித்துநின்று
    பாடிப்பொற்சுண்ணமிடித்துநாமே. (ச)

அறுகெடுப்பாரயனும்மரியு
    மன்றிமற்றிந்திரனோடமரர்
நறுமுறுதேவர்கணங்களெல்லா
    நம்மிற்பின்பல்லதெடுக்கவொட்டோஞ்
செறிவுடைமும்மதிலெய்தவில்லி
    திருவேகம்பன்செம்பொற்கோயில்பாடி
முறுவற்செவ்வாயினீர்முக்கணப்பற்
    காடப்பொற்சுண்ணமிடித்துநாமே. (ரு)

உலக்கைபலவோச்சுவார்பெரிய
    ருலகமெலாமுரல்போதாதென்றே
கலக்கவடியவர்வந்துநின்றார்
    காணவுலகங்கள்போதாதென்றே
நலக்கவடியோமையாண்டுகொண்டு
    நாண்மலர்ப்பாதங்கள்சூடத்தந்த
மலைக்குமருகனைப்பாடிப்பாடி
    மகிழ்ந்துபொற்சுண்ணமிடித்துநாமே. (சு)

சூடகந்தோள்வளையார்ப்பவார்ப்பத்
    தொண்டர்குழாமெழுந்தார்ப்பவார்ப்ப
நாடவர்நந்தம்மையார்ப்பவார்ப்ப
    நாமுமவர்தம்மையார்ப்பவார்ப்பப்

பாடகமெல்லடியார்க்குமங்கை
  பங்கினனெங்கள்பராபரனுக்
காடகமாமலையன்னகோவுக்
  காடப்பொற்சுண்ணமிடித்துநாமே. (எ)

வாட்டடங்கண்மடமங்கைநல்லீர்
  வரிவளையார்ப்பவண்கொங்கைபொங்கத்
தோட்டிருமுண்டர்துதைந்திலங்கச்
  சோற்றெம்பிரானென்றுசொல்லிச்சொல்லி
நாட்கொண்டநாண்மலர்ப்பாதங்காட்டி
  நாயிற்கடைப்பட்டநம்மையிம்மை
யாட்கொண்டவண்ணங்கள்பாடிப்பாடி
  யாடப்பொற்சுண்ணமிடித்துநாமே. (அ)

வையகமெல்லாமுரலதாக
  மாமேருவென்னுமுலக்கைநாட்டி
மெய்யெனுமஞ்சணிறையவட்டி
  மேதகுதென்னன்பெருந்துறையான்
செய்யதிருவடிபாடிப்பாடிச்
  செம்பொனுலக்கைவலக்கைபற்றி
யையனணிதில்லைவாணனுக்கே
  யாடப்பொற்சுண்ணமிடித்துநாமே. (கூ)

முத்தணிகொங்கைகளாடவாட
  மொய்குழல்வண்டினமாடவாடச்
சித்தஞ்சிவனொடுமாடவாடச்
  செங்கயற்கண்பனியாடவாடப்
பித்தெம்பிரானொடுமாடவாடப்
  பிறவிபிறரொடுமாடவாட
வத்தன்கருணையொடாடவாட
  வாடப்பொற்சுண்ணமிடித்துநாமே. (க0)

மாடுநகைவாணிலாவெறிப்ப
  வாய்திறந்தம்பவளந்துடிப்பப்
பாடுமினந்தம்மையாண்டவாறும்
  பணிகொண்டவண்ணமும்பாடிப்பாடித்
தேடுமினெம்பெருமானைத்தேடிச்
  சித்தங்களிப்பத்திகைத்துத்தேறி
யாடுமினம்பலத்தாடினானுக்
  காடப்பொற்சுண்ணமிடித்துநாமே. (கக)

ஐயமர்கண்டனைவானநாடர்
மருந்தினைமாணிக்கக்கூத்தன்றன்னை
யையனையையர்பிரானைநம்மை
யகப்படுத்தாட்கொண்டருமைகாட்டும்
பொய்யர்தம்பொய்யனைமெய்யர்மெய்யைப்
போதரிக்கண்ணிணைப்பொற்றொடித்தோட்
பையரவல்குன்மடந்தைநல்லீர்
பாடிப்பொற்சுண்ணமிடித்துநாமே. (கஉ)

மின்னிடைச்செந்துவர்வாய்க்கருங்கண்
வெண்ணகைப்பண்ணமர்மென்மொழியீ
ரென்னுடையாரமுதெங்களப்ப
னெம்பெருமானிமவான்மகட்குத்
தன்னுடைக்கேள்வன்மகன்றகப்பன்
றமையனெம்மையன்றாள்கள்பாடிப்
பொன்னுடைப்பூண்முலைமங்கைநல்லீர்
பொற்றிருச்சுண்ணமிடித்துநாமே. (கங)

சங்கமரற்றச்சிலம்பொலிப்பத்
தாழ்குழல்சூழ்தருமாலையாடச்
செங்கனிவாயிதழுந்துடிப்பச்
சேயிழையீர்சிவலோகம்பாடிக்
கங்கையிரைப்பவராவிரைக்குங்
கற்றைச்சடைமுடியான்கழற்கே
பொங்கியகாதலிற்கொங்கைபொங்கப்
பொற்றிருச்சுண்ணமிடித்துநாமே. (கச)

ஞானக்கரும்பின்றெளியைப்பாகை
நாடற்கரியநலத்தைநந்தாத்
தேனைப்பழச்சுவையாயினானைச்
சித்தம்புகுந்துதித்திக்கவல்ல
கோனைப்பிறப்பறுத்தாண்டுகொண்ட
கூத்தனைநாத்தழும்பேறவாழ்த்திப்
பானற்றடங்கண்மடந்தைநல்லீர்
பாடிப்பொற்சுண்ணமிடித்துநாமே. (கரு)

ஆவகைநாமும்வந்தன்பர்தம்மோ
டாட்செயும்வண்ணங்கள்பாடிவிண்மேற்
றேவர்கனவிலுங்கண்டறியாச்
செம்மலர்ப்பாதங்கள்காட்டுஞ்செல்வச்

சேவகமேந்தியவெல்கொடியான்
 சிவபெருமான்புரஞ்செற்றகொற்றச்
சேவகனுமங்கள்பாடிப்பாடிச்
 செம்பொன்செய்சுண்ணமிடித்துநாமே. (௧௬)

தேனகமாமலர்க்கொன்றைபாடிச்
 சிவபுரம்பாடித்திருச்சடைமேல்
வானகமாமதிப்பிள்ளைபாடி
 மால்விடைபாடிவலக்கையேந்து
மூனகமாமழுச்சூலம்பாடி
 யும்பருமிம்பருமுய்யவன்று
போனகமாகநஞ்சுண்டல்பாடிப்
 பொற்றிருச்சுண்ணமிடித்துநாமே. (௧௭)

அயன்றலைகொண்டுசெண்டாடல்பாடி
 யருக்கனெயிறுபறித்தல்பாடிக்
கயந்தனைக்கொன்றுரிபோர்த்தல்பாடிக்
 காலனைக்காலாலுதைத்தல்பாடி
யியைந்தனமுப்புரமெய்தல்பாடி
 யேழையடியோமையாண்டுகொண்ட
நயந்தனைப்பாடிநின்றாடியாடி
 நாதற்குச்சுண்ணமிடித்துநாமே. (௧௮)

வட்டமலர்க்கொன்றைமாலைபாடி
 மத்தமும்பாடிமதியும்பாடிச்
சிட்டர்கள்வாழுந்தென்றில்லைபாடிச்
 சிற்றம்பலத்தெங்கள்செல்வம்பாடிக்
கட்டியமாசுணக்கச்சைபாடிக்
 கங்கணம்பாடிக்கவித்தகைம்மே
லிட்டுநின்றாடுமரவம்பாடி
 யீசற்குச்சுண்ணமிடித்துநாமே. (௧௯)

வேதமும்வேள்வியுமாயினார்க்கு
 மெய்ம்மையும்பொய்ம்மையுமாயினார்க்குச்
சோதியுமாயிருளாயினார்க்குத்
 துன்பமுமாயின்பமாயினார்க்குப்
பாதியுமாய்முற்றுமாயினார்க்குப்
 பந்தமுமாய்வீடுமாயினாருக்
காதியுமந்தமுமாயினாருக்
 காடப்பொற்சுண்ணமிடித்துநாமே. (௨௦)

திருச்சிற்றம்பலம்.

திருக்கோத்தும்பி.

சிவனோடைக்கியம்.

தில்லையிலருளிச்செய்யப்பட்டது.

நாலடித்தரவுகொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

பூவேறுகோனும்புரந்தரனும்பொற்பமைந்த
நாவேறுசெல்வியுநாரணனுநான்மறையு
மாவேறுசோதியும்வானவருந்தாமறியாச்
சேவேறுசேவடிக்கேசென்றூதாய்கோத்தும்பீ. (௧)

நானாரென்னுள்ளமார்ஞானங்களாரென்னையாரறிவார்
வானோர்பிரானென்னையாண்டிலனேன்மதிமயங்கி
யூனாருடைதலையிலுண்பலிதேரம்பலவன்
றேனார்கமலமேசென்றூதாய்கோத்தும்பீ. (௨)

தினைத்தனையுள்ளதோர்பூவினிற்றேனுண்ணாதே
நினைத்தொறுங்காண்டொறும்பேசுந்தோறுமெப்போது
மனைத்தெலும்புண்ணெகவானந்தத்தேன்சொரியுங்
குனிப்புடையானுக்கேசென்றூதாய்கோத்தும்பீ. (௩)

கண்ணப்பனொப்பதோரன்பின்மைகண்டபி
னென்னப்பனென்னொப்பிலென்னையுமாட்கொண்டருளி
வண்ணப்பணித்தென்னைவாவென்றவான்கருணைச்
சுண்ணப்பொன்னீற்றற்கேசென்றூதாய்கோத்தும்பீ. (௪)

அத்தேவர்தேவரவர்தேவரென்றிங்ஙன்
பொய்த்தேவுபேசிப்புலம்புகின்றபூதலத்தே
பத்தேதுமில்லாதென்பற்றறநான்பற்றிநின்ற
மெய்த்தேவர்தேவர்க்கேசென்றூதாய்கோத்தும்பீ. (௫)

வைத்தநிதிபெண்டிர்மக்கள்குலங்கல்வியென்னும்
பித்தவுலகிற்பிறப்போடிறப்பென்னுஞ்
சித்தவிகாரக்கலக்கந்தெளிவித்த
வித்தகத்தேவர்க்கேசென்றூதாய்கோத்தும்பீ. (௬)

சட்டோநினைக்கமனத்தமுதாஞ்சங்கரனைக்
கெட்டேன்மறப்பேனோகேடுபடாத்திருவடியை

யொட்டாதபாவித்தொழும்பரைநாமுருவறியோஞ்
சிட்டாயசிட்டற்கேசென்றூதாய்கோத்தும்பீ. (எ)

ஒன்றாய்முளைத்தெழுந்தெத்தனையோகவடுவிட்டு
நன்றாகவைத்தென்னைநாய்சிவிகையேற்றுவித்த
வென்றாதைதாதைக்குமெம்மனைக்குந்தம்பெருமான்
குன்றாதசெல்வற்கேசென்றூதாய்கோத்தும்பீ. (அ)

காணங்களெல்லாங்கடந்துநின்றகறைமிடற்றன்
சரணங்களேசென்றுசார்தலுமேதானெனக்கு
மரணம்பிறப்பென்றிவையிரண்டின்மயக்கறுத்த
கருணைக்கடலுக்கேசென்றூதாய்கோத்தும்பீ. (கூ)

நோயுற்றுமூத்துநானுந்துகன்றாயிங்கிருந்து
நாயுற்றசெல்வநயந்தறியாவண்ணமெல்லாந்
தாயுற்றுவந்தென்னையாண்டுகொண்டதன்கருணைத்
தேயுற்றசெல்வற்கேசென்றூதாய்கோத்தும்பீ. (க0)

வன்னெஞ்சக்கள்வன்மனவலியனென்னாதே
கன்னெஞ்சுருக்கிக்கருணையினாலாண்டுகொண்ட
வன்னந்திளைக்குமணிதில்லையம்பலவன்
பொன்னங்கழலுக்கேசென்றூதாய்கோத்தும்பீ. (கக)

நாயேனைத்தன்னடிகள்பாடுவித்தநாயகனைப்
பேயேனதுள்ளப்பிழைபொறுக்கும்பெருமையனைச்
சீயேதுமில்லாதென்செய்பணிகள்கொண்டருளுந்
தாயானவீசற்கேசென்றூதாய்கோத்தும்பீ. (கஉ)

நான்றனக்கன்பின்மைநானுந்தானும்மறிவோந்
தானென்னையாட்கொண்டதெல்லாருந்தாமறிவா
ரானகருணையுமங்குற்றேதானவனே
கோனென்னைக்கூடக்குளிர்ந்தூதாய்கோத்தும்பீ. (கங)

கருவாயுலகினுக்கப்புறமாயிப்புறத்தே
மருவார்மலர்க்குழன்மாதினொடும்வந்தருளி
யருவாய்மறைபயிலந்தணனாயாண்டுகொண்ட
திருவானதேவற்கேசென்றூதாய்கோத்தும்பீ. (கச)

நானுமென்சிந்தையுநாயகனுக்கெவ்விடத்தோந்
தானுந்தன்றையலுந்தாழ்சடையோனாண்டிலனேல்
வானுந்திசைகளுமாகடலுமாயபிரான்
றேனுந்துசேவடிக்கேசென்றூதாய்கோத்தும்பீ. (கரு)

உள்ளப்படாததிருவுருவையுள்ளுதலுங்
கள்ளப்படாதகளிவந்தவான்கருணை
வெள்ளப்பிரானெம்பிரானென்னைவேறேயாட்
கொள்ளப்பிரானுக்கேசென்றூதாய்கோத்தும்பீ. (கசு)

பொய்யாயசெல்வத்தேபுக்கழுந்திநாடோறு
மெய்யாக்கருதிக்கிடந்தேனையாட்கொண்ட
வையாவென்னாருயிரேயம்பலவாவென்றவன்றன்
செய்யார்மலரடிக்கேசென்றூதாய்கோத்தும்பீ. (கஎ)

தோலுந்துகிலுங்குழையுஞ்சுருடோடும்
பால்வெள்ளைநீறும்பசுஞ்சாந்தும்பைங்கிளியுஞ்
சூலமுந்தொக்கவளையுமுடைத்தொன்மைக்
கோலமேநோக்கிக்குளிர்ந்தூதாய்கோத்தும்பீ. (கஅ)

கள்வன்கடியன்கலதியிவனென்னாதே
வள்ளல்வரவரவந்தொழிந்தானென்மனத்தே
யுள்ளத்துறுதுயரொன்றொழியாவண்ணமெல்லாந்
தெள்ளுங்கழலுக்கேசென்றூதாய்கோத்தும்பீ. (கக)

பூமேலயனோடுமாலும்புகலரிதென்
றேமாறிநிற்கவடியேனிறுமாக்க
நாய்மேற்றவிசிட்டுநன்றாப்பொருட்படுத்த
தீமேனியானுக்கேசென்றூதாய்கோத்தும்பீ. (உ0)

திருச்சிற்றம்பலம்.

திருத்தெள்ளேணம்.

சிவனோடடைவு.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

இதுவுமது.

திருச்சிற்றம்பலம்.

திருமாலும்பன்றியாய்ச்சென்றுணராத்திருவடியை
யுருநாமறியவோரந்தணனாயாண்டுகொண்டா
னொருநாமமோருருவமொன்றுமில்லாற்காயிரந்
திருநாமம்பாடிநாந்தெள்ளேணங்கொட்டாமோ. (க)

திருவார்பெருந்துறைமேயபிரானென்பிறவிக்
கருவேரறுத்தபின்யாவரையுங்கண்டதில்லை
யருவாயுருவமுமாயபிரானவன்மருவுந்
திருவாரூர்பாடிநாந்தெள்ளேணங்கொட்டாமோ. (உ)

அரிக்கும்பிரமற்குமல்லாததேவர்கட்குந்
தெரிக்கும்படித்தன்றிநின்றசிவம்வந்துநம்மை
யுருக்கும்பணிகொள்ளுமென்பதுகேட்டுலகமெல்லாஞ்
சிரிக்குந்திறம்பாடித்தெள்ளேணங்கொட்டாமோ. (ங)

அவமாயதேவரவகதியிலழுந்தாமே
பவமாயங்காத்தென்னையாண்டுகொண்டபரஞ்சோதி
நவமாயசெஞ்சுடர்நல்குதலுநாமொழிந்து
சிவமானவாபாடித்தெள்ளேணங்கொட்டாமோ. (ச)

அருமந்ததேவரயன்றிருமாற்கரியசிவ
முருவந்துபூதலத்தோருகப்பெய்தக்கொண்டருளிக்
கருவெந்துவீழக்கடைக்கணித்தென்னுளம்புகுந்த
திருவந்தவாபாடித்தெள்ளேணங்கொட்டாமோ. (ரு)

அரையாடநாகமசைத்தபிரானவனியின்மேல்
வரையாடமங்கைதன்பங்கொடும்வந்தாண்டதிற
முரையாடவுள்ளொளியாடவொண்மாமலர்க்கண்களினீர்த்
திரையாடமாபாடித்தெள்ளேணங்கொட்டாமோ. (சு)

ஆவாவரியயனிந்திரன்வானோர்க்கரியசிவன்
வாவாவென்றென்னையும்பூதலத்தேவலித்தாண்டுகொண்டான்
பூவாரடிச்சுவடென்றலைமேற்பொறித்தலுமே
தேவானவாபாடித்தெள்ளேணங்கொட்டாமோ. (எ)

கறங்கோலைபோல்வதோர்காயப்பிறப்போடிறப்பென்னு
மறம்பாவமென்றிரண்டச்சந்தவிர்த்தென்னையாண்டுகொண்டான்
மறந்தேயுந்தன்கழனான்மறவாவண்ணநல்கியவத்
திறம்பாடல்பாடிநாந்தெள்ளேணங்கொட்டாமோ. (அ)

கன்னாருரித்தென்னவென்னையுந்தன்கருணையினாற்
பொன்னார்கழல்பணித்தாண்டபிரான்புகழ்பாடி
மின்னேர்நுடங்கிடைச்செந்துவர்வாய்வெண்ணகையீர்
தென்னாதென்னாவென்றுதெள்ளேணங்கொட்டாமோ. (க)

கனவேயுந்தேவர்கள்காண்பரியகனைகழலோன்
புனவேயனவளைத்தோளியொடும்புகுந்தருளி

நனவேயெனைப்பிடித்தாட்கொண்டவாநயந்துநெஞ்சஞ்
சினவேற்கணீர்மல்கத்தெள்ளேணங்கொட்டாமோ. (௧௦)

கயன்மாண்டகண்ணிதன்பங்கனெனைக்கலந்தாண்டலுமே
யயன்மாண்டருவினைச்சுற்றமுமாண்டவனியின்மேன்
மயன்மாண்டுமற்றுள்ளவாசகமாண்டென்னுடைய
செயன்மாண்டவாபாடித்தெள்ளேணங்கொட்டாமோ. (௧௧)

முத்திக்குழன்றுமுனிவர்குழாநனிவாட
வத்திக்கருளியடியேனையாண்டுகொண்டு
பத்திக்கடலுட்பதித்தபரஞ்சோதி
தித்திக்குமாபாடித்தெள்ளேணங்கொட்டாமோ. (௧௨)

பார்பாடும்பாதாளர்பாடும்விண்ணோர்தம்பாடு
மார்பாடுஞ்சாராவகையருளியாண்டுகொண்ட
நேர்பாடல்பாடிநினைப்பரியதனிப்பெரியோன்
சீர்பாடல்பாடிநாந்தெள்ளேணங்கொட்டாமோ. (௧௩)

மாலேபிரமனேமற்றொழிந்ததேவர்களே
நூலேநுழைவரியானுண்ணியனாய்வந்தடியேன்
பாலேபுகுந்துபரிந்துருக்கும்பாவகத்தாற்
சேலேர்கண்ணீர்மல்கத்தெள்ளேணங்கொட்டாமோ. (௧௪)

உருகிப்பெருகியுளங்குளிரமுகந்துகொண்டு
பருகற்கினியபரங்கருணைத்தடங்கடலை
மருவித்திகழ்தென்னன்வார்கழலேநினைந்தடியோந்
திருவைப்பரவிநாந்தெள்ளேணங்கொட்டாமோ. (௧௫)

புத்தன்புரந்தராதியயன்மால்போற்றிசெயும்
பித்தன்பெருந்துறைமேயபிரான்பிறப்பறுத்த
வத்தனணிதில்லையம்பலவனருட்கழல்கள்
சித்தம்புகுந்தவாதெள்ளேணங்கொட்டாமோ. (௧௬)

உவலைச்சமயங்களொவ்வாதசாத்திரமாஞ்
சவலைக்கடலுளனாய்க்கிடந்துதடுமாறுங்
கவலைக்கெடுத்துக்கழலிணைகடந்தருளுஞ்
செயலைப்பரவிநாந்தெள்ளேணங்கொட்டாமோ. (௧௭)

வான்கெட்டுமாருதமாய்ந்தழனீர்மண்கெடினுந்
தான்கெட்டலின்றிச்சலிப்பறியாத்தன்மையனுக்
கூன்கெட்டுயிர்கெட்டுணர்வுகெட்டென்னுள்ளமும்போய்
நான்கெட்டவாபாடித்தெள்ளேணங்கொட்டாமோ. (௧௮)

விண்ணோர்முழுமுதல்பாதாளத்தார்வித்து
மண்ணோர்மருந்தயன்மாலுடையவைப்படியோங்
கண்ணாரவந்துநின்றான்கருணைக்கழல்பாடித்
தென்னாதென்னாவென்றுதெள்ளேணங்கொட்டாமோ. (௧௯)

குலம்பாடிக்கொக்கிறகும்பாடிக்கோல்வளையா
ணலம்பாடிநஞ்சுண்டவாபாடிநாடோறு
மலம்பார்புனற்றில்லையம்பலத்தேயாடுகின்ற
சிலம்பாடல்பாடிநாந்தெள்ளேணங்கொட்டாமோ. (௨௦)

திருச்சிற்றம்பலம்.

திருச்சாழல்.

சிவனுடையகாருணியம்.

தில்லையிலருளிச்செய்யப்பட்டது.

இதுவுமது.

திருச்சிற்றம்பலம்.

பூசுவதும்வெண்ணீறுபூண்பதுவும்பொங்கரவம்
பேசுவதுந்திருவாயான்மறைபோலுங்காணேடீ
பூசுவதும்பேசுவதும்பூண்பதுவுங்கொண்டென்னை
யீசனவனெவ்வுயிர்க்குமியல்பானான்சாழலோ. (௧)

என்னப்பனெம்பிரானெல்லார்க்குந்தானீசன்
றுன்னம்பெய்கோவணமாக்கொள்ளுமதுவென்னேடீ
மன்னுகலைதுன்னுபொருண்மறைநான்கேவான்சரடாத்
தன்னையேகோவணமாச்சாத்தினன்காண்சாழலோ. (௨)

கோயில்சுடுகாடுகொல்புலித்தோனல்லாடை
தாயுமிலிதந்தையிலிதான்றனியன்காணேடீ
தாயுமிலிதந்தையிலிதான்றனியனாயிடினுங்
காயிலுலகனைத்துங்கற்பொடிகாண்சாழலோ. (௩)

அயனையனங்கனையந்தகனைச்சந்திரனை
வயனங்கண்மாயாவடுச்செய்தான்காணேடீ
நயனங்கண்மூன்றுடையநாயகனேதண்டித்தாற்
சயமன்றோவானவர்க்குத்தாழ்குழலாய்சாழலோ. (௪)

தக்கனையுமெச்சனையுந்தலையறுத்துத்தேவர்கணந்
தொக்கனவந்தவர்தம்மைத்தொலைத்ததுதானென்னேடீ
தொக்கனவந்தவர்தம்மைத்தொலைத்தருளியருள்கொடுத்தங்
கெச்சனுக்குமிகைத்தலைமற்றருளினன்காண்சாழலோ. (௫)

அலரவனுமாலவனுமறியாமேயழலுருவாய்
நிலமுதற்கீழண்டமுறநின்றதுதானென்னேடீ
நிலமுதற்கீழண்டமுறநின்றிலனேலிருவருந்தாஞ்
சலமுகத்தாலாங்காரந்தவிரார்காண்சாழலோ. (௬)

மலைமகளையொருபாகம்வைத்தலுமேமற்றொருத்தி
சலமுகத்தாலவன்சடையிற்பாயுமதுவென்னேடீ
சலமுகத்தாலவன்சடையிற்பாய்ந்திலளேற்றரணியெல்லாம்
பிலமுகத்தேபுகப்பாய்ந்துபெருங்கேடாஞ்சாழலோ. (௭)

கோலாலமாகிக்குரைகடல்வாயன்றெழுந்த
வாலாலமுண்டானவன்சதுர்தானென்னேடீ
யாலாலமுண்டிலனேலன்றயன்மாலுள்ளிட்ட
மேலாயதேவரெல்லாம்வீடுவர்காண்சாழலோ. (௮)

தென்பாலுகந்தாடுந்தில்லைச்சிற்றம்பலவன்
பெண்பாலுகந்தான்பெரும்பித்தன்காணேடீ
பெண்பாலுகந்திலனேற்பேதாயிருநிலத்தோர்
விண்பாலியோகெய்திவீடுவர்காண்சாழலோ. (௯)

தானந்தமில்லான்றனையடைந்தநாயேனை
யானந்தவெள்ளத்தழுத்துவித்தான்காணேடீ
யானந்தவெள்ளத்தழுத்துவித்ததிருவடிகள்
வானுந்துதேவர்கட்கோர்வான்பொருள்காண்சாழலோ. (௧௦)

நங்காயிதென்னதவநரம்போடெலும்பணிந்து
கங்காளந்தோண்மேலேகாதலித்தான்காணேடீ
கங்காளமாமாகேள்காலாந்தரத்திருவர்
தங்காலஞ்செய்யத்தரித்தனன்காண்சாழலோ. (௧௧)

கானார்புலித்தோலுடைதலையூண்காடுபதி
யானாலவனுக்கிங்காட்படுவாராரேடீ
யானாலுங்கேளாயயனுந்திருமாலும்
வானாடர்கோவும்வழியடியார்சாழலோ. (௧௨)

மலையரையன்பொற்பாவைவாணுதலாள்பெண்டிருவை
யுலகறியத்தீவேட்டானென்னுமதுவென்னேடீ

யுலகறியத்தீவேளாதொழிந்தனனேயுலகனைத்துங்
கலைநவின்றபொருள்களெல்லாங்கலங்கிடுங்காண்சாழலோ. (௧௩)

தேன்புக்கதண்பணைசூழ்தில்லைச்சிற்றம்பலவன்
றான்புக்குநட்டம்பயிலுமதுவென்னேடீ
தான்புக்குநட்டம்பயின்றிலனேற்றரணியெல்லா
மூன்புக்கவேற்காளிக்கூட்டாங்காண்சாழலோ. (௧௪)

கடகரியும்பரிமாவுந்தேருமுகந்தேறாதே
யிடபமுகந்தேறியவாறெனக்கறியவியம்பேடீ
தடமதில்களவைமூன்றுந்தழலெரித்தவந்நாளி
லிடபமதாய்த்தாங்கினான்றிருமால்காண்சாழலோ. (௧௫)

நன்றாகநால்வர்க்குநான்மறையினுட்பொருளை
யன்றாலின்கீழிருந்தங்கறமுரைத்தான்காணேடீ
யன்றாலின்கீழிருந்தங்கறமுரைத்தானாயிடினுங்
கொன்றான்காண்புரமூன்றுங்கூட்டோடேசாழலோ. (௧௬)

அம்பலத்தேகூத்தாடியமுதுசெயப்பலிதிரியு
நம்பனையுந்தேவனென்றுநண்ணுமதுவென்னேடீ
நம்பனையுமாமாகேணான்மறைகடாமறியா
வெம்பெருமானீசாவென்றேத்தினகாண்சாழலோ. (௧௭)

சலமுடையசலந்தரன்றனுடறடிந்தநல்லாழி
நலமுடையநாரணற்கன்றருளியவாறென்னேடீ
நலமுடையநாரணன்றனயனமிடந்தரனடிக்கீ
ழலராகவிடவாழியருளினன்காண்சாழலோ. (௧௮)

அம்பரமாம்புள்ளித்தோலாலாலமாரமுத
மெம்பெருமானுண்டசதுரெனக்கறியவியம்பேடீ
யெம்பெருமானேதுடுத்தங்கேதமுதுசெய்திடினுந்
தம்பெருமைதானறியாத்தன்மையன்காண்சாழலோ. (௧௯)

அருந்தவருக்காலின்கீழறமுதலாநான்கனையு
மிருந்தவருக்கருளுமதுவெனக்கறியவியம்பேடீ
யருந்தவருக்கறமுதனான்கன்றருளிச்செய்திலனேற்
றிருந்தவருக்குலகியற்கைதெரியாகாண்சாழலோ. (௨௦)

திருச்சிற்றம்பலம்.

திருப்பூவல்லி.

மாயாவிசய நீக்குதல்.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

இதுவுமது.

திருச்சிற்றம்பலம்.

இணையார்திருவடியென் றலைமேல்வைத்தலுமே
துணையானசுற்றங்களத்தனையுந்துறந்தொழிந்தே
னணையார்புனற்றில்லையம்பலத்தேயாடுகின்ற
புணையாளன்சீர்பாடிப்பூவல்லிகொய்யாமோ. (க)

எந்தையெந்தாய்சுற்றமற்றுமெல்லாமென்னுடைய
பந்தமறுத்தென்னையாண்டுகொண்டபாண்டிப்பிரா
னந்தவிடைமருதிலானந்தத்தேனிருந்த
பொந்தைப்பரவிநாம்பூவல்லிகொய்யாமோ. (உ)

நாயிற்கடைப்பட்டநம்மையுமோர்பொருட்படுத்துத்
தாயிற்பெரிதுந்தயாவுடையதம்பெருமான்
மாயப்பிறப்பறுத்தாண்டானென்வல்வினையின்
வாயிற்பொடியட்டிப்பூவல்லிகொய்யாமோ. (ங)

பண்பட்டதில்லைப்பதிக்கரசைப்பரவாதே
யெண்பட்டதக்கனருக்கனெச்சனிந்துவனல்
விண்பட்டபூதப்படைவீரபத்திரராற்
புண்பட்டவாபாடிப்பூவல்லிகொய்யாமோ. (ச)

தேனுடுகொன்றைசடைக்கணிந்தசிவபெருமா
னூனுடிநாடிவந்துள்புகுந்தானுலகர்முன்னே
நானுடியாடிநின்றேலமிடநடம்பயிலும்
வானுடர்கோவுக்கேபூவல்லிகொய்யாமோ. (ரு)

எரிமூன்றுதேவர்க்கிரங்கியருள்செய்தருளிச்
சிரமூன்றறத்தன்றிருப்புருவனெரித்தருளி
யுருமூன்றுமாகியுணர்வரிதாமொருவனுமே
புரமூன்றெரித்தவாபூவல்லிகொய்யாமோ. (சு)

வணங்கத்தலைவைத்துவார்கழல்வாய்வாழ்த்தவைத்
திணங்கத்தன்சீரடியார்கூட்டமும்வைத்தெம்பெருமா

ணங்கொடணிதில்லையம்பலத்தேயாடுகின்ற
குணங்கூரப்பாடிநாம்பூவல்லிகொய்யாமோ. (௭)

நெறிசெய்தருளித்தன்சீரடியார்பொன்னடிக்கே
குறிசெய்துகொண்டென்னையாண்டபிரான்குணம்பரவி
முறிசெய்துநம்மைமுழுதுடற்றும்பழவினையைக்
கிறிசெய்தவாபாடிப்பூவல்லிகொய்யாமோ. (௮)

பன்னாட்பரவிப்பணிசெய்யப்பாதமல
ரென்னாகந்துன்னவைத்தபெரியோனெழிற்சுடராய்க்
கன்னாருரித்தென்னையாண்டுகொண்டான்கழலிணைகள்
பொன்னானவாபாடிப்பூவல்லிகொய்யாமோ. (௯)

பேராசையாமிந்தப்பிண்டமறப்பெருந்துறையான்
சீரார்திருவடியென்றலைமேல்வைத்தபிரான்
காரார்கடனஞ்சையுண்டுகந்தகாபாலி
போரார்புரம்பாடிப்பூவல்லிகொய்யாமோ. (௧௦)

பாலுமமுதமுந்தேனுடனாம்பராபரமாய்க்
கோலங்குளிர்ந்துள்ளங்கொண்டபிரான்குரைகழல்கண்
ஞாலம்பரவுவார்நன்னெறியாமந்நெறியே
போலும்புகழ்பாடிப்பூவல்லிகொய்யாமோ. (௧௧)

வானவன்மாலயன்மற்றுமுள்ளதேவர்கட்குங்
கோனவனாய்நின்றுகூடலிலாக்குணக்குறியோ
னானநெடுங்கடலாலாலமமுதுசெய்யப்
போனகமானவாபூவல்லிகொய்யாமோ. (௧௨)

அன்றாலநீழற்கீழருமறைகடானருளி
நன்றாகவானவர்மாமுனிவர்நாடோறு
நின்றாரவேத்துநிறைகழலோன்புனைகொன்றைப்
பொன்றாதுபாடிநாம்பூவல்லிகொய்யாமோ. (௧௩)

படமாகவென்னுள்ளேதன்னிணைப்போதவையளித்திங்
கிடமாகக்கொண்டிருந்தேகம்பமேயபிரான்
றடமார்மதிற்றில்லையம்பலமேதானிடமா
நடமாடுமாபாடிப்பூவல்லிகொய்யாமோ. (௧௪)

அங்கியருக்கனிராவணனந்தகன்கூற்றன்
செங்கணரியயனிந்திரனுஞ்சந்திரனும்
பங்கமிறக்கனுமெச்சனுந்தம்பரிசழியப்
பொங்கியசீர்பாடிநாம்பூவல்லிகொய்யாமோ. (௧௫)

திண்போர்விடையான்சிவபுரத்தார்போரேறு
மண்பான்மதுரையிற்பிட்டமுதுசெய்தருளித்
தண்டாலேபாண்டியன்றன்னைப்பணிகொண்ட
புண்பாடல்பாடிநாம்பூவல்லிகொய்யாமோ. (௧௬)

முன்னாயமாலயனும்வானவருந்தானவரும்
பொன்னார்திருவடிதாமறியார்போற்றுவதே
யென்னாகமுள்புகுந்தாண்டுகொண்டானிலங்கணியாம்
பன்னாகம்பாடிநாம்பூவல்லிகொய்யாமோ. (௧௭)

சீரார்திருவடித்திண்சிலம்புசிலம்பொலிக்கே
யாராதவாசையதாயடியேனகமகிழத்
தேரார்ந்தவீதிப்பெருந்துறையான்றிருநடஞ்செய்
பேரானந்தம்பாடிப்பூவல்லிகொய்யாமோ. (௧௮)

அத்தியுரித்ததுபோர்த்தருளும்பெருந்துறையான்
பித்தவடிவுகொண்டிவ்வுலகிற்பிள்ளையுமா
முத்திமுழுமுதலுத்தரகோசமங்கைவள்ளல்
புத்திபுகுந்தவாபூவல்லிகொய்யாமோ. (௨௰)

திருச்சிற்றம்பலம்.

திருவுந்தியார்.

ஞானவெற்றி.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

கலித்தாழிசை.

திருச்சிற்றம்பலம்.

வளைந்ததுவில்லுவிளைந்ததுபூச
லுளைந்தனமுப்புரமுந்தீபற
வொருங்குடன்வெந்தவாறுந்தீபற. (௧)

ஈரம்புகண்டிலமேகம்பர்தங்கையி
லோரம்பேமுப்புரமுந்தீபற
வொன்றும்பெருமிகையுந்தீபற. (௨)

தச்சுவிடுத்தலுந்தாமடியிட்டலு
மச்சுமுறிந்ததென்றுந்தீபற
வழிந்தனமுப்புரமுந்தீபற. (௩)

உய்யவல்லாரொருமூவரைக்காவல்கொண்
டெய்யவல்லானுக்கேயுந்தீபற
இளமுலைபங்கனென்றுந்தீபற. (௪)

சாடியவேள்விசரிந்திடத்தேவர்க
ளோடியவாபாடியுந்தீபற
வுருத்திரநாதனுக்குந்தீபற. (௫)

ஆவாதிருமாலவிப்பாகங்கொண்டன்று
சாவாதிருந்தானென்றுந்தீபற
சதுர்முகன்றாதையென்றுந்தீபற. (௬)

வெய்யவனங்கிவிழுங்கத்திரட்டிய
கையைத்தறித்தானென்றுந்தீபற
கலங்கிற்றுவேள்வியென்றுந்தீபற. (௭)

பார்ப்பதியைப்பகைசாற்றியதக்கனைப்
பார்ப்பதென்னேயேடியுந்தீபற
பணைமுலைபாகனுக்குந்தீபற. (௮)

புரந்தரனாரொருபூங்குயிலாகி
மரந்தனிலேறினாருந்தீபற
வானவர்கோனென்றேயுந்தீபற. (௯)

வெஞ்சினவேள்வியாத்திரனார்தலை
துஞ்சினவாபாடியுந்தீபற
தொடர்ந்தபிறப்பறவுந்தீபற. (௧0)

ஆட்டின்றலையைவிதிக்குத்தலையாகக
கூட்டியவாபாடியுந்தீபற
கொங்கைகுலுங்கநின்றுந்தீபற. (௧௧)

உண்ணப்புகுந்தபகனொளித்தோடாமே
கண்ணைப்பறித்தவாறுந்தீபற
கருக்கெடநாமெலாமுந்தீபற. (௧௨)

நாமகணாசிசிரம்பிரமன்படச்
சோமன்முகனெரித்துந்தீபற
தொல்லைவினைகெடவுந்தீபற. (௧௩)

நான்மறையோனுமகத்தியமான்படப்
போம்வழிதேடுமாறுந்தீபற
புரந்தரன்வேள்வியிலுந்தீபற. (௧௪)

சூரியனார்தொண்டைவாயினிற்பற்களை
வாரிநெரித்தவாறுந்தீபற
மயங்கிற்றுவேள்வியென்றுந்தீபற. (கரு)

தக்கனுரன்றேதலையிழந்தார்தக்கன்
மக்களைச்சூழநின்றுந்தீபற
மடிந்ததுவேள்வியென்றுந்தீபற. (கசு)

பாலகனார்க்கன்றுபாற்கடலீந்திட்ட
கோலச்சடையற்கேயுந்தீபற
குமரன்றன்றாதைக்கேயுந்தீபற. (கஎ)

நல்லமலரின்மேனான்முகனார்தலை
யொல்லையரிந்ததென்றுந்தீபற
உகிராலரிந்ததென்றுந்தீபற. (கஅ)

தேரைநிறுத்திமலையெடுத்தான்சிர
மீரைந்துமிற்றவாறுந்தீபற
இருபதுமிற்றதென்றுந்தீபற. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருத்தோணேக்கம்.

பிரபஞ்சசுத்தி.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

நாலடித்தரவுகொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

பூத்தாரும்பொய்கைப்புனலிதுவேயெனக்கருதிப்
பேய்த்தேர்முகக்குறும்பேதைகுணமாகாமே
தீர்த்தாய்திகழ்தில்லையம்பலத்தேதிருநடஞ்செய்
கூத்தாவுன்சேவடிகூடும்வண்ணந்தோணேக்கம். (க)

என்றும்பிறந்திறந்தாழாமேயாண்டுகொண்டான்
கன்றால்விளவெறிந்தான்பிரமன்காண்பரிய
குன்றாதசீர்த்தில்லையம்பலவன்குணம்பரவித்
துன்றார்குழலினீர்தோணேக்கமாடாமோ. (உ)

பொருட்பற்றிச்செய்கின்றபூசனைகள்போல்விளங்கச்
செருப்புற்றசீரடிவாய்க்கலசமூனமுதம்

விருப்புற்றவேடனார்சேடறியமெய்குளிர்ந்தங்
கருட்பெற்றுநின்றவாதோணோக்கமாடாமோ. (௩)

கற்போலுநெஞ்சங்கசிந்துருகக்கருணையினா
னிற்பானைப்போலவென்னெஞ்சினுள்ளேபுகுந்தருளி
நற்பாற்படுத்தென்னைநாடறியத்தானிங்ஙன்
சொற்பாலதானவாதோணோக்கமாடாமோ. (௪)

நிலநீர்நெருப்புயிர்நீள்விசும்புநிலாப்பகலோன்
புலனாயமைந்தனோடெண்வகையாய்ப்புணர்ந்துநின்றா
னுலகேழெனத்திசைபத்தெனத்தானொருவனுமே
பலவாகிநின்றவாதோணோக்கமாடாமோ. (௫)

புத்தன்முதலாயபுல்லறிவிற்பல்சமயர்
தத்தமதங்களிற்றட்டுளுப்புப்பட்டுநிற்கச்
சித்தஞ்சிவமாக்கிச்செய்தனவேதவமாக்கு
மத்தன்கருணையினாற்றோணோக்கமாடாமோ. (௬)

தீதில்லைமாணிசிவகருமஞ்சிதைத்தானைச்
சாதியும்வேதியன்றாதைதனைத்தாளிரண்டுஞ்
சேதிப்பவீசன்றிருவருளாற்றேவர்தொழப்
பாதகமேசோறுபற்றினவாதோணோக்கம். (௭)

மானமழிந்தோமதிமறந்தோமங்கைநல்லீர்
வானந்தொழுந்தென்னன்வார்கழலேநினைந்தடியோ
மானந்தக்கூத்தனருள்பெறினாமவ்வணமே
யானந்தமாகிநின்றாடாமோதோணோக்கம். (௮)

எண்ணுடைமூவரிராக்கதர்களெரிபிழைத்துக்
கண்ணுதலெந்தைகடைத்தலைமுன்னின்றதற்பி
னெண்ணிலியிந்திரரெத்தனையோபிரமர்களு
மண்மிசைமால்பலர்மாண்டனர்காண்டோணோக்கம். (௯)

பங்கயமாயிரம்பூவினிலோர்பூக்குறையத்
தங்கணிடந்தரன்சேவடிமேற்சாத்தலுமே
சங்கரனெம்பிரான்சக்கரமாற்கருளியவா
றெங்கும்பரவிநாந்தோணோக்கமாடாமோ. (௧௦)

காமனுடலுயிர்காலன்பற்காய்கதிரோ
னாமகணாசிசிரம்பிரமன்கரமெரியைச்
சோமன்கலைதலைதக்கனையுமெச்சனையுந்
தூய்மைகள்செய்தவாதோணோக்கமாடாமோ. (௧௧)

பிரமனரியென்றிருவருந்தம்பேதைமையாற்
பரமமியாம்பரமமென்றவர்கள்பதைப்பொடுங்க
வரனாரழலுருவாயங்கேயளவிறந்து
பரமாகிநின்றவாதோணோக்கமாடாமோ. (கஉ)

எழைத்தொழும்பனேனெத்தனையோகாலமெல்லாம்
பாழுக்கிறைத்தேன்பரம்பரனைப்பணியாதே
யூழிமுதற்சிந்தாதனன்மணிவந்தென்பிறவித்
தாழைப்பறித்தவாதோணோக்கமாடாமோ. (கங)

உரைமாண்டவுள்ளொளியுத்தமன்வந்துளம்புகலுங்
கரைமாண்டகாமப்பெருங்கடலைக்கடத்தலுமே
யிரைமாண்டவிந்திரியப்பறவையிரிந்தோடத்
துரைமாண்டவாபாடித்தோணோக்கமாடாமோ. (கச)

திருச்சிற்றம்பலம்.

திருப்பொன்னூசல்.

அருட்சுத்தி.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

ஒப்புமைபற்றிவந்த ஆறடித்தரவுகொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

சீரார்பவளங்கான்முத்தங்கயிறாக
வேராரும்பொற்பலகையேறியினிதமர்ந்து
நாராயணனறியாநாண்மலர்த்தாளுடியேற்
கூராகத்தந்தருளுமுத்தரகோசமங்கை
யாராவமுதினருட்டாளிணைபாடிப்
போரார்வேற்கண்மடவீர்பொன்னூசலாடாமோ. (க)

மூன்றங்கிலங்குநயனத்தன்மூவாத
வான்றங்குதேவர்களுங்காணாமலரடிக
டேன்றங்கித்தித்தித்தமுதூறித்தான்றெளிந்தங்
கூன்றங்கிநின்றுருக்குமுத்தரகோசமங்கைக்
கோன்றங்கிடைமருதுபாடிக்குலமஞ்ஞை
போன்றங்கனநடையீர்பொன்னூசலாடாமோ. (உ)

முன்னீறுமாதியுமில்லான்முனிவர்குழாம்
பன்னூறுகோடியிமையோர்கடாநிற்பத்

தன்னீறெனக்கருளித்தன்கருணைவெள்ளத்து
மன்னூறமன்னுமணியுத்தரகோசமங்கை
மின்னேறுமாடவியன்மாளிகைபாடிப்
பொன்னேறுபூண்முலையீர்பொன்னூசலாடாமோ. (ங)

நஞ்சமர்கண்டத்தனண்டத்தவர்நாதன்
மஞ்சுதோய்மாடமணியுத்தரகோசமங்கை
யஞ்சொலாடன்னோடுங்கூடியடியவர்க
ணெஞ்சுளேநின்றமுதமூறிக்கருணைசெய்து
துஞ்சல்பிறப்பறுப்பான்றூயபுகழ்பாடிப்
புஞ்சமார்வெள்வளையீர்பொன்னூசலாடாமோ. (ச)

ஆணோவலியோவரிவையோவென்றிருவர்
காணாக்கடவுள்கருணையினாற்றேவர்குழா
நாணாமேயுய்யவாட்கொண்டருளிநஞ்சுதனை
யூணாகவுண்டருளுமுத்தரகோசமங்கைக்
கோனார்பிறைச்சென்னிக்கூத்தன்குணம்பரவிப்
பூணார்வனமுலையீர்பொன்னூசலாடாமோ. (ரு)

மாதாடுபாகத்தனுத்தரகோசமங்கைத்
தாதாடுகொன்றைச்சடையானடியாருட்
கோதாட்டிநாயேனையாட்கொண்டென்றொல்பிறவித்
தீதோடாவண்ணந்திகழப்பிறப்பறுப்பான்
காதாடுகுண்டலங்கள்பாடிக்கசிந்தன்பாற்
போதாடுபூண்முலையீர்பொன்னூசலாடாமோ. (சா)

உன்னற்கரியதிருவுத்தரகோசமங்கை
மன்னிப்பொலிந்திருந்தமாமறையோன்றன்புகழே
பன்னிப்பணிந்திறைஞ்சப்பாவங்கள்பற்றறுப்பா
னன்னத்தின்மேலேறியாடுமணிமயில்போ
லென்னத்தனென்னையுமாட்கொண்டானெழில்பாடிப்
பொன்னொத்தபூண்முலையீர்பொன்னூசலாடாமோ. (எ)

கோலவரைக்குடுமிவந்துகுவலயத்துச்
சாலவமுதுண்டுதாழ்கடலின்மீதெழுந்து
ஞாலமிகப்பரிமேற்கொண்டுநமையாண்டான்
சீலந்திகழுந்திருவுத்தரகோசமங்கை
மாலுக்கரியானைவாயாரநாம்பாடிப்
பூலித்தகங்குழைந்துபொன்னூசலாடாமோ. (அ)

தெங்குலவுசோலைத்திருவுத்தரகோசமங்கை
தங்குலவுசோதித்தனியுருவம்வந்தருளி
யெங்கள்பிறப்பறுத்திட்டெந்தரமுமாட்கொள்வான்
பங்குலவுகோதையுந்தானும்பணிகொண்ட
கொங்குலவுகொன்றைச்சடையான்குணம்பரவிப்
பொங்குலவுபூண்முலையீர்பொன்னூசலாடாமோ. (௯)

திருச்சிற்றம்பலம்.

அன்னைப்பத்து.

ஆத்துமபூரணம்.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

கலிவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

வேதமொழியர்வெண்ணீற்றர்செம்மேனியர்
நாதப்பறையினரன்னேயென்னும்
நாதப்பறையினர்நான்முகன்மாலுக்கு
நாதரிந்நாதனாரன்னேயென்னும். (க)

கண்ணஞ்சனத்தர்கருணைக்கடலின
ருண்ணின்றுருக்குவரன்னேயென்னு
முண்ணின்றுருக்கியுலப்பிலாவானந்தக்
கண்ணீர்தருவராலன்னேயென்னும். (உ)

நித்தமணாளர்நிரம்பவழகியர்
சித்தத்திருப்பராலன்னேயென்னுஞ்
சித்தத்திருப்பவர்தென்னன்பெருந்துறை
யத்தரானந்தராலன்னேயென்னும். (ங)

ஆடரப்பூணுடைத்தோல்பொடிப்பூசிற்றோர்
வேடமிருந்தவாறன்னேயென்னும்
வேடமிருந்தவாகண்டுகண்டென்னுள்ளம்
வாடுமிதுவென்னேயன்னேயென்னும். (ச)

நீண்டகரத்தர்நெறிதருகுஞ்சியர்
பாண்டிநன்னாடராலன்னேயென்னும்

பாண்டிநன்னாடர்பாற்றெழுசிற்றையை
யாண்டன்புசெய்வராலன்னேயென்னும். (௬)

உன்னற்கரியசிருத்தரமங்கையர்
மன்னுவதென்னெஞ்சிலன்னேயென்னு
மன்னுவதென்னெஞ்சின்மாலயன்காண்கிலா
வொன்னவஞ்சியமன்னேயென்னும். (௬)

வெள்ளைக்கலிங்கத்தர்வெண்டிருமுண்டத்தர்
பள்ளிக்குப்பாயத்தரன்னேயென்னும்
பள்ளிக்குப்பாயத்தர்பாய்பரிமேல்கொண்டென்
னுள்ளங்கவர்வராலன்னேயென்னும். (எ)

தாளியறுகினர்சந்தனச்சாந்தின
ராளெம்மையாள்வராலன்னேயென்னு
மாளெம்மையாளுமடிகளார்தங்கையிற்
றாளமிருந்தவாறன்னேயென்னும். (அ)

தையலோர்பங்கினர்தாபதவேடத்த
ரையம்புகுவராலன்னேயென்னு
மையம்புகுந்தவர்போதலுமென்னுள்ள
மையுமிதுவென்னேயன்னேயென்னும். (௯)

கொன்றைமதியமுங்கூவிளமத்தமுந்
துன்றியசென்னியரன்னேயென்னுந்
துன்றியசென்னியின்மத்தமுன்மத்தமே
யின்றெனக்கானவாறன்னேயென்னும். (௧௦)

திருச்சிற்றம்பலம்.

குயிற்பத்து.

ஆத்துமவிரக்கம்.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

கீதமினியகுயிலேகேட்டியேலெங்கள்பெருமான்
பாதமிரண்டும்வினவிற்பாதாளமேழினுக்கப்பாற்
சோதிமணிமுடிசொல்லிற்சொல்லிறந்துநின்றதொன்மை
யாதிகுணமொன்றுமில்லானந்தமிலான்வரக்கூவாய். (௧)

ஏர்தருமேழுலகேத்தவெவ்வுருவுந்தன்னுருவா
யார்கலிசூழ்தென்னிலங்கையழகமர்வண்டோதரிக்குப்
பேரருளின்பமளித்தபெருந்துறைமேயபிரானைச்
சீரியவாயாற்குயிலேதென்பாண்டிநாடனைக்கூவாய். (௨)

நீலவுருவிற்குயிலேநீண்மணிமாடநிலாவுங்
கோலவழகிற்றிகழுங்கொடிமங்கையுள்ளுறைகோயிற்
சீலம்பெரிதுமினியதிருவுத்தரகோசமங்கை
ஞாலம்விளங்கவிருந்தநாயகனைவரக்கூவாய். (௩)

தேன்பழச்சோலைபயிலுஞ்சிறுகுயிலேயிதுகேணீ
வான்பழித்திம்மண்புகுந்துமனிதரையாட்கொண்டவள்ள
லூன்பழித்துள்ளம்புகுந்தென்னுணர்வதுவாயவொருத்தன்
மான்பழித்தாண்டமென்னோக்கிமணாளனைநீவரக்கூவாய். (௪)

சுந்தரத்தின்பக்குயிலேசூழ்சுடர்ஞாயிறுபோல
வந்தரத்தேநின்றிழிந்திங்கடியவராசையறுப்பான்
முந்துநடுவுமுடிவுமாகியமூவரறியாச்
சிந்துரச்சேவடியானைச்சேவகனைவரக்கூவாய். (௫)

இன்பந்தருவன்குயிலேயேழுலகுமுழுதாளி
யன்பனமுதளித்தூறுமானந்தன்வான்வந்ததேவ
னன்பொன்மணிச்சுவடொத்தநற்பரிமேல்வருவானைக்
கொம்பின்மிழற்றுங்குயிலேகோகழிநாதனைக்கூவாய். (௬)

உன்னையுகப்பன்குயிலேயுன்றுணைத்தோழியுமாவன்
பொன்னையழித்தநன்மேனிப்புகழிற்றிகழுமழகன்
மன்னன்பரிமிசைவந்தவள்ளல்பெருந்துறைமேய
தென்னவன்சேரலன்சோழன்சீர்ப்புயங்கன்வரக்கூவாய். (௭)

வாவிங்கேநீகுயிற்பிள்ளாய்மாலொடுநான்முகன்றேடி
யோவியவருன்னிநிற்பவொண்டழல்விண்பிளந்தோங்கி
மேவியன்றண்டங்கடந்துவிரிசுடராய்நின்றமெய்யன்
றூவிவரும்பரிப்பாகன்றாழ்சடையோன்வரக்கூவாய். (௮)

காருடைப்பொன்றிகழ்மேனிக்கடிபொழில்வாழுங்குயிலே
சீருடைச்செங்கமலத்திற்றிகழுருவாகியசெல்வன்
பாரிடைப்பாதங்கள்காட்டிப்பாசமறுத்தெனையாண்ட
வாருடையம்பொனின்மேனியமுதினைநீவரக்கூவாய். (௯)

கொர்தனைவும்பொழிற்சோலைக்கூங்குயிலேயிதுகேணி
யர்தனனாகிவந்திங்கேயழகியசேவடிகாட்டி
யெர்தமராயிவனென்றிங்கென்னையுமாட்கொண்டருளுஞ்
செர்தழல்போற்றிருமேனித்தேவர்பிரான்வரக்கூவாய். (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருத்தசாங்கம்.

அடிமைகொண்டமுறைமை.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

நேரிசைவெண்பா.

திருச்சிற்றம்பலம்.

ஏரார்இளங்கிளியேயெங்கள்பெருந்துறைக்கோன்
சீரார்திருநாமந்தேர்ந்துரையா—யாரூரன்
செம்பெருமான்வெண்மலரான்பாற்கடலான்செப்புவபோ
லெம்பெருமான்றேவர்பிரானென்று. (௧)

ஏதமிலாவின்சொன்மரகதமேயேழ்பொழிற்கு
நாதனமையாளுடையானாடுரையாய்—காதலவர்க்
கன்பாண்டுமீளாவருள்புரிவானாடென்றுந்
தென்பாண்டிநாடேதெளி. (௨)

தாதாடுபூஞ்சோலைத்தத்தாய்நமையாளு
மாதாடும்பாகத்தன்வாழ்பதியென்—கோதாட்டிப்
பத்தரெல்லாம்பார்மேற்சிவபுரம்போற்கொண்டாடு
முத்தரகோசமங்கையூர். (௩)

செய்யவாய்ப்பைஞ்சிறகிற்செல்வீநஞ்சிந்தைசே
ரையன்பெருந்துறையானாறுரையாய்—தையலாய்
வான்வந்தசிந்தைமலங்கழுவவந்திழியு
மானந்தங்காணுடையானாறு. (௪)

கிஞ்சுகவாயஞ்சுகமேகேடில்பெருந்துறைக்கோன்
மஞ்சன்மருவுமலைபகராய்—நெஞ்சத்
திருளகலவாள்வீசியின்பமருமுத்தி
யருளுமலையென்பதுகாணாய்ந்து. (௫)

இப்பாடேவந்தியம்புகூடுபுகலென்கிளியே
யொப்பாடாச்சீருடையானூர்வதென்னே—யெப்போதுந்

தேன்புரையுஞ்சிர்தையராய்த்தெய்வப்பெண்ணேத்திசைப்ப
வான்புரவியூருமகிழ்ந்து. (சு)

கோற்றேன்மொழிக்கிள்ளாய்கோதில்பெருந்துறைக்கோன்
மாற்றாரைவெல்லும்படைபகரா—யேற்று
ரழுக்கடையாநெஞ்சுருகமும்மலங்கள்பாயுங்
கழுக்கடைகாண்கைக்கொள்படை. (எ)

இன்பான்மொழிக்கிள்ளாயெங்கள்பெருந்துறைக்கோன்
முன்பான்முழங்குமுரசியம்பா—யன்பாற்
பிறவிப்பகைகலங்கப்பேரின்பத்தோங்கும்
பருமிக்காதப்பறை. (அ)

ஆயமொழிக்கிள்ளாயள்ளூறுமன்பர்பான்
மேயபெருந்துறையான்மெய்த்தாரென்—றீயவினை
நாளுமணுகாவண்ணநாயேனையாளுடையான்
றாளியறுகாமுவந்ததார். (கூ)

சோலைப்பசுங்கிளியேதூநீர்ப்பெருந்துறைக்கோன்
கோலம்பொலியுங்கொடிகூறாய்—சாலவு
மேதிலார்துண்ணென்னமேல்விளங்கியேர்காட்டுங்
கோதிலாவேறுங்கொடி. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருப்பள்ளியெழுச்சி.

திரோதானசுத்தி.

திருப்பெருந்துறையிலருளிச்செயப்பட்டது.

ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

போற்றியென்வாழ்முதலாகியபொருளே
புலர்ந்ததுபூங்கழற்கிணைதுணைமலர்கொண்
டேற்றிநின்றிருமுகத்தெமக்கருண்மலரு
மெழினகைகொண்டுநின்றிருவடிதொழுகோஞ்
சேற்றிதழ்க்கமலங்கண்மலருந்தண்வயல்சூழ்
திருப்பெருந்துறையுறைசிவபெருமானே
யேற்றுயர்கொடியுடையாயெனையுடையா
யெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே. (க)

அருணனிந்திரன் றிசையணுகினனிருள்போ
யகன்றதுவுதயநின்மலர்த்திருமுகத்தின்
கருணையின்சூரியனெழவெழநயனக்
கடிமலர்மலரமற்றண்ணலங்கண்ணாந்
திரணிரையறுபதமுரல்வனவிவையோர்
திருப்பெருந்துறையுறைசிவபெருமானே
யருணிதிதரவருமானந்தமலையே
யலைகடலேபள்ளியெழுந்தருளாயே. (உ)

கூவினபூங்குயில்கூவினகோழி
குருகுகளியம்பினவியம்பினசங்க
மோவினதாரகையொளியொளியுதயத்
தொருப்படுகின்றதுவிருப்பொடுநமக்குத்
தேவநற்செறிகழற்றாளிணைகாட்டாய்
திருப்பெருந்துறையுறைசிவபெருமானே
யாவருமறிவரியாயெமக்கெளியா
யெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே. (௩)

இன்னிசைவீணையர்யாழினரொருபா
லிருக்கொடுதோத்திரமியம்பினரொருபாற்
றுன்னியபிணைமலர்க்கையினரொருபாற்
றொழுகையரழுகையர்துவள்கையரொருபாற்
சென்னியிலஞ்சலிகூப்பினரொருபாற்
திருப்பெருந்துறையுறைசிவபெருமானே
யென்னையுமாண்டுகொண்டின்னருள்புரியு
மெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே. (௪)

பூதங்கடோறுநின்றாயெனினல்லாற்
போக்கிலன்வரவிலனெனநினைப்புலவோர்
கீதங்கள்பாடுதலாடுதலல்லாற்
கேட்டறியோமுனைக்கண்டறிவாரைச்
சீதங்கொள்வயற்றிருப்பெருந்துறைமன்னா
சிந்தனைக்குமரியாயெங்கண்முன்வந்
தேதங்களறுத்தெம்மையாண்டருள்புரியு
மெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே. (௫)

பப்பறவீட்டிருந்துணருநின்னடியார்
பந்தனைவந்தறுத்தாரவர்பலரு
மைப்புறுகண்ணியர்மானுடத்தியல்பின்
வணங்குகின்றாரணங்கின்மணவாளா

செப்புறுகமலங்கண்மலருந்தண்வயல்சூழ்
திருப்பெருந்துறையுறைசிவபெருமானே
யிப்பிறப்பறுத்தெமையாண்டருள்புரியு
மெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே. (௬)

அதுபழச்சுவையெனவமுதெனவறிதற்
கரிதெனவெளிதெனவமரருமறியா
ரிதுவவன்றிருவுருவிவனவனெனவே
யெங்களையாண்டுகொண்டிங்கெழுந்தருளு
மதுவளர்பொழிற்றிருவுத்தரகோச
மங்கையுள்ளாய்திருப்பெருந்துறைமன்னா
வெதுவெமைப்பணிகொளுமாறதுகேட்போ
மெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே. (௭)

முந்தியமுதனடுவிறுதியுமானாய்
மூவருமறிகிலரியாவர்மற்றறிவார்
பந்தணைவிரலியுநீயுநின்னடியார்
பழங்குடிதொறுமெழுந்தருளியபரனே
செந்தழல்புரைதிருமேனியுங்காட்டித்
திருப்பெருந்துறையுறைகோயிலுங்காட்டி
யந்தணனாவதுங்காட்டிவந்தாண்டா
யாரமுதேபள்ளியெழுந்தருளாயே. (௮)

விண்ணகத்தேவருநண்ணவுமாட்டா
விழுப்பொருளேயுனதொழுப்படியோங்கண்
மண்ணகத்தேவந்துவாழச்செய்தானே
வண்டிருப்பெருந்துறையாய்வழியடியோங்
கண்ணகத்தேநின்றுகளிதருதேனே
கடலமுதேகரும்பேவிரும்படியா
ரெண்ணகத்தாயுலகுக்குயிரானா
யெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே. (௯)

புவனியிற்போய்ப்பிறவாமையினாணாம்
போக்குகின்றோமவமேயிந்தப்பூமி
சிவனுய்யக்கொள்கின்றவாறென்றுநோக்கித்
திருப்பெருந்துறையுறைவாய்திருமாலா
மவன்விருப்பெய்தவுமலரவனாசைப்
படவுநின்னலர்ந்தமெய்க்கருணையுநீயு
மவனியிற்புகுந்தெமையாட்கொள்ளவல்லா
யாரமுதேபள்ளியெழுந்தருளாயே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

கோயின்மூத்ததிருப்பதிகம்.

அநாதியாகியசற்காரியம்.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

உடையாளுன்றனடுவிருக்குமுடையாணடுவுணீயிருத்தி
யடியேனடுவுளிருவீருமிருப்பதானாலடியேனுன்
னடியார்நடுவுளிருக்குமருளைப்புரியாய்பொன்னம்பலத்தெம்
முடியாமுதலேயென்கருத்துமுடியும்வண்ணமுன்னின்றே. (க)

முன்னின்றாண்டாயெனைமுன்னமியானுமதுவேமுயல்வுற்றுப்
பின்னின்றேவல்செய்கின்றேன்பிற்பட்டொழிந்தேன்பெம்மானே
யென்னின்றருளிவரநின்றுபோந்திடென்னவிடிலடியா
ருன்னின்றிவனாரென்னாரோபொன்னம்பலக்கூத்துகந்தானே. (உ)

உகந்தானேயன்புடையடிமைக்குருகாவுள்ளத்துணர்விலியேன்
சகந்தானறியமுறையிட்டாற்றக்கவாறன்றென்னாரோ
மகந்தான்செய்துவழிவந்தார்வாழவாழ்ந்தாயடியேற்குன்
முகந்தான்றாராவிடின்முடிவேன்பொன்னம்பலத்தெம்முழுமுதலே.

முழுமுதலேயைம்புலனுக்குமூவர்க்குமென்றனக்கும்
வழிமுதலேநின்பழவடியார்திரள்வான்குழுமிக்
கெழுமுதலேயருடந்திருக்கவிரங்குங்கொல்லோவென்
றழுமதுவேயன்றிமற்றென்செய்கேன்பொன்னம்பலத்தரைசே. ()

அரைசேபொன்னம்பலத்தாடுமமுதேயென்றுன்னருணோக்கி
யிரைதேர்கொக்கொத்திரவுபகலேசற்றிருந்தேவேசற்றேன்
கரைசேரடியார்களிசிறப்பக்காட்சிகொடுத்துன்னடியேன்பாற்
பிரைசேர்பாலினெய்போலப்பேசாதிருந்தாலேசாரோ. (ரு)

ஏசாநிற்பரென்னையுனக்கடியானென்றுபிறரெல்லாம்
பேசாநிற்பரியான்றானும்பேணாநிற்பேனின்னருளே
தேசாநேசர்சூழ்ந்திருக்குந்திருவோலக்கஞ்சேவிக்க
வீசாபொன்னம்பலத்தாடுமெந்தாயினித்தானிரங்காயே. (சு)

இரங்குமக்கம்பலக்கூத்தனென்றென்றேமாந்திருப்பேனை
யருங்கற்பனைகற்பித்தாண்டாயாள்வாரிலிமாடாவேனோ

னெருங்குமடியார்களுநீயுமின் றுசிலாவிவிளையாடு
மருங்கேசார்ந்துவரவெங்கள்வாழ்வேவாவென் றருளாயே. (எ)

அருளாதொழிந்தாலடியேனையஞ்சேலென்பாராரிங்குப் [தா
பொருளாவென்னைப்புகுந்தாண்டபொன்னேபொன்னம்பலக் கூத்
மருளார்மனத்தோடுனைப்பிரிந்துவருந்துவேனைவாவென் றுன்
றெருளார்கூட்டங்காட்டாயேற்செத்தேபோனுற்சிரியாரோ. (அ)

சிரிப்பார்களிப்பார்தேனிப்பார்திரண்டுதிரண்டுன்றிருவார்த்தை
விரிப்பார்கேட்பார்மெச்சுவார்வெவ்வேறிருந்துன்றிருநாமந்
தரிப்பார்பொன்னம்பலத்தாடுந்தலைவாவென்பாரவர்முன்னே
நரிப்பாய்நாயேனிருப்பேனோநம்பியினித்தானல்காயே. (கூ)

நல்காதொழியானமக்கென் றுன்னுமம்பிதற்றிநயனநீர்
மல்காவாழ்த்தாவாய்குழறுவணங்காமனத்தானினைந்துருகிப்
பல்காலுன்னைப்பாவித்துப்பரவிப்பொன்னம்பலமென்றே
யொல்காநிற்குமுயிர்க்கிரங்கியருளாயென்னையுடையானே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

கோயிற்றிருப்பதிகம்.

அநுபோகவிலக்கணம்.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

மாறிநின்றென்னைமயக்கிடும்வஞ்சப்
    புலனைந்தின்வழியடைத்தமுதே
யூறிநின்றென்னுளெழுபரஞ்சோதி
    யுள்ளவாகாணவந்தருளாய்
தேறலின்றெளிவேசிவபெருமானே
    திருப்பெருந்துறையுறைசிவனே
யீறிலாப்பதங்களியாவையுங்கடந்த
    வின்பமேயென்னுடையன்பே. (௧)

அன்பினாலடியேனாவியோடாக்கை
    யானந்தமாய்க்கசிந்துருக
வென்பரமல்லாவின்னருடந்தா
    யானிதற்கிலனோர்கைம்மாறு

முன்புமாய்ப்பின்புமுழுதுமாய்ப்பரந்த
முத்தனேமுடிவிலாமுதலே
தென்பெருந்துறையாய்சிவபெருமானே
சீருடைச்சிவபுரத்தரைசே. (௨)

அரைசனேயன்பர்க்கடியனேனுடைய
வப்பனேயாவியோடாக்கை
புரைபுரைகனியப்புகுந்துநின்றுருகிப்
பொய்யிருள்கடிந்தமெய்ச்சுடரே
திரைபொராமன்னுமமுதத்தெண்கடலே
திருப்பெருந்துறையுறைசிவனே
யுரையுணர்விறந்துநின்றுணர்வதோருணர்வே
யானுன்னையுரைக்குமாறுணர்த்தே. (௩)

உணர்ந்தமாமுனிவரும்பரோடொழிந்தா
ருணர்வுக்குந்தெரிவரும்பொருளே
யிணங்கிலியெல்லாவுயிர்கட்குமுயிரே
யெனைப்பிறப்பறுக்குமெம்மருந்தே
திணிந்ததோரிருளிற்றெளிந்ததூவெளியே
திருப்பெருந்துறையுறைசிவனே
குணங்கடாமில்லாவின்பமேயுன்னைக்
குறுகினேற்கினியென்னகுறையே. (௪)

குறைவிலாநிறைவேகோதிலாவமுதே
யீறிலாக்கொழுஞ்சுடர்க்குன்றே
மறையுமாய்மறையின்பொருளுமாய்வந்தென்
மனத்திடைமன்னியமன்னே
சிறைபெறுநீர்போற்சிந்தைவாய்ப்பாயுந்
திருப்பெருந்துறையுறைசிவனே
யிறைவனேநீயென்னுடலிடங்கொண்டா
யினியுன்னையென்னிரக்கேனே. (௫)

இரந்திரந்துருகவென்மனத்துள்ளே
எழுகின்றசோதியேயிமையோர்
சிரந்தனிற்பொலியுங்கமலச்சேவடியாய்
திருப்பெருந்துறையுறைசிவனே
நிரந்தவாகாயநீர்நிலந்தீகா
லாயவையல்லையாயாங்கே
கரந்ததோருருவேகளித்தனனுன்னைக்
கண்ணுறக்கண்டுகொண்டின்றே. (௬)

இன்றெனக்கருளியிருள்கடிந்துள்ளத்
தெழுகின்றஞாயிறேபோன்று
நின்றநின்றன்மைநினைப்பறநினைந்தே
னீயலாற்பிறிதுமற்றின்மை
சென்றுசென்றணுவாய்த்தேய்ந்துதேய்ந்தொன்றாந்
திருப்பெருந்துறையுறைசிவனே
யொன்றுநீயல்லையன்றியொன்றில்லை
யாருன்னையறியகிற்பாரே. (எ)

பார்பதமண்டமனைத்துமாய்முளைத்துப்
பரந்ததோர்படரொளிப்பரப்பே
நீருறுதீயேநினைவதேலரிய
நின்மலாநின்னருள்வெள்ளச்
சிருறுசிந்தையெழுந்ததோர்தேனே
திருப்பெருந்துறையுறைசிவனே
யாருறவெனக்கிங்காரயலுள்ளா
ரானந்தமாக்குமென்சோதி. (அ)

சோதியாய்த்தோன்றுமுருவமேயருவா
மொருவனேசொல்லுதற்கரிய
வாதியேநடுவேயந்தமேபந்த
மறுக்குமானந்தமாகடலே
தீதிலாநன்மைத்திருவருட்குன்றே
திருப்பெருந்துறையுறைசிவனே
யாதுநீபோவதோர்வகையெனக்கருளாய்
வந்துநின்னிணையடிதந்தே. (கூ)

தந்ததுன்றன்னைக்கொண்டதென்றன்னைச்
சங்கராவார்கொலோசதுர
ரந்தமொன்றில்லாவானந்தம்பெற்றே
னியாதுநீபெற்றதொன்றென்பாற்
சிந்தையேகோயில்கொண்டவெம்பெருமான்
றிருப்பெருந்துறையுறைசிவனே
யெந்தையேயீசாவுடலிடங்கொண்டா
யானிதற்கிலனொர்கைம்மாறே. (க0)

திருச்சிற்றம்பலம்.

செத்திலாப்பத்து.

சிவானந்தமளவறுக்கொணுமை.

திருப்பெருந்துறையிலருளிச்செயப்பட்டது.

ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பொய்யனேனகநெகப்புகுந்தமுதூறும்
புதுமலர்க்கழலிணையடிபிரிந்துங்
கையனேனின்னுஞ்செத்திலேனந்தோ
விழித்திருந்துள்ளக்கருத்தினையிழந்தே
னையனேயரசேயருட்பெருங்கடலே
யத்தனேயயன்மாற்கறியொண்ணுச்
செய்யமேனியனேசெய்வகையறியேன்
திருப்பெருந்துறைமேவியசிவனே. (க)

புற்றுமாய்மரமாய்ப்புனல்காலே
யுண்டியாயண்டவாணரும்பிறரும்
வற்றியாருநின்மலரடிகாணு
மன்னவென்னையோர்வார்த்தையுட்படுத்துப்
பற்றிணுய்பதையேன்மனமிகவுருகேன்
பரிகிலேன்பரியாவுடறன்னைச்
செற்றிலேனின்னுந்திரிதருகின்றேன்
திருப்பெருந்துறைமேவியசிவனே. (உ)

புலையனேனையும்பொருளெனநினைந்துன்
னருள்புரிந்தனைபுரிதலுங்களித்துத்
தலையினுனடந்தேன்விடைப்பாகா
சங்கராவெண்ணில்வானவர்க்கெல்லா
நிலையனேயலைநீர்விடமுண்ட
நித்தனேயடையார்புரமெரித்த
சிலையனேயெனைச்செத்திடப்பணியாய்
திருப்பெருந்துறைமேவியசிவனே. (ங)

அன்பராகிமற்றருந்தவமுயல்வா
ரயனுமாலுமற்றழலுறமெழுகா

மென்பராய்நினைவாரெனைப்பலர்
நிற்கவிங்கெனையெற்றினுக்காண்டாய்
வன்பராய்முருடொக்குமென்சிந்தை
மரக்கணென்செவியிரும்பினும்வலிது
தென்பராய்த்துறையாய்சிவலோகா
திருப்பெருந்துறைமேவியசிவனே. (௭)

கூட்டுத்தேவர்தம்விதியொழித்தன்பா
லயனேயென்றுன்னருள்வழியிருப்பே
னூட்டுத்தேவருநாடரும்பொருளே
நாதனேயுனைப்பிரிவுறுவருளைக்
காட்டித்தேவநின்கழலிணைகாட்டிக்
காயமாயத்தைக்கழித்தருள்செய்யாய்
சேட்டைத்தேவர்தந்தேவர்பிரானே
திருப்பெருந்துறைமேவியசிவனே. (௮)

அறுக்கிலேனுடறுணிபடத்தீப்புக்
கார்கிலேன்றிருவருள்வகையறியேன்
பொறுக்கிலேனுடல்போக்கிடங்காணேன்
போற்றிபோற்றியென்போர்விடைப்பாகா
விறக்கிலேனுனைப்பிரிந்தினிதிருக்க
வென்செய்கேனிதுசெய்கவென்றருளாய்
சிறைக்கணேபுனனிலவியவயல்சூழ்
திருப்பெருந்துறைமேவியசிவனே. (௯)

மாயனேமறிகடல்விடமுண்ட
வானவாமணிகண்டத்தெம்மமுதே
நாயினேனுனைநினையவுமாட்டே
னமச்சிவாயவென்றுன்னடிபணியாப்
பேயனாகிலும்பெருநெறிகாட்டாய்
பிறைகுலாஞ்சடைப்பிஞ்ஞகனேயோ
சேயனாகிநின்றலறுவதழகோ
திருப்பெருந்துறைமேவியசிவனே. (௧௦)

போதுசேரயன்பொருகடற்கிடந்தோன்
புரந்தராதிகணிற்கமற்றென்னைக்
கோதுமாட்டிநின்குரைகழல்காட்டிக்
குறிக்கொள்கென்றுநின்றொண்டரிற்கூட்டா
யாதுசெய்வதென்றிருந்தனன்மருந்தே
யடியனேனிடர்ப்படுவதினிதோ

சீதவார்புனனிலவியவயல்சூழ்
திருப்பெருந்துறைமேவியசிவனே. (அ)

ஞாலமின்றிரனுன்முகன்வானவர்
நிற்கமற்றெனையர்நினிதாண்டாய்
காலனாருயிர்கொண்டபூங்கழலாய்
கங்கையாயங்கிதங்கியகையாய்
மாலுமோலமிட்டலறுமம்மலர்க்கே
மரக்கணேனையும்வந்திடப்பணியாய்
சேலுநீலமுநிலவியவயல்சூழ்
திருப்பெருந்துறைமேவியசிவனே. (கூ)

அளித்துவந்தெனக்காவவென்றருளி
யச்சந்தீர்த்தநின்னருட்பெருங்கடலிற்
றிளைத்துந்தேக்கியும்பருகியுமுருகேன்
திருப்பெருந்துறைமேவியசிவனே
வளைக்கையானொடுமலரவனறியா
வானவாமலைமாதொருபாகா
களிப்பெலாமிகக்கலங்கிடுகின்றேன்
கயிலைமாமலைமேவியகடலே. (கய)

திருச்சிற்றம்பலம்.

அடைக்கலப்பத்து.

பக்குவநிண்ணயம்.

திருப்பெருந்துறையிலருளிச்செயப்பட்டது.

கலவைப்பாட்டு.

திருச்சிற்றம்பலம்.

செழுக்கமலத்திரளனநின்சேவடிசேர்ந்தமைந்த
பழுத்தமனத்தடியருடன்போயினர்யான்பாவியேன்
புழுக்கணுடைப்புன்குரம்பைப்பொல்லாக்கல்விஞானமிலா
வழுக்குமனத்தடியேனுடையாயுன்னடைக்கலமே. (க)

வெறுப்பனவேசெய்யுமென்சிறுமையைநின்பெருமையினாற்
பொறுப்பவனேயராப்பூண்பவனேபொங்குகங்கைசடைச்
செறுப்பவனேநின்திருவருளாலென்பிறவியைவே
ரறுப்பவனேயுடையாயடியேனுன்னடைக்கலமே. (உ)

பெரும்பெருமானென்பிறவியைவேரறுத்துப்பெரும்பிச்சுத்
தரும்பெருமான்சதுரப்பெருமானென்மனத்தினுள்ளே
வரும்பெருமான்மலரோனெடுமாலறியாமனின்ற
வரும்பெருமானுடையாயடியேனுன்னடைக்கலமே. (௩)

பொழிகின்றதுன்பப்புயல்வெள்ளத்தினின்கழற்புணைகொண்
டிழிகின்றவன்பர்களேறினர்வான்யானிடர்க்கடல்வாய்ச்
சுழிசென்றுமாதர்த்திரைபொரக்காமச்சுறவெறிய
வழிகின்றனனுடையாயடியேனுன்னடைக்கலமே. (௪)

சுருள்புரிகூழையர்சூழலிற்பட்டுன்றிறமறந்திங்
கிருள்புரியாக்கையிலேகிடந்தெய்த்தனன்மைத்தடங்கண்
வெருள்புரிமானன்னநோக்கிதன்பங்கவிண்ணோர்பெருமா
னருள்புரியாயுடையாயடியேனுன்னடைக்கலமே. (௫)

மாழைமைப்பாவியகண்ணியர்வன்மத்திடவுடைந்து
தாழியைப்பாவுதயிர்போற்றளர்ந்தேன்றடமலர்த்தாள்
வாழியெப்போதுவந்தெந்நாள்வணங்குவன்வல்வினையே
னாழியப்பாவுடையாயடியேனுன்னடைக்கலமே. (௬)

மின்கணினார்நுடங்குமிடையார்வெகுளிவலையிலகப்பட்டுப்
புன்கணனாய்ப்புரள்வேனைப்புரளாமற்புகுந்தருளி
யென்கணிலேயமுதூறித்தித்தித்தென்பிழைக்கிரங்கு
மங்கணனேயுடையாயடியேனுன்னடைக்கலமே. (௭)

மாவடுவகிரன்னகண்ணிபங்காநின்மலரடிக்கே
கூவிடுவாய்கும்பிக்கேயிடுவாய்நின்குறிப்பறியேன்
பாவிடையாடுகுழல்போற்கரந்துபரந்ததுள்ள
மாகெடுவேனுடையாயடியேனுன்னடைக்கலமே. (௮)

பிறிவறியாவன்பர்நின்னருட்பெய்கழற்றாளிணைக்கீழ்
மறிவறியாச்செல்வம்வந்துபெற்றாருன்னைவந்திப்பதோர்
நெறியறியேனின்னையேயறியேனின்னையேயறியு
மறிவறியேனுடையாயடியேனுன்னடைக்கலமே. (௯)

வழங்குகின்றாய்க்குன்னருளாரமுதத்தைவாரிக்கொண்டு
விழுங்குகின்றேன்விக்கினேன்வினையேனென்விதியின்மையாற்
றழங்கருந்தேனன்னதண்ணீர்பருகத்தந்துய்யக்கொள்ளா
யழுங்குகின்றேனுடையாயடியேனுன்னடைக்கலமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

ஆசைப்பத்து.

ஆத்துமவிலக்கணம்.

திருப்பெருந்துறையிலருளிச்செய்யப்பட்டது.

ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

கருடக்கொடியோன்காணமாட்டாக்கழற்சேவடியென்னும்
பொருளைத்தந்திங்கென்னையாண்டபொல்லாமணியேயோ
விருளைத்துரந்திட்டிங்கேவாவென்றங்கேகூவு
மருளைப்பெறுவானாசைப்பட்டேன்கண்டாயம்மானே. (௧)

மொய்ப்பானரம்புகயிறுகமூளையென்புதோல்போர்த்த
குப்பாயம்புக்கிருக்ககில்லேன்கூவிக்கொள்ளாய்கோவேயோ
வெப்பாலவர்க்குமப்பாலாமென்னாரமுதேயோ
வப்பாகாணவாசைப்பட்டேன்கண்டாயம்மானே. (௨)

சீவார்ந்தீமொய்த்தழுக்கொடுதிரியுஞ்சிறுகுடிலிதுசிதையக்
கூவாய்கோவேகூத்தாகாத்தாட்கொள்ளுங்குருமணியே
தேவாதேவர்க்கரியானேசிவனேசிறிதென்முகநோக்கி
யாவாவென்னவாசைப்பட்டேன்கண்டாயம்மானே. (௩)

மிடைந்தெலும்பூத்தைமிக்கழுக்கூறல்வீறிலிநடைக்கூடந்
தொடர்ந்தெனைநலியத்துயருறுகின்றேன் * சோத்தமெம்பெருமா
யுடைந்துநைந்துருகியுன்னொளிநோக்கியுன்றிருமலர்ப்பாத [னே
மடைந்துநின்றிடுவானாசைப்பட்டேன்கண்டாயம்மானே. (௪)

அளிபுண்ணகத்துப்புறந்தோன்மூடியடியேனுடையாக்கை
புளியம்பழமொத்திருந்தேனிருந்தும்விடையாய்பொடியாடீ
யெளிவந்தென்னையாண்டுகொண்டவென்னாரமுதேயோ
வளியேனென்னவாசைப்பட்டேன்கண்டாயம்மானே. (௫)

எய்த்தேனாயேனினியிங்கிருக்ககில்லேனிவ்வாழ்க்கை
வைத்தாய்வாங்காய்வானோரறியாமலர்ச்சேவடியானே
முத்தாவுன்றன்முகவொளிநோக்கிமுறுவனகைகாண
வத்தாசாலவாசைப்பட்டேன்கண்டாயம்மானே. (௬)

பாரோர்விண்ணோர்பரவியேத்தும்பரனேபரஞ்சோதி
வாராய்வாராவுலகந்தந்துவந்தாட்கொள்வானே

---

* சோத்தம்—இழிந்தார்செய்யுமஞ்சலி.

பேராயிரமும்பரவித்திரிந்தெம்பெருமானெனவேத்த
வாராவமுதேயாசைப்பட்டேன்கண்டாயம்மானே. (எ)

கையாற்றொழுதுன்கழற்சேவடிகள்கழுமத்தழுவிக்கொண்
டெய்யாதென்றன்றலைமேல்வைத்தெம்பெருமான்பெருமானென்
றையாவென்றன்வாயாலரற்றியழல்சேர்மெழுகொப்ப
வையாற்றரசேயாசைப்பட்டேன்கண்டாயம்மானே. (அ)

செடியாராக்கைத்திறமறவீசிச்சிவபுரநகர்புக்குக்
கடியார்சோதிகண்டுகொண்டென்கண்ணிணைகளிகூரப்
படிதானில்லாப்பரம்பரனேயுன்பழவடியார்கூட்ட
மடியேன்காணவாசைப்பட்டேன்கண்டாயம்மானே. (கூ)

வெஞ்சேலனையகண்ணார்தம்வெகுளிவலையிலகப்பட்டு
நைஞ்சேனுயேன்ஞானச்சுடரேநானோர்துணைகாணேன்
பஞ்சேரடியாள்பாகத்தொருவாபவளத்திருவாயா
லஞ்சேலென்னவாசைப்பட்டேன்கண்டாயம்மானே. (க0)

திருச்சிற்றம்பலம்.

அதிசயப்பத்து.

முத்திலிலக்கணம்.

திருப்பெருந்துறையிலருளிச்செயப்பட்டது.

ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

வைப்புமாடென்று மாணிக்கத்தொளியென்று மனத்திடையுருகா
செப்புநேர்முலைமடவரலியர்தங்கடிறத்திடைநைவேனை [தே
யொப்பிலாதனவுவமனிலிறந்தனவொண்மலர்த்திருப்பாதத்
தப்பனாண்டுதன்னடியரிற்கூட்டியவதிசயங்கண்டாமே. (க)

நீதியாவனயாவையுநினைக்கிலேனினைப்பவரொடுங்கூடே
னேதமேபிறந்திறந்துழல்வேன்றனையென்னடியானென்று
பாதிமாதொடுங்கூடியபரம்பரனிரந்தரமாய்நின்ற
வாதியாண்டுதன்னடியரிற்கூட்டியவதிசயங்கண்டாமே. (உ)

முன்னையென்னுடைவல்வினைபோயிடமுக்கணதுடையெந்தை
தன்னையாவருமறிவதற்கரியவனெளியவனடியார்க்குப்

பொன்னைவென்றதோர்புரிசடைமுடிதனிலிளமதியதுவைத்த
வன்னையாண்டுதன்னடியரிற்கூட்டியவதிசயங்கண்டாமே. (௩)

பித்தனென்றெனையுலகவர்பகர்வதோர்காரணமிதுகேளீ
ரொத்துச்சென்றுதன்றிருவருட்கூடிடுமுபாயமதறியாமே
செத்துப்போயருநரகிடைவீழ்வதற்கொருப்படுகின்றேனை
யத்தனாண்டுதன்னடியரிற்கூட்டியவதிசயங்கண்டாமே. (௪).

பரவுவாரவர்பாடுசென்றணைகிலேன்பன்மலர்பறித்தேற்றேன்
குரவுவார்குழலார்திறத்தேநின்றுகுடிகெடுகின்றேனை
யிரவுநின்றெரியாடியவெம்மிறையெரிசடைமிளிர்கின்ற
வரவனாண்டுதன்னடியரிற்கூட்டியவதிசயங்கண்டாமே. (௫)

எண்ணிலேன்றிருநாமவஞ்செழுத்துமென்னேழைமையதனாலே
நண்ணிலேன்கலைஞானிகடம்மொடுநல்வினைநயவாதே
மண்ணிலேபிறந்திறந்துமண்ணாவதற்கொருப்படுகின்றேனை
யண்ணலாண்டுதன்னடியரிற்கூட்டியவதிசயங்கண்டாமே. (௬)

பொத்தையூன்சுவர்புழுப்பொதிந்துளுத்தசும்பொழுகியபொய்க்
கூரை, யித்தைமெய்யெனக்கருதிநின்றிடர்க் கடற்சுழித்தலைப்படு
வேனை, முத்துமாமணிமாணிக்கவயிரத்தபவளத்தின்முழுச்சோதி,
யத்தனாண்டுதன்னடியரிற்கூட்டியவதிசயங்கண்டாமே. (௭)

நீக்கிமுன்னெனைத்தன்னொடுநிலாவகைகுரம்பையிற்புகப்பெய்
து, நோக்கிநுண்ணியநொடியனசொற்செய்துநுகமின்றி விளாக்
கைத்துத்,தூக்கிமுன்செய்தபொய்யறத்துகளறுத்தெழுதருசுடர்ச்
சோதி, யாக்கியாண்டுதன்னடியரிற்கூட்டியவதிசயங்கண்டாமே.()

உற்றவாக்கையினுறுபொருணறுமலரெழுதருநாற்றம்போற்
பற்றலாவதோர்நிலையிலாப்பரம்பொருளப்பொருள்பாராதே
பெற்றவாபெற்றபயனதுநுகர்ந்திடும்பித்தர்சொற்றெளியாமே
யத்தனாண்டுதன்னடியரிற்கூட்டியவதிசயங்கண்டாமே. (௯)

இருடிணிந்தெழுந்திட்டதோர்வல்வினைச்சிறுகுடிலிதுவித்தைப்
பொருளெனக்களித்தருநரகத்திடைவிழப்புகுகின்றேனைத்
தெருளுமும்மதிணொடிவரையிடித்தாச்சினப்பதத்தொடுசெந்தீ
யருளுமெய்ந்நெறிபொய்ந்நெறிநீக்கியவதிசயங்கண்டாமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

புணர்ச்சிப்பத்து.

அத்துவிதவிலக்கணம்.

திருப்பெருந்துறையிலருளிச்செயப்பட்டது.

ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

சுடர்பொற்குன்றைத்தோளாமுத்தை வாளாதொழும்புகந்து, கடைபட்டேனை யாண்டுகொண்டகருணாலயனைக்கருமால்பிரமன், றடைபட்டின்னுஞ்சாரமாட்டாத்தன்னைத்தந்த வென்னாரமுதைப், புடைபட்டிருப்பதென்று கொல்லோவென்பொல்லா மணியைப்புணர்ந்தே. (க)

ஆற்றகில்லேனடியேனரசேயவனிதலத்தைம்புலனாய
சேற்றிலழுந்தாச்சிந்தைசெய்துசிவனெம்பெருமானென்றேத்தி
யூற்றுமணற்போனெக்குநெக்குள்ளேயுருகியோலமிட்டுப்
போற்றிநிற்பதென்றுகொல்லோ வென்பொல்லா மணியைப்புணர்ந்தே.

நீண்டமாலுமயனும்வெருவநீண்டநெருப்பைவிருப்பிலேனை
யாண்டுகொண்டவென்னாரமுதையள்ளூறுள்ளத்தடியார்முன்
வேண்டுந்தனையும்வாய்விட்டலறிவிரையார்மலர்தூவிப்
பூண்டுகிடப்பதென்றுகொல்லோ வென்பொல்லா மணியைப்புணர்ந்தே.

அல்லிக்கமலத்தயனுமாலுமல்லாதவருமமரர்கோனுஞ், சொல்லிப் பரவுநாமத்தானைச்சொல்லும்பொருளுமிறந்தசுடரை, நெல்லிக்கனி யைத்தேனைப்பாலைநிறையின்னமுதையமுதின்சுவையைப், புல்லிப் புணர்வதென்றுகொல்லோவென்பொல்லாமணியைப்புணர்ந்தே.

திகழத்திகழுமடியுமுடியுங்காண்பான்கீழ்மேலயனும்மாலு,மகழப் பறந்துங்காணமாட்டா வம்மானிம்மாநிலமுழுது, நிகழப்பணிகொ ண்டென்னை யாட்கொண்டாவாவென்ற நீர்மையெல்லாம், புகழப் பெறுவதென்றுகொல்லோவென்பொல்லாமணியைப்புணர்ந்தே.()

பரிந்துவந்துபரமானந்தம்பண்டேயடியேற்கருள்செய்யப், பிரிந்து போந்து பெருமாநிலத்தி லருமாலுற்றேனென்றென்று, சொரிந்த கண்ணீர்சொரியவுண்ணீருரோமஞ் சிலிர்ப்பவுகந்தன்பாய்ப், புரிந் துநிற்பதென்றுகொல்லோவென்பொல்லாமணியைப்புணர்ந்தே.()

நினையப்பிறருக்கரியநெருப்பைநீரைக்காலைநிலனைவிசும்பைத், தனையொப்பாரையில்லாத் தனியை நோக்கித் தழைத்துத்தழுத்த கண்டங், கனையக்கண்ணீ ரருவிபாயக்கையுங் கூப்பிக்கடிமலராற், புனையப் பெறுவதென்று கொல்லோ வென்பொல்லா மணியைப் புணர்ந்தே. (எ)

நெக்குநெக்குள்ளுருகியுருகிநின் றுயிருந்துங்கிடந்துமெழுந்து நக்குமழுதுந்தொழுதும்வாழ்த்திநானுவிதத்தாற்கூத்துநவிற்றிச் செக்கர்போலுந்திருமேனிதிகழநோக்கிச்சிலிர்சிலிர்த்துப் புக்குநிற்பதென்றுகொல்லோவென்பொல்லாமணியைப்புணர்ந்தே

தாதாய்மூவேழுலகுக்குந்தாயேநாயேன்றனையாண்ட, பேதாய்பி றவிப்பிணிக்கோர்மருந்தேபெருந்தேன்பில்கவெப்போது,மேதாம ணியேயென்றென்றேத்தியிரவும்பகலுமெழிலார்பாதப், போதாய்ந் தணைவதென்றுகொல்லோவென்பொல்லாமணியைப்புணர்ந்தே.()

காப்பாய்படைப்பாய்கரப்பாய்முழுதுங்கண்ணார்விசும்பின் விண் ணோர்க்கெல்லா, மூப்பாய்மூவாமுதலாய்நின்ற முதல்வாமுன்னே யெனையாண்ட, பார்ப்பானே யெம்பரமா வென்று பாடிப்பாடிப்ப ணிந்துபாதப், பூப்போதணைவதென்றுகொல்லோவென்பொல்லா மணியைப்புணர்ந்தே. (சo)

திருச்சிற்றம்பலம்.

வாழாப்பத்து.

முத்தியுபாயம்.

திருப்பெருந்துறையிலருளிச்செயப்பட்டது.

ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பாரொடுவிண்ணாய்ப்பரந்தவெம்பரனே
　பற்றுநான்மற்றிலேன்கண்டாய்
சீரொடுபொலிவாய்சிவபுரத்தரசே
　திருப்பெருந்துறையுறைசிவனே
யாரொடுநோகேனார்க்கெடுத்துரைக்கே
　னாண்டநீயருளிலையானால்
வார்கடலுலகில்வாழ்கிலேன்கண்டாய்
　வருகவென்றருள்புரியாயே. (க)

வம்பனேன்றன்னையாண்டமாமணியே
　மற்றுநான்பற்றிலேன்கண்டா
யும்பருமறியாவொருவனேயிருவர்க்
　குணர்விறந்துலகமூடுருவுஞ்

செம்பெருமானேசிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறைசிவனே
யெம்பெருமானேயென்னையாள்வானே
யென்னைநீகூவிக்கொண்டருளே. (௨)

பாடிமால்புகழும்பாதமேயல்லாற்
பற்றுநான்மற்றிலேன்கண்டாய்
தேடிநீயாண்டாய்சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறைசிவனே
யூடுவதுன்னோடுவப்பதுமுன்னை
யுணர்த்துவதுனக்கெனக்குறுதி
வாடினேனிங்குவாழ்கிலேன்கண்டாய்
வருகவென்றருள்புரியாயே. (௩.)

வல்லைவாளரக்கர்புரமெரித்தானே
மற்றுநான்பற்றிலேன்கண்டாய்
தில்லைவாழ்கூத்தாசிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறைசிவனே
யெல்லைமூவுலகுமுருவியன்றிருவர்
காணுநாளாதியீறின்மை
வல்லையாய்வளர்ந்தாய்வாழ்கிலேன்கண்டாய்
வருகவென்றருள்புரியாயே. (௪)

பண்ணினேர்மொழியாள்பங்கநீயல்லாற்
பற்றுநான்மற்றிலேன்கண்டாய்
திண்ணமேயாண்டாய்சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறைசிவனே
யெண்ணமேயுடல்வாய்மூக்கொடுசெவிகண்
ணென்றிவைநின்கணேவைத்து
மண்ணின்மேலடியேன்வாழ்கிலேன்கண்டாய்
வருகவென்றருள்புரியாயே. (௫)

பஞ்சின்மெல்லடியாள்பங்கநீயல்லாற்
பற்றுநான்மற்றிலேன்கண்டாய்
செஞ்சவேயாண்டாய்சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறைசிவனே
யஞ்சினேனாயேனாண்டுநீயளித்த
வருளினைமருளினான்மறந்த
வஞ்சனேனிங்குவாழ்கிலேன்கண்டாய்
வருகவென்றருள்புரியாயே. (௬)

பருதிவாழொளியாய்பாதமேயல்லாற்
பற்றுநான்மற்றிலேன்கண்டாய்
திருவுயர்கோலச்சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறைசிவனே
கருணையேநோக்கிக்கசிந்துளமுருகிக்
கலந்துநான்வாழுமாறறியா
மருளனேனுலகில்வாழ்கிலேன்கண்டாய்
வருகவென்றருள்புரியாயே. (எ)

பந்தணைவிரலாள்பங்கநீயல்லாற்
பற்றுநான்மற்றிலேன்கண்டாய்
செந்தழல்போல்வாய்சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறைசிவனே
யந்தமிலமுதேயரும்பெரும்பொருளே
யாரமுதேயடியேனை
வந்துயவாண்டாய்வாழ்கிலேன்கண்டாய்
வருகவென்றருள்புரியாயே. (அ)

பாவநாசாவுன்பாதமேயல்லாற்
பற்றுநான்மற்றிலேன்கண்டாய்
தேவர்தந்தேவேசிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறைசிவனே
மூவுலகுருவவிருவர்கீழ்மேலாய்
முழங்கழலாய்நிமிர்ந்தானே
மாவுரியானேவாழ்கிலேன்கண்டாய்
வருகவென்றருள்புரியாயே. (கூ)

பழுதிலொல்புகழாள்பங்கநீயல்லாற்
பற்றுநான்மற்றிலேன்கண்டாய்
செழுமதியணிந்தாய்சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறைசிவனே
தொழுவனோபிறரைத்துதிப்பனோவெனக்கோர்
துணையெனநினைவனோசொல்லாய்
மழவிடையானேவாழ்கிலேன்கண்டாய்
வருகவென்றருள்புரியாயே. (க0)

திருச்சிற்றம்பலம்.

அருட்பத்து.

மகாமாயாசுத்தி.

திருப்பெருந்துறையிலருளிச்செயப்பட்டது.

ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

சோதியேசுடரேசூழொளிவிளக்கே
 சுரிகுழற்பணைமுலைமடந்தை
பாதியேபரனேபால்கொள்வெண்ணீற்றாய்
 பங்கயத்தயனுமாலறியா
நீதியேசெல்வத்திருப்பெருந்துறையி
 னிறைமலர்க்குருந்தமேவியசீ
ராதியேயடியேனுதரித்தழைத்தா
 லதெந்துவேயென்றருளாயே. (க)

நிருத்தனேநிமலாநீற்றனேநெற்றிக்
 கண்ணனேவிண்ணுளோர்பிரானே
யொருத்தனேயுன்னையோலமிட்டலறி
 யுலகெலாந்தேடியுங்காணேன்
திருத்தமாம்பொய்கைத்திருப்பெருந்துறையிற்
 செழுமலர்க்குருந்தமேவியசீ
ரருத்தனேயடியேனுதரித்தழைத்தா
 லதெந்துவேயென்றருளாயே. (உ)

எங்கணாயகனேயென்னுயிர்த்தலைவா
 வேலவார்குழலிமாரிருவர்
தங்கணாயகனேதக்கனற்காமன்
 றனதுடறழலெழவிழித்த
செங்கணாயகனேதிருப்பெருந்துறையிற்
 செழுமலர்க்குருந்தமேவியசீ
ரங்கணாவடியேனுதரித்தழைத்தா
 லதெந்துவேயென்றருளாயே. (௩)

கமலநான்முகனுங்கார்முகினிறத்துக்
 கண்ணனுநண்ணுதற்கரிய
விமலனேயெமக்குவெளிப்படாயென்ன
 வியன்றழல்வெளிப்பட்டவெந்தாய்

தியிலநான்மறைசேர்திருப்பெருந்துறையிற்
செழுமலர்க்குருந்தமேவியசீ
ரமலனேயடியேனாதரித்தழைத்தா
லதெந்துவேயென்றருளாயே. (௪)

துடிகொணேரிடையாள்சுரிகுழன்மடந்தை
துணைமுலைக்கண்கடோய்சுவடு
பொடிகொள்வான்றழலிற்புள்ளிபோலிரண்டு
பொங்கொளிதங்குமார்பினனே
செடிகொள்வான்பொழில்சூழ்திருப்பெருந்துறையிற்
செழுமலர்க்குருந்தமேவியசீ
ரடிகளேயடியேனாதரித்தழைத்தா
லதெந்துவேயென்றருளாயே. (௫)

துப்பனேதூயாய்தூயவெண்ணீறு
துதைந்தெழுதுளங்கொளிவயிரத்
தொப்பனேயுன்னையுள்குவார்மனத்தி
னூறுசுவையளிக்குமாரமுதே
செப்பமாமறைசேர்திருப்பெருந்துறையிற்
செழுமலர்க்குருந்தமேவியசீ
ரப்பனேயடியேனாதரித்தழைத்தா
லதெந்துவேயென்றருளாயே. (௬)

மெய்யனேவிகிர்தாமேருவேவில்லா
மேவலர்புரங்கண்மூன்றெரித்த
கையனேகாலாற்காலனைக்காய்ந்த
கடுந்தழற்பிழம்பன்னமேனிச்
செய்யனேசெல்வத்திருப்பெருந்துறையிற்
செழுமலர்க்குருந்தமேவியசீ
ரையனேயடியேனாதரித்தழைத்தா
லதெந்துவேயென்றருளாயே. (௭)

முத்தனேமுதல்வாமுக்கணாமுனிவா
மொட்டறாமலர்பறித்திறைஞ்சிப்
பத்தியாய்நினைந்துபரவுவார்தமக்குப்
பரகதிகொடுத்தருள்செய்யுஞ்
சித்தனேசெல்வத்திருப்பெருந்துறையிற்
செழுமலர்க்குருந்தமேவியசீ
ரத்தனேயடியேனாதரித்தழைத்தா
லதெந்துவேயென்றருளாயே. (௮)

மருளனேன்மனத்தைமயக்கறநோக்கி
மறுமையோடிம்மையுங்கெடுத்த
பொருளனேபுனிதாபொங்குவாளரவங்
கங்கைநீர்தங்குசெஞ்சடையாய்
தெருளுநான்மறைசேர்திருப்பெருந்துறையிற்
செழுமலர்க்குருந்தமேவியசீ
ரருளனேயடியேனுதரித்தழைத்தா
லதெந்துவேயென்றருளாயே. (க)

திருந்துவார்பொழில்சூழ்திருப்பெருந்துறையிற்
செழுமலர்க்குருந்தமேவியசீ
ரிருந்தவாறெண்ணியேசருநினைந்திட்
டென்னுடையெம்பிரானென்றென்
றருந்தவாநினைந்தேயாதரித்தழைத்தா
லலைகடலதனுளேநின்று
பொருந்தவாகயிலைபுகுநெறியிதுகாண்
போதராயென்றருளாயே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருக்கழுக்குன்றப்பதிகம்.

குருதரிசனம்.

திருக்கழுக்குன்றத்திலருளிச்செயப்பட்டது.

ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பிணக்கிலாதபெருந்துறைப்பெரு
மானுன்னுமங்கள்பேசுவார்க்
கிணக்கிலாததோரின்பமேவருந்
துன்பமேதுடைத்தெம்பிரா
னுணக்கிலாததோர்வித்துமேல்விளை
யாமலென்வினையொத்தபின்
கணக்கிலாத்திருக்கோலநீவந்து
காட்டினாய்கழுக்குன்றிலே. (க)

பிட்டுநேர்படமண்சுமந்த
பெருந்துறைப்பெரும்பித்தனே
சட்டநேர்படவந்திலாத
சழக்கனேனுனைச்சார்ந்திலேன்

பெட்டனேசிவலோகனேசிறு
நாயினுங்கடையாயவெங்
கட்டனேனையுமாட்கொள்வான்வந்து
காட்டினாய்கழுக்குன்றிலே. (உ)

மலங்கினேன்கண்ணினீரைமாற்றி
மலங்கெடுத்தபெருந்துறை
விலங்கினேன்வினைக்கேடனேனினி
மேல்விளைவதறிந்திலே
னிலங்குகின்றநின்சேவடிக
ளிரண்டும்வைப்பிடமின்றியே
கலங்கினேன்கலங்காமலேவந்து
காட்டினாய்கழுக்குன்றிலே. (௩)

பூணொணாதவொரன்புபூண்டு
பொருந்திநாடொறும்போற்றவு
நாணொணாதவொர்நாணமெய்தி
நடுக்கடலுளழுந்திநான்
பேணொணாதபெருந்துறைப்பெருந்
தோணிபற்றியுகைத்தலுங்
காணொணாத்திருக்கோலநீவந்து
காட்டினாய்கழுக்குன்றிலே. (௪)

கோலமேனிவராகமேகுண
மாம்பெருந்துறைக்கொண்டலே
சீலமேதுமறிந்திலாதவென்
சிந்தைவைத்தசிகாமணி
ஞாலமேகரியாகநானுனை
நச்சிநச்சிடவந்திடுங்
காலமேயுனையோதநீவந்து
காட்டினாய்கழுக்குன்றிலே. (௫)

பேதமில்லதொர்கற்பளித்த
பெருந்துறைப்பெருவெள்ளமே
யேதமேபலபேசநீயெனை
யேதிலார்முனமென்செய்தாய்
சாதல்சாதல்பொல்லாமையற்ற
தனிச்சரண்சரணாமெனக்
காதலாலுனையோதநீவந்து
காட்டினாய்கழுக்குன்றிலே. (௬)

இயக்கிமாரறுபத்துநால்வரை
யெண்குணஞ்செய்தவீசனே
மயக்கமாயதொர்மும்மலப்பழ
வல்வினைக்குளழுந்தவுந்
துயக்கறுத்தெனையாண்டுகொண்டுநின்
றாய்மலர்க்கழறந்தெனைக்
கயக்கவைத்தடியார்முனேவந்து
காட்டினாய்கழுக்குன்றிலே. (எ)

திருச்சிற்றம்பலம்.

கண்டபத்து.

நிருத்தரிசனம்.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

கொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

இந்திரியவயமயங்கியிறப்பதற்கேகாரணமா
யந்தரமேதிரிந்துபோயருநரகில்வீழ்வேற்குச்
சிந்தைதனைத்தெளிவித்துச்சிவமாக்கியெனையாண்ட
வந்தமிலாவானந்தமணிகொடில்லைகண்டேனே. (க)

வினைப்பிறவியென்கின்றவேதனையிலகப்பட்டுத்
தனைச்சிறிதுநினையாதேதளர்வெய்திக்கிடப்பேனை
யெனைப்பெரிதுமாட்கொண்டென்பிறப்பறுத்தவிணையிலியை
யனைத்துலகுந்தொழுந்தில்லையம்பலத்தேகண்டேனே. (உ)

உருத்தெரியாக்காலத்தேயுள்புகுந்தென்னுளமன்னிக்
கருத்திருத்தியூன்புக்குக்கருணையினாலாண்டுகொண்ட
திருத்துருத்திமேயானைத்தித்திக்குஞ்சிவபதத்தை
யருத்தியினாயடியேனணிகொடில்லைகண்டேனே. (ங)

கல்லாதபுல்லறிவிற்கடைபட்டநாயேனை
வல்லாளனாய்வந்துவனப்பெய்தியிருக்கும்வண்ணம்
பல்லோருங்காணவென்றன்பசுபாசமறுத்தானை
யெல்லோருமிறைஞ்சுதில்லையம்பலத்தேகண்டேனே. (ச)

சாதிகுலம்பிறப்பென்னுஞ்சுழிப்பட்டுத்தடுமாறு
மாதமிலிநாயேனையல்லலறுத்தாட்கொண்டு

பேதைகுணம்பிறருருவம்யானெனதென்னுரைமாய்த்துக்
கோதிலமுதானானைக்குலாவுதில்லைகண்டேனே. (ரு)

பிறவிதனையறமாற்றிப்பிணிமூப்பென்றிவையிரண்டு
முறவினொடுமொழியச்சென்றுலகுடையவொருமுதலைச்
செறிபொழில்சூழ்தில்லைநகர்த்திருச்சிற்றம்பலமன்னி
மறையவருவானவரும்வணங்கிடநான்கண்டேனே. (சு)

பத்திமையும்பரிசுமிலாப்பசுபாசமறுத்தருளிப்
பித்தனிவனெனவென்னையாக்குவித்துப்போமே
சித்தமெனுந்திண்கயிற்றாற்றிருப்பாதங்கட்டுவித்த
வித்தகனார்விளையாடல்விளங்குதில்லைகண்டேனே. (எ)

அளவிலாப்பாவகத்தாலமுக்குண்டிங்கறிவின்றி
விளைவொன்றுமறியாதேவெறுவியனாய்க்கிடப்பேனுக்
களவிலாவானந்தமளித்தென்னையாண்டானைக்
களவிலாவானவருந்தொழுந்தில்லைகண்டேனே. (அ)

பாங்கினொடுபரிசொன்றுமறியாதநாயேனை
யோங்கியுளத்தொளிவளரவுலப்பிலாவன்பருளி
வாங்கிவினைமலமறுத்துவான்கருணைதந்தானை
நான்குமறைபயிறில்லையம்பலத்தேகண்டேனே. (கூ)

பூதங்களாந்தாகிப்புலனாகிப்பொருளாகிப்
பேதங்களனைத்துமாய்ப்பேதமிலாப்பெருமையனைக்
கேதங்கள்கெடுத்தாண்டகிளரொளியைமரகதத்தை
வேதங்கடொழுதேத்தும்விளங்குதில்லைகண்டேனே. (கo)

திருச்சிற்றம்பலம்.

பிரார்த்தனைப்பத்து.

சதாமுத்தி.

திருப்பெருந்துறையிலருளிச்செயப்பட்டது.

ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

கலந்துநின்னடியாரோடன்றுவாளாகளித்திருந்தேன்
புலர்ந்துபோனகாலங்கள்புகுந்துநின்றதிடர்பின்னா
ளுலர்ந்துபோனேனுடையானேயுலவாவின்பச்சுடர்காண்பா
னலந்துபோனேனருள்செய்யாயார்வங்கூரவடியேற்கே. (க)

அடியார்சிலருன்னருள்பெற்றாரார்வங்கூரயானவமே
முடையார்பிணத்தின்முடிவின்றிமுனிவாலடியேன்மூக்கின்றேன்
கடியேனுடையகடுவினையைக்களைந்துன்கருணைக்கடல்பொங்க
வுடையாயடியேனுள்ளத்தேயோவாதுருகவருளாயே. (௨)

அருளாரமுதப்பெருங்கடல்வாயடியாரெல்லாம்புக்கழுந்த
விருளாராக்கையிதுபொறுத்தேயெய்த்தேன்கண்டாயெம்மானே
மருளார்மனத்தோருன்மத்தன்வருமாலென்றிங்கெனைக்கண்டார்
வெருளாவண்ணமெய்யன்பையுடையாய்பெறநான்வேண்டுமே. ()

வேண்டும்வேண்டுமெய்யடியாருள்ளேவிரும்பியெனையருளா
லாண்டாயடியேனிடர்களைந்தவமுதேயருமாமணிமுத்தே [ல்
தூண்டாவிளக்கின்சுடரனையாய் தொண்டனேற்குமுண்டாங்கொ
வேண்டாதொன்றும்வேண்டாதுமிக்கவன்பேமேவுதலே. (௪)

மேவுமுன்றனடியாருள்விரும்பியானுமெய்ம்மையே
காவிசேருங்கயற்கண்ணாள்பங்காவுன்றன்கருணையினாற்
பாவியேற்குமுண்டாமோபரமானந்தப்பழங்கடல்சேர்ந்
தாவியாக்கையானெனதென்றியாதுமின்றியறுதலே. (௫)

அறவேபெற்றார்நின்னன்பரந்தமின்றியகநெகவும்
புறமேகிடந்துபுலைநாயேன்புலம்புகின்றேனுடையானே
பெறவேவேண்டுமெய்யன்புபேராவொழியாப்பிரிவில்லா
மறவாநினையாவளவிலாமாளாவின்பமாகடலே. (௬)

கடலேயனையவானந்தங்கண்டாரெல்லாங்கவர்ந்துண்ண
விடரேபெருக்கியேசற்றிங்கிருத்தலழகோவடிநாயே [ந்தேன்
னுடையாய்நீயேயருளுதியென்றுணர்த்தாதொழிந்தேகழிந்தொழி
சுடராருளாலிருணீங்கச்சோதீயினித்தான்றுணியாயே. (௭)

துணியாவுருகாவருள்பெருகத்தோன்றுந்தொண்டரிடைப்புகுந்து
திணியார்மூங்கிற்சிந்தையேன்சிவனேநின்றுதேய்கின்றே
னணியாரடியாருனக்குள்ளவன்புந்தாராயருளளியத்
தணியாதொல்லைவந்தருளித்தளிர்ப்பொற்பாதந்தாராயே. (௮)

தாராவருளொன்றின்றியேதந்தாயென்றுன்றமரெல்லா
மாராநின்றாரடியேனுமயலார்போலவயர்வேனோ
சீராருளாற்சிந்தனையைத்திருத்தியாண்டசிவலோகா
பேரானந்தம்பேராமைவைக்கவேண்டும்பெருமானே. (௯)

மானேர்பங்காவந்திப்பார்மதுரக்கனியேமனநெகா
நானேர்தோளாச்சுரையொத்தானம்பியித்தால்வாழ்ந்தாயே

ஊனேபுகுந்தவுனையுணர்ந்தேயுருகிப்பெருகுமுள்ளத்தைக்
கோனேயருளுங்காலந்தான்கொடியேற்கென்றோகூடுவதே. (௧௦)

கூடிக்கூடியுன்னடியார்குனிப்பார்சிரிப்பார்களிப்பாரா
வாடிவாடிவழியற்றேன்வற்றன்மரம்போனிற்பேனோ
ஊடியூடியுடையாயொடுகலந்துள்ளுருகிப்பெருகிநெக்
காடியாடியானந்தமதுவேயாகவருள்கலந்தே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

குழைத்தபத்து.

ஆத்துமநிவேதனம்.

திருப்பெருந்துறையிலருளிச்செயப்பட்டது.

ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

குழைத்தாற்பண்டைக்கொடுவினைநோய்காவாயுடையாய்கொடுவினையே, னுழைத்தாலுறுதியுண்டோதா னுமையாள்கணவாவெனையாள்வாய், பிழைத்தாற்பொறுக்கவேண்டாவோபிறைசேர்சடையாய்முறையோவென், றழைத்தாலருளாதொழிவதேயம்மானேயுன்னடியேற்கே. (௧)

அடியேனல்லலெல்லாமுன்னகலவாண்டாயென்றிருந்தேன்
கொடியேரிடையாள்கூறாவெங்கோவேயாவாவென்றருளிச்
செடிசேருடலைச்சிதையாததெத்துக்கெங்கள்சிவலோகா
வுடையாய்கூவிப்பணிகொள்ளாதொறுத்தாலொன்றும்போதுமே.

ஒன்றும்போதாநாயேனையுய்யக்கொண்டநின்கருணை
யின்றேயின்றிப்போய்த்தோதானேழைபங்காவெங்கோவே
குன்றேயனையகுற்றங்கள்குணமாமென்றேநீகொண்டா
லென்றான்கெட்டதிரங்கிடாயெண்டோண்முக்கணெம்மானே. ()

மானேர்நோக்கிமணவாளாமன்னேநின்சீர்மறப்பித்திவ்
வூனேபுகவென்றனைநூக்கியுழலப்பண்ணுவித்திட்டா
யானாலடியேனறியாமையறிந்துநீயேயருள்செய்து
கோனேகூவிக்கொள்ளுநாளென்றென்றுன்னைக்கூறுவதே. (௪)

கூறுநாவேமுதலாகக்கூறுங்கரணமெல்லாநீ
தேறும்வகைநீதிகைப்புநீதீமைநன்மைமுழுதுநீ
வேறோர்பரிசிங்கொன்றில்லைமெய்ம்மையுன்னைவிரித்துரைக்கிற்
றேறும்வகையென்சிவலோகாதிகைத்தாற்றேற்றவேண்டாவோ.()

வேண்டத்தக்கதறிவோய்நீவேண்டமுழுதுந்தருவோய்நீ [ய்
வேண்டுமயன்மாற்கரியோய்நீவேண்டியென்னைப் பணிகொண்டா
வேண்டிநீயாதருள்செய்தாயானுமதுவேவேண்டினல்லால்
வேண்டும்பரிசொன்றுண்டென்னிலதுவுமுன்றன்விருப்பன்றே. ()

அன்றேயென்றனாவியுமுடலுமுடைமையெல்லாமுங்
குன்றேயனையாயென்னையாட்கொண்டபோதேகொண்டிலையோ
வின்றோரிடையூறெனக்குண்டோவெண்டோண்முக்க ணெம்மா
நன்றேசெய்வாய்பிழைசெய்வாய்நானோவிதற்குநாயகமே. [னே

நாயிற்கடையாநாயேனைநயந்துநீயேயாட்கொண்டாய்
மாயப்பிறவியுன்வசமேவைத்திட்டிருக்குமதுவன்றி
யாயக்கடவேனானோதானென்னதோவிங்கதிகாரங்
காயத்திடுவாயுன்னுடையகழற்கீழ்வைப்பாய்கண்ணுதலே. (அ)

கண்ணார்நுதலோய்கழலிணைகள்கண்டேன்கண்கள்களிகூர
வெண்ணாதிரவும்பகலுநானவையேயெண்ணுமதுவல்லான்
மண்மேல்யாக்கைவிடுமாறும்வந்துன்கழற்கேபுகுமாறு
மண்ணாவெண்ணக்கடவேனோவடிமைசாலவழகுடைத்தே. (கூ)

அழகேபுரிந்திட்டடிநாயேனரற்றுகின்றேனுடையானே
திகழாநின்றதிருமேனிகாட்டியென்னைப்பணிகொண்டாய்
புகழேபெரியபதமெனக்குப்புராணநீதந்தருளாதே
குழகாகோலமறையோனேகோனேயென்னைக்குழைத்தாயே. ()

திருச்சிற்றம்பலம்.

உயிருண்ணிப்பத்து.

சிவானந்தமேலிடுதல்.

திருப்பெருந்துறையிலருளிச்செயப்பட்டது.

கலிவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பைந்நாப்படவரவேரல்குலுமைபாகமதாயென்
மெய்ந்நாடொறும்பிரியாவினைக்கேடாவிடைப்பாகா
செந்நாவலர்பரசும்புகழ்த்திருப்பெருந்துறையுறைவா
யெந்நாட்களித்தெந்நாளிறுமாக்கேனினியானே. (க)

நானாடியணைவானொருநாய்க்குத்தவிசிட்டிங்
கூனாருடல்புகுந்தானுயிர்கலந்தானுளம்பிரியான்

றேனூர்சடைமுடியான்மன்னுதிருப்பெருந்துறையுறைவான்
வானோர்களுமறியாததோர்வளமீந்தனனெனக்கே. (உ)

எனைநானென்பதறியேன்பகலிரவாவதுமறியேன்
மனவாசகங்கடந்தானெனைமத்தோன்மத்தனாக்கிச்
சினமால்விடையுடையான்மன்னுதிருப்பெருந்துறையுறையும்
பனவனெனைச்செய்தபடிறறியேன்பரஞ்சுடரே. (ங)

வினைக்கேடருமுளரோபிறர்சொல்லீர்வியனுலகி
லெனைத்தான்புகுந்தாண்டானெனதென்பின்புரையுருக்கிப்
பினைத்தான்புகுந்தெல்லேபெருந்துறையிலுறைபெம்மான்
மனத்தான்கண்ணினகத்தான்மறுமாற்றத்திடையானே. (ச)

பற்றாங்கவையற்றீர்பற்றும்பற்றாங்கதுபற்றி
நற்றாங்கதியடைவோமெனிற்கெடுவீரோடிவம்மின்
றெற்றார்சடைமுடியான்மன்னுதிருப்பெருந்துறையிறைசீர்
கற்றாங்கவன்கழல்பேணினரொடுங்கூடுமின்கலந்தே. (ரு)

கடலின்றிரையதுபோல்வருகலக்கமலமறுத்தென்
னுடலும்மெனதுயிரும்புகுந்தொழியாவண்ணநிறைந்தான்
சுடருஞ்சுடர்மதிசூடியதிருப்பெருந்துறையுறையும்
படருஞ்சடைமகுடத்தெங்கள்பரன்றான்செய்தபடிறே. (சா)

வேண்டேன்புகழ்வேண்டேன்செல்வம்வேண்டேன் மண்ணும்வி
வேண்டேன்பிறப்பிறப்புச்சிவம்வேண்டார்தமைநாளுந் [ண்ணும்
தீண்டேன்சென்றுசேர்ந்தேன்மன்னுதிருப்பெருந்துறை யிறைதா
பூண்டேன்புறம்போகேனினிப்புறம்போகலொட்டேனே. [ள்

கோற்றேனெனக்கென்கோகுரைகடல்வாயமுதென்கோ
வாற்றேனெங்களரனேயருமருந்தேயெனதரசே
சேற்றார்வயல்புடைசூழ்தருதிருப்பெருந்துறையுறையு
நீற்றார்தருதிருமேனிநின்மலனேயுனையானே. (அ)

எச்சம்மறிவேனானெனக்கிருக்கின்றதையறியே
னச்சோவெங்களரனேயருமருந்தேயெனதமுதே
செச்சைமலர்புரைமேனியன்றிருப்பெருந்துறையுறைவா
னிச்சம்மெனநெஞ்சின்மன்னியானாகிநின்றானே. (கூ)

வான்பாவியவுலகத்தவர்தவமேசெயவவமே
யூன்பாவியவுடலச்சமர்தடவிமரமானேன்
றேன்பாய்மலர்க்கொன்றைமன்னுதிருப்பெருந்துறையுறைவாய்
நான்பாவியனானாலுனைநல்காயெனலாமே. (கo)

திருச்சிற்றம்பலம்.

அச்சப்பத்து.

ஆனந்தமுறுதல்.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

புற்றில்வாளரவுமஞ்சேன்பொய்யர்தம்மெய்யுமஞ்சேன்
கற்றைவார்சடையெம்மண்ணல்கண்ணுதல்பாதநண்ணி
மற்றுமோர்தெய்வந்தன்னையுண்டெனநினைந்தெம்பெம்மாற்
கற்றிலாதவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே. (க)

வெருவரேன்வேட்கைவந்தால்வினைக்கடல்கொளினுமஞ்சே
னிருவரான்மாறுகாணுவெம்பிரான்றம்பிரானாந்
திருவுருவன்றிமற்றோர்தேவரெத்தேவரென்ன
வருவராதவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே. (உ)

வன்புலால்வேலுமஞ்சேன்வளைக்கையார்கடைக்கணஞ்சே
னென்பெலாமுருகநோக்கியம்பலத்தாடுகின்ற
வென்பொலாமணியையேத்தியினிதருள்பருகமாட்டா
வன்பிலாதவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே. (ங)

கிளியனார்கிளவியஞ்சேனவர்கிறிமுறுவலஞ்சேன்
வெளியநீறாடுமேனிவேதியன்பாதநண்ணித்
துளியுலாங்கண்ணராகித்தொழுதழுதுள்ளநெக்கிங்
களியிலாதவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே. (ச)

பிணியெலாம்வரினுமஞ்சேன்பிறப்பினோடிறப்புமஞ்சேன்
றுணிநிலாவணியினான்றன்றொழும்பரோடழுந்தியம்மா
திணிநிலம்பிளந்துங்காணுச்சேவடிபரவிவெண்ணீ
றணிகிலாதவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே. (ரு)

வாளுலாமெரியுமஞ்சேன்வரைபுரண்டிடினுமஞ்சேன்
றோளுலாநீற்றனேற்றன்சொற்பதங்கடந்தவப்பன்
றாளதாமரைகளேத்தித்தடமலர்புனைந்துநையு
மாளலாதவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே. (சு)

தகைவிலாப்பழியுமஞ்சேன்சாதலைமுன்னமஞ்சேன்
புகைமுகந்தெரிகைவீசிப்பொலிந்தவம்பலத்துளாடு
முகைநகைக்கொன்றைமாலைமுன்னவன்பாதமேத்தி
யகமெகாதவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே. (எ)

தறிசெறிகளிறுமஞ்சேன்றழல்விழியுழுவையஞ்சேன்
வெறிகமழ்சடையனப்பன்விண்ணவர்நண்ணமாட்டாச்
செறிதருகழல்களேத்திச்சிறந்தினிதிருக்கமாட்டா
வறிவிலாதவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே. (அ)

மஞ்சுலாமுருமுமஞ்சேன்மன்னரோடுறவுமஞ்சே
னஞ்சமேயமுதமாக்குநம்பிரானெம்பிரானைச்
செஞ்செவேயாண்டுகொண்டான்றிருமுண்டந்தீட்டமாட்டா
தஞ்சுவாரவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே. (கூ)

கோணிலாவாளியஞ்சேன்கூற்றுவன்சீற்றமஞ்சே
னீணிலாவணியினானைநினைந்துநைந்துருகிநெக்கு
வாணிலாங்கண்கள்சோரவாழ்த்திநின்றேத்தமாட்டா
வாணலாதவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே. (கய)

திருச்சிற்றம்பலம்.

திருப்பாண்டிப்பதிகம்.

சிவானந்தவிளைவு.

திருப்பெருந்துறையிலருளிச்செயப்பட்டது.

கட்டளைக்கலித்துறை.

திருச்சிற்றம்பலம்.

பருவரைமங்கைதன்பங்கரைப்பாண்டியற்காரமுதா
மொருவரையொன்றுமிலாதவரைக்கழற்போதிறைஞ்சித்
தெரிவரநின்றுருக்கிப்பரிமேற்கொண்டசேவகனை
யொருவரையன்றியுருவறியாதென்றனுள்ளமதே. (க)

சதுரைமறந்தறிமால்கொள்வர்சார்ந்தவர்சாற்றிச்சொன்னோங்
கதிரைமறைத்தன்னசோதிகழுக்கடைகைப்பிடித்துக்
குதிரையின்மேல்வந்துகூடிடுமேற்குடிகேடுகண்டீர்
மதுரையர்மன்னன்மறுபிறப்போடமறித்திடுமே. (உ)

நீரின்பவெள்ளத் துலீந்திக்குளிக்கின் றநெஞ்சங்கொண்டீர்
பாரின்பவெள்ளங்கொளப்பரிமேற்கொண்டபாண்டியனு [டார்
ரோரின்பவெள்ளத் துருக்கொண்டு தொண்டரையுள்ளங்கொண்
பேரின்பவெள்ளத்துட்பெய்கழலேசென் றுபேணுமினே. (ங)

செறியும்பிறவிக்குநல்லவர்செல்லன்மின்றென்னனன்னாட்
டிறைவன்கிளர்கின் றகாலமிக்காலமெக்காலத்துள்ளு
மறிவொண்கதிர்வாளுறைகழித்தானந்தமாக்கடவி
யெறியும்பிறப்பையெதிர்ந்தார்புரளவிருநிலத்தே. (ச)

காலமுண்டாகவேகாதல்செய்துய்மின்கருதரிய
ஞாலமுண்டானொடுநான்முகன்வானவர்நண்ணரிய
வாலமுண்டானெங்கள்பாண்டிப்பிரான் றன்னடியவர்க்கு
மூலபண்டாரம்வழங்குகின்றான்வந்துமுந்துமினே. (ரு)

ஈண்டியமாயாவிருள்கெடவெப்பொருளும்விளங்கத்
தூண்டியசோதியைமீனவனுஞ்சொல்லவல்லனல்லன்
வேண்டியபோதேவிலக்கிலைவாய்தல்விரும்புமின்றாள்
பாண்டியனாருள்செய்கின் றமுத்திப்பரிசிதுவே. (சு)

மாயவனப்பரிமேல்கொண்டுமற்றவர்கைக்கொளலும்
போயறுமிப்பிறப்பென்னும்பகைகள்புகுந்தவருக்
காயவரும்பெருஞ்சீருடைத்தன்னருளேயருளுஞ்
சேயநெடுங்கொடைத்தென்னவன்சேவடிசேர்மின்களே. (எ)

அழிவின் றிநின் றதொரானந்தவெள்ளத்திடையழுத்திக்
கழிவில்கருணையைக்காட்டிக்கடியவினையகற்றிப்
பழமலம்பற்றறுத்தாண்டவன்பாண்டிப்பெரும்பதமே
முழுதுலகுந்தருவான்கொடையேசென் றுமுந்துமினே. (அ)

விரவியதீவினைமேலைப்பிறப்புமுந்நீர்கடக்கப்
பரவியவன்பரையென்புருக்கும்பரம்பாண்டியனார்
புரவியின்மேல்வரப்புந்திகொளப்பட்டபூங்கொடியார்
மரவியன்மேல்கொண்டுதம்மையுந்தாமறியார்மறந்தே. (கூ)

கூற்றைவென் றாங்கைவர்கோக்களையும்வென் றிருந்தழகால்
வீற்றிருந்தான்பெருந்தேவியுந்தானுமோர்மீனவன்பா
லேற்றுவந்தாருயிருண்டதிறலொற்றைச்சேவகனே
தேற்றமிலாதவர்சேவடிசிக்கெனச்சேர்மின்களே. (கo)

திருச்சிற்றம்பலம்.

பிடித்தபத்து.

முத்திக்கலப்புரைத்தல்.

திருத்தோணிபுரத்திலருளிச்செயப்பட்டது.

ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

உம்பர்கட்கரசேயொழிவறநிறைந்த
யோகமேயூற்றையேன்றனக்கு
வம்பெனப்பழுத்தென்குடிமுழுதாண்டு
வாழ்வறவாழ்வித்தமருந்தே
செம்பொருட்டுணிவேசீருடைக்கழலே
செல்வமேசிவபெருமானே
யெம்பொருட்டுன்னைச்சிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந்தருளுவதினியே. (க)

விடைவிடாதுகந்தவிண்ணவர்கோவே
வினையனேனுடையமெய்ப்பொருளே
முடைவிடாதடியேன்மூத்தறமண்ணாய்
முழுப்புழுக்குரம்பையிற்கிடந்து
கடைபடாவண்ணங்காத்தெனையாண்ட
கடவுளேகருணைமாகடலே
யிடைவிடாதுன்னைச்சிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந்தருளுவதினியே. (உ)

அம்மையேயப்பாவொப்பிலாமணியே
யன்பினில்விளைந்தவாரமுதே
பொய்ம்மையேபெருக்கிப்பொழுதினைச்சுருக்கும்
புழுத்தலைப்புலையனேன்றனக்குச்
செம்மையேயாயசிவபதமளித்த
செல்வமேசிவபெருமானே
யிம்மையேயுன்னைச்சிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந்தருளுவதினியே. (ங)

அருளுடைச்சுடரேயளிந்ததோர்கனியே
பெருந்திறலருந்தவர்க்கரசே
பொருளுடைக்கலையேபுகழ்ச்சியைக்கடந்த
போகமேயோகத்தின்பொலிவே

தெருளிடத்தடியார்சிந்தையுட்புகுந்த
செல்வமேசிவபெருமானே
யிருளிடத்துன்னைச்சிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந்தருளுவதினியே. (ரு)

ஒப்புனக்கில்லாவொருவனேயடியே
னுள்ளத்துள்ளொளிர்கின்றவொளியே
மெய்ப்பதமறியாவீறிலியேற்கு
விழுமியதளித்ததோரன்பே
செப்புதற்கரியசெழுஞ்சுடர்மூர்த்தி
செல்வமேசிவபெருமானே
யெய்ப்பிடத்துன்னைச்சிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந்தருளுவதினியே. (௬)

அறவையேன்மனமேகோயிலாக்கொண்டா
டளவிலாவானந்தமருளிப்
பிறவிவேரறுத்தென்குடிமுழுதாண்ட
பிஞ்ஞகாபெரியவெம்பொருளே
திறவிலேகண்டகாட்சியேயடியேன்
செல்வமேசிவபெருமானே
யிறவிலேயுன்னைச்சிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந்தருளுவதினியே. (௭)

பாசவேரறுக்கும்பழம்பொருடன்னைப்
பற்றுமாறடியனேற்கருளிப்
பூசனையுகந்தென்சிந்தையுட்புகுந்து
பூங்கழல்காட்டியபொருளே
தேசுடைவிளக்கேசெழுஞ்சுடர்மூர்த்தி
செல்வமேசிவபெருமானே
யீசனேயுன்னைச்சிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந்தருளுவதினியே. (எ)

அத்தனேயண்டரண்டமாய்நின்ற
வாதியேயாதுமீறில்லாச்
சித்தனேபத்தர்சிக்கெனப்பிடித்த
செல்வமேசிவபெருமானே
பித்தனேயெல்லாவுயிருமாய்த்தழைத்துப்
பிழைத்தவையல்லையாய்நிற்கு
மெத்தனேயுன்னைச்சிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந்தருளுவதினியே. (அ)

பாளினைக்காட்டுந்தாயினுஞ்சாலப்
பரிந்துநீபாவியேனுடைய
வூனினையுருக்கியுள்ளொளிபெருக்கி
யுலப்பிலாவானந்தமாய
தேனினைச்சொரிந்துபுறம்புறந்திரிந்த
செல்வமேசிவபெருமானே
யானுனைத்தொடர்ந்துசிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந்தருளுவதினியே. (௯)

புன்புலால்யாக்கைபுரைபுரைகனியப்
பொன்னெடுங்கோயிலாப்புகுந்தென்
னென்பெலாமுருக்கியெளியையாயாண்ட
வீசனேமாசிலாமணியே
துன்பமேபிறப்பேயிறப்பொடுமயக்காந்
தொடக்கெலாமறுத்தநற்சோதி
யின்பமேயுன்னைச்சிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந்தருளுவதினியே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருவேசறவு.

சுட்டறிவொழித்தல்.

திருப்பெருந்துறையிலருளிச்செயப்பட்டது.

கொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

இரும்புதருமனத்தேனையீர்த்தீர்த்தென்னென்புருக்கிக்
கரும்புதருசுவையெனக்குக்காட்டினையுன்கழலிணைக
ளொருங்குதிரையுலவுசடையுடையானேநரிகளெல்லாம்
பெருங்குதிரையாக்கியவாறன்றேயுன்பேரருளே. (௧)

பண்ணார்ந்தமொழிமங்கைபங்காநின்னாளானார்க்
குண்ணார்ந்தவாரமுதேயுடையானேயடியேனை
மண்ணார்ந்தபிறப்பறுத்திட்டாள்வாய்நீவாவென்னக்
கண்ணாரவுய்ந்தவாறன்றேயுன்கழல்கண்டே. (௨)

ஆதமிலியான்பிறப்பிறப்பென்னுமருநரகி
லார்தமருமின்றியேயழுந்துவேற்காவாவென்

ரேறுதமவிநஞ்சுண்டவுடையானேயடியேற்குன்
பாதமலர்காட்டியவாறன்றேயெம்பரம்பரனே. (௩)

பச்சைத்தாளரவாட்டீபடர்சடையாய்பாதமல
ருச்சத்தார்பெருமானேயடியேனையுய்யக்கொண்
டெச்சத்தார்சிறுதெய்வமேத்தாதேயச்சோவென்
சித்தத்தாறுய்ந்தவாறன்றேயுன்றிறநினைந்தே. (௪)

கற்றறியேன்கலைஞானங்கசிந்துருகேனாயிடினு
மற்றறியேன்பிறதெய்வம்வாக்கியலால்வார்கழல்வந்
துற்றிருமாந்திருந்தேனெம்பெருமானேயடியேற்குப்
பொற்றவிசுநாய்க்கிடுமாறன்றேநின்பொன்னருளே. (௫)

பஞ்சாயவடிமடவார்கடைக்கண்ணாலிடர்ப்பட்டு
நஞ்சாயதுயர்கூரநடுங்குவேனின்னருளா
லுய்ஞ்சேனெம்பெருமானேயுடையானேயடியேனை
யஞ்சேலென்றாண்டவாறன்றேயம்பலத்தமுதே. (௬)

என்பாலைப்பிறப்பறுத்திங்கிமையவர்க்குமறியவொண்ணாத்
தென்பாலைத்திருப்பெருந்துறையுறையுஞ்சிவபெருமா
னன்பாநீயகநெகவேபுகுந்தருளியாட்கொண்ட
தென்பாலேநோக்கியவாறன்றேயெம்பெருமானே. (௭)

மூத்தானேமூவாதமுதலானேமுடிவில்லா
வோத்தானேபொருளானேயுண்மையுமாயின்மையுமாய்ப்
பூத்தானேபுகுந்திங்குப்புரள்வேனைக்கருணையினாற்
பேர்த்தேநீயாண்டவாறன்றேயெம்பெருமானே. (௮)

மருவினியமலர்ப்பாதமனத்தில்வளர்ந்துள்ளுருகத்
தெருவுதொறுமிகவலறிச்சிவபெருமானென்றேத்திப்
பருகியநின்பரங்கருணைத்தடங்கடலிற்படிவாமா
றருளெனக்கிங்கிடைமருதேயிடங்கொண்டவம்மானே. (௯)

நானேயோதவஞ்செய்தேன்சிவாயநமவெனப்பெற்றேன்
றேனாயின்னமுதமுமாய்த்தித்திக்குஞ்சிவபெருமான்
றானேவந்தெனதுள்ளம்புகுந்தடியேற்கருள்செய்தா
னூனாருமுயிர்வாழ்க்கையொறுத்தன்றேவெறுத்திடவே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருப்புலம்பல்.

சிவானந்தமுதிர்வு.

திருவாரூரிலருளிச்செயப்பட்டது.

கொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

பூங்கமலத் தயனொடுமாலறியாதநெறியானே
கோங்கலர்சேர்குவிமுலையாள்கூறுவெண்ணீறாடி
யோங்கெயில்சூழ்திருவாரூருடையானேயடியேனின்
பூங்கழல்களவையல்லாதெவையாதும்புகழேனே. (க)

சடையானேதழலாடிதயங்குமூவிலைச்சூலப்
படையானேபரஞ்சோதீபசுபதிமழவெள்ளை
விடையானேவிரிபொழில்சூழ்பெருந்துறையாயடியேனு
னுடையானேயுனையல்லாதுறுதுணைமற்றறியேனே. (உ)

உற்றாரையான்வேண்டேனூர்வேண்டேன்பேர்வேண்டேன்
கற்றாரையான்வேண்டேன்கற்பனவுமினியமையுங்
குற்றாலத்தமர்ந்துறையுங்கூத்தாவுன்குரைகழற்கே
கற்றாவின்மனம்போலக்கசிந்துருகவேண்டுவனே. (ஙு)

திருச்சிற்றம்பலம்.

குலாப்பத்து.

அனுபவமிடையீடுபடாமை.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

கொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

ஓடுங்கவந்தியுமேயுறவென்றிட்டுள்கசிந்து
தேடும்பொருளுஞ்சிவன்கழலேயெனத்தெளிந்து
கூடுமுயிருங்குமண்டையிடக்குனித்தடியே
னாடுங்குலாத்தில்லையாண்டானைக்கொண்டன்றே. (க)

துடியேரிடுகிடைத்தூய்மொழியார்தோணசையாற்
செடியேறுதீமைகளெத்தனையுஞ்செய்திடினு
முடியேன்பிறவேனெனைத்தனதாண்முயங்குவித்த
வடியேன்குலாத்தில்லையாண்டானைக்கொண்டன்றே. (உ)

என்புள்ளுருக்கியிருவினையையீடழித்துத்
துன்பங்களோ்துவர்துவங்கடிய்மைசெய்து
முன்புள்ளவற்றைமுழுதழியவுள்புகுந்த
வன்பின்குலாத்தில்லையாண்டானைக்கொண்டன்றே. (௩)

குறியுநெறியுங்குணமுமிலார்குழாங்கடமைப்
பிறியுமனத்தார்பிறிவரியபெற்றியனைச்
செறியுங்கருத்திலுருத்தமுதாஞ்சிவபதத்தை
யறியுங்குலாத்தில்லையாண்டானைக்கொண்டன்றே. (௪)

பேருங்குணமும்பிணிப்புறமிப்பிறவிதனைத்
தூரும்பரிசுதுரிசறுத்துத்தொண்டரெல்லாஞ்
சேரும்வகையாற்சிவன்கருணைத்தேன்பருகி
யாருங்குலாத்தில்லையாண்டானைக்கொண்டன்றே. (௫)

கொம்பிலரும்பாய்க்குவிமலராய்க்காயாகி
வம்புபழுத்துடலமாண்டிங்ஙன்போகாமே
நம்புமென்சிந்தைநணுகும்வண்ணநானணுகு
மம்பொன்குலாத்தில்லையாண்டானைக்கொண்டன்றே. (௬)

மதிக்குந்திறலுடையவல்லரக்கன்றோணெரிய
மிதிக்குந்திருவடியென்றலைமேல்வீற்றிருப்பக்
கதிக்கும்பசுபாசமொன்றுமிலோமெனக்களித்திங்
கதிர்க்குங்குலாத்தில்லையாண்டானைக்கொண்டன்றே. (௭)

இடக்குங்கருமுருட்டேனப்பின்கானகத்தே
நடக்குந்திருவடியென்றலைமேனட்டமையாற்
கடக்குந்திறலைவர்கண்டகர்தம்வல்லாட்டை
யடக்குங்குலாத்தில்லையாண்டானைக்கொண்டன்றே. (௮)

பாழ்ச்செய்விளாவிப்பயனிலியாய்க்கிடப்பேற்குக்
கீழ்ச்செய்தவத்தாற்கிழியீடுநேர்பட்டுத்
தாட்செய்யதாமரைச்சைவனுக்கென்புன்றலையா
லாட்செய்குலாத்தில்லையாண்டானைக்கொண்டன்றே. (௯)

கொம்மைவரிமுலைக்கொம்பனையாள்கூறனுக்குச்
செம்மைமனத்தாற்றிருப்பணிகள்செய்வேனுக்
கிம்மைதரும்பயனித்தனையுமீங்கொழிக்கு
மம்மைகுலாத்தில்லையாண்டானைக்கொண்டன்றே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

அற்புதப்பத்து.

அநுபவாற்றாமை.

திருப்பெருந்துறையிலருளிச்செயப்பட்டது.

ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

மையலாயிந்தமண்ணிடைவாழ்வெனுமாழியுளகப்பட்டுத்
தையலாரெனுஞ்சுழித்தலைப்பட்டுநான்றலைதடுமாறாமே
பொய்யெலாம்விடத்திருவருடந்துதன்பொன்னடியிணைகாட்டி
மெய்யனாய்வெளிகாட்டிமுன்னின்றதோரற்புதம்விளம்பேனே. ()

எய்ந்தமாமலரிட்டுமுட்டாததோரியல்பொடும்வணங்காதே
சாந்தமார்முலைத்தையனல்லாரொடுந்தலைதடுமாறாகிப்
போந்தியான்றுயர்புகாவணமருள்செய்துபொற்கழலிணைகாட்டி
வேந்தனாய்வெளியேயென்முனின்றதோரற்புதம்விளம்பேனே. ()

நடித்துமண்ணிடைப்பொய்யினைப்பலசெய்துநானெனதெனுமாய
கடித்தவாயிலேநின்றுமுன்வினைமிகக்கழறியேதிரிவேனைப் [க்
பிடித்துமுன்னின்றப்பெருமறைதேடியவரும்பொருளடியேனை
யடித்தடித்துவக்காரமுன்றீற்றியவற்புதமறியேனே. (௩)

பொருந்துமிப்பிறப்பிறப்பிவைநினையாதுபொய்களே புகன்றுபோ
கருங்குழலினார்கண்களாலேறுண்டுகலங்கியேகிடப்பேனைத் [ய்க்
திருந்துசேவடிச்சிலம்பவைசிலம்பிடத்திருவொடுமகலாதே
யருந்துணைவனாயாண்டுகொண்டருளியவற்புதமறியேனே. (௪)

மாடுஞ்சுற்றமுமற்றுளபோகமுமங்கையர்தம்மோடுங்
கூடியங்குளகுணங்களாலேறுண்டுகுலாவியேதிரிவேனை
வீடுதந்தென்றன்வெந்தொழில்வீட்டிடமென்மலர்க்கழல்காட்டி
யாடுவித்தெனதகம்புகுந்தாண்டதோரற்புதமறியேனே. (௫)

வணங்குமிப்பிறப்பிறப்பிவைநினையாதுமங்கையர்தம்மோடும் [ணைக்
பிணைந்துவாயிதழ்ப்பெருவெள்ளத்தழுந்திநான்பித்தனாய்த்திரிவே
குணங்களுங்குறிகளுமிலாக்குணக்கடல்கோமளத்தொடுங்கூடி
யணைந்துவந்தெனையாண்டுகொண்டருளியவற்புதமறியேனே. (௬)

இப்பிறப்பினிலிணைமலர்கொய்துநானியல்பொடஞ்செழுத் தோதி
தப்பிலாதுபொற்கழல்களுக்கிடாதுநான்றடமுலையார்தங்கண் [த்

மைப்புலாங்கண்ணாலேறண்டுகிடப்பேனைமலரடியிணைகாட்டி
யப்பனென்னைவத்தாண்டுகொண்டருளியவற்புதமறியேனே. (எ)

ஊசலாட்டுமிவ்வுடலுயிராயினவிருவினையறுத்தென்னை
யோசையாலுணர்வார்க்குணர்வரியவனுணர்வுதந்தொளியாக்கிப்
பாசமானவைபற்றறுத்துயர்ந்ததன்பரம்பெருங்கருணையா
லாசைதீர்த்தடியாரடிக்கூட்டியவற்புதமறியேனே. (அ)

பொச்சையானவிப்பிறவியிற்கிடந்துநான்புழுத்தலைநாய்போல
விச்சையாயினவேழையர்க்கேசெய்தங்கிணங்கியேதிரிவேனை
யிச்சகத்தரியயனுமெட்டாததன்விரைமலர்க்கழல்காட்டி
யச்சனென்னையுமாண்டுகொண்டருளியவற்புதமறியேனே. (கூ)

செறியுமிப்பிறப்பிறப்பிவைநினையாதுசெறிகுழலார்செய்யுங்
கிறியுங்கீழ்மையுங்கெண்டையங்கண்களுமுன்னியேகிடப்பேனை
யிறைவனெம்பிரானெல்லையில்லாததன்னிணைமலர்க்கழல்காட்டி
யறிவுதந்தெனையாண்டுகொண்டருளியவற்புதமறியேனே. (க0)

திருச்சிற்றம்பலம்.

சென்னிப்பத்து.

சிவவிளைவு.

திருப்பெருந்துறையிலருளிச்செயப்பட்டது.

ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

தேவதேவன்மெய்ச்சேவகன்றென்பெருந்துறைநாயகன்
மூவராலுமறியொணாமுதலாயவானந்தமூர்த்தியான்
யாவராயினுமன்பரன்றியறியொணாமலர்ச்சோதியான்
றூயமாமலர்ச்சேவடிக்கணஞ்சென்னிமன்னிச்சுடருமே. (க)

அட்டமூர்த்தியழகனின்னமுதாயவானந்தவெள்ளத்தான்
சிட்டன்மெய்ச்சிவலோகநாயகன்றென்பெருந்துறைச்சேவகன்
மட்டுவார்குழன்மங்கையாளையோர்பாகம்வைத்தவழகன்றன்
வட்டமாமலர்ச்சேவடிக்கணஞ்சென்னிமன்னிமலருமே. (உ)

நங்கைமீரெனைநோக்குமின்னங்கணுதனம்பணிகொண்டவன், றெங்குசோலைகள்சூழ்பெருந்துறைமேயசேவகனாயகன், மங்கைமார்கையில்வளையுங்கொண்டெம்முயிருங் கொண்டெம்பணிகொள்வான், பொங்குமாமலர்ச்சேவடிக்கணஞ்சென்னிமன்னிப்பொலியுமே.

பத்தர்சூழப்பராபரன்பாரில்வந்துபார்ப்பானெனச்
சித்தர்சூழச்சிவபிரான்றில்லைமூதூர்நடஞ்செய்வா [வான்
னெத்தனுகிவந் தில்புகுந்தெமையாளுங்கொண் டெம்பணிகொள்
வைத்தமாமலர்ச்சேவடிக்கணஞ்சென்னிமன்னிமலருமே. (ரு)

மாயவாழ்க்கையைமெய்யென்றெண்ணிமதித்திடாவகைநல்கினன்
வேயதோளுமைபங்கனெங்கடிருப்பெருந்துறைமேவினன்
காயத்துள்ளமுதூறவூறநீகண்டுகொள்ளென்றுகாட்டிய
சேயமாமலர்ச்சேவடிக்கணஞ்சென்னிமன்னித்திகழுமே. (சு)

சித்தமேபுகுந்தெம்மையாட்கொண்டுதீவினைகெடுத்துய்யலாம்
பத்திதந்துதன்பொற்கழற்கணேபன்மலர்கொய்துசேர்த்தலு
முத்திதந்திந்தமூவுலகுக்குமப்புறத்தெமைவைத்திடு
மத்தன்மாமலர்ச்சேவடிக்கணஞ்சென்னிமன்னிமலருமே. (சு)

பிறவியென்னுமிக்கடலைநீந்தத்தன்பேரருடந்தருளினு
னறவையென்றடியார்கடங்களருட்குழாம்புகவிட்டுநல்
லுறவுசெய்தெனையுய்யக்கொண்டபிரான்றனுண்மைப்பெருக்கமாந்
திறமைகாட்டியசேவடிக்கணஞ்சென்னிமன்னித்திகழுமே. (எ)

புழுவினுற்பொதிந்திடுகுரம்பையிற்பொய்தனையொழிவித்திடு, மெழில்கொள் சோதியெம்மீசனெம் பிரானென்னுடையப்பனென்றென்று, தொழுதகையினராகித்தூய்மலர்க்கண்கணீர்மல்குந்தொண்டர்க்கு, வழுவிலாமலர்ச்சேவடிக்கணஞ்சென்னிமன்னிமலருமே.()

வம்பனுய்த்திரிவேனைவாவென்றுவல்வினைப்பகைமாய்த்திடு
மும்பராலுலகூடறுத்தப்புறத்தனுய்நின்றவெம்பிரா
னன்பரானவர்க்கருளிமெய்யடியார்கட்கின்பந்தழைத்திடுஞ்
செம்பொன்மாமலர்ச்சேவடிக்கணஞ்சென்னிமன்னித்திகழுமே. ()

முத்தனைமுதற்சோதியைமுக்கணப்பனைமுதல்வித்தினைச்
சித்தனைச்சிவலோகனைத்திருநாமம்பாடித்திரிதரும்
பத்தர்காளிங்கேவம்மினீருங்கள்பாசந்தீரப்பணிமினே
சித்தமார்தருஞ்சேவடிக்கணஞ்சென்னிமன்னித்திகழுமே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருவார்த்தை.

அறிவித்தன்புறுதல்.

திருப்பெருந்துறையிலருளிச்செயப்பட்டது.

ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

மாதிவர்பாகன்மறைபயின்ற
வாசகன்மாமலர்மேயசோதி
கோதில்பரங்கருணையடியார்
குலாவுநீதிகுணமாகநல்கும்
போதலர்சோலைப்பெருந்துறையெம்
புண்ணியன்மண்ணிடைவந்திழிந்
தாதிப்பிரமம்வெளிப்படுத்த
வருளறிவாரெம்பிரானுவாரே. (க)

மாலயன்வானவர்கோனும்வந்து
வணங்கவவர்க்கருள்செய்தவீசன்
ஞாலமதனிடைவந்திழிந்து
நன்னெறிகாட்டிநலந்திகழுங்
கோலமணியணிமாடநீடு
குலாவுமிடவைமடநல்லாட்குச்
சீலமிகக்கருணையளிக்குந்
திறமறிவாரெம்பிரானுவாரே. (உ)

அணிமுடியாதியமரர்கோமா
னானந்தக்கூத்தனறுசமயம்
பணிவகைசெய்துபடவதேறிப்
பாரொடுவிண்ணும்பரவியேத்தப்
பிணிகெடநல்கும்பெருந்துறையெம்
பேரருளாளன்பெண்பாலுகந்து
மணிவலைகொண்டுவான்மீன்விசிறும்
வகையறிவாரெம்பிரானுவாரே. (ங)

வேடுருவாகிமகேந்திரத்து
மிகுகுறைவானவர்வந்துதன்னைத்
தேடவிருந்தசிவபெருமான்
சிந்தனைசெய்தடியோங்களுய்ய

வாடலமர்ந்தபரிமாவேறி
  யையன்பெருந்துறையாதியந்நா
ளேடர்களையெங்குமாண்டுகொண்ட
  வியல்பறிவாரெம்பிரானவாரே. (௪)

வந்திமையோர்கள்வணங்கியேத்த
  மாக்கருணைக்கடலாயடியார்
பந்தனைவிண்டறநல்குமெங்கள்
  பரமன்பெருந்துறையாதியந்நா
ளுந்துதிரைக்கடலைக்கடந்தன்
  றோங்குமதிலிலங்கையதனிற்
பந்தணைமெல்விரலாட்கருளும்
  பரிசறிவாரெம்பிரானவாரே. (௫)

வேவத்திரிபுரஞ்செற்றவில்லி
  வேடுவனாய்க்கடிநாய்கள்சூழ
வேவற்செயல்செய்யுந்தேவர்முன்னே
  யெம்பெருமான்றானியங்குகாட்டி
லேவுண்டபன்றிக்கிரங்கியீச
  னெந்தைபெருந்துறையாதியன்று
கேவலங்கேழலாய்ப்பால்கொடுத்த
  கிடப்பறிவாரெம்பிரானவாரே. (௬)

நாதமுடையதோர்நற்கமலப்
  போதினினண்ணியநன்னுதலா
ரோதிப்பணிந்தலர்தூவியேத்த
  வொளிவளர்சோதியெம்மீசன்மன்னும்
போதலர்சோலைப்பெருந்துறையெம்
  புண்ணியன்மண்ணிடைவந்துதோன்றிப்
பேதங்கெடுத்தருள்செய்பெருமை
  யறியவல்லாரெம்பிரானவாரே. (௭)

பூவலர்கொன்றையமாலைமார்பன்
  போருகிர்வன்புலிகொன்றவீரன்
மாதுநல்லாளுமைமங்கைபங்கன்
  வண்பொழில்சூழ்தென்பெருந்துறைக்கோ
னேதில்பெரும்புகழெங்களீச
  னிருங்கடல்வாணற்குத்தீயிற்றோன்று
மோவியமங்கையர்தோள்புணரு
  முருவறிவாரெம்பிரானவாரே. (௮)

ஆவெள்ளொநீறணியெம்பெருமான்
சோதிமகேந்திரநாதன்வந்து
தேவர்தொழும்பதம்வைத்தவீசன்
றென்னன்பெருந்துறையாளியன்று
காதல்பெருகக்கருணைகாட்டித்
தன்கழல்காட்டிக்கசிந்துருகக்
கேதங்கெடுத்தென்னையாண்டருளுங்
கிடப்பறிவாரெம்பிரானுவாரே. (க)

அங்கணனெங்களமரர்பெம்மா
னடியார்க்கமுதனவனிவந்த
வெங்கள்பிரானிரும்பாசந்தீர
விகபரமாயதோரின்பமெய்தச்
சங்கங்கவர்ந்துவண்சாத்தினோடுஞ்
சதுரன்பெருந்துறையாளியன்று
மங்கையர்மல்குமதுரைசேர்ந்த
வகையறிவாரெம்பிரானுவாரே. (க0)

திருச்சிற்றம்பலம்.

எண்ணப்பதிகம்.

ஒழியாவின்பத்துவகை.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பாருருவாயபிறப்பறவேண்டும்பத்திமையும்பெறவேண்டுஞ்
சீருருவாயசிவபெருமானேசெங்கமலமலர்போ
லாருருவாயவென்னாரமுதேயுன்னடியவர்தொகைநடுவே, யோருரு
வாயநின்திருவருள்காட்டியென்னையுமுய்யக்கொண்டருளே. (க)

உரியேனல்லேனுனக்கடிமையுன்னைப்பிரிந்திங்கொருபொழுதுந்
தரியேனுயேனின்னதென்றறியேன்சங்கராகருணையினுற், பெரி
யோனொருவன்கண்டுகொளென்றுன்பெய்கழலடிகாட்டிப், பிரியே
னென்றென்றருளியவருளும்பொய்யோவெங்கள்பெருமானே. ()

என்பேயுருகநின்னருளளித்துன்னிணைமலரடிகாட்டி
முன்பேயென்னையாண்டுகொண்டமுனிவாமுனிவர்முழுமுதலே
யின்பேயருளியென்னையுருக்கியுயிருண்கின்றவெம்மானே
நண்பேயருளாயென்னுயிர்நாதாநின்னருணாணாமே. (அ)

பத்திலனேனும்பணிந்திலனேனுமுன்னுயர்ந்தபைங்கழல்காணப்
பித்திலனேனும்பிதற்றிலனேனும்பிறப்பறுப்பாயெம்பெருமானே
முத்தனையானேமணியனையானேமுதல்வனேமுறையோவென்
றெத்தனையானும்யான்றொடர்ந்துன்னையினிப்பிரிந்தாற்றேனே.()

காணுமதொழிந்தேனின்றிருப்பாதங்கண்டுகண்களிகூரப்,பேணு
மதொழிந்தேன்பிதற்றுமதொழிந்தேன் பின்னையெம்பெருமானே,
தாணுவேயழிந்தேனின்னினைந்துருகுந்தன்மையென்புன்மைகளா
ற், காணுமதொழிந்தேனீயினிவரினுங்காணவுநாணுவனே. (௯)

பாற்றிருநீற்றெம்பரமனைப்பரங்கருணையோடுமெதிர்ந்து,தோற்றி
மெய்யடியார்க்கருட்டுறையளிக்குஞ்சோதியைநீதியிலேன், போற்
றியென்னமுதேயெனநினைந்தேத்திப் புகழ்ந்தழைத்தலறியென்னு
ள்ளே, யாற்றுவனாகவுடையவனேயெனையாவவென்றருளாயே. ()

திருச்சிற்றம்பலம்.

யாத்திரைப்பத்து.

அநுபவாதீதமுரைத்தல்.

தில்லையிலருளிச்செய்யப்பட்டது.

ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பூவார்சென்னிமன்னனெம்புயங்கப்பெருமான்சிறியோமை
யோவாதுள்ளங்கலந்துணர்வாயுருக்கும்வெள்ளக்கருணையினா
லாவாவென்னப்பட்டன்பாயாட்பட்டீர்வந்தொருப்படுமின்
போவோங்காலம்வந்ததுகாண்பொய்விட்டுடையான்கழல்புகவே.

புகவேவேண்டாபுலன்களில்நீர்புயங்கப்பெருமான்பூங்கழல்கண்
மிகவேநினைமின்மிக்கவெல்லாம்வேண்டாபோகவிடுமின்க
ணகவேஞாலத்துள்புகுந்துநாயேயனையநமையாண்ட
தகவேயுடையான்றனைச்சாரத்தளராதிருப்பார்தாந்தாமே. (உ)

தாமேதமக்குச்சுற்றமுந்தாமேதமக்குவிதிவகையும்
யாமாரெமதார்பாசமாரென்னமாயமிவைபோகக், கோமான்பண்
டைத்தொண்டரொடுமவன்றன்குறிப்பேகுறிக்கொண்டு,போமாற
மைமின்பொய்நீக்கிப்புயங்கனாள்வான்பொன்னடிக்கே. (௩)

அடியாரானீரெல்லீருமகலவிடுமின்விளையாட்டைக்
கடிசேரடியேவந்தடைந்துகடைக்கொண்டிருமின்றிருக்குறிப்பைச்
செடிசேருடலைச்செலநீக்கிச்சிவலோகத்தேநமைவைப்பான்
பொடிசேர்மேனிப்புயங்கன்றன்பூவார்கழற்கேபுகவிடுமே. (௪)

விடுமின்வெகுளிவேட்கைநோய்மிகவோர்காலமினியில்லை
யுடையானடிக்கீழ்ப்பெருஞ்சாத்தோடுடன்போவதற்கேயொருப்ப
டுமி, னடைவோநாம்போய்ச்சிவபுரத்துளணியார்கதவதடையாமே
புடைபட்டுருகிப்போற்றுவோம்புயங்கனாள்வான்புகழ்களையே. (௫)

புகழ்மின்றொழுமின்பூப்புனைமின்புயங்கன்றாளேபுந்திவைத்திட்
டிகழ்மினெல்லாவல்லலையுமினியோரிடையூறடையாமே
திகழுஞ்சீரார்சிவபுரத்துச்சென்றுசிவன்றாள்வணங்கிநா
நிகழுமடியார்முன்சென்றுநெஞ்சமுருகிநிற்போமே. (௬)

நிற்பார்நிற்கநில்லாவுலகினில்லோமினிநாஞ்செல்வோமே
பொற்பாலொப்பாந்திருமேனிப்புயங்கனாள்வான்பொன்னடிக்கே
நிற்பீரெல்லாந்தாழாதேநிற்கும்பரிசேயொருப்படுமின்
பிற்பானின்றுபேழ்கணித்தாற்பெறுதற்கரியன்பெருமானே. (௭)

பெருமான்பேரானந்தத்துப்பிரியாதிருக்கப்பெற்றீர்கா
ளருமாலுற்றுப்பின்னைநீரம்மாவழுங்கியரற்றாதே
திருமாமணிசேர்திருக்கதவந்திறந்தபோதேசிவபுரத்துத்
திருமாலறியாத்திருப்புயங்கன்றிருத்தாள்சென்றுசேர்வோமே. ()

சேரக்கருதிச்சிந்தனையைத்திருந்தவைத்துச்சிந்திமின்
போரிற்பொலியும்வேற்கண்ணாள்பங்கன்புயங்கனருளமுத
மாரப்பருகியாராதவார்வங்கூரவழுந்துவீர்
போரப்புரிமின்சிவன்கழற்கேபொய்யிற்கிடந்துபுரளாதே. (௯)

புரள்வார்தொழுவார்புகழ்வாராயின்றேவந்தாளாகாதீர்
மருள்வீர்பின்னைமதிப்பாரார்மதியுட்கலங்கிமயங்குவீர்
தெருள்வீராகிலிதுசெய்மின்சிவலோகக்கோன்றிருப்புயங்க
னருளார்பெறுவாரகலிடத்தேயந்தோவந்தோவந்தோவே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருப்படையெழுச்சி.

பிரபஞ்சப்போர்.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

கலிவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

ஞானவாளேந்துமையர்நாதப்பறையறைமின்
மானமாவேறுமையர்மதிவெண்குடைகவிமின்
ஆனநீற்றுக்கவசமடையப்புகுமின்கள்
வானவூர்கொள்வோநாமாயப்படைவாராமே. (க)

தொண்டர்காள்தூசிசெல்லீர்பத்தர்காள்சூழப்போகீர்
ஒண்டிறல்யோகிகளேபேரணியுந்தீர்க
திண்டிறற்சித்தர்களேகடைக்கூழைசென்மின்கள்
அண்டர்நாடாள்வோநாமல்லற்படைவாராமே. (உ)

திருச்சிற்றம்பலம்.

திருவெண்பா.

அணைந்தோர்தன்மை.

திருப்பெருந்துறையிலருளிச்செயப்பட்டது.

நேரிசைவெண்பா.

திருச்சிற்றம்பலம்.

வெய்யவினையிரண்டும்வெந்தகலமெய்யுருகிப்
பொய்யும்பொடியாகாதென்செய்கேன் — செய்ய
திருவார்பெருந்துறையான்றேனுந்துசெந்தீ
மருவாதிருந்தேன்மனத்து. (க)

ஆர்க்கோவரற்றுகோவாடுகோபாடுகோ
பார்க்கோபரம்பரனேயென்செய்கேன் — தீர்ப்பரிய
ஆனந்தமாலேற்றுமத்தன்பெருந்துறையான்
றானென்பாராரொருவர்தாழ்ந்து. (உ)

செய்தபிழையறியேன்சேவடியேகைதொழுதே
உய்யும்வகையினுயிர்ப்பறியேன் — வையத்
திருந்துறையுள்வேன்மடுத்தென்சிந்தனைக்கேகோத்தான்
பெருந்துறையின்மேயபிரான். (௩)

முன்னைவினையிரண்டும்வேரறுத்துமுன்னின்றான்
பின்னைப்பிறப்பறுக்கும்பேராளன்—றென்னன்
பெருந்துறையின்மேயபெருங்கருணையாளன்
வருந்துயரந்தீர்க்குமருந்து. (ச)

அறையோவறிவார்க்கனைத்துலகுமீன்ற
மறையோனுமாலுமால்கொள்ளு—மிறையோன்
பெருந்துறையுண்மேயபெருமான்பிரியா
திருந்துறையுமென்னெஞ்சத்தின்று. (ரு)

பித்தென்னையேற்றும்பிறப்பறுக்கும்பேச்சரிதா
மத்தமேயாக்கும்வந்தென்மனத்தை—யத்தன்
பெருந்துறையாளாட்கொண்டுபேரருளாளனெக்கு
மருந்திறவாப்பேரின்பம்வந்து. (சு)

வாராவழியருளிவந்தெனக்குமாறின்றி
யாராவமுதாயமைந்தன்றே—சீரார்
திருத்தென்பெருந்துறையானென்சிந்தைமேய
வொருத்தன்பெருக்குமொளி. (எ)

யாவர்க்குமேலாமளவிலாச்சீருடையான்
யாவர்க்குங்கீழாமடியேனை—யாவரும்
பெற்றறியாவின்பத்துள்வைத்தாய்க்கென்னெம்பெருமான்
மற்றறியேன்செய்யும்வகை. (அ)

மூவருமுப்பத்துமூவருமற்றொழிந்த
தேவருங்காணாச்சிவபெருமான்—மாவேறி
வையகத்தேவந்திழிந்தவார்கழல்கள்வந்திக்க
மெய்யகத்தேயின்பமிகும். (கூ)

இருந்தென்னையாண்டாளிணையடியேசிந்தித்
திருந்திரந்துகொண்ணெஞ்சேயெல்லா—தருங்காண்
பெருந்துறையின்மேயபெருங்கருணையாளன்
மருந்துருவாயென்மனத்தேவந்து. (க0)

இன்பம்பெருக்கியிருளகற்றியெஞ்ஞான்றுந்
துன்பந்தொடர்வறுத்துச்சோதியா—யன்பமைத்துச்
சீரார்பெருந்துறையானென்னுடையசிந்தையே
யூராகக்கொண்டானுவந்து. (கக)

திருச்சிற்றம்பலம்.

பண்டாய நான்மறை.

அநுபவத்துக்கையமின்மையுரைத்தல்.

திருப்பெருந்துறையிலருளிச்செய்யப்பட்டது.

நேரிசைவெண்பா.

திருச்சிற்றம்பலம்.

பண்டாயநான்மறையும்பாலணுகாமாலயனுங்
கண்டாருமில்லைக்கடையேனைத்—தொண்டாகக்
கொண்டருளுங்கோகழியெங்கோமாற்குநெஞ்சமே
யுண்டாமோகைம்மாறுரை. (க)

உள்ளமலமூன்றுமாயவுகுபெருந்தேன்
வெள்ளந்தரும்பரியின்மேல்வந்த—வள்ளன்
மருவும்பெருந்துறையைவாழ்த்துமின்கள்வாழ்த்தக்
கருவுங்கெடும்பிறவிக்காடு. (உ)

காட்டகத்துவேடன்கடலில்வலைவாண
னாட்டிற்பரிப்பாகனம்வினையை—வீட்டி
யருளும்பெருந்துறையானங்கமலபாத
மருளுங்கெடநெஞ்சேவாழ்த்து. (ங)

வாழ்ந்தார்களாவாரும்வல்வினையைமாய்ப்பாருந்
தாழ்ந்துலகமேத்தத்தகுவாருஞ்—சூழ்ந்தமரர்
சென்றிறைஞ்சியேத்துந்திருவார்பெருந்துறையை
நன்றிறைஞ்சியேத்துநமர். (ச)

நண்ணிப்பெருந்துறையைநம்மிடர்கள்போயகல
வெண்ணியெழுகோகழிக்கரசைப்—பண்ணின்
மொழியாளோடுத்தரகோசமங்கைமன்னிக்
கழியாதிருந்தவனைக்காண். (ரு)

காணுங்கரணங்களெல்லாம்பேரின்பமெனப்
பேணுமடியார்பிறப்பகலக்—காணும்
பெரியானைநெஞ்சேபெருந்துறையிலென்றும்
பிரியானைவாயாரப்பேசு. (சு)

பேசும்பொருளுக்கிலக்கிதமாம்பேச்சிறந்த
மாசின்மணியின்மணிவார்த்தை—பேசிப்
பெருந்துறையேயென்றுபிறப்பறுத்தேனல்ல
மருந்தினடியென்மனத்தேவைத்து. (எ)

திருச்சிற்றம்பலம்.

திருப்படையாட்சி.

சிவோபாதியொழிதல்.

தில்லையிலருளிச்செய்யப்பட்டது.

ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

கண்களிரண்டுமவன்கழல்கண்டுகளிப்பனவாகாதே
காரிகையார்கடம்வாழ்விலென்வாழ்வுகடைப்படுமாகாதே
மண்களில்வந்துபிறந்திடுமாறுமறந்திடுமாகாதே
மாலறியாமலர்ப்பாதமிரண்டும்வணங்குதுமாகாதே
பண்களிகூர்தருபாடலொடாடல்பயின்றிடுமாகாதே
பாண்டிநன்னாடுடையான்படையாட்சிகள்பாடுதுமாகாதே
விண்களிகூர்வதோர்வேதகம்வந்துவெளிப்படுமாகாதே
மீன்வலைவீசியகானவன்வந்துவெளிப்படுமாயிடிலே. (௧)

ஒன்றினொடொன்றுமோரைந்தினொடைந்துமுயிர்ப்பறுமாகாதே
யுன்னடியாரடியாரடியோமெனவுய்ந்தனவாகாதே
கன்றைநினைந்தெழுதாயெனவந்தகணக்கதுவாகாதே
காரணமாகுமனாதிகுணங்கள்கருத்துறுமாகாதே
நன்றிதுதீதெனவந்தநடுக்கநடந்தனவாகாதே
நாமுமேலாமடியாருடனேசெலநண்ணுதுமாகாதே
யென்றுமெனன்புநிறைந்தபராவமுதெய்துவதாகாதே
யேறுடையானெனையாளுடைநாயகனென்னுள்புகுந்திடிலே. (௨)

பந்தவிகாரகுணங்கள்பறிந்துமறிந்திடுமாகாதே
பாவனையாயகருத்தினில்வந்தபராவமுதாகாதே
யந்தமிலாதவகண்டமுநம்முளகப்படுமாகாதே
யாதிமுதற்பரமாயபரஞ்சுடரண்ணுவதாகாதே
செந்துவர்வாய்மடவாரிடரானவைசிந்திடுமாகாதே
சேலனகண்களவன்றிருமேனிதிளைப்பனவாகாதே
யிந்திரஞாலவிடர்ப்பிறவித்துயரேகுவதாகாதே
யென்னுடைநாயகனாகியவீசனெதிர்ப்படுமாயிடிலே. (௩)

என்னணியார்முலையாகமளைந்துடனின்புறுமாகாதே
யெல்லையின்மாக்கருணைக்கடலின்றினிதாடுதுமாகாதே
நன்மணிநாதமுழங்கியெனுள்ளுறநண்ணுவதாகாதே
நாதனணித்திருநீற்றினைநித்தலுநண்ணுவதாகாதே
மன்னியவன்பரிலென்பணிமுந்துறவைகுவதாகாதே
மாமறையும்மறியாமலர்ப்பாதம்வணங்குதுமாகாதே

யின்னியற்செங்கழுநீர்மலரென்றலையெய்துவதாகாதே
யென்னையுடைப்பெருமானருளீசனெழுந்தருளப்பெறிலே. (௪)

மண்ணினின்மாயைமதித்துவகுத்தமயக்கறுமாகாதே
வானவரும்மறியாமலர்ப்பாதம்வணங்குறுமாகாதே
கண்ணிலிகாலமனைத்தினும்வந்தகலக்கறுமாகாதே
காதல்செயும்மடியார்மனமின்றுகளித்திடுமாகாதே
பெண்ணலியாணெனநாமெனவந்தபிணக்கறுமாகாதே
பேறறியாதவனேகபவங்கள்பிழைத்தனவாகாதே
யெண்ணிலியாகியசித்திகள்வந்தெனையெய்துவதாகாதே
யென்னையுடைப்பெருமானருளீசனெழுந்தருளப்பெறிலே. (௫)

பொன்னியலுந்திருமேனிவெண்ணீறுபொலிந்திடுமாகாதே
பூமழைமாதவர்கைகள்குவிந்துபொழிந்திடுமாகாதே
மின்னியனுண்ணிடையார்கள்கருத்துவெளிப்படுமாகாதே
வீணைமுரன்றெழுமோசையிலின்பமிகுத்திடுமாகாதே
தன்னடியாரடியென்றலைமீதுதழைப்பனவாகாதே
தானடியோமுடனேயுயவந்துதலைப்படுமாகாதே
யின்னியமெங்குநிறைந்தினிதாகவியம்பிடுமாகாதே
யென்னைமுனாளுடையீசனெனத்தனெழுந்தருளப்பெறிலே. (௬)

சொல்லியலாதெழுதூமணியோசைசுவைதருமாகாதே
துண்ணெனவென்னுளமன்னியசோதிதொடர்ந்தெழுமாகாதே
பல்லியல்பாயபரப்பறவந்தபராபரமாகாதே
பண்டறியாதபரானுபவங்கள்பரந்தெழுமாகாதே
வில்லியனன்னுதலார்மயலின்றுவிளைந்திடுமாகாதே
விண்ணவருமறியாதவிழுப்பொருளிப்பொருளாகாதே
யெல்லையிலாதனவெண்குணமானவையெய்திடுமாகாதே
யிந்துசிகாமணியெங்களையாளவெழுந்தருளப்பெறிலே. (௭)

சங்குதிரண்டுமுரன்றெழுமோசைதழைப்பனவாகாதே
சாதிவிடாதகுணங்கணமோடுசெலித்திடுமாகாதே
யங்கிதுநன்றிதுநன்றெனுமாயையடங்கிடுமாகாதே
யாசையெலாமடியாரடியோமெனுமத்தனையாகாதே
செங்கயலொண்கண்மடந்தையர்சிந்தைதிளைப்பனவாகாதே
சீரடியார்கள்சிவானுபவங்கடெரிந்திடுமாகாதே
யெங்குநிறைந்தமுதூறுபரஞ்சுடரெய்துவதாகாதே
யீறறியாமறையோனெனையாளவெழுந்தருளப்பெறிலே. (௮)

திருச்சிற்றம்பலம்.

ஆனந்தமாலை.

சிவாநுபவவிருப்பம்.

தில்லையிலருளிச்செய்யப்பட்டது.

ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

மின்னேரனையபூங்கழல்களடைந்தார்கடந்தார்வியனுலகம்
பொன்னேரனையமலர்கொண்டுபோற்றாநின்றாரமரரெல்லாங்
கன்னேரனையமனக்கடையாய்க்கழிப்புண்டவலக்கடல்வீழ்ந்த
வென்னேரனையேனினியுன்னைக்கூடும்வண்ணமியம்பாயே. (க)

என்னாலறியாப்பதந்தந்தாயானதறியாதேகெட்டே
னுன்னாலொன்றுங்குறைவில்லையுடையாயடிமைக்காரென்பேன்
பன்னாளுன்னைப்பணிந்தேத்தும்பழையவடியரொடுங்கூடா
தென்னாயகமேபிற்பட்டிங்கிருந்தேனோய்க்குவிருந்தாயே. (உ)

சீலமின்றிநோன்பின்றிச்செறிவேயின்றியறிவின்றித்
தோலின்பாவைக்கூத்தாட்டாய்ச்சுழன்றுவிழுந்துகிடப்பேனை
மாலுங்காட்டிவழிகாட்டிவாராவுலகநெறியேறக்
கோலங்காட்டியாண்டானைக்கொடியேனென்றோகூடுவதே. (ங)

கெடுவேன்கெடுமாகெடுகின்றேன்கேடிலாதாய்பழிகொண்டாய்
படுவேன்படுவதெல்லாநான்பட்டாற்பின்னைப்பயனென்னே
கொடுமாநரகத்தழுந்தாமேகாத்தாட்கொள்ளுங்குருமணியே
நடுவாய்நில்லாதொழிந்தக்காலன்றோவெங்கணாயகமே. (ச)

தாயாய்முலையைத்தருவானேதாராதொழிந்தாற்சவலையாய்
நாயேன்கழிந்துபோவேனோநம்பியினித்தானல்குதியே
தாயேயென்றுன்றாளடைந்தேன்றயாநீயென்பாலில்லையே
நாயேனடிமையுடனாகவாண்டாய்நான்றான்வேண்டாவோ. (ரு)

கோவேயருளவேண்டாவோகொடியேன்கெடவேயமையுமே
யாவாவென்னாவிடிலென்னையஞ்சேலென்பாராரோதான்
சாவாரெல்லாமென்னளவோதக்கவாறன்றென்னாரோ
தேவேதில்லைநடமாடீதிகைத்தேனினித்தான்றேற்றாயே. (சு)

நரியைக்குதிரைப்பரியாக்கிஞாலமெல்லாமிகழ்வித்துப்
பெரியதென்னன்மதுரையெல்லாம்பிச்சதேற்றும்பெருந்துறையா
யரியபொருளேயவிநாசியப்பாபாண்டிவெள்ளமே
தெரியவரியபரஞ்சோதிசெய்வதொன்றுமறியேனே. (எ)

திருச்சிற்றம்பலம்.

அச்சோப்பதிகம்.

அனுபவவழியறியாமை.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

கலிவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

முத்திநெறியறியாதமூர்க்கரொடுமுயல்வேனைப்
பத்திநெறியறிவித்துப்பழவினைகள்பாறும்வண்ணஞ்
சித்தமலமறுவித்துச்சிவமாக்கியெனையாண்ட
வத்தனெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே. (க)

நெறியல்லாநெறிதன்னைநெறியாகநினைவேனைச்
சிறுநெறிகள்சேராமேதிருவருளேசேரும்வண்ணங்
குறியொன்றுமில்லாதகூத்தன்றன்கூத்தையெனக்
கறியும்வண்ணமருளியவாறார்பெறுவாரச்சோவே. (உ)

பொய்யெல்லாமெய்யென்றுபுணர்முலையார்போகத்தே
மையலுறக்கடவேனைமாளாமேகாத்தருளித்
தையலிடங்கொண்டபிரான்றன்கழலேசேரும்வண்ண
மையனெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே. (௩)

மண்ணதனிற்பிறந்தெய்த்துமாண்டுவிழக்கடவேனை
யெண்ணமிலாவன்பருளியெனையாண்டிட்டென்னையுந்தன்
சுண்ணவெண்ணீறணிவித்துத்தூய்நெறியேசேரும்வண்ண
மண்ணலெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே. (௪)

பஞ்சாயவடிமடவார்கடைக்கண்ணால்விடர்ப்பட்டு
நெஞ்சாயதுயர்கூரநிற்பேனுன்னருள்பெற்றே
னுய்ஞ்சேனுனுடையானேயடியேனைவருகவென்
றஞ்சேலென்றருளியவாறார்பெறுவாரச்சோவே. (௫)

வெந்துவிழுமுடற்பிறவிமெய்யென்றுவினைபெருக்கிக்
கொந்துகுழற்கோல்வளையார்குவிமுலைமேல்வீழ்வேனைப்
பந்தமறுத்தெனையாண்டுபரிசறவென்றுரிசுமறுத்
தந்தமெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே. (சா)

தையலார்மையலிலேதாழ்ந்துவிழக்கடவேனைப்
பையவேகொடுபோந்துபாசமெனுந்தாழுருவி
யுய்யுநெறிகாட்டுவித்திட்டோங்காரத்துட்பொருளை
ஐயனெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே. (எ)

சாதல்பிறப்பென்னுந்தடஞ்சுழியிற்றடுமாறிக்
காதலின்மிக்கணியிழையார்கலவியிலேவிழுவேனை
மாதொருகூறுடையபிரான்றன்கழலேசேரும்வண்ண
மாதியெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே. (அ)

செம்மைநலமறியாதசிதடரொடுந்திரிவேனை
மும்மைமலமறுவித்துமுதலாயமுதல்வன்று
னம்மையுமோர்பொருளாக்கிநாய்சிவிகையேற்றுவித்த
வம்மையெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே. (கூ)

திருச்சிற்றம்பலம்.

திருவாசகம் முற்றுப்பெற்றது.

திருவாசகப்

பாட்டுமுதற்குறிப்பகராதி.

முற்றிற்று.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

திருக்கோவையார்

என்கின்ற

திருச்சிற்றம்பலக்கோவையார்.

விநாயகவணக்கம்.

எண்ணிறைந்த தில்லை யெழுகோ புரந்திகழக்
கண்ணிறைந்து நின்றருளுங் கற்பகமே—நண்ணியசீர்த்
தேனூறு செஞ்சொற் றிருக்கோவை யென்கின்ற
நானூறு மென்மனத்தே நல்கு.

நூற்சிறப்பு.

ஆரணங் காணென்ப ரந்தணர் யோகிய ராகமத்தின்
காரணங் காணென்பர் காமுகர் காமநன் னூலதென்ப
ரேரணங் காணென்ப ரெண்ண ரெழுத்தென் பரின்புலவோர்
சீரணங் காயசிற் றம்பலக் கோவையைச் செப்பிடினே.

இவ்விரண்டு செய்யுளும் பிற்காலத்தான்றோராற் செய்யப்பட்டன.

௧. இயற்கைப்புணர்ச்சி.

காட்சி.

மதிவாணுதல் வளர்வஞ்சியைக்
கதிர்வேலவன் கண்ணுற்றது.

திருவளர்தாமரைசீர்வளர்காவிகளீசர்தில்லைக்
குருவளர்பூங்குமிழ்கோங்குபைங்காந்தள்கொண்டோங்குதெய்வ
மருவளர்மாலையொர்வல்லியினொல்கியனநடைவாய்ந்
துருவளர்காமன்றன்வென்றிக்கொடிபோன்றொளிர்கின்றதே. (௧)

ஐயம்.

தெரியவரியதோர் தெய்வமென்ன
அருவரைநாடனையுற்றது.

போதோவிசும்போபுனலோபணிகளதுபதியோ
யாதோவறிகுவதேதுமரிதியமன்விடுத்த
தூதோவனங்கன்றுணையோவிணையிலிதொல்லைத்தில்லை
மாதோமடமயிலோவெனநின்றவர்வாழ்பதியே. (௨)

தெளிதல்.

அணங்கல்லளென்றயில்வேலவன்
குணங்கணோக்கிக் குறித்துரைத்தது.

பாயும்விடையரன்றில்லையன்னாள்படைக்கண்ணிமைக்குந்
தோயுநிலத்தடியுமலர்வாடுந்துயரமெய்தி
யாயுமனனேயணங்கல்லளம்மாமுலைசுமந்து
தேயுமருங்குற்பெரும்பணைத்தோளிச்சிறுநுதலே. (௩)

நயப்பு.

வண்டமர் புரிகுழ லொண்டொடி மடந்தையை
நயந்த வண்ணல் வியந்துள் ளியது.

அகல்கின்றவல்குற்றடமதுகொங்கையவையவநீ
புகல்கின்றதென்னைநெஞ்சுண்டேயிடையடையார்புரங்க
ளிகல்குன்றவில்லிற்செற்றோன்றில்லையீசனெம்மானெதிர்ந்த
பகல்குன்றப்பல்லுகுத்தோன்பழனம்மன்னபல்வளைக்கே. (௪)

உட்கோள்.

இறைதிருக்கரத்து மறிமானோக்கி
யுள்ளக்கருத்து வள்ளலறிந்தது.

அணியுமமிழ்தமென்னாவியுமாயவன்றில்லைச்சிந்தா
மணியும்பராரறியாமறையோனடிவாழ்த்தலரிற்
பிணியுமதற்குமருந்தும்பிறழப்பிறழுமின்னும்
பணியும்புரைமருங்குற்பெருந்தோளிபடைக்கண்களே. (௫)

தெய்வத்தைமகிழ்தல்.

அன்னமென்னடை யரிவையைத்தந்த
மன்னிருந்தெய்வத்தை மகிழ்ந்துரைத்தது.

வளைபயில்கீழ்கடனின்றிடமேல்கடல்வானுகத்தின்
றுளைவழிநேர்கழிகோத்தெனத்தில்லைத்தொல்லோன்கயிலைக்
கிளைவயினீக்கியிக்கெண்டையங்கண்ணியைக்கொண்டுதந்த
விளைவையல்லால்வியவேனயவேன்றெய்வமிக்கனவே. (௬)

புணர்ச்சிதுணிதல்.

கொவ்வைச்செவ்வாய்க் கொடியிடைப்பேதையைத்
தெய்வப்புணர்ச்சி செம்மலுணர்ந்தது.

ஏழுடையான்பொழிலெட்டுடையான்புயமென்னைமுன்னா
ளூழுடையான்புலியூரன்னபொன்னிவ்வுயர்பொழில்வாய்ச்
சூழுடையாயத்தைநீக்கும்விதிதுணையாமனனே
யாழுடையார்மணங்காணணங்காய்வந்தகப்பட்டதே. (௭)

கலவியுரைத்தல்.

கொலைவேலவன் கொடியிடையொடு
கலவியின்பங் கட்டுரைத்தது.

சொற்பாலமுதிவள்யான்சுவையென்னத்துணிந்திங்ஙனே
நற்பால்வினைத்தெய்வந்தந்தின்றுநானிவளாம்பகுதிப்
பொற்பாரறிவார்புலியூர்ப்புனிதன்பொதியில்வெற்பிற்
கற்பாவியவரைவாய்க்கடிதோட்டகளவகத்தே. (௮)

இருவயினொத்தல்.

ஆராவின்பத் தன்புமீதூர
வாரார்முலையை மகிழ்ந்துரைத்தது.

உணர்ந்தார்க்குணர்வரியோன்றில்லைச்சிற்றம்பலத்தொருத்தன்[ள்
குணந்தான்வெளிப்பட்டகொவ்வைச்செவ்வாயிக்கொடியிடைதோ
புணர்ந்தாற்புணருந்தொறும்பெரும்போகம்பின்னும்புதிதாய்
மணந்தாழ்புரிகுழலாளல்குல்போலவளர்கின்றதே. (௯)

கிளவிவேட்டல்.

அன்னமன்னவ ளவயவங்கண்டு
மென்மொழிகேட்க விருப்புற்றது.

அளவியையார்க்குமறிவரியோன்றில்லையம்பலம்போல்
வளவியவான்கொங்கைவாட்டடங்கண்ணுதன்மாமதியின்
பிளவியன்மின்னிடைபேரமைதோளிதுபெற்றியென்றாற்
கிளவியையென்னோவினிக்கிள்ளையார்வாயிற்கேட்கின்றதே. (௧௦)

நலம்புனைந்துரைத்தல்.

பொங்கிழையைப் புனைநலம்புகழ்ந்
தங்கதிர்வேலோ னயர்வுநீங்கியது.

கூம்பலங்கைத்தலத்தன்பரென்பூடுருகக்குனிக்கும்
பாம்பலங்காரப்பரன்றில்லையம்பலம்பாடலரிற்
றேம்பலஞ்சிற்றிடையீங்கிவடங்கனிவாய்கமழு
மாம்பலம்போதுளவோவளிகாணும்மகன்பணையே. (௧௧)

பிரிவுணர்த்தல்.

பணிவளரல்குலைப் பயிர்ப்புறுத்திப்
பிணிமலர்த்தாரோன் பிரிவுணர்த்தியது.

சிந்தாமணிதெண்கடலமிர்தந்தில்லையானருளால்
வந்தாலிகழப்படுமேமடமான்விழிமயிலே
யந்தாமரையன்னமேநின்னையானகன்றாற்றுவனோ
சிந்தாகுலமுற்றென்னோவென்னைவாட்டந்திருத்துவதே. (௧௨)

பருவரலறிதல்.

பிரிவுணர்ந்த பெண்கொடிதன்
பருவரலின் பரிசுநினைந்தது.

கோங்கிற்பொலியரும்பேய்கொங்கைபங்கன்குறுகலரூர்
நீங்கிற்புகச்செற்றகொற்றவன்சிற்றம்பலமனையா
ணீங்கிற்புணர்வரிதென்றோநெடிதிங்ஙனேயிருந்தா
லாங்கிற்பழியாமெனவோவறியேனயர்கின்றதே. (௧௩)

அருட்குணமுரைத்தல்.

கூட்டியதெய்வத் தின்னருட்குணம்
வாட்டமின்மை வள்ளலுரைத்தது.

தேவரிற்பெற்றநஞ்செல்வக்கடிவடிவார்திருவே
யாவரிற்பெற்றினியார்சிதைப்பாரிமையாதமுக்கண்

மூவரிற்பெற்றவர்சிற்றம்பலமணிமொய்பொழில்வாய்ப்
பூவரிற்பெற்றகுழலியென்வாடிப்புலம்புவதே. (கச)

இடமணித்துக்கூறிவற்புறுத்தல்.

மடவரலை வற்புறுத்தி
இடமணித்தென் றவனியம்பியது.

வருங்குன்றமொன் றுரித்தோன் றில்லையம்பலவன்மலயத்
திருங்குன்றவாணரிளங்கொடியேயிடரெய்தலெம்மூர்ப்
பருங்குன்றமாளிகைநுண்களபத்தொளிபாயநும்மூர்க்
கருங்குன்றம்வெண்ணிறக்கஞ்சுகமேய்க்குங்கனங்குழையே. (கரு)

ஆடிடந்துய்த்தல்.

வன்புறையின் வற்புறுத்தி
அன்புறுமொழியை யருககன்றது.

தெளிவளர்வான்சிலைசெங்கனிவெண்முத்தந்திங்களின்வாய்க்
களிவளர்வல்லியன்னாய்முன்னரியாடுபின்யானளவா
வொளிவளர்தில்லையொருவன்கயிலையுகுபெருந்தேன்
றுளிவளர்சாரற்கரந்துங்கனேவந்துதோன்றுவனே. (கசு)

அருமையறிதல்.

சுற்றமுமிடனுஞ் சூழவநோக்கி
மற்றவளருமை மன்னவனறிந்தது.

புணர்ப்போனிலனும்விசும்பும்பொருப்புந்தன்பூங்கழலின் [ல்வா
றுணர்ப்போதெனக்கணியாக்குந்தொல்லோன்றில்லைச்சூழ்பொழி
யிணர்ப்போதணிகுழலேழைதன்னீர்மையிந்நீர்மையென்றாற்
புணர்ப்போகனவோபிறிதோவறியேன்புகுந்ததுவே. (கஎ)

பாங்கியையறிதல்.

கடல்புரையாயத்துக் காதற்றோழியை
மடவரல்காட்ட மன்னனறிந்தது.

உயிரொன் றுளமுமொன்றொன்றேசிறப்பிவட்கென்னொடென்னப்
பயில்கின்றசென் றுசெவியுறநீள்படைக்கண்கள்விண்வாய்ச்
செயிரொன் றுமுப்புரஞ்செற்றவன்றில்லைச்சிற்றம்பலத்துப்
பயில்கின்றகூத்தனருளெனலாகும்பணிமொழிக்கே. (கஅ)

இயற்கைப்புணர்ச்சி முற்றிற்று.

உ. பாங்கற்கூட்டம்.

பாங்கனை நினைதல்.

எய்துதற்கருமை யேழையிற்றோன்றப்
பையுளுற்றவன் பாங்கனை நினைந்தது.

பூங்கனையார்புனற்றென்புலியூர்புரிந்தம்பலத்து
ளாங்கெனையாண்டுகொண்டாடும்பிரானடித்தாமரைக்கே
பாங்கனையானன்னபண்பனைக்கண்டிப்பரிசுரைத்தா
லீங்கெனையார்தடுப்பார்மடப்பாவையையெய்துதற்கே. (கக)

பாங்கன்வினாதல்.

கலிகெழுமிடோன் மெலிவதுகண்ட
இன்னுயிர்ப்பாங்கன் மன்னனை வினவியது.

சிறைவான்புனற்றில்லைச்சிற்றம்பலத்துமென்சிந்தையுள்ளு
முறைவானுயர்மதிற்கூடலினாய்ந்தவொண்டீந்தமிழின்
றுறைவாய் நுழைந்தனையோவன்றியேழிசைச்சூழல்புக்கோ
விறைவாதடவரைத்தோட்கென்கொலாம்புகுந்தெய்தியதே. (உ0)

உற்றதுரைத்தல்.

மற்றவன் வினவ
உற்ற துரைத்தது.

கோம்பிக்கொதுங்கிமேயாமஞ்ஞைகுஞ்சரங்கோளிழைக்கும்
பாம்பைப்பிடித்துப்படங்கிழித்தாங்கப்பணைமுலைக்கே
தேம்பற்றுடியிடைமான்மடநோக்கிதில்லைச்சிவன்றா
ளாம்பொற்றடமலர்சூடுமென்னாற்றலகற்றியதே. (உக)

கழறியுரைத்தல்.

வெற்பனைத்தன் மெய்ப்பாங்கன்
கற்பனையிற் கழறியது.

உளமாம்வகைநம்மையுய்யவந்தாண்டுசென்றும்பருய்யக்
களமாம்விடமமிர்தாக்கியதில்லைத்தொல்லோன்கயிலை
வளமாம்பொதும்பரின்வஞ்சித்துநின்றோர்வஞ்சிம்மருங்கு
லிளமான்விழித்ததென்றோவின்றெம்மண்ணலிரங்கியதே. (உஉ)

கழற்றெதிர்மறுத்தல்.

ஆக்குபிரன்ன பாங்கன்கழற
வெற்றுவெப்ப றுரைத்தளர்ந்துரைத்தது.

சேணிற்பொலிசெம்பொன்மாளிகைத்தில்லைச்சிற்றம்பலத்து
மாணிக்கக்கூத்தன்வடவான்கயிலைமயிலைமன்னும்
பூணிற்பொலிகொங்கையாவியையோவியப்பொற்கொழுந்தைக்
காணிற்கழறலைகண்டிலைமென்றோட்கரும்பினையே. (உங)

கவன்றுரைத்தல்.

கொலைக்களிற்றன்னல் குறைநயந்துரைப்பக்
கலக்கஞ்செய்பாங்கன் கவன்றுரைத்தது.

விலங்கலைக்கால்விண்டுமேன்மேலிடவின்றுமண்ணுமுந்நீர்க்
கலங்கலைச்சென்றவன்றுங்கலங்காய்கமழ்கொன்றைதுன்று
மலங்கலைச்சூழ்ந்தசிற்றம்பலத்தானருளில்லவர்போற்
றுலங்கலைச்சென்றிதென்னோவள்ளலுள்ளந்துயர்கின்றதே.

வலியழிவுரைத்தல்.

நிறைபொறைதேற்ற நீதியொடுசொல்பு
மதியுறுநோக்கிற்கு வாடினேனென்றது.

தலைப்படுசால்பினுக்குந்தளரேன்சித்தம்பித்தனென்று
மலைத்தறிவாரில்லையாரையுந்தேற்றுவனைத்துணையுங்
கலைச்சிறுதிங்கண்மிலைத்தசிற்றம்பலவன்கயிலை
மலைச்சிறுமான்விழியாலழிவுற்றுமயங்கினனே. (உ௫)

விதியொடுவெறுத்தல்.

கல்விமிகுபாங்கன் கழறவெள்கிச்
செல்வமிகுசிலம்பன் றெரிந்துசெப்பியது.

நல்வினையுந்நயந்தந்தின்றுவந்துநடுங்குமின்மேற்
கொல்வினைவல்லனகோங்கரும்பாமென்றுபாங்கன்சொல்ல
வில்வினைமேருவில்வைத்தவன்றில்லைதொழாரின்வெள்கித்
தொல்வினையாற்றுயரும்மெனதாருயிர்துப்புறவே. (உ௬)

பாங்கனேந்துரைத்தல்.

இன்றுயிர்ப்பாங்க னேழையைச்சுட்டி
நின்னதுதன்மை நினைந்திலையென்றது.

ஆலத்தினாலமிர்தாக்கியகோன்றில்லையம்பலம்போற்
கோலத்தினாள்பொருட்டாகவமிர்தங்குணங்கெடினுங்
காலத்தினான்மழைமாறினுமாறுக்கவிகைநின்பொற்
சீலத்தைநீயுநினையாதொழிவதென்றீவினையே. (உ௭)

இயலிடங்கேட்டல்.

கழுமலெய்திய காதற்றோழன்
செழுமலைநாடனைத் தெரிந்துவினவியது.

நின்னுடைநீர்மையுநீயுமிவ்வாறுநினைத்தெருட்டு
மென்னுடைநீர்மையிதென்னென்பதேதில்லையோர்கொண்முக்கண்
மன்னுடைமால்வரையோமலரோவிசும்போசிலம்பா
வென்னிடம்யாதியனின்னையின்னேசெய்தவீர்ங்கொடிக்கே. (உ௮)

இயலிடங்கூறல்.

அழுங்கலெய்திய வாருயிர்ப்பாங்கற்குச்
செழுங்கதிர்வேலோன் றெரிந்துசெப்பியது.

விழியாற்பிணையாம்விளங்கியலான்மயிலாமிழற்று
மொழியாற்கிளியாமுதுவானவர்தமுடித்தொகைகள்
கழியாக்கழற்றில்லைக்கூத்தன்கயிலைமுத்தம்மலைத்தேன்
கொழியாத்திகழும்பொழிற்கெழிலாமெங்குலதெய்வமே. (உசு)

வற்புறுத்தல்.

பெயர்ந்துரைத்த பெருவரைநாடனை
வயங்கெழுபுகழோன் வற்புறுத்தியது.

குயிலைச்சிலம்படிக்கொம்பினைத்தில்லையெங்கூத்தப்பிரான்
கயிலைச்சிலம்பிற்பைம்பூம்புனங்காக்குங்கருங்கட்செவ்வாய்
மயிலைச்சிலம்பகண்டியான்போய்வருவன்வண்பூங்கொடிகள்
பயிலச்சிலம்பெதிர்கூய்ப்பண்ணைநண்ணும்பளிக்கறையே. (கூ0)

குறிவழிச்சேறல்.

அறைகழலண்ண லருளினவழியே
நிறையுடைப்பாங்க னினிவொடுசென்றது.

கொடுங்கால்குலவரையேழேழ்பொழிலெழில்குன்றுமன்று
நடுங்காதவனைநடுங்கநுடங்குநுடங்கிடையாய்
விடங்காலயிற்கண்ணிமேவுங்கொலாந்தில்லையீசன்வெற்பிற்
றடங்கார்தருபெருவான்பொழினீழலந்தண்புனத்தே. (கூக)

குறிவழிக்காண்டல்.

குளிர்வரைநாடன் குறிவழிச்சென்று
தளிர்புரைமெல்லடித் தையலைக்கண்டது.

வடிக்கணிவைவஞ்சியஞ்சுமிடையிதுவாய்ப்பவளந்
துடிக்கின்றவாவெற்பன்சொற்பரிசேயான்றொடர்ந்துவிடா
வடிச்சந்தமாமலரண்ணல்விண்ணோர்வணங்கம்பலம்போற்
படிச்சந்தமுமிதுவேயிவளேயப்பணிமொழியே. (கூஉ)

தலைவனைவியந்துரைத்தல்.

நயந்தவுருவு நலனுங்கண்டு
வியந்தவனையே மிகுத்துரைத்தது.

குவளைக்களத்தம்பலவன்குரைகழல்போற்கமலத்
தவளைப்பயங்கரமாகநின்றாண்டவவயவத்தி
னிவளைக்கண்டிங்குநின்றங்குவந்தத்துணையும்பகர்ந்த
கவளக்களிற்றண்ணலேதிண்ணியானிக்கடலிடத்தே. (கூகூ)

கண்டமைகூறல்.

பிடிமிசைவைத்துப் பேதையதுநிலைமை
அடுதிறலண்ணற் கறியவுரைத்தது.

பணந்தாழரவரைச்சிற்றம்பலவர்பைம்பொற்கயிலைப்
புணர்ந்தாங்ககன்றபொருகரியுன்னிப்புனத்தயலே
மணந்தாழ்பொழிற்கண்வடிக்கண்பரப்பிமடப்பிடிவாய்
நிணந்தாழ்சுடரிலைவேலகண்டேனென்றுநின்றதுவே. (௩௪)

செவ்விசெப்பல்.

அற்புதன்கைலை மற்பொலிசிலம்பற்
கவ்வுருக்கண்டவள் செவ்விசெப்பியது.

கயலுளவேகமலத்தலர்மீதுகனிபவளத்
தயலுளவேமுத்தமொத்தநிரையரனம்பலத்தி
னியலுளவேயிணைச்செப்புவெற்பாவினதீர்ங்கொடிமேற்
புயலுளவேமலர்சூழ்ந்திருடுங்கிப்புரள்வனவே. (௩௫)

அவ்விடத்தேகல்.

அரிவையதுநிலைமை யறிந்தவனுரைப்ப
எரிகதிர்வேலோ னேகியது.

எயிற்குலமூன்றிருந்தீயெய்தவெய்தவன்றில்லையொத்துக்
குயிற்குலங்கொண்டுதொண்டைக்கனிவாய்க்குளிர்முத்தநிரைத்
தயிற்குலவேல்கமலத்திற்கிடத்தியனநடக்கு
மயிற்குலங்கண்டதுண்டேலதுவென்னுடைமன்னுயிரே. (௩௬)

மின்னிடைமெலிதல்.

மன்னனை நினைந்து
மின்னிடை மெலிந்தது.

ஆவியன்னாய்கவலேலகலேமென்றளித்தொளித்த
வாவியன்னார்மிக்கவாவினராய்க்கெழுமற்கழிவுற்
றாவியன்னார்மன்னியாடிடஞ்சேர்வர்கொலம்பலத்தெம்
மாவியன்னான்பயிலுங்கயிலாயத்தருவரையே. (௩௭)

பொழில்கண்டுமகிழ்தல்.

மணங்கமழ்பொழிலின் வடிவுகண்
டணங்கெனநினைந் தயர்வுநீங்கியது.

காம்பிணையாற்களிமாமயிலாற்கதிர்மாமணியால்
வாம்பிணையால்வல்லியொல்குதலான்மன்னுமம்பலவன்
பாம்பிணையாக்குழைகொண்டோன்கயிலைப்பயில்புனமுந்
தேம்பிணைவார்குழலாளெனத்தோன்றுமென்சிந்தனைக்கே. (௩௮)

உயிரெனவியத்தல்.

வெறியுறுபொழிலின் வியன்பொதும்பரின்
நெறியுறுகுழலி நிலைமைகண்டது.

நேயத்ததாய்நென்னலென்னைப்புணர்ந்துநெஞ்சந்நெகப்போ
யாயத்ததாயமிழ்தாயணங்காயரனம்பலம்போற்
றேயத்ததாயென்றன்சிந்தையதாய்த்தெரியிற்பெரிது
மாயத்ததாகியிதோவந்துநின்றதென்மன்னுயிரே. (௩௯)

தளர்வகன்றுரைத்தல்.

பனிமதிநுதலியைப் பைம்பொழிலிடைத்
தனிநிலைகண்டு தளர்வகன்றுரைத்தது.

தாதிவர்போதுகொய்யார்தையலாரங்கைகூப்பநின்று
சோதிவரிப்பந்தடியார்சுனைப்புனலாடல்செய்யார்
போதிவர்கற்பகநாடுபுல்லென்னத்தம்பொன்னடிப்பா
யாதிவர்மாதவமம்பலத்தான்மலையெய்துதற்கே. (௪௦)

மொழிபெறவருந்தல்.

கூடற் கரிதென
வாடி யுரைத்தது.

காவிநின்றேர்தருகண்டர்வண்டில்லைக்கண்ணார்கமலத்
தேவியென்றேயையஞ்சென்றதன்றேயறியச்சிறிது
மாவியன்றன்னமென்னோக்கிநின்வாய்திறவாவிடினென்
னாவியன்றேயமிழ்தேயணங்கேயின்றழிகின்றதே. (௪௧)

நாணிக்கண்புதைத்தல்.

ஆயிடைத்தனிநின் றுற்றுதழிந்து
வேயுடைத்தோளியோர் மென்கொடிமறைந்தது.

அகலிடந்தாவியவானோனறிந்திறைஞ்சம்பலத்தி
னிகலிடந்தாவிடையீசற்றொழாரினின்னற்கிடமா
யுகலிடந்தான்சென்றெனதுயிர்நையாவகையொதுங்கப்
புகலிடந்தாபொழில்வாயெழில்வாய்தருபூங்கொடியே. (௪௨)

கண்புதைக்கவருந்தல்.

வேற்றருங்கண்ணிணை மிளிர்வனவன்றுநின்
கூற்றருமேனியே கூற்றெனக்கென்றது.

தாழச்செய்தார்முடிதன்னடிக்கீழ்வைத்தவரைவிண்ணோர்
சூழச்செய்தானம்பலங்கைதொழாரினுள்ளந்துளங்கப்
போழச்செய்யாமல்வைவேற்கண்புதைத்துப்பொன்னேயென்னைநீ
வாழச்செய்தாய்சுற்றமுற்றும்புதைநின்னைவாணுதலே. (௪௩)

நாள்விடவருந்தல்.

ஓங்கனங்கன் டாற்புனாடு
நீங்கினாரெனுடு நேரிழைநின்றது.

குருநாண்மலர்ப்பொழில்சூழ்தில்லைக்கூத்தனையேத்தலர்போல்
வருநாள்பிறவற்கவாழியரோமற்றென்கண்மணிபோன்
றொருநாள்பிரியாதுயிரிற்பழகியுடன்வளர்ந்த
வருநாணளியவழல்சேர்மெழுகொத்தழிகின்றதே. (சச)

மருங்கணைதல்.

ஒளிநிகழ்வார்குழ லளிகுலம்விலக்கிக்
கருங்களிற்றண்ணன் மருங்கணைந்தது.

கோலத்தனிக்கொம்பரும்பர்புக்கலைதேகுறைப்பவர்தஞ்
சீலத்தனகொங்கைதேற்றகிலேஞ்சிவன்றில்லையன்னு
ணூலொத்தநேரிடைநொய்ம்மையெண்ணாதுநுண்டேனசையாற்
சாலத்தகாதுகண்டீர்வண்டுகாள்கொண்டைசார்வதுவே. (சரு)

இன்றியமையாமைகூறல்.

வென்றிவேலவன் மெல்லியறனக்
கின்றியமையாமை யெடுத்துரைத்தது.

நீங்கரும்பொற்கழற்சிற்றம்பலவர்நெடுவிசும்பும்
வாங்கிருந்தெண்கடல்வையமுமெய்தினும்யான்மறவேன்
றீங்கரும்பும்மமிழ்துஞ்செழுந்தேனும்பொதிந்துசெப்புங்
கோங்கரும்புந்தொலைத்தென்னையுமாட்கொண்டகொங்கைகளே.

ஆயத்துய்த்தல்.

தேங்கமழ் சிலம்பன்
பாங்கிற் கூட்டியது.

சூளாமணியும்பர்க்காயவன்சூழ்பொழிற்றில்லையன்னைக்
காளாயொழிந்ததென்னுருயிராரமிழ்தேயணங்கே
தோளாமணியேபிணையேபலசொல்லியென்னைதுன்னு
நாளார்மலர்ப்பொழில்வாயெழிலாயநணுககவே. (சஎ)

நின்றுவருந்தல்.

பாங்கிற்கூட்டிப் பதிவயிற்பெயர்வோன்
நீங்கற்கருமை நின்றுநினைந்தது.

பொய்யுடையார்க்கரன்போலகலும்மகன்றற்புணரின்
மெய்யுடையார்க்கவனம்பலம்போலமிகநணுகு
மையுடைவாட்கண்மணியுடைப்பூண்முலைவாணுதல்வான்
பையுடைவாளரவத்தல்குல்காக்கும்பைம்பூம்புனமே. (சஅ)

பாங்கற்கூட்ட முற்றிற்று.

ங. இடந்தலைப்பாடு.

பொழிலிடைச்சேறல்.

ஐயரிக்கண்ணியை யாயிடத்தேசென்
றெய்துவனெனவினைத் தேந்தல்சென்றது.

என்னறிவால்வந்ததன்றிதுமுன்னுமின்னும்மயன்றன்
மன்னெறிதந்ததிருந்தன்றுதெய்வம்வருந்தனெஞ்சே
மின்னெறிசெஞ்சடைக்கூத்தப்பிரான்வியன்றில்லைமுந்நீர்
பொன்னெறிவார்துறைவாய்ச்சென்றுமின்றோய்பொழிலிடத்தே.

இடந்தலைப்பாடு முற்றிற்று.

ச. மதியுடம்படுத்தல்.

பாங்கியிடைச்சேறல்.

கரந்துறைகிளவியிற் காதற்றோழியை
இரந்துகுறையுறுவலென் றேந்தல்சென்றது.

எளிதன்றினிக்கனிவாய்வல்லிபுல்லலெழின்மதிக்கீற்
றொளிசென்றசெஞ்சடைக்கூத்தப்பிரானையுன்னாரினென்கட்
டெளிசென்றவேற்கண்வருவித்தசெல்லலெல்லாந்தெளிவித்
தளிசென்றபூங்குழற்றோழிக்குவாழியறிவிப்பனே. (௰)

குறையுறத்துணிதல்.

ஏரிடத்தவளை யொருங்குகண்டுதன்
பேரிடர்பெருந்தகை பேசத்துணிந்தது.

குவளைக்கருங்கட்கொடியேரிடையிக்கொடிகடைக்க
ணுவளைத்தனதுயிரென்றதுதன்னோடுவமையில்லா
தவளைத்தன்பால்வைத்தசிற்றம்பலத்தானருளிலர்போற்
றுவளத்தலைவந்தவின்னலின்னேயினிச்சொல்லுவனே. (௰க)

வேழம்வினாதல்.

ஏழையிருவரு மிருந்தசெவ்வியுள்
வேழம்வினாஅய் வெற்பன்சென்றது.

இருங்களியாயின்றியானிறுமாப்பவின்பம்பணிவோர்
மருங்களியாவனலாடவல்லோன்றில்லையான்மலையீங்
கொருங்களியார்ப்பவுமிழ்மும்மதத்திருகோட்டொருநீள்
கருங்களியார்மதயானையுண்டோவரக்கண்டதுவே. (௰உ)

கலைமான்வினாதல்.

சிலைமா னண்ணல்
கலைமான் வினாயது.

கருங்கண்ணனையறியாமைநின்றோன்றில்லைக்கார்ப்பொழில்வாய்
வருங்கண்ணனையவண்டாடும்வளரிளவல்லியன்னீ
ரிருங்கண்ணனையகணைபொருபுண்புணரிப்புனத்தின்
மருங்கண்ணனையதுண்டோவந்ததிங்கொருவான்கலையே. (௨௩)

வழிவினாதல்.

கலைமான்வினாய கருத்தவேறறிய
மலைமானண்ணல் வழிவினாயது.

சிலம்பணிகொண்டசெஞ்சீறடிபங்கன்றன்சீரடியார்
குலம்பணிகொள்ளவெனைக்கொடுத்தோன்கொண்டுதானணியுங்
கலம்பணிகொண்டிடமம்பலங்கொண்டவன்கார்க்கயிலைச்
சிலம்பணிகொண்டநுஞ்சீறூர்க்குரைமின்கள்சென்னெறியே. ()

பதிவினாதல்.

பதியொடுபெயர்வினாய் மொழிபலமொழிந்து
மதியுடம்படுக்க மன்னன்வலிந்தது.

ஒருங்கடமூவெயிலொற்றைக்கணைகொள்சிற்றம்பலவன்
கருங்கடமூன்றுகுநால்வாய்க்கரியுரித்தோன்கயிலை
யிருங்கடமூடும்பொழிலெழிற்கொம்பரன்னீர்களின்னே
வருங்கடம்மூர்பகர்ந்தாற்பழியோவிங்குவாழ்பவர்க்கே. (௨௫)

பெயர்வினாதல்.

பேரமைத் தோளியர்
பேர்வி னாயது.

தாரென்னவோங்குஞ்சடைமுடிமேற்றனித்திங்கள்வைத்த
காரென்னவாருங்கறைமிடற்றம்பலவன்கயிலை
யூரென்னவென்னவும்வாய்திறவீரொழிவீர்பழியேற்
பேரென்னவோவுரையீர்விரையீர்ங்குழற்பேதையரே. (௨௬)

மொழிபெறாதுகூறல்.

தேமொழியவர் வாய்மொழிபெறாது
மட்டவிழ்தாரோன் கட்டுரைத்தது.

இரதமுடையநடமாட்டுடையவரெம்முடையர்
வரதமுடையவணிதில்லையன்னவரிப்புனத்தார்
விரதமுடையர்விருந்தொடுபேச்சின்மைமீட்டதன்றேற்
சரதமுடையர்மணிவாய்திறக்கிற்சலக்கென்பவே. (௨௭)

கருத்தறிவித்தல்.

உரைத்த துரையோது
கருத்தறி வித்தது.

வின்னிறவாணுதல்வேனிறக்கண்மெல்லியலைமல்லற்
றன்னிறமொன்றிலிருத்திநின்றோன்றனதம்பலம்போன்
மின்னிறநுண்ணிடைப்பேரெழில்வெண்ணகைப்பைந்தொடியீர்
பொன்னிறவல்குலுக்காமோமணிநிறப்பூந்தழையே. (௫அ)

இடைவினாதல்.

வழிபடு கிழவினாய்
மொழிபல மொழிந்தது.

கலைக்கீழகலல்குற்பாரமதாரங்கண்ணார்ந்திலங்கு
முலைக்கீழ்ச்சிறிதின்றிநிற்றன்முற்றாதன்றிலங்கையர்கோன்
மலைக்கீழ்விழச்செற்றசிற்றம்பலவர்வண்பூங்கயிலைச்
சிலைக்கீழ்க்கணையன்னகண்ணீரெதுநுங்கள்சிற்றிடையே. (௫௯)

மதியுடம்படுத்தல் முற்றிற்று.

---

௫. இருவருமுள்வழியவன்வரவுணர்தல்.

ஐயுறுதல்.

அடற்கதிர்வேலோன் றொடர்ச்சிநோக்கித்
தையற்பாங்கி யையமுற்றது.

பல்விலனாகப்பகலைவென்றோன்றில்லைபாடலர்போ
லெல்விலனாகத்தொடேனம்வினாவிவன்யாவன்கொலாம்
வில்விலனாகத்தழைகையில்வேட்டைகொண்டாட்டமெய்யோர்
சொல்விலனாகற்றவாகடவானிச்சுனைப்புனமே. (௬0)

அறிவுநாடல்.

வெற்பன்வினைய சொற்பதநோக்கி
நெறிகுழற்பாங்கி யறிவுநாடியது.

ஆழமன்றோவுடைத்திவ்வையர்வார்த்தையனங்கனைந்து
வீழமுன்றோக்கியவம்பலத்தான்வெற்பினிப்புனத்தே
வேழமுன்னாய்க்கலையாய்ப்பிறவாய்ப்பின்னுமென்றழையாய்
மாழைமென்னோக்கியிடையாய்க்கழிந்ததுவந்துவந்தே. (௬௧)

இருவருமுள்வழியவன்வரவுணர்தல் முற்றிற்று.

---

௬. மூன்றுறவுணர்தல்.

வாட்டம்வினாதல்.

மின்னிடைமடந்தை தன்னியனோக்கி
வீங்குமென்முலைப் பாங்கிபகர்ந்தது.

நிருத்தம்பயின்றவன்சிற்றம்பலத்துநெற்றித்தனிக்க
ணொருத்தன்பயிலுங்கயிலைமலையினுயர்குடுமித்
திருத்தம்பயிலுஞ்சுனைகுடைந்தாடிச்சிலம்பெதிர்கூய்
வருத்தம்பயின்றுகொல்லோவல்லிமெல்லியல்வாடியதே. (௬௨)

மூன்றுறவுணர்தல் முற்றிற்று.

---

௭. குறையுறவுணர்தல்.

குறையுற்றுநிற்றல்.

கறையுற்ற வேலவன்
குறை யுற்றது.

மடக்கோகடலின்விடுதிமிலன்றிமறிதிரைமீன்
படுக்கோபணிலம்பலகுளிக்கோபரன்றில்லைமுன்றிற்
கொடுக்கோவளைமற்றுநும்மையர்க்காயகுற்றேவல்செய்கோ
தொடுக்கோபணியீரணியீர்மலர்நுஞ்சுரிகுழற்கே. (௬௩)

அவன்குறிப்பறிதல்.

பொற்றொடித்தோளிதன் சிற்றிடைப்பாங்கி
வெறிப்பூஞ்சிலம்பன் குறிப்பறிந்தது.

அளியமன்னும்மொன்றுடைத்தண்ணலெண்ணரன்றில்லையன்னாள்
கிளியைமன்னுங்கடியச்செல்லவிற்பிற்கிளரளகத்
தளியமர்ந்தேறின்வறிதேயிருப்பிற்பளிங்கடுத்த [தே.
வொளியமர்ந்தாங்கொன்றுபோன்றொன்றுதோன்றுமொளிமுகத்

அவள்குறிப்பறிதல்.

ஆங்கவள் குறிப்புப்
பாங்கி பகர்ந்தது.

பிழைகொண்டொருவிக்கெடாதன்புசெய்யிற்பிறவியென்னு
முழைகொண்டொருவன்செல்லாமைநின்றம்பலத்தாடுமுன்னோ[ந்
னுழைகொண்டொருங்கிருநோக்கம்பயின்றவெம்மொண்ணுதன் மா
தழைகொண்டொருவனென்னுமுன்னமுள்ளந்தழைத்திடுமே. ()

இருவர்நினைவுமொருவழியுணர்தல்.

அற்புறுநோக் காங்கறிந்
நின்புறுதோழி யெண்ணியது.

மெய்யேயிவற்கில்லைவேட்டையின்மேன்மனமீட்டிவளும்
பொய்யேபுனத்தினைகாப்பதிறைபுலியூரனையாண்
மையேர்குவளைக்கண் வண்டினம்வாழுஞ்செந்தாமரைவா
யெய்யேமெனினுங்குடைந்தின்பத்தேனுண்டெழிறருமே. (கசு)

குறையுறவுணர்தல் முற்றிற்று.

அ. நாண நாட்டம்.

பிறைதொழுகென்றல்.

பிறைதொழுகென்று பேதைமாதரை
நறுநுதற்பாங்கி நாணநாட்டியது.

மைவார்கருங்கண்ணி செங்கரங்கூப்புமறந்துமற்றப்
பொய்வானவரிற்புகாதுதன்பொற்கழற்கேயடியே
னுய்வான்புகவொளிர்தில்லைநின்றோன்சடைமேலதொத்துச்
செவ்வானடைந்தபசுங்கதிர்வெள்ளைச்சிறுபிறைக்கே. (கஎ)

வேறுபடுத்துக்கூறல்.

வெய்யவேற்றோன்றலை வேறுபாடுகண்
டையவேற்றோழி யணக்கென்றது.

அக்கின்றவாமணிசேர்கண்டனம்பலவன்மலயத்
திக்குன்றவாணர்கொழுந்திச்செழுந்தண்புனமுடையா
ளக்குன்றவாறமர்ந்தாடச்சென்றாளங்கமவ்வவையே
யொக்கின்றவாறணங்கேயிணங்காகுமுனக்கவளே. (கஅ)

சுனையாடல்கூறிநகைத்தல்.

மாணநாட்டிய வார்குழற்பேதையை
நாணநாட்டி நகைசெய்தது.

செந்திறமேனிவெண்ணீறணிவோன்றில்லையம்பலம்போ
லந்திறமேனிநின்கொங்கையிலங்கழிகுங்குமமு
மைந்திறவார்குழன்மாலையுந்தாதும்வளாய்மதஞ்சே
ரிந்திறமும்பெறின்யானுங்குடைவனிருஞ்சுனையே. (கக)

புணர்ச்சியுரைத்தல்.

மனக்குறி நோக்கிப்
புணர்ச்சி யுரைத்தது.

பருங்கண்கவர்கொலைவேழப்படையோன்படப்படர்தீத்
தருங்கண்ணுதற்றில்லையம்பலத்தோன்றடமால்வரைவாய்க்
கருங்கண்சிவப்பக்கனிவாய்விளர்ப்பக்கண்ணாரளிபின்
வருங்கண்மலைமலர்சூட்டவற்றேமற்றவ்வான்சுனையே. (எ0)

மதியுடம்படுத்தல்.

அயில்வேற்கண்ணியொ டாடவன்றனக்குபிசொன்றென
மயிலியற்றோழி மதியுடம்பட்டது.

காகத்திருகண்ணிற்கொன்றேமணிகலந்தாங்கிருவ
ராகத்துளோருயிர்கண்டனம்யாமின்றியாவையுமா
மேகத்தொருவனிரும்பொழிலம்பலவன்மலையிற்
றோகைக்குந்தோன்றற்குமொன்றாய்வருமின்பத்துன்பங்களே. ()

நாணநாட்டம் முற்றிற்று.

கூ. நடுங்க நாட்டம்.

நுடங்கிடைப் பாங்கி
நடுங்க நாடியது.

ஆவாவிருவரறியாவடிதில்லையம்பலத்து
மூவாயிரவர்வணங்கநின்றோனையுன்னாரின்முன்னித்
தீவாயுழுவைகிழித்ததந்தோசிறிதேபிழைப்பித்
தாவாமணிவேல்பணிகொண்டவாறின்றோராண்டகையே. (எஉ)

நடுங்கநாட்டம் முற்றிற்று.

க0. மடற்றிறம்.

ஆற்றதுரைத்தல்.

மல்லற்றிரள் வரைத்தோளவன்
சொல்லாற்றது சொல்லியது.

பொருளாவெனைப்புகுந்தாண்டுபுரந்தரன்மாலயன்பா
லிருளாயிருக்குமொளிநின்றசிற்றம்பலமெனலாஞ்
சுருளார்கருங்குழல்வெண்ணகைச்செவ்வாய்த்துடியிடையீ
றருளாதொழியினொழியாதழியுமென்னாருயிரே. (எங)

உலகின்மேல்வைத்துரைத்தல்.

புலவேலண்ணல் புனைமடலேற்
றுலகின்மேல்வைத் துரைத்தது.

காய்சினவேலன்னமின்னியல்கண்ணின்வலைகலந்து
வீசினபோதுள்ளமீனிழந்தார்வியன்றென்புலியூ
ரீசனசாந்துமெருக்குமணிந்தோர்கிழிபிடித்துப்
பாய்சினமாவெனவேறுவர்சீறூர்ப்பனைமடலே. (எச)

தன்றுணிபுரைத்தல்.

மானவேலவன் மடன்மாமிசை
யானுமேறுவ னென்னவுரைத்தது.

விண்ணைமடங்கவிரிநீர்பரந்துவெற்புக்கரப்ப
மண்ணைமடங்கவருமொருகாலத்துமன்னிநிற்கு
மண்ணன்மடங்கலதளம்பலவனருளிலர்போற்
பெண்ணைமடன்மிசையான்வரப்பண்ணிற்றோர்பெண்கொடியே.()

மடலேறும்வகையுரைத்தல்.

அடல்வேலவ னழிவுற்று
மடலேறும் வகையுரைத்தது.

கழிகின்றவென்னையுநின்றநின்கார்மயிறன்னையும்யான்
கிழியொன்றநாடியெழுதிக்கைக்கொண்டென்பிறவிகெட்டின்
றழிகின்றதாக்கியதாளம்பலவன்கயிலையந்தேன்
பொழிகின்றசாரலுஞ்சீறூர்த்தெருவிடைப்போதுவனே. (எசு)

அருளாலரிதெனவிலக்கல்.

அடல்வேலண்ண லருளுடைமையின்
மடலேற்றனக் கரிதென்றது.

நடனாம்வணங்குந்தொல்லோனெல்லைநான்முகன்மாலறியாக்
கடனாமுருவத்தரன்றில்லைமல்லற்கண்ணார்ந்தபெண்ணை
யுடனாம்பெடையொடொண்சேவலுமுட்டையுங்கட்டழித்து
மடனாம்புனைதரின்யார்கண்ணதோமன்னவின்னருளே. (எஎ)

மொழிநடையெழுதலரிதெனவிலக்கல்.

அவயவமரிதி னண்ணறீட்டினும்
இவையிவைதீட்ட லியலாதென்றது.

அடிச்சந்தமால்கண்டிலாதனகாட்டிவந்தாண்டுகொண்டென்
முடிச்சந்தமாமலராக்குமுன்னோன்புலியூர்புரையுங்
கடிச்சந்தயாழ்கற்றமென்மொழிக்கன்னியனநடைக்குப்
படிச்சந்தமாக்கும்படமுளவோநும்பரிசகத்தே. (எஅ)

அவயவமெழுதலரிதெனவிலக்கல்.

அவயவ மானவை
யிவை யிவைவ யென்றது.

யாழுமெழுதியெழின்முத்தெழுதியிருளின்மென்பூச்
சூழுமெழுதியொர்தொண்டையுந்தீட்டியென்றொல்பிறவி
யேழுமெழுதாவகைசிதைத்தோன்புலியூரிளமாம்
போழுமெழுதிற்றொர்கொம்பருண்டேற்கொண்டுபோதுகவே. ()

உடம்படாதுவிலக்கல்.

அடுபடையன்ன வழிதுயரொழிகென
மடலடைந்தோழி மடல்விலக்கியது.

ஊர்வாயொழிவாயுயர்பெண்ணைத்திண்மடலின்குறிப்புச்
சீர்வாய்சிலம்பதிருத்தவிருந்திலமீசர்தில்லைக்
கார்வாய்குழலிக்குன்றுதரவோதிக்கற்பித்துக்கண்டா
லார்வாய்தரினறிவார்பின்னைச்செய்கவறிந்தனவே. (அ0)

உடம்பட்டுவிலக்கல்.

அரவருநுண்ணிடைச் குரவருகூந்தலென்
றுன்னக்கருத்து வின்னாவென்றது.

பைந்நாணரவன்படுகடல்வாய்ப்படுநஞ்சமுதா
மைந்நாண்மணிகண்டன்மன்றும்புலியூர்மணந்தபொன்னிம்
மொய்ந்நாண்முதுதிரைவாயானழுந்துமென்னின்முன்னு
மிந்நாளிதுமதுவார்குழலாட்கென்கணின்னருளே. (அக)

மடற்றிறம் முற்றிற்று.

கக. குறைநயப்புக்கூறல்.

குறிப்பறிதல்.

நறைவளர்கோதையைக் குறைநயப்பித்தற்
குள்ளறிகுற்ற வொள்ளிழையுரைத்தது.

தாதேய்மலர்க்குஞ்சியஞ்சிறைவண்டுதண்டேன்பருகித்
தேதேயெனுந்தில்லையோன்சேயெனச்சினவேலொருவர்
மாதேபுனத்திடைவாளாவருவர்வந்தியாதுஞ்சொல்லார்
யாதேசெயத்தக்கதுமதுவார்குழலேந்திழையே. (அஉ)

பெண்மொழியாற்கூறல்.

ஒளிருநுவேலவன் றளர்வுறுகின்றமை
இன்மொழியவட்கு மென்மொழிமொழிந்தது.

வரிசேர்தடங்கண்ணிமம்மர்கைம்மிக்கென்னமாயங்கொலோ
வெரிசேர்தளிரன்னமேனியனீர்த்தழையன்புலியூர்ப்
புரிசேர்சடையோன்புதல்வன்கொல்பூங்கணைவேள்கொலென்னத்
தெரியேமுரையான்பிரியானொருவனித்தேம்புனமே. (௮௫)

விரவிக்கூறல்.

வன்மொழியின்மன மெலிவதஞ்சி
மென்மொழியிறைவி மிகுத்துரைத்தது.

நீகண்டனையெனின்வாழலைநேரிழையம்பலத்தான்
சேய்கண்டனையன்சென்றாங்கோரலவன்றன்சீர்ப்பெடையின்
வாய்வண்டனையதொர்நாவற்கனிநனிநல்கக்கண்டு
பேய்கண்டனையதொன்றாகிநின்றானப்பெருந்தகையே. (௮௬)

அறியாள்போறல்.

அறியாள் போன்று
குறியாள் கூறியது.

சங்கர்தருமுத்தியாம்பெறவான்கழிதான்கெழுமிப்
பொங்கும்புனற்கங்கைதாங்கிப்பொலிகலிப்பாறலவு
துங்கமலிதலையேந்தலினேந்திழைதொல்லைப்பன்மா
வங்கமலிகலிநீர்தில்லைவானவனேர்வருமே. (௮௮)

வஞ்சித்துரைத்தல்.

நெஞ்சநெகிழ்வகை வஞ்சித்திவையிவை
செஞ்சடையோன்புகழ் வஞ்சிக்குரைத்தது.

புரங்கடந்தானடிகாண்பான்புவிவிண்டுபுக்கறியா
திரங்கிடெந்தாயென்றிரப்பத்தன்னீரடிக்கென்னிரண்டு
கரங்கடந்தானொன்றுகாட்டமற்றாங்கதுங்காட்டிடென்று
வரங்கிடந்தான்றில்லையம்பலமுன்றிலம்மாயவனே. (௮௯)

புலந்துகூறல்.

திருந்தியசொல்லிற் செவ்விபெறாது
வருந்தியசொல்லின் வகுத்துரைத்தது.

உள்ளப்படுவனவுள்ளியுரைத்தக்கவர்க்குரைத்து
மெள்ளப்படிறுதுணிதுணியேலிதுவேண்டுவல்யான்
கள்ளப்படிறர்க்கருளாவரன்றில்லைகாணலர்போற்
கொள்ளப்படாதுமறப்பதறிவிலென்கூற்றுக்களே. (௮௭)

வன்மொழியாற்கூறல்.

கடல்லாரியக் கமழலந்துறைவன்
மடலேறும்மென் வன்மொழிமொழிந்தது.

மேவியந்தோலுடுக்குந்தில்லையான்பொடிமெய்யிற்கையி
லோவியந்தோன்றுங்கிழிநின்னெழிலென்றுரையுளதாற்
றூவியந்தோகையன்னாயென்னபாவஞ்சொல்லாடல்செய்யான்
பாவியந்தோபனைமாமடலேறக்கொல்பாவித்ததே. (அஅ)

மனத்தோடுநேர்தல்.

அடல்வேலவனும்முன்னெனக்
கடலமிழ்தன்னவள் காணலுற்றது.

பொன்னார்சடையோன்புலியூர்புகழாரெனப்புரிநோ
யென்னாலறிவில்லையானென்றுரைக்கிலன்வந்தயலார்
சொன்னாரெனுமித்துரிசுதன்னமைத்துணைமனனே
யென்னாழ்துயர்வல்லையேற்சொல்லுநீர்மையினியவர்க்கே. (அகூ)

குறைநயப்பித்தல் முற்றிற்று.

கஉ. சேட்படை.

தழைகொண்டுசேறல்.

தொய்ம்மலர்க்குழலி குறைநயந்தபின்
கையுறையோடு காளைசென்றது.

தேமென்கிளவிதன்பங்கத்திறையுறைதில்லையன்னீர்
பூமென்றழையுமம்போதுங்கொள்ளீர்தமியேன்புலம்ப
வாமென்றருங்கொடும்பாடுகள்செய்துநுங்கண்மலராங்
காமன்கணைகொண்டலைகொள்ளவோமுற்றக்கற்றதுவே. (கூ0)

சந்தனத்தழைதகாதென்றுமறுத்தல்.

பிறைநுதற்பேதையைக் குறைநயப்பித்தபின்
வாட்படையண்ணலைச் சேட்படுத்தது.

ஆரத்தழையராப்பூண்டம்பலத்தனலாடியன்பர்க்
காரத்தழையன்பருளிநின்றோன்சென்றமாமலயத்
தாரத்தழையண்ணறந்தாவிவையவளல்குற்கண்டா
லாரத்தழைகொடுவந்தாரெனவருமையுறவே. (கூக)

நிலத்தின்மைகூறிமறுத்தல்.

கொங்கலர்தாரோய் கொணர்ந்தகொய்தழை
எங்குலத்தாருக் கேலாதென்றது.

முன்றகர்த்தெல்லாவிமையோரையும்பின்னைத்தக்கன்முத்தீச்
சென்றகத்தில்லாவகைசிதைத்தோன்றிருந்தம்பலவன்
குன்றகத்தில்லாத்தழையண்ணறந்தாற்கொடிச்சியருக்
இன்றகத்தில்லாப்பழிவந்துமூடுமென்றெள்குதுமே. (கஉ)

நினைவறிவுகூறிமறுத்தல்.

மைதழைக்கண்ணி மனமறிந்தல்லது
கொய்தழைதந்தாற் கொள்ளேமென்றது.

யாழார்மொழிமங்கைபங்கத்திறைவனெறிதிரைநீ
ரேழாயெழுபொழிலாயிருந்தோனின்றதில்லையன்ன
சூழார்குழலெழிற்றொண்டைச்செவ்வாய்நவ்விசொல்லறிந்தாற்
றாழாதெதிர்வந்துகோடுஞ்சிலம்பதருந்தழையே. (கங)

படைத்துமொழியான்மறுத்தல்.

அருந்தழைமேன்மேற் பெருந்தகைகொணரப்
படைத்துமொழிகிளவியிற் றடுத்தவண்மொழிந்தது.

எழில்வாயிளவஞ்சியும்விரும்புமற்றிறைகுறையுண்
டழல்வாயவிரொளியம்பலத்தாடுமஞ்சோதியந்தீங்
*குழல்வாய்மொழிமங்கைபங்கன்குற்றாலத்துக்கோலப்பிண்டிப்
பொழில்வாய்தடவரைவாயல்லதில்லையிப்பூந்தழையே. (கச)

நாணுரைத்துமறுத்தல்.

வாணுதற் பேதையை
நாணுத லுரைத்தது.

உறுங்கண்ணிவர்தகணையுரவோன்பொடியாயொடுங்கத்
தெறுங்கண்ணிவர்தசிற்றம்பலவன்மலைச்சிற்றிலின்வாய்
நறுங்கண்ணிசூட்டினுநாணுமென்வாணுதனாகத்தொண்பூங்
குறுங்கண்ணிவேய்ந்திளமந்திகளூறுமிக்குன்றிடத்தே. (கரு)

இசையாமைகூறிமறுத்தல்.

வசைதீர் குலத்திற்
கிசையா தென்றது.

நறமனைவேங்கையின்பூப்பயில்பாறையைநாகநண்ணி
மறமனைவேங்கையெனநனியஞ்சுமஞ்சார்சிலம்பா
குறமனைவேங்கைச்சுணங்கொடணங்கலர்கூட்டுபவோ
திறமனைவேங்கையதளம்பலவனெடுவரையே. (கசு)

---

* குழல்வாய் மொழியம்மை - திருக்குற்றாலத் தெழுந்தருளியிருக்குந் தேவி திருநாமம்.

செவ்வியிலளென்றுமறுத்தல்.

நவ்வி நோக்கி
செவ்வியில வென்றது.

கற்றிலகண்டன்னமென்னடைகண்மலர்நோக்கருளப்
பெற்றிலமென்பிணைபேச்சுப்பெருகிள்ளைபிள்ளையின்றுன்
றற்றிலளுற்றதறிந்திலளாகத்தொளிமிளிரும்
புற்றிலவாளரவன்புலியூரன்னபூங்கொடியே. (கஎ)

காப்புடைத்தென்றுமறுத்தல்.

காப்புடைத் தென்று
சேட் படுத்தது.

முனிதருமன்னையுமென்னையர்சாலவுமூர்க்கரின்னே
தனிதருமிந்நிலத்தன்றையகுன்றமுந்தாழ்சடைமேற்
பனிதருதிங்களணியம்பலவர்பகைசெகுக்குங்
குனிதருதிண்சிலைக்கோடுசென்றான்சுடர்க்கொற்றவனே- (கஅ)

நீயேகூறென்றுமறுத்தல்.

அஞ்சுதம்பெரும பஞ்சின் மெல்லடியைக்
கூறுவநீயே கூறுகென் றது.

அந்தியின்வாயெழிலம்பலத்தெம்பரனம்பொன்வெற்பிற்
பந்தியின்வாய்ப்பலவின்சுளைபைந்தேனொடுங்கடுவன்
மந்தியின்வாய்க்கொடுத்தோம்புஞ்சிலம்பமனங்கனிய
முந்தியின்வாய்மொழிநீயேமொழிசென்றம்மொய்குழற்கே. (கக)

குலமுறைகூறிமறுத்தல்.

தொழுகுலத்தீர் சொற்காகேம்
இழிகுலத்தே மெனவுரைத்தது.

தெங்கம்பழங்கமுகின்குலைசாடிக்கதலிசெற்றுக்
கொங்கம்பழனத்தொளிர்குளிர்நாட்டினைநீயுமைகூர்
பங்கம்பலவன்பரங்குன்றிற்குன்றன்னமாபதைப்பச்
சிங்கந்திரிதருசீறூர்ச்சிறுமியெந்தேமொழியே. (௧00)

நகையாடிமறுத்தல்.

வாட்டமழையெனாது சேட்படுத்தற்கு
மென்னகைத்தோழி யின்னகைசெய்தது.

சிலையொன்றுவாணுதல்பங்கன்சிற்றம்பலவன்கயிலை
மலையொன்றுமாமுகத்தெம்மையரெய்கணைமண்குளிக்குங்
கலையொன்றுவெங்கணையோடுகெடுகிட்டதென்னிற்கெட்டேன்
கொலையொன்றுதிண்ணியவாறையர்கையிற்கொடுஞ்சிலையே. ()

ஓங்கந்தோடுமறுத்தல்.

கையுறையெதிராது காதற்றோழி
மையற்பெரு நயர்த்தியென்றது.

மைத்தழையாநின்றமாமிடற்றம்பலவன்கழற்கே
மெய்த்தழையாநின்றவன்பினர்போலவிதிர்விதிர்த்துக்
கைத்தழையேந்திக்கடமாவினாய்க்கையில்வில்லின்றியே
பித்தழையாநிற்பராலென்னபாவம்பெரியவரே. (௧0௨)

சிறப்பின்மைகூறிமறுத்தல்.

மாந்தளிரு மலர்நிலமும்
எந்தலிம்மலை யில்லையென்றது.

அக்குமரவுமணிமணிக்கூத்தன்சிற்றம்பலமே
யொக்குமிவளொளிருருவஞ்சிமஞ்சார்சிலம்பா
கொக்குஞ்சுனையுங்குளிர்தளிருங்கொழும்போதுகளு
மிக்குன்றிலென்றுமலர்ந்தறியாதவியல்பினவே. (௧0௩)

இளமைகூறிமறுத்தல்.

முல்லெயிற் றரிவை
விளைவில ளென்றது.

உருகுதலைச்சென்றவுள்ளத்துமம்பலத்துமொளியே
பெருகுதலைச்சென்றுநின்றோன்பெருந்துறைப்பிள்ளைகள்ளார்
முருகுதலைச்சென்றகூழைமுடியாமுலைபொடியா
வொருகுதலைச்சின்மழலைக்கென்னோவையவோதுவதே. (௧0௪)

மறைந்தமைகூறிநகைத்துரைத்தல்.

என்னைமறைத்தபி னெண்ணியதறிகென
நன்னுதற்றோழி நகைசெய்தது.

பண்டாலியலுமிலைவளர்பாலகன்பார்கிழித்துத்
தொண்டாலியலுஞ்சுடர்க்கழலோன்றொல்லைத்தில்லையின்வாய்
வண்டாலியலும்வளர்பூந்துறைவமறைக்கினென்னைக்
கண்டாலியலுங்கடனில்லைகொல்லோகருதியதே. (௧0௫)

நகைகண்டுமகிழ்தல்.

இன்னகைத்தோழி மென்னகைகண்டு
வன்னக்கதிர்வே லண்ணலுரைத்தது.

மத்தகஞ்சேர்தனிநோக்கினன்வாக்கிறந்தூறமுதே
யொத்தகஞ்சேர்ந்தென்னையுய்யநின்றோன்றில்லையொத்திலங்கு
முத்தகஞ்சேர்மென்னகைப்பெருந்தோளிமுகமதியின்
வித்தகஞ்சேர்மெல்லெனோக்கமன்றேயென்விழுத்துணையே. ()

அறியாள்போன்றுநினைவுசேட்டல்.

வேந்தன் சொன்ன மாந்தளிர்மேனியை
வெறியார்கோதை யறியேனென்றது.

விண்ணிறந்தார்நிலம்விண்டவரென் றுமிக்காரிருவர்
கண்ணிறந்தார்தில்லையம்பலத்தார்கழுக்குன்றினின்று
தண்ணறுந்தாதிவர்சந்தனச்சோலைப்பந்தாடுகின்றா
ரெண்ணிறந்தாரவர்யார்கண்ணதோமன்னநின்னருளே. (கoஎ)

அவயவங்கூறல்.

அவயவ மவளுக்
கிவையிவை யென்றது.

குவவினகொங்கைகுரும்பைகுழல்கொன்றைகொவ்வைசெவ்வாய்
கவவினவாணகைவெண்முத்தங்கண்மலர்செங்கழுநீர்
தவவினைதீர்ப்பவன்றாழ்பொழிற்சிற்றம்பலமனையாட்
குவவினநாண்மதிபோன்றொளிர்கின்றதொளிமுகமே. (கoஅ)

கண்ணயந்துரைத்தல்.

கண்ணினை பிறழ்வன
வண்ண முரைத்தது.

ஈசற்கியான்வைத்தவன்பினகன்றவன்வாங்கியவென்
பாசத்திற்காரென்றவன்றில்லையின்னொளிபோன்றவன்றோள்
பூசத்திருநீறெனவெளுத்தாங்கவன்பூங்கழல்யாம்
பேசத்திருவார்த்தையிற்பெருநீளம்பெருங்கண்களே. (கoகூ)

தழையெதிர்தல்.

அகன்றவிடத் தாற்றாமைகண்டு
கவன்றதோழி கையுறையெதிர்ந்தது.

தோலாக்கரிவென்றதற்குந்துவள்விற்குமில்லின்றொன்மைக்
கேலாப்பரிசுளவேயன்றியேலேமிருஞ்சிலம்ப
மாலார்க்கரியமலர்க்கழலம்பலவன்மலையிற்
கோலாப்பிரசமன்னாட்கையநீதந்தகொய்தழையே. (ககo)

குறிப்பறிதல்.

தழையெதிரா தொழிவதற்கோர்
சொல்லறியேனெனப் பல்வளைக்குரைத்தது.

தழைகாண்டலுஞ்சுளியுங்களியானையன்னான்கரத்திற்
றழைகாண்டலும்பொய்தழைப்பமுன்காண்பனின்றம்பலத்தா
னுழைகாண்டலுநினைப்பாகுமென்னோக்கிமன்னோக்கங்கண்டா
விழைகாண்பணைமுலையாயறியேன்சொல்லுமீடவற்கே. (கூகக)

குறிப்பறிந்துகூறல்.

ஏழைக் கிருந்தழை
தோழிகொண் டுரைத்தது.

தவளத்தநீறணியுந்தடந்தோளண்ணறன்னொருபா
லவளத்தனாமகனாந்தில்லையானன்றுரித்ததன்ன
கவளத்தயானைகடிந்தார்கரத்தகண்ணார்தழையுந்
துவளத்தகுவனவோசுரும்பார்குழற்றூமொழியே. (௧௧௨)

வருந்துரைத்தல்.

கடித்தழைகொணர்ந்த காதற்றோழி
மடக்கொடிமாதர்க்கு வருத்துரைத்தது.

ஏறும்பழிதழையேற்பின்மற்றேலாவிடின்மடன்மா
வேறுமவனிடபங்கொடியேற்றிவந்தம்பலத்து
ளேறுமரன்மன்னுமீங்கோய்மலைநம்மிரும்புனங்காய்ந்
தேறுமலைதொலைத்தாற்கென்னையாஞ்செய்வதேந்திழையே. ()

தழையேற்பித்தல்.

கருங்குழன்மடந்தைக் கரும்பெறற்றோழி
யிருந்தழைகொள்கென விரும்பிக்கொடுத்தது.

தெவ்வரைமெய்யெரிகாய்சிலையாண்டென்னையாண்டுகொண்ட
செவ்வரைமேனியன்சிற்றம்பலவன்செழுங்கயிலை
யவ்வரைமேலன்றியில்லைகண்டாயுள்ளவாறருளா
லிவ்வரைமேற்சிலம்பன்னொளிநிற்றந்தவீர்ந்தழையே. (௧௧௪)

தழைவிருப்புரைத்தல்.

விருப்பவ டோழி
பொருப்பற் குரைத்தது.

பாசத்தளையறுத்தாண்டுகொண்டோன்றில்லையம்பலஞ்சூழ்
தேசத்தனசெம்மனீதந்தனசென்றியான்கொடுத்தேன்
பேசிற்பெருகுஞ்சுருங்குமருங்குல்பெயர்ந்தரைத்துப்
பூசிற்றிலளன்றிச்செய்யாதனவில்லைபூந்தழையே. (௧௧௫)

சேட்படை முற்றிற்று.

கஉ. பகற்குறி.

குறியிடங்கூறல்.

வாடிடத்தண்ணல் வண்டழையெதிர்ந்தவள்
ஆடிடத்தின்னியல் பறியவுரைத்தது.

வானுழைவாளம்பலத்தான்குன்றென்றுவட்கிவெய்யோன்
றானுழையாவிருளாய்ப்புறநாப்பண்வண்டாரகைபோற்
றேனுழைநாகமலர்ந்துதிகழ்பளிங்கான்மதியோன்
கானுழைவாழ்வுபெற்றாங்கெழில்காட்டுமொர்கார்ப்பொழிலே. ()

ஆடிடப்படர்தல்.

வண்டழையெதிர்ந்த வொண்டொடிப்பாங்கி
நீடமைத்தோளியோ டாடிடம்படர்ந்தது.

புயல்வளரூசன்முன்னாடிப்பொன்னேபின்னைப்போய்ப்பொலியு
மயல்வளர்குன்றினின்றேற்றுமருவிதிருவுருவிற்
கயல்வளர்வாட்கண்ணிபோதருகாதரந்தீர்த்தருளுந்
தயல்வளர்மேனியனம்பலத்தான்வரைத்தண்புனத்தே. (ககஎ)

குறியிடத்துக்கொண்டுசேறல்.

அணிவளராடிடத் தாயவெள்ள
மணிவளர்கொங்கையை மருங்ககன்றது.

தினைவளங்காத்துச்சிலம்பெதிர்கூஉய்ச்சிற்றின்முற்றிழைத்துச்
சுனைவளம்பாய்ந்துதுணைமலர்கொய்துதொழுதெழுவார்
வினைவளநீறெழநீறணியம்பலவன்றன்வெற்பிற்
புனைவளர்கொம்பரன்னாயன்னகாண்டும்புனமயிலே. (ககஅ)

இடந்துய்த்துநீங்கல்.

மடத்தகைமாதனை யிடத்தகத்துய்த்து
நீங்கலுற்ற பாங்கிபகர்ந்தது.

நரல்வேயினநினதோட்குடைந்துக்கநன்முத்தஞ்சிந்திப்
பரல்வேயறையுறைக்கும்பஞ்சடிப்பரன்றில்லையன்னாய்
வரல்வேய்தருவனிங்கேநிலுங்கேசென்றுன்வார்குழற்கீர்ங்
குரல்வேயளிமுரல்கொங்கார்தடமலர்கொண்டுவந்தே. (ககக).

உவந்துரைத்தல்.

களிமயிற்சாயலை யொருசிறைக்கண்ட
ஒளிமலர்த்தாரோ னுவந்துரைத்தது.

படமாசுணப்பள்ளியிக்குவடாக்கியப்பங்கயக்க
ணெடுமாலெனவென்னைநீநினைந்தோநெஞ்சத்தாமரையே
யிடமாவிருக்கலுற்றோதில்லைநின்றவனீர்ங்கயிலை
வடமார்முலைமடவாய்வந்துவைகிற்றிவ்வார்பொழிற்கே. (கஉ0).

மருங்கணைதல்.

வாணுதலிவை நாணுதல்கண்ட
கோதைவேலவ னுதாவுரைத்தது.

தொத்தின்மலர்ப்பொழிற்றில்லைத்தொல்லோனருளென்னமுன்னி
முத்தின்குவளைமென்காந்தளின்முடித்தன்னேரளப்பா
ளொத்திர்ங்கொடியினொதுங்குகின்றாண்மருங்குன்னெருங்கப்
பித்திர்பணைமுலைகாளென்னுக்கின்னும்பெருக்கின்றதே. (௧௨௧)

பாங்கியறிவுரைத்தல்.

செறிகுழற் பாங்கி
யறிவறி வித்தது.

அளிநீடளகத்தினட்டியதாதுமணியணியு
மொளிநீள்சுரிகுழற்சூழ்ந்தவொண்மாலையுந்தண்ணறவுண்
களிநீயெனச்செய்தவன்கடற்றில்லையன்னாய்கலங்க
றெளிநீயனையபொன்னேபன்னுகோலந்திருநுதலே. (௧௨௨)

உண்மகிழ்ந்துரைத்தல்.

தன்மலர்க் கோதையை
புன்மகிழ்ந் துரைத்தது.

செழுநீர்மதிக்கண்ணிச்சிற்றம்பலவன்றிருக்கழலே
கெழுநீர்மையிற்சென்றுகிண்கிணிவாய்க்கொள்ளுங்கள்ளகத்த
கழுநீர்மலரிவள்யானதன்கண்மருவிப்பிரியாக்
கொழுநீர்நறப்பருகும்பெருநீர்மையளிகுலமே. (௧௨௩)

ஆயத்துய்த்தல்.

[illegible]கடலன்ன கார்மயிற்கணத்துப்
புனைமடமானைப் புகவிட்டது.

கொழுந்தாரகைமுகைகொண்டலம்பாசடைவிண்மடுவி
லெழுந்தார்மதிக்கமலம்மெழிறந்தெனவிப்பிறப்பி
லழுந்தாவகையெனையாண்டவன்சிற்றம்பலமனையாய்
செழுந்தாதவிழ்பொழிலாயத்துச்சேர்கதிருத்தகவே. (௧௨௪)

தோழிவந்துகூடல்.

செறிபுறக்குழலியை நின்றிடத்துய்த்துப்
பிறைநுதற்பாங்கி பெயர்ந்தவட்குரைத்தது.

பொன்னனையான்றில்லைப்பொங்கரவம்புன்சடைமிடைந்த
யின்னனையானருண்மேவலர்போன்மெல்விரல்வருந்த
மென்னனையாய்மறியேபறியேல்வெறியார்மலர்க
ளின்னனயான்கொணர்ந்தேன்மணந்தாழ்குழற்கேய்வனவே. ()

ஆடிடப்புகுதல்.

தனிவிலையாடிய தாழ்குழற்றோழி
பனிமதிநுதலியொ டாடிடப்படர்ந்தது.

அறுகாணிறைமலரைம்பாணிறையணிந்தேனணியார்
துறுகான்மலர்த்தொத்துத்தோகைதொல்லாயமெல்லப்புகுக
சிறுகான்மருங்குல்வருந்தாவகைமிகவென்சிரத்தி
ளுறுகால்பிறர்க்கரியோன்புலியூரன்னவொண்ணுதலே. (கஉசு)

தனிகண்டுரைத்தல்.

வேயொத்ததோளியை யாயத்துய்த்துக்
குனிவில்லையண்ணலைத் தனிகண்டுரைத்தது.

தழங்குமருவியெஞ்சிறூர்பெருமவிதுமதுவுங்
கிழங்குமருந்தியிருந்தெம்மொடின்றுகிளர்ந்துகுன்றர்
முழங்குங்குரவையிரவிற்கண்டேகுகமுத்தன்முத்தி
வழங்கும்பிரானெரியாடிதென்றில்லைமணிநகர்க்கே. (கஉஎ)

பருவங்கூறிவரைவிலக்கல்.

மாந்தளிர்மேனியை வரைந்தெய்தா
தேந்தலிவ்வா றியங்கலென்றது.

தள்ளிமணிசந்தமுந்தித்தறுகட்கரிமருப்புத்
தெள்ளிநறவந்திசைதிசைபாயுமலைச்சிலம்பா
வெள்ளிமலையன்னமால்விடையோன்புலியூர்விளங்கும்
வள்ளிமருங்குல்வருந்தவபோன்றவனமுலையே. (கஉஅ)

வரைவுடம்படாதுமிகுத்துக்கூறல்.

வரைவுகடாய வாறுதற்றோழிக்கு
விரைமலர்த்தாரோன் மிகுத்துரைத்தது.

மாடஞ்செய்பொன்னகருந்நிகரில்லையிம்மாதர்க்கென்னப்
பீடஞ்செய்தாமரையோன்பெற்றபிள்ளையைபுள்ளலரைக்
கீடஞ்செய்தென்பிறப்புக்கெடத்தில்லைநின்றோன்கயிலைக்
கூடஞ்செய்சாரற்கொடிச்சியென்றேநின்றுகூறுவதே. (கஉகூ)

உண்மைகூறிவரைவுகடாதல்.

கல்வரைநாட னில்லதுரைப்ப
ஆங்கவளுண்மை பாங்கிபகர்ந்தது.

வேய்தந்தவெண்முத்தஞ்சிந்துபைங்கார்வரைமீன்பரப்பிச்
சேய்தந்தவானகமானுஞ்சிலம்பதன்சேவடிக்கே
யாய்தந்தவன்புதந்தாட்கொண்டவம்பலவன்மலையிற்
றாய்தந்தைகானவரேனலெங்காவலித்தாழ்வரையே. (கஙㅇ)

வருத்தங்கூறிவரைவுகடாதல்.

கனங்குழைமுகத்தவன் மனங்குழைவுணர்த்தி
நிரைவளைத்தோழி வரைவுகடாயது.

மன்றுந்திருவருந்தும்வரையாவிடினீர்வரையென்
றன்றுமதற்குத்தளர்ந்தொளிவாடுதிரும்பரெலாம்
பன்றும்புகழ்ப்பரமன்பரஞ்சோதிசிற்றம்பலத்தான்
பொன்னங்கழல்வழுத்தார்புலனென்னப்புலம்புவனே. (க௯க)

தாயச்சங்கூறிவரைவுகடாதல்.

மடத்தகைமாதர்க் கடுப்பனவறியா
வேற்கட்பாங்கி யேற்கவுரைத்தது.

பனித்துண்டஞ்சூடும்படர்சடையம்பலவன்னுலகந்
தனித்துண்டவன்றொழுந்தாளோன்கயிலைப்பயில்சிலம்பர
கனித்தொண்டைவாய்ச்சிகதிர்முலைப்பாரிப்புக்கண்டழிவுற்
றினிக்கண்டிலம்பற்றுச்சிற்றிடைக்கென்றஞ்சுமெம்மனையே. ()

இற்செறிவறிவித்துவரைவுகடாதல்.

விற்செறி நுதலியை
யிற்செறி வுரைத்தது.

சுவிளையாடநறவிளைவோர்ந்தெமர்மால்பியற்றும்
வேய்விளையாடும்வெற்பாவுற்றுநோக்கியெம்மெல்லியலைப்
போய்விளையாடலென்றாளன்னையம்பலத்தான்புரத்திற்
றீவிளையாடநின்றேவிளையாடிதிருமலைக்கே. (க௯௩)

தமர்நினைவுரைத்துவரைவுகடாதல்.

விற்செறிநுதலியை யிற்செறிவிப்பதென்
றெறிவேலவற்கு வெளியேயுரைத்தது.

சுற்றுஞ்சடைக்கற்றைச்சிற்றம்பலவற்றொழாதுதொல்சீர்
கற்றுமறியலரிற்சிலம்பாவிடைநைவதுகண்
டெற்றுந்திரையின்னமிர்தையினித்தமரிற்செறிப்பார்
மற்றுஞ்சிலபலசீறூர்பகர்பெருவார்த்தைகளே. (க௯௪)

எதிர்கோள்கூறிவரைவுகடாதல்.

எந்திழைத்தோழி யேந்தலைமுன்னிக்
கடியாமாறு கொடிகென்றது.

வழியுமதுவன்னையுமென்னின்மகிழும்வந்தெந்தையுநின்
மொழியின்வழிநிற்குஞ்சுற்றமுன்னேவயமம்பலத்துக்
குழியும்பரேத்துமெய்க்கூத்தன்குற்றாலமுற்றும்மறியக்
கெழியும்மவேபணைத்தோள்பலவென்னேகிளக்கின்றதே. (க௯௫)

ஏறுகோள்கூறிவரைவுகடாதல்.

என்னையர் தனி
வில்ல தென்றது.

படையார்கருங்கண்ணிவண்ணப்பயோதரப்பாரமுநுண்
ணிடையார்மெலிவுங்கண்டண்டர்களீர்முல்லைவேலியெம்மூர்
விடையார்மருப்புத்திருத்திவிட்டார்வியன்றென்புலியூ
ருடையார்கடவிவருவதுபோலுமுருவினதே. (௧௪௬)

அயலுரையுரைத்துவரைவுகடாதல்.

கயல்புரை கண்ணியை
யயலுரை யுரைத்தது.

உருப்பனையன்னகைக்குன்றொன்றுரித்துரவூரெரித்த
நெருப்பனையம்பலத்தாதியையும்பர்சென்றேத்திநிற்குந்
திருப்பனையூரனையாளைப்பொன்னாளைப்புனைதல்செப்பிப்
பொருப்பனைமுன்னின்றென்னோவினையேன்யான்புகல்வதுவே.()

தினைமுதிர்வுரைத்துவரைவுகடாதல்.

எல்லியாட் டினியில்லையென
மானற்றோழி மடந்தைக்குரைத்தது.

மாதிடங்கொண்டம்பலத்துநின்றோன்வடவான்கயிலைப்
போதிடங்கொண்டபொன்வேங்கைதினைப்புனங்கொய்கவென்று
தாதிடங்கொண்டுபொன்வீசித்தன்கள்வாய்சொரியநின்று
சோதிடங்கொண்டிதெம்மைக்கெடுவித்ததுதூமொழியே. (௧௪௮)

பகல்வரல்விலக்கிவரைவுகடாதல்.

அகல்வரை நாடனைப்
பகல்வர லென்றது.

வடிவார்வயற்றில்லையோன்மலயத்துநின்றும்வருதேன்
கடிவார்களிவண்டுநின்றலர்தூற்றப்பெருங்கணியார்
நொடிவார்நமக்கினிநோதகயானுமக்கென்னுரைக்கேன்
ஓடிவார்தினையெமர்காவேம்பெருமவித்தண்புனமே. (௧௪௯)

தினையோடுவெறுத்துவரைவுகடாதல்.

தன்புனத்தோடு தளர்வுற்றுப்
பண்புனைமொழிப் பாங்கிபகர்ந்தது.

நினைவித்துத்தன்னையென்னெஞ்சத்திருந்தம்பலத்துநின்று
புனைவித்தவீசன்பொதியின்மலைப்பொருப்பன்விருப்பிற்
றினைவித்திக்காத்துச்சிறந்துநின்றேமுக்குச்சென்றுசென்று
வினைவித்திக்காத்துவிளைவுண்டதாகிவிளைந்ததுவே. (௧௫௦)

வேங்கையோடுவெறுத்துவரைவுகடாதல்.

நீங்குகவினி நெடுந்தகையென
வேங்கைமேல்வைத்து விளம்பியது.

கனைகடற்செய்தநஞ்சுண்டுகண்டார்க்கம்பலத்தமிழ்தாய்
வினைகெடச்செய்தவன்விண்டோய்கயிலைமயிலனையாய்
நனைகெடச்செய்தனமாயினமைக்கெடச்செய்திடுவான்
நினைகெடச்செய்திடுமாறுமுண்டோவித்திருக்கணியே. (௧௪௧)

இரக்கமுற்றுவரைவுகடாதல்.

செழுமலை நாடற்குக்
கழுமலுற் றிரங்கியது.

வழுவாவியலெம்மலையர்விதைப்பமற்றியாம்வளர்த்த
கொழுவார்திணையின்குழாங்களெல்லாமெங்குழாம்வணங்குஞ்
செழுவார்கழற்றில்லைச்சிற்றம்பலவரைச்சென்றுநின்று
தொழுவார்வினைநிற்கிலேநிற்பதாவதித்தொல்புனத்தே. (௧௪௨)

கொய்தமைகூறிவரைவுகடாதல்.

நெடும்புனத்தினி யாடேமென்று
வரைவுதோன்ற வுரைசெய்தது.

பொருப்பர்க்கியாமொன்றுமாட்டேம்புகலப்புகலெமக்காம்
விருப்பர்க்கியாவர்க்குமேலர்க்குமேல்வருமூவெரித்த
நெருப்பர்க்குநீடம்பலவருக்கன்பர்குலநிலத்துக்
கருப்பற்றுவிட்டெனக்கொய்தற்றநின்றிக்கடிப்புனமே. (௧௪௩)

பிரிவருமைகூறிவரைவுகடாதல்.

மறைப்புறக் கிளவியிற்
றுறைப்புறத் துரைத்தது.

பரிவுசெய்தாண்டம்பலத்துப்பயில்வோன்பரங்குன்றின்வா
யருவிசெய்தாழ்புனத்தைவனங்கொய்யவுமிவ்வனத்தே
பிரிவுசெய்தாலரிதேகொள்கபேயொடுமென்னும்பெற்றி
யிருவிசெய்தாளினிருந்தின்றுகாட்டுமிளங்கிளியே. (௧௪௪)

மயிலோடுகூறிவரைவுகடாதல்.

நீங்கரும்புனம்விடு நீள்பெருந்துயரம்
பாங்கிபகர்ந்தது பருவரலுற்றது.

கணியார்கருத்தின்றுமுற்றிற்றியாஞ்சென்றுங்கார்ப்புனமே
மணியார்பொழில்காண்மறந்திர்கண்டீர்மன்னுமம்பலத்தோ
னணியார்கயிலைமயில்காளயில்வேலொருவர்வந்தாற்
றுணியாதனதுணிந்தாரென்னுநீர்மைகள்சொல்லுமினே. (௧௪௫)

வறும்புனங்கண்டுவருந்தல்.

மென்புனம்விடுத்து மெல்லியல்செல்ல
மின்பொலிவேலோன் மெலிவுற்றது.

பொதுவினிற்றீர்த்தென்னையாண்டோன்புலியூரரன்பொருப்பே
யிதுவெனிலென்னின்றிருக்கின்றவாறெம்மிரும்பொழிலே
யெதுநமக்கெய்தியதென்னுற்றனிரறையீண்டருவி
மதுவினிற்கைப்புவைத்தாலொத்தவாமற்றிவ்வான்புனமே.(௧௬௬)

பதிநோக்கிவருந்தல்.

மதிநுதலரிவை பதிபுகலறிந்து
மதிநனிகலங்கிப் பதிமிசைவாடியது.

ஆனந்தமாக்கடலாடுசிற்றம்பலமன்னபொன்னின்
றேனுந்துமாமலைச்சீறூரிதுசெய்பலாவதில்லை
வானுந்துமாமதிவேண்டியழுமழப்போலுமன்றே
நானுந்தளர்ந்தனனீயுந்தளர்ந்தனைநன்னெஞ்சமே. (௧௬௭)

பகற்குறிமுற்றிற்று.

---

௧௪. இரவுக்குறி.

இரவுக்குறிவேண்டல்.

நள்ளிருட்குறியை வள்ளனினைந்து
வீங்குமென்முலைப் பாங்கிக்குரைத்தது.

மருந்துநம்மல்லற்பிறவிப்பிணிக்கம்பலத்தமிர்தா
யிருந்தனர்குன்றினின்றேங்குமருவிசென்றேர்திகழப்
பொருந்தினமேகம்புதைந்திருடூங்கும்புனையிறம்பின்
விருந்தினன்யானுங்கள்சீறூரதனுக்குவெள்வளையே. (௧௬௮)

வழியருமைகூறிமறுத்தல்.

இரவரலேந்தல் கருதியுரைப்பப்
பருவரற்பாங்கி யருமையுரைத்தது.

விசும்பினுக்கேணிநெறியன்னசின்னெறிமேன்மழைதூங்
கசும்பினிற்றுன்னியளைநுழைந்தாலொக்குமையமெய்யே
யிசும்பினிற்சிந்தைக்குமேறற்கரிதெழிலம்பலத்துப்
பசும்பனிக்கோடுமிலைந்தான்மலயத்தெம்வாழ்பதியே. (௧௬௯)

நின்றுநெஞ்சுடைதல்.

பாங்கிவிலக்கப் பருவரை நாட
னீங்கிவிலங்காது நெஞ்சுடைந்தது.

மாற்றேனெனவந்தகாலனையோலமிடவடர்த்த
கோற்றேன்குளிர்தில்லைக்கூத்தன்கொடுங்குன்றினீள்குடுமி
மேற்றேன்விரும்புமுடவனைப்போலமெலியுநெஞ்சே
யாற்றேனரியவரிவைக்குநீவைத்தவன்பினுக்கே. (௧௫0)

இரவுக்குறிநேர்தல்.

தடவரைநாடன் றளர்வுதீர
மடநடைப்பாங்கி வகுத்துரைத்தது.

கூளிநிரைக்கநின்றம்பலத்தாடிகுரைகழற்கீழ்த்
தூளிநிரைத்தசுடர்முடியோயிவடோணசையா
லாளிநிரைத்தடலானைகடேருமிரவில்வந்து
மீளியுரைத்திவினையேனுரைப்பதென்மெல்லியற்கே. (௧௫௧)

உட்கோளவினுதல்.

நெறிவிலக்குற்றவ னுறுதுயர்நோக்கி
யாங்கொருசூழல் பாங்கிபகர்ந்தது.

வரையன்றொருகாலிருகால்வளையநிமிர்த்துவட்கார்
நிரையன்றழலெழவெய்துநின்றோன்றில்லையன்னநின்னூர்
விரையென்னமென்னிழலென்னவெறியுறுதாதிவர்போ
துரையென்னவோசிலம்பாநலம்பாவியொளிர்வனவே. (௧௫௨)

உட்கோளீடுவினுதல்.

தன்னிலையவற் றானவன்குறிப்பிற்
றென்னிலைநின்றுட் டிகலணியென்றது.

செம்மலராயிரந்தூய்க்கருமாறிருக்கண்ணணியு
மொய்ம்மலரீர்ங்கழலம்பலத்தோன்மன்னுதென்மலயத்
தெம்மலர்சூடிநின்றெச்சார்ந்தணிந்தென்னநன்னிழல்வா
யம்மலர்வாட்கணல்லாயெல்லிவாய்நமராடுவதே. (௧௫௩)

குறியிடங்கூறல்.

இரவுக்குறியவ னொன்றுபாங்கி
யரவக்கழலவற் கறியவுரைத்தது.

பனைவளர்கைம்மாப்படாத்தம்பலத்தரன்பாதம்விண்ணோர்
புனைவளர்சாரற்பொதியின்மலைப்பொலிசந்தணிந்து
சுனைவளர்காவிகள்சூடிப்பைந்தோகைதுயில்பயிலுஞ்
சினைவளர்வேங்கைகள்யாங்கணின்றோங்குஞ்செழும்பொழிலே. ()

இரவுக்குறியேற்பித்தல்.

அரவக்கழலவ னுற்றுளென
விரவுக்குறி யேற்பித்தது.

மலவன்குரம்பையைமாற்றியம்மான்முதல்வானர்க்கப்பாற்
செலவன்பர்க்கோக்குஞ்சிவன்றில்லைக்கானலிற்சீர்ப்பெடையோ
டலவன்பயில்வதுகண்டஞர்கூர்ந்தயில்வேலுரவோன்
செலவந்திவாய்க்கண்டனனென்னதாங்கொன்மன்சேர்துயிலே. ()

இரவரவுரைத்தல்.

குரவரு குழலிக்
கிரவர வுரைத்தது.

மோட்டங்கதிர்முலைப்பங்குடைத்தில்லைமுன்னோன்கழற்கே
கோட்டந்தருநங்குருமுடிவெற்பன்மழைகுழுமி
நாட்டம்புதைத்தன்னநள்ளிருணாநடுங்கச்சிங்கம்
வேட்டந்திரிசரிவாய்வருவான்சொல்லுமெல்லியலே. (கஙசு)

ஏதங்கூறிமறுத்தல்.

இழுக்கம்பெரி திரவரினென
அழுக்கமெய்தி யரிவையுரைத்தது.

செழுங்கார்முழவதிர்சிற்றம்பலத்துப்பெருந்திருமால்
கொழுங்கான்மலரிடக்கூத்தயர்வோன்கழலேத்தலர்போன்
முழங்காரரிமுரண்வாரணவேட்டைசெய்மொய்யிருள்வாய்
வழங்காவதரின்வழங்கென்றுமோவின்றெம்வள்ளலையே. (கஙஎ)

துறைநேர்தல்.

அலைவேலண்ண லிலைமைகேட்டுக்
கொலைவேற்கண்ணி குறைநயந்தது.

ஓங்குமொருவிடமுண்டம்பலத்தும்பருய்யவன்று
தாங்குமொருவன்றடவரைவாய்த்தழங்கும்மருவி
வீங்குஞ்சுனைப்புனல்வீழ்ந்தன்றழுங்கப்பிடித்தெடுத்து
வாங்குமவர்க்கறியேன்சிறியேன்சொல்லும்வாசகமே. (கஙஅ)

துறைநேர்ந்தமைகூறல்.

குறைநயந்தன ளிருமுலியென
எறிவேலண்ணற் கறியவுரைத்தது.

ஏனற்பசுங்கதிரென்றூழ்க்கழியவெழிலியுன்னிக்
கானக்குறவர்கள்கம்பலைசெய்யும்வம்பார்சிலம்பா
யானிற்றையாமத்துநின்னருண்மேனிற்கலுற்றுச்சென்றேன்
றேனக்ககொன்றையன்றில்லையுறூர்செல்லுஞ்செல்லல்களே. ()

வரவுணர்ந்துரைத்தல்.

வளமயிலெடுப்ப விளமயிற்பாங்கி
செருவேலண்ணல் வரவுரைத்தது.

முன்றுமொருவரிரும்பொழின்மூன்றற்குமுற்றுமிற்றூற்
பின்றுமொருவர்சிற்றம்பலத்தார்தரும்பேரருள்போற்
றுன்றுமொரின்பமென்றோகைதர்தோகைக்குச்சொல்லுவபோன்
மன்றுமாவத்தவாய்த்துயில்பேருமயிலினமே. (௧௬௦).

தாய்துயிலறிதல்.

கசன்மிசைவைத் தொள்ளமளியிற்
முயதாயி முனறிந்தது.

கூடாரரணெரிகூடக்கொடுஞ்சிலைகொண்டவண்டன்
சேடார்மதின்மல்லற்றில்லையன்ஞய்சிறுகட்பெருவெண்
கோடார்கரிகுருமாமணியூசலைக்கோப்பழித்துத்
தோடார்மதுமலர்நாகத்தைநாக்குஞ்சூழ்பொழிற்கே. (௧௬௧).

துயிலெடுத்துச்சேறல்.

தாய்துயிலறிந் தாய்தருபவன்
மெல்லியற்குச் சொல்லியது.

விண்ணுக்குமேல்வியன்பாதலக்கீழ்விரிநீருடுத்த
மண்ணுக்குநாப்பணயந்துதென்றில்லைநின்றோன்மிடற்றின்
வண்ணக்குவளைமலர்கின்றனசினவாண்மிளிர்நின்
கண்ணுக்குமேற்கண்டுகாண்வண்டுவாழுங்கருங்குழலே. (௧௬௨).

இடந்துய்த்துநீங்கல்.

லமத்தடங்கண்ணியை யுய்த்திடத்தொருபா
ங்கனுற்ற பாங்கிபகர்ந்தது.

நந்தீவரமென்னுநாரணனுண்மலர்க்கண்ணிற்கெஃகர்
தந்தீவரன்புலியூரனையாய்தடங்கண்கடந்த
விந்தீவரமிவைகாணின்னிருள்சேர்குழற்கெழில்சேர்
சந்தீவரமுறியும்வெறியீயுந்தருகுவனே. (௧௬௩).

தளர்வகன்றுரைத்தல்.

வடுவகிரனைய வரிநெடுங்கண்ணியைத்
தடுவெகியப்பொடு தளர்வகன்றுரைத்தது.

காமரைவென்றகண்ணோன்றில்லைப்பல்கதிரோனடைத்த
தாமரையில்லினிதழ்க்கதவந்திறந்தோதயியே
பாமரைமேகலைபற்றிச்சிலம்பொதுக்கிப்பையவே
நாமரையாமத்தென்னேவர்துவைகிரயந்ததுவே. (௧௬௪).

மருங்கணைதல்.

அன்புமிகுதியி னளவளாயவளைப்
பொன்புனைவேலோன் புகழ்ந்துரைத்தது.

அகிலின்புகைவிம்மியாய்மலர்வேய்ந்தஞ்சனமெழுதத்
தகிலுந்தனிவடம்பூட்டத்தகாள்சங்கரன்புலியூ
ரிகலுமவரிற்றளருமித்தேம்பலிடைஞெமியப்
புகிலுமிகவிங்ஙனேயிறுமாக்கும்புணர்முலையே. (௧௧௫)

முகங்கண்டுமகிழ்தல்.

முகையவிழ்குழலி முகமதிகண்டு
திகழ்வேலண்ணன் மகிழ்வுற்றது.

அழுந்தேனரகத்தியானென்றிருப்பவந்தாண்டுகொண்ட
செழுந்தேன்றிகழ்பொழிற்றில்லைப்புறவிற்செறுவகத்த
கொழுந்தேன்மலர்வாய்க்குமுதமிவள்யான்குழூஉச்சுடர்கொண்
டெழுந்தாங்கதுமலர்த்தும்முயர்வானத்திளமதியே. (௧௧௬)

பள்ளியிடத்துய்த்தல்.

பிரிவதுகருதிய பெருவரைநாட
னொள்ளிழைப்பாங்கியொடு பள்ளிகொள்கென்றது.

சுரும்புறுநீலங்கொய்யற்றமிசின்றுதுயில்பயின்மோ
வரும்பெறற்றோழியொடாயத்துநாப்பணமரரொன்னா
ரிரும்புறுமாமதில்பொன்னிஞ்சிவெள்ளிப்புரிசையன்றோர்
துரும்புறச்செற்றகொற்றத்தெம்பிரான்றில்லைச்சூழ்பொழிற்கே.()

வரவுவிலக்கல்.

தெய்வமன்னாளைத் திருந்தமளிசேர்த்தி
மைவரைநாடனை வரவுவிலக்கியது.

நற்பகற்சோமனெரிதருநாட்டத்தன்றில்லையன்ன
விற்பகைத்தோங்கும்புருவத்திவளின்மெய்யேயெளிதே
வெற்பகச்சோலையின்வேய்வளர்தீச்சென்றுவிண்ணினின்ற
கற்பகச்சோலைகதுவுங்கன்னாடவிக்கல்லதரே. (௧௧௮)

ஆற்றதுரைத்தல்.

வரைவுகடாய வாணுதற்றோழிக்
கருவரைநாடனாற்றதுரைத்தது.

பைவாயரவரையம்பலத்தெம்பரன்பைங்கயிலைச்
செவ்வாய்க்கருங்கட்பெரும்பணைத்தோட்சிற்றிடைக்கொடியை
மொய்வார்கமலத்துமுற்றிழையின்றென்முன்னைத்தவத்தா
லிவ்வாறிருக்குமென்றேசிற்பதென்றுமென்னின்னுயிரே. (௧௧௯)

இரக்கங்கூறிவரைவுகடாதல்.

அதிர்கழலவ னகன்றவழி
யெதிர்வரறியா திரங்கியுரைத்தது.

பைவாயரவுமறியுமழுவும் பயின்மலர்க்கை
மொய்வார்சடைமுடிமுன்னவன்றில்லையின்முன்னினக்காற்
செவ்வாய்கருவயிர்ச்சேர்த்திச்சிறியாள்பெருமலர்க்கண்
மைவார்குவளைவிடுமென்னநீண்முத்தமாலைகளே. (௧௭௰)

நிலவுவெளிப்படவருந்தல்.

தனிவேலவற்குத் தந்தனர்வறியப்
பனிமதிவிளக்கம் பாங்கிபகர்ந்தது.

நாகந்தொழவெழிலம்பலநண்ணிநடநவில்வோ
னாகந்தருமதியேமதியேநவில்வேற்கையெங்க
ளாகம்வரவெதிர்நாங்கொள்ளுநாளிருள்வாய்நறவார்
நாகமலிபொழில்வாயெழில்வாய்த்தநின்னாயகமே. (௧௭௧)

அல்லகுறியறிவித்தல்.

வல்லியன்னவ ளல்லகுறிப்பா
டறைப்புனற்றுறைவற்குச் சிறைப்புறத்துரைத்தது.

மின்னங்கலருஞ்சடைமுடியோன்வியன்றில்லையன்ன
வென்னங்கலமரலெய்தியதோவெழின்முத்தந்தொத்திப்
பொன்னங்கலர்புன்னைச்சேக்கையின்வாய்ப்புலம்புற்றுமுற்று
மன்னம்புலருமளவுந்துயிலாதழுங்கினவே. (௧௭௨)

கடலிடைவைத்துத்துயரறிவித்தல்.

எறிகடன்மேல்வைத் திறைவருதுயரம்
அறைகழலவற் கறியவுரைத்தது.

சோத்துன்னடியமென்றோரைக்குழீஇத்தொல்வானவர்சூழ்ந்
தேத்தும்படிநிற்பவன்றில்லையன்னாளிவடுவள
வார்த்துன்னமிழ்துந்திருவுமதியுமிழந்தவநீ
பேர்த்துமிரைப்பொழியாய்ப்பழிநோக்காய்பெருங்கடலே. (௧௭௩)

காமமிக்ககழிபடர்கிளவி.

தாமமிக்க தாழ்குழலேழை
காமமிக்க கழிபடர்கிளவி.

மாதுற்றமேனிவரையுற்றவில்லிதில்லைநகர்சூழ்
போதுற்றபூம்பொழில்காள்கழிகாளெழிற்புள்ளினங்கா
ளேதுற்றழிதியென்னீர்மன்னுமீர்ந்துறைவர்க்கிவளோ
டீதுற்றதென்னுக்கென்னீரிதுவோநன்மைசெப்புமினே. (௧௭௪)

காப்புச்சிறைமிக்ககையறுகிளவி.

மெய்புறு காவலிற்
கையறு கிளவி.

இன்னறவார்பொழிற்றில்லைநகரிறைசீர்விழவிற்
பன்னிறமாலைத்தொகைபகலாம்பல்விளக்கிருளின்
றுன்னறவுய்க்குமில்லோருந்துயிலிற்றுறைவர்மிக்க
கொன்னிறவேலொடுவந்திடின்ஞானிகுரைதருமே. (கஎ௫)

ஆறுபார்த்துற்றவச்சக்கிளவி.

நாறுவார்குழ லியைநோக்கி
யாறுபார்த் துற்ற வச்சக்கிளவி.

தாருறுகொன்றையன்றில்லைச்சடைமுடியோன்கயிலை
நீருறுகான்யாறளவிலநீந்திவந்தானினது
போருறுவேல்வயப்பொங்குருமஞ்சுகமஞ்சிவருஞ்
சூருறுசோலையின்வாய்வரற்பாற்றன்றுதூங்கிருளே. (கஎ௬)

தன்னுட்கையாறெய்திடுகிளவி.

மின்னுப்புரையு மருங்குன் மருங்கு
தன்னுட்கையா றெய்திடுகிளவி.

விண்டலையாவர்க்கும்வேந்தர்வண்டில்லைமெல்லங்கழிசூழ்
கண்டலையேகரியாக்கன்னிப்புன்னைக்கலந்தகள்வர்
கண்டிலையேவரக்கங்குலெல்லாமங்குல்வாய்விளக்கு
மண்டலமேபணியாய்தமியேற்கொருவாசகமே. (கஎஎ)

நிலைகண்டுரைத்தல்.

நின்னிலைகண்டு நீனிடைமாதென
வன்னவதோன்ற வறைசெய்தது.

பற்றொன்றிலார்பற்றுந்தில்லைப்பரன்பரங்குன்றினின்ற
புற்றொன்றரவன்புதல்வனெனநீபுகுந்துநின்றான்
மற்றுன்றுமாமலரிட்டுன்னைவாழ்த்திவந்தித்தலன்றி
மற்றொன்றுசிந்திப்பரேல்வல்லளோமங்கைவாழ்வகையே. (கஎஅ)

இரவுறுதுயரங்கடலொடுசேர்த்தல்.

எறிவேற்கண்ணி யிரவுறுதுயரஞ்
செறிகடலிடைச் சேர்த்தியுரைத்தது.

பூங்கணைவேளைப்பொடியாய்விழவிழித்தோன்புலியூ
ரோங்கணைமேவிப்புரண்டுவிழுந்தெழுந்தோலமிட்டுத்
தீங்கணைந்தோரல்லுந்தேறாய்கலங்கிச்செறிகடலே
யாங்கணைந்தார்நின்னையும்முளரோசென்றகன்றவரே. (கஎ௯)

அலரறிவுறுத்தல்.

அலைவேலண்ணல் மனமகிழருள்
பலராலறியப் பட்டதென்றது.

அலராயிரந்தந்துவந்தித்துமாலாயிரங்கரத்தா
லலரார்கழல்வழிபாடுசெய்தாற்களவில்லொளிக
ளலராவிருக்கும்படைகொடுத்தோன்றில்லையானருள்போன்
றலராய்விளைகின்றதம்பல்கைம்மிக்கையமெய்யருளே. (கஅ௦)

இரவுக்குறிமுற்றிற்று.

க௫. ஒருவழித்தணத்தல்,

அகன்றுறைவுகூறல்.

வழிவேறு படமன்னும்
பழிவேறு படுமென்றது.

புகழும்பழியும்பெருக்கிற்பெருகும்பெருகிநின்று
நிகழுநிகழாநிகழ்த்தினல்லாவிருநீள்வினைப்பி
னகழுமதிலுமணிதில்லையோனடிப்போதுசென்னித்
திகழுமவர்செல்லல்போவில்லையாம்பழிசின்மொழிக்கே. (கஅக)

கடலோடுவரவுகேட்டல்.

மணந்தவனொருவழித் தணந்தாற்கிரங்கி
மதிநுதல்சேடி யெறிகடற்கியம்பியது.

ஆரம்பரந்துதிரைபொருநீர்முகின்மீன்பரப்பிச்
சேரம்பரத்திற்றிகழ்ந்தொளிதோன்றுந்துறைவர்சென்றார்
போரும்பரிசுபுகன்றனரோபுலியூர்ப்புனிதன்
சீரம்பர்சுற்றியெற்றிச்சிறந்தார்க்குஞ்செறிகடலே. (கஅ௨)

கடலோடுபுலத்தல்.

செறிவளைச் சின்மொழி
யெறிகடற் கியம்பியது.

பாணிகர்வண்டினம்பாடப்பைம்பொன்றருவெண்கிழிதஞ்
சேணிகர்காவின்வழங்கும்புன்னைத்துறைச்சேர்ப்பர்திங்கள்
வாணிகர்வெள்வளைகொண்டகன்றார்திறம்வாய்திறவாய்
பூணிகர்வாளரவன்புலியூர்சுற்றும்போர்க்கடலே. (கஅ௩)

அன்னமோடாய்தல்.

மின்னிடை மடந்தை
யன்னமோ டாய்ந்தது.

பகன்றாமரைக்கண்கெடக்கடந்தோன்புலியூர்ப்பழனத்
தகன்றாமரையன்னமேவண்டுநீலமணியணிந்து
முகன்றாழ்குழைச்செம்பொன்முத்தணிபுன்னையின்னும்முரையா
தகன்றானகன்றேயொழிவர்கொல்லோநம்மகன்றுறையே. (௧அ௫)

தேர்வழிநோக்கிக்கடலொடுகூறல்.

மீன்றோய்துறைவர் மீளுமளவு
மான்றேர்வழியை யழியேலென்றது.

உள்ளுமுருகியுரோமஞ்சிலிர்ப்பவுடையவனுட்
கொள்ளுமவரிலொர்கூட்டந்தான்குனிக்கும்புலியூர்
விள்ளும்பரிசுசென்றார்வியன்றேர்வழிதூரற்கண்டாய்
புள்ளுந்திரையும்பொரச்சங்கமார்க்கும்பொருகடலே. (௧அ௬)

கூடலிழைத்தல்.

நீடலன் துறையிற்
கூட லிழைத்தது.

ஆழிதிருத்தும்புலியூருடையானருளினளித்
தாழிதிருத்துமணற்குன்றினீத்தகன்றார்வருகென்
றாழிதிருத்திச்சுழிக்கணக்கோதிநையாமலைய
வாழிதிருத்தித்தரக்கிற்றியோவுள்ளம்வள்ளலையே. (௧அ௭)

சுடரோடுபுலம்பல்.

குணகடலெழுசுடர் குடகடற்குளிப்ப
மணமலிகுழலி மனம்புலம்பியது.

கார்த்தரங்கந்திரைதோணிசுராக்கடன்மீனெறிவோர்
போர்த்தரங்கந்துறைமானுந்துறைவர்தம்போக்குமிக்க
தீர்த்தரங்கன்றில்லைப்பல்பூம்பொழிற்செப்பும்வஞ்சிளமு
மார்த்தரங்கஞ்செய்யுமானுய்யுமாறென்கொலாழ்சுடரே. (௧அ௮)

பொழுதுகண்டுமயங்கல்.

மயமருமாலை வருவதுகண்டு
கயறருகண்ணி கவலையுற்றது.

பகலோன்கரந்தனன்காப்பவர்சேயர்பற்றற்றவர்க்குப்
புகலோன்புகுநர்க்குப்போக்கரியோனெவரும்புகலத்
தகலோன்பயில்தில்லைப்பைம்பொழிற்சேக்கைகளேக்கினவா
லகலோங்கிருங்கழிவாய்க்கொழுமீனுண்டவன்னங்களே. (௧அ௯)

பறவையோடுவெருத்தல்.

செறிபிணிகைம்மிகச் சிற்றிடைப்பேதை
பறவைமேல்வைத்துப் பையுளெய்தியது.

பொன்னுமணியும்பவளமும்போன்றபொலிந்திலங்கி
மின்னுஞ்சடையோன்புலியூர்விரவாதவரினுண்ணே
யின்னுமறிகிலவாலென்னைபாவமிருங்கழிவாய்
மன்னும்பகலேமகிழ்ந்திரைதேரும்வண்டானங்களே. (௧௮௯)

பங்கயத்தோடுபரிவுற்றுரைத்தல்.

முருகவிழ் கான
லொடுபரி வுற்றது.

கருங்கழிகாதற்பைங்கானலிற்றில்லையெங்கண்டர்விண்டா
ரொருங்கழிகாதரமூவெயில்செற்றவொற்றைச்சிலைசூழ்ந்
தருங்கழிகாதமகலுமென்றாலெழன்றலந்துகண்ணீர்
வருங்கழிகாதல்வனசங்கள்கூப்புமலர்க்கைகளே. (௧௯௦)

அன்னமோடழிதல்.

இன்னகையவ ளிரவுதுயா
மன்னத்தோ டழிந்துரைத்தது.

மூவுறழீஇயவருண்முதலோன்றில்லைச்செல்வன்முந்நீர்
நாவுறழீஇயவிந்நானிலந்துஞ்சுமயர்தவின்பச்
சேவுறழீஇச்சென்றுதான்றுஞ்சும்யான்றுயிலாச்செயிரெங்
காவுறழீஇயவர்க்கோதாதளியகளியன்னமே. (௧௯௧)

வரவுணர்ந்துரைத்தல்.

சென்றவர்வரவுணர்ந்து நின்றவணிலைமை
சிறப்புடைப்பாங்கி நிறைப்புறத்துரைத்தது.

நில்லாவளைநெஞ்சநெக்குருகுர்நெடுங்கண்டுயிலக்
கல்லாகதிர்முத்தங்காற்றமெனக்கட்டுரைக்கதில்லைத்
தொல்லோனருள்கவில்லாரிற்சென்றூர்சென்றசெல்லல்கண்டா
யெல்லார்மதியேயிதுநின்னையாவின்றிரக்கின்றதே. (௧௯௨)

வருத்தமிகுதிகூறல்.

நீங்கி யிணைந்தவற்குப்
பாங்கி பகர்ந்தது.

வளருங்கறியறியாமந்திதின்றுமம்மர்க்கிடமாய்த்
தளருந்தடவரைத்தண்சிலம்பாதனதங்கமெங்கும்
விளரும்விழுமெழும்விம்முமெலியும்வெண்மாமதிநின்
றொளிருஞ்சடைமுடியோன்புலியூரன்னவொண்ணுதலே. (௧௯௩)

ஒருவழித்தணத்தல் முற்றிற்று.

௧௫. உடன்போக்கு.

பருவங்கூறல்.

உருவது கண்டவ
னருமை யுரைத்தது.

ஓராகமிரண்டெழிலாயொளிர்வோன்றில்லையொண்ணுதலங்
காரகம்பயின்றமிழ்தம்பொதிந்தீர்ஞ்சுணங்காடகத்தின்
பாரகஞ்சிதர்ந்தபயோதரமிப்பரிசேபணைத்த
விராகங்கண்டால்வள்ளலேயில்லையேயெமரொண்ணுவதே. (௧௯௪)

மகட்பேச்சுரைத்தல்.

படைத்துமொழிகிளவியிற் பணிமொழிப்பாங்கி
யடற்கதிர்வேலோற் கறிவுரைத்தது.

மணியக்கணியுமரனஞ்சமஞ்சிமறுகிவிண்ணோர்
பணியக்கருணைதரும்பரன்றில்லையன்னாடிறத்துத்
துணியக்கருதுவதின்றேதுணிதுறைவாநிறைபொன்
னணியக்கருதுகின்றார்பலர்மேன்மேலயலவரே. (௧௯௫)

பொன்னணிவுரைத்தல்.

பலபரிசினவு மலர்நெடுங்கண்ணியை
நன்னுதற்பாங்கி பொன்னணிவென்றது.

பாப்பணியோன்றில்லைப்பல்பூமருவுசில்லோதியைநற்
காப்பணிந்தார்பொன்னணிவாரினிக்கமழ்பூந்துறைவ
கோப்பணிவான்றோய்கொடிமுன்றினின்றிவையோர்குழுமி
மாப்பணிலங்கண்முழங்கத்தழங்குமணமுரசே. (௧௯௬)

அருவிலையுரைத்தல்.

பேதையறிவு பேதைமையுடைத்தென
வாதரத்தோழி யருவிலையுரைத்தது.

எலும்பாலணியிறையம்பலத்தோனெல்லைசெல்குறுவோர்
நலம்பாவியமுற்றுநல்கினுங்கல்வரைநாடரம்ம
சிலம்பாவடிக்கண்ணிசிற்றிடைக்கேவிலைசெப்பலொட்டார்
கலம்பாவியமுலையின்விலையென்னீகருதுவதே. (௧௯௭)

அருமைகேட்டழிதல்.

பெருமைநாட் டத்தவ
னருமைகேட் டழிந்தது.

விசும்புற்றதிங்கட்கழுமழுப்போன்றினிவிம்மிவிம்மி
யசும்புற்றகண்ணோடலறாய்கிடந்தரன்றில்லையன்னாள்
குயம்புற்றரவிடைகூரெயிற்றாறல்குழன்மொழியி
னயம்பற்றிநின்றுநடுங்கித்தளர்கின்றநன்னெஞ்சமே. (௧௯௮)

தளர்வறிந்துரைத்தல்.

தண்டுறைவன் றளர்வறிந்து
கொண்டுநீங்கெனக் குறித்துரைத்தது.

மைதயங்குந்திரைவாரியைநோக்கிமடலவிழ்பூங்
கைதையங்கானலைநோக்கிக்கண்ணீர்கொண்டெங்கண்டர்தில்லைப்
பொய்தயங்குந்நுண்மருங்குனல்லாரையெல்லாம்புல்லினள்
பைதயங்கும்மரவம்புரையும்மல்குற்பைந்தொடியே. (௧௯௯)

குறிப்புரைத்தல்.

நறைக் குழலி
குறிப் புரைத்தது.

மாவைவந்தாண்டமென்னோக்கிதன்பங்கர்வண்டில்லைமல்லற்
கோவைவந்தாண்டசெவ்வாய்க்கருங்கண்ணிகுறிப்பறியேன்
பூவைதந்தாள்பொன்னம்பர்த்தந்தாளென்னைப்புல்லிக்கொண்டு
பாவைதந்தாள்பைங்கிளியளித்தாளின்றென்பைந்தொடியே. ()

அருமையுரைத்தல்.

கானின் கடுமையு மானின் மென்மையும்
பரியின்சேட்சியு மிதுவெனவுரைத்தது.

மெல்லியல்கொங்கைபெரியமின்னேரிடைமெல்லடிபூக்
கல்லியல்வெம்மைக்கடங்கடுந்தீக்கற்றுவானமெல்லாஞ்
சொல்லியசீர்ச்சுடர்த்திங்களங்கண்ணித்தொல்லோன்புலியூ
ரல்லியங்கோதைநல்லாயெல்லைசேய்த்தெம்மகனகரே. (௨0௧)

ஆதரங்கூறல்.

அழற்றடம்புரையு மருஞ்சுரமதனு
நிழற்றடமவட்கு நின்னொடேகினென்றது.

பிணையுங்கலையும்வண்பேய்த்தேரினைப்பெருநீர்நசையா
லணையுமுரம்புநிரம்பியவத்தமுமையமெய்யே
யிணையுமளவுமில்லாவிறையோனுறைதில்லைத்தண்பூம்
பணையுந்தடமுமன்றேநின்னொடேகினெம்பைந்தொடிக்கே. ()

இபந்துபாடுரைத்தல்.

கார்த்தடமுங் கயலும்போன்றீர்
வார்த்தடமுலையு மன்னனுமென்றது.

இங்கயலென்னீபணிக்கின்றதேர்தலிணைப்பதில்லாக்
கங்கையஞ்செஞ்சடைக்கண்ணுதலண்ணல்கடிகொடில்லைப்
பங்கயப்பாசடைப்பாய்தடநீயப்படர்தடத்துச்
செங்கயலன்றேகருங்கயற்கண்ணித்திருநுதலே. (௨0௩)

கற்புநலனுரைத்தல்.

பொய்யொர்தவிடை போக்குத்துணிய
வையத்திடை வழக்குரைத்தது.

தாயிற்சிறந்தன்றுநாண்டையலாருக்கந்நாண்டகைசால்
வேயிற்சிறந்தமென்றோளிதிண்கற்பின்விழுமிதன்றீங்
கோயிற்சிறந்துசிற்றம்பலத்தாடுமெங்கூத்தப்பிரான்
வாயிற்சிறந்தமதியிற்சிறந்தமதிநுதலே. (உ0௪)

துணிந்தமைகூறல்.

பொருவேலண்ணல் போக்குத்துணிந்தமை
செருவேற்கண்ணிக்குச் சென்றுசெப்பியது.

குறப்பாவைநின்குழல்வேங்கையம்போதொடுகோங்கம்விராய்
நறப்பாடலம்புனைவார்வினைவார்தம்பிரான்புலியூர்
மறப்பானடுப்பதொர்தீவினைவந்திடிற்சென்றுசென்று
பிறப்பானடுப்பினும்பின்னுந்துன்னத்தகும்பெற்றியரே. (உ0௫)

துணிவொடுவினவல்.

சிலம்பன்றுணிவொடு செல்சுரநினைந்து
கலம்புனைகொம்பர் கலக்கமுற்றது.

நிழற்றலைதீநெறிநீரில்லைகானகமோரிகத்து
மழற்றலைவெம்பரற்றென்பரென்னோதில்லையம்பலத்தான்
கழற்றலைவைத்துக்கைப்போதுகள்கூப்பக்கல்லாதவர்போற்
குழற்றலைச்சொல்லிசெல்லக்குறிப்பாகுநங்கொற்றவர்க்கே. ()

போக்கறிவித்தல்.

பொருசுடர்வேலவன் போக்குத்துணிந்தமை
யரிவைக்கவ னறியவுரைத்தது;

காயமுமாவியுநீங்கள்சிற்றம்பலவன்கயிலைச்
சீயமுமாவும்வெரீஇவரலென்பல்செறிதிரைநீர்த்
தேயமும்யாவும்பெறினுங்கொடார்நமரின்னசெப்பிற்
றேயமுநாடுமில்லாச்சுரம்போக்குத்துணிவித்தவே. (உ0எ)

நாணிழந்துவருந்தல்.

கற்புநாணினு முற்றெனத்தமையிற்
சேணெறிசெல்ல நாணுதுறந்தது.

மற்பாய்விடையோன்மகிழ்புலியூரென்னொடும்வளர்ந்த
பொற்பார்திருநாண்பொருப்பர்விருப்புப்புகுந்துநுந்தக்
கற்பார்கடுங்கால்கலக்கிப்பறித்தெறியக்கழிக
விற்பாற்பிறவற்கவேழையர்வாழியெழுமையுமே. (உ0அ)

துணிவெடுத்துரைத்தல்.

செல்வமாதர் செல்லத் துணிந்தமை
தொல்வரைநாடற்குத் தோழிசொல்லியது.

கம்பஞ்சிவந்தசலந்தரனாகங்கறுத்ததில்லை
நம்பன்சிவாகர்நற்றளிர்கற்சுரமாகுமம்பா
வம்பஞ்சியாலம்புகமிகநீண்டரிசிந்துகண்ணாள்
செம்பஞ்சியின்மிதிக்கிற்பதைக்கும்மலர்ச்சீறடிக்கே. (௨௦௯)

குறியிடங்கூறல்.

மன்னியவிருளிற் றுன்னியகுறியிற்
சேர்கிவர்கொங்கையை நீங்குகொண்டென்றது.

முன்னோன்மணிகண்டமொத்தவனம்பலந்தம்முடிதாழ்த்
துன்னாதவர்வினைபோற்பறந்தோங்குமெனதுயிரே
யன்னாளரும்பெறலாவியன்னாயருளாசையினாற்
பொன்னார்மணிமகிழ்ப்பூவிரையாம்விரைபொங்கிருளே. (௨௧௦)

அடியோடுவழிநினைந்தவனுளம்வாடல்.

நெறியுறுகுழலியொடு நீங்கத்துணிந்த
உறுசுடர்வேலோ னுள்ளம்வாடியது.

பனிச்சந்திரனொடுபாய்புனல்சூடும்பரன்புலியூ
ரணிச்சந்திகழுமஞ்சீறடியாவவழல்பழுத்த
கனிச்செந்திரளன்னகற்கடம்போந்துகடக்குமென்று
இனிச்சந்தமேகலையாட்கென்கொலாம்புகுந்தெய்துவதே. (௨௧௧)

கொண்டுசென்றுய்த்தல்.

வண்டமர் குழலியைக்
கண்டுகொள் கென்றது.

வைவந்தவேலவர்சூழ்வரத்தேர்வரும்வள்ளலுள்ளந்
தெய்வந்தருமிருடுங்குமுழுதுஞ்செழுமிடற்றின்
மைவந்தகோன்றில்லைவாழ்த்தார்மனத்தின்வழுத்துநர்போன்
மொய்வந்தவாவிதெளியுந்துயிலுமிம்மூதெயிலே. (௨௧௨)

ஓம்படுத்துரைத்தல்.

தேம்படு கோதையை
யோம்படுத்தது.

பறந்திருந்தும்பர்பதைப்பப்படரும்புரங்கரப்பச்
சிறந்தெரியாடிதென்றில்லையன்னாடிறத்துச்சிலம்பா
வறந்திருந்தன்னருளும்பிறிதாயினருமறையின்
றிறந்திரிந்தார்கலியும்முற்றம்வற்றுமிச்சேணிலத்தே. (௨௧௩)

வழிப்படுத்துரைத்தல்.

மதிநுதலியை வழிப்படுத்துப்
பதிவயிற்பெயரும் பாங்கிபகர்ந்தது.

ஈண்டொல்லையாயமுமௌவையுநீங்கவிவ்வூர்க்கவ்வைநீர்த்
தாண்டொல்லைகண்டிடக்கூடுகநும்மையெம்மைப்பிடித்தின்
றூண்டெல்லைதீரின்பந்தந்தவன்சிற்றம்பலநிலவு
சேண்டில்லைமாநகர்வாய்ச்சென்றுசேர்கதிருத்தகவே. (உகச)

மெல்லக்கொண்டேகல்.

பஞ்சிமெல்லடிப் பணைத்தோளியை
வெஞ்சுரத்திடை மெலிவகற்றியது.

பேணத்திருத்தியசீறடிமெல்லச்செல்பேரரவம்
பூணத்திருத்தியபொங்கொளியோன்புலியூர்புரையு
மாணத்திருத்தியவான்பதிசேருமிருமருங்குங்
காணத்திருத்தியபோலுமுன்னாமன்னுகானங்களே. (உகரு)

அடலேடுத்துரைத்தல்.

வரிசிலையவர் வருகுவரெனப்
புரிதருகுழலிக் கருளவனுரைத்தது.

கொடித்தேர்மறவர்குழாம்வெங்கரிநிரைகூடினென்கை
வடித்தேரிலங்கெஃகின்வாய்க்குதவாமன்னுமம்பலத்தோ
னடித்தேரலரென்னவஞ்சுவனின்னையரென்னின்மன்னுங்
கடித்தேர்குழன்மங்கைகண்டிடிவ்விண்டோய்கனவரையே. ()

அயர்வகற்றல்.

இன்னல்வெங்கடத் தெழிவேலவ
னன்னமன்னவ ளயர்வகற்றியது.

முன்னோனருண்முன்னுமுன்னாவினையின்முனகர்துன்னு
மின்னாக்கடறிதிப்போழ்தேகடந்தின்றுகாண்டுஞ்சென்று
பொன்னாரணிமணிமாளிகைத்தென்புலியூர்ப்புகழ்வார்
தென்னாவெனவுடையானடமாடுசிற்றம்பலமே. (உகஎ)

நெறிவிலக்கிக்கூறல்.

சாத்திடைக்கண்டவர் சுடர்க்குழைமாதொடு
சாத்தனிவில்லோய் தங்கென்றது.

விடலையுற்றாரில்லைவெம்முனைவேடர்தமியைமென்பூ
மிடலையுற்றார்குழல்வாடினள்மன்னுசிற்றம்பலவர்க்
கடலையுற்றாரினெறிப்பொழிந்தாங்கருக்கன்சுருக்கிக்
கடலையுற்றான்கடப்பாரில்லையின்றிக்கடுஞ்சுரமே. (உகஅ)

கண்டவர்மகிழ்தல்.

மண்டழற் கடத்துக்
கண்டவ ருரைத்தது.

அன்பணைத்தஞ்சொல்லிபின்செல்லுமாடவனீடவன்றன்
பின்பணைத்தோளிவருவிப்பெருஞ்சுரஞ்செல்வதன்று
பொன்பணைத்தன்னவிறையுறைதில்லைப்பொலிமலர்மே
னன்பணைத்தண்ணறவுண்ணளிபோன்றனிர்நாடகமே. (உகக)

வழிவிளையாடல்.

வெற்றழற்கடத்து வடிவேலண்ணல்
பின்றங்கிடையொடு விளையாடியது.

கண்கடம்மாற்பயன்கொண்டனங்கண்டினிக்காரிகைநின்
பண்கடமென்மொழியாரப்பருகவருகவின்னே
விண்கடநாயகன்றில்லையின்மெல்லியல்பங்கனெங்கோன்
றண்கடம்பைத்தடம்போற்கடுங்கானகந்தண்ணெனவே. (உஉ0)

நகரணிமைகூறல்.

வண்டமர் குழலியொடு
கண்டவ ருரைத்தது.

மின்றங்கிடையொடுநீவியன்றில்லைச்சிற்றம்பலவர்
குன்றங்கடந்துசென்றாலின்றுதோன்றுங்குரூஉக்கமலந்
துன்றங்கிடங்குந்துறைதுறைவள்ளைவெள்ளைநகையார்
சென்றங்கடைதடமும்புடைசூழ்தருசேணகரே. (உஉக)

நகர்காட்டல்.

கொடுங்கடங்கடந்த குழைமுகமாதர்க்குத்
தடங்கிடங்குசூழ் தன்னகர்காட்டியது.

மின்போல்கொடிநெடுவானக்கடலுட்டிரைவிரிப்பப்
பொன்போல்புரிசைவடவரைகாட்டப்பொலிபுலியூர்
மன்போற்பிறையணிமாளிகைகுலத்தவாய்மடவாய்
நின்போனடையன்னந்துன்னிமுன்றோன்றுநன்னீணகரே. ()

பதிபரிசுரைத்தல்.

கன்னிவர்வனசுகர் கண்டுசென்றடைந்த
பன்னிவர்மொழிக்குப் பதிபரிசுரைத்தது.

செய்குன்றுவையிவைசேர்மலர்வாவிவிசும்பியங்கி
நைகின்றதிங்களெய்ப்பாறும்பொழிலவைஞாங்கரெங்கும்
பொய்கின்றவேதியரோதிடமுந்திடமிந்திடமு
மெய்குன்றவார்சிலையம்பலவற்கிடமேந்திழையே. (உஉங)

செவிலிதேடல்.

கவலையுற்ற காதற்குறுமியைச்
செவிலியுற்றுத் தெளிந்தழிகுயது.

மயிலெனப்பேர்ந்திளவல்லியினொல்கிமென்மான்விழித்துக்
குயிலெனப்பேசுமெங்குட்டனெங்குற்றதென்னெஞ்சகத்தே
பயிலெனப்பேர்ந்தறியாதவன்றில்லைப்பல்பூங்குழலா
யயிலெனப்பேருங்கண்ணுயென்கொலாமின்றயர்கின்றதே. ()

அழத்தோடுநிற்றல்.

சுடர்க்குழைப்பாங்கி படைத்தமொழிகளவியிற்
றெப்புடைச்செவிலிக் கறத்தொடுநின்றது.

ஆளரிக்கும்மரிதாய்த்தில்லையாவருக்கும்மெளிதாந்
தாளரிக்குன்றிற்றன்பாவைக்குமேவித்தழறிகழ்வேற்
கோளரிக்குர்சிகரன்ஞரொருவர்குரூஉமலர்த்தார்
வாளரிக்கண்ணிகொண்டாள்வண்டலாயத்தெம்வாணுதலே. ()

கற்புநிலைக்கிரங்கல்.

விற்புரைநுதலி கற்புநிலைகேட்டுக்
கோடாயுள்ள நீடாமழுங்கியது.

வடுத்தான்வகிர்மலர்கண்ணிக்குத்தக்கின்றுதக்கன்முந்நீக்
கெடுத்தான்கெடலிறைல்லோன்றில்லைப்பன்மலர்கேழ்கிளர
மடுத்தான்குடைந்தன்றழுங்கவழுங்கித்தழீஇமகிழ்வுற்
றெடுத்தாற்கினியனவேயினியாவனவெம்மனைக்கே. (உஉச)

கவன்றுரைத்தல்.

அவனிலை நினைந்து
செவிலி கவன்றது.

முறுவலக்காறந்துவந்தென்முலைமுழுவித்தழுவிச்
சிறுவலக்காரங்கள்செய்தவெல்லாமுழுதுஞ்சிதையத்
தெருவலக்காலனைச்செற்றவன்சிற்றம்பலஞ்சிந்தியா
ருறுவலக்கானகந்தான்படர்வாணுமொழியிழையே. (உஉஎ)

அடிநினைந்திரங்கல்.

வெஞ்சுரமும்மவள் பஞ்சிமெல்லடியுஞ்
செவிலிநினைந்த கவலையுற்றது.

தாமேதமக்கொப்புமற்றில்லவர்தில்லைத்தண்ணனிச்சப்
பூமேன்மிதிக்கிற்பதைத்தடிபொங்குசங்காயெரியுந்
தீமேலயில்போற்செறிபரற்கானிற்சிலம்படிபா
யாமேடைக்கவருவினையேன்பெற்றவம்மனைக்கே. (உஉஅ)

நற்றாய்க்குரைத்தல்.

முகிழ்முலைமடந்தைக்கு முன்னியதறியத்
திகழ்மனைக்கிழத்திக்குச் செவிலிசெப்பியது.

தழுவினகையிறைசோரிற்றமியமென்றேதளர்வுற்
றழுவினைசெய்யுநையாவஞ்சொற்பேதையறிவிண்ணோர்
குழுவினையுய்யநஞ்சுண்டம்பலத்துக்குனிக்கும்பிரான்
செழுவினதாள்பணியார்பிணியாலுற்றுத்தேய்வித்ததே. (உஉ௯)

நற்றாய்வருந்தல்.

கோடாய் கூற
நீடாய் வாடியது.

யாழியன்மென்மொழிவன்மனப்பேதையொரேதிலன்பின்
றோழியைநீத்தென்னைமுன்னேதுறந்துதன்னோர்கண்முன்னே
வாழியிம்மூதூர்மறுகச்சென்றாளன்றுமால்வணங்க
வாழிதர்தாளம்பலம்பணியாரினருஞ்சுரமே. (உ௩0)

கிளிமொழிக்கிரங்கல்.

மெய்த்தகைமாது வெஞ்சுரஞ்செல்லத்
தத்தையைநோக்கித் தாய்புலம்பியது.

கொன்னுனைவேலம்பலவற்றொழாரிற்குன்றங்கொடியோ
ளென்னணஞ்சென்றனளென்னணஞ்சேருமெனவயரா
வென்னனைபோயினள்யாண்டையளென்னைப்பருந்தடுமென்
றென்னனைபோக்கன்றிக்கிள்ளையென்னுள்ளத்தையீர்கின்றதே. ()

சுடரோடிரத்தல்.

வெஞ்சுரந்தனிக்கெனச் செஞ்சுடரவற்கு
வேயமர்தோளி தாயர்பராயது.

பெற்றேனொடுங்கிள்ளைவாடமுதுக்குறைபெற்றிமிக்கு
கற்றேன்மொழியழற்கானடந்தாண்முகநானுகப்
பெற்றேன்பிறவிபெருமற்செய்தோன்றில்லைத்தேன்பிறங்கு
மற்றேன்மலரின்மலர்த்திரந்தேன்சுடர்வானவனே. (உ௩உ)

பருவநினைந்துகவறல்.

முற்று முலைக்கு
நற்றாய் கவன்றது.

வைம்மலர்வாட்படையூரற்குச்செய்யுங்குற்றேவன்மற்றென்
மைம்மலர்வாட்கண்ணிவல்லன்கொல்லாத்தில்லையான்மலைவாய்
மொய்ம்மலர்க்காந்தளைப்பாந்தளென்றெண்ணித் துண்ணென்றொரு
கைம்மலராற்கண்புதைத்துப்பதைக்குமெங்கார்மயிலே. [ளித்துக்

நாடத்துணிதல்.

கோடாய் மடந்தையை
நாடத் துணிந்தது.

வேயினதோளிமெலியல்விண்ணோர்தக்கன்வேள்வியின்வாய்ப்
பாயினசீர்த்தியனம்பலத்தானைப்பழித்துமும்மைத்
தீயினதாற்றல்சிரங்கண்ணிழந்துதிசைதிசைதாம்
போயினவெல்லையெல்லாம்புக்குநாடுவன்பொன்னினையே.(உகூச)

கோடிக்குறிபார்த்தல்.

நற்றாய் நயந்து
சொற்புட் பாயது.

பணங்களஞ்சாலும்பருவரவார்த்தவன்றில்லையன்ன
மணங்கொளஞ்சாயலுமன்னனுமின்னேவரக்கரைந்தா
லுணங்கலஞ்சாதுண்ணலாமொண்ணிணப்பலியோக்குவன்மாக்
குணங்களஞ்சாற்பொலிபுன்கலசேட்டைக்குலக்கொடியே. (உகூரு)

சோதிடங்கேட்டல்.

சித்தந்தளர்ந்த தேடுங்கோடாய்
உய்த்துணர்வோரை யுரைமினென்றது.

முன்னுங்கடவுட்டமுண்டநென்றில்லைமுன்னோனருளா
லின்னுங்கடியிக்கடிமனைக்கேமற்றியாமயர
மன்னுங்கடிமலர்க்கூந்தலைத்தான்பெறுமாறுமுண்டே
லுன்னுங்கடிதின்றியோதுங்கணன்மறையுத்தமரே. (உகூசா)

சுவடுகண்டறிதல்.

சுவடுபடு கடத்துச்
செவிலிகண் டறிந்தது.

தெள்வன்புனற்சென்னியோனம்பலஞ்சிந்தியாரினஞ்சேர்
முள்வன்பரன்முரம்பத்தின்முன்செய்வினையேனெடுத்த
வொள்வன்படைக்கண்ணிசீறடியிங்கிவையுங்குவையக்
கள்வன்பகட்டுரவோனடியென்றுகருதுவனே. (உகூஎ)

சுவடுகண்டிரங்கல்.

கடத்திடைக்காரிகை யடித்தலங்கண்டு
மன்னருட்கோடா யின்னலெய்தியது.

பாலொத்தநீற்றம்பலவன்கழல்பணியார்பிணிவாய்க்
கோலத்தவிசின்மிதிக்கிற்பதைத்தடிகொப்புள்கொள்ளும்
வேலொத்தவெம்பரற்கானத்தினின்றோர்விடலைபின்போங்
காலொத்தனவினையேன்பெற்றமாணிழைகான்மலரே. (உகூஅ)

வேட்டமாதரைக்கேட்டல்.

மென்மலர்சொய்யும் வேட்டமாதரைப்
பின்வருசெவிலி பெற்றிவினாயது.

பேதைப்பருவம்பின்சென்றதுமுன்றிலெனைப்பிரிந்தா
லூதைக்கலமரும்வல்லியொப்பாண்முத்தன்றில்லையன்ன
ளேதிற்சுரத்தயலானொடின்றேகினள்கண்டனையே
போதிற்பொலியுந்தொழிற்புலிப்பற்குரற்பொற்றொடியே. (உ௩௯)

புறவோடுபுலந்தல்.

காட்டுப் புறவொடு
வாட்ட முரைத்தது.

புயலன்றலர்சடையேற்றவன்றில்லைப்பொருப்பரசி
பயலன்றனைப்பணியாதவர்போன்மிகுபாவஞ்செய்தேற்
கயலன்றயினஞ்சொற்றுணைவெஞ்சுரமாதர்சென்று
வியலன்றெனக்கிற்றிலைமற்றுவாழியெழிற்புறவே. (உ௪0)

குரவோடுவருந்தல்.

தேடிச்சென்ற செவிலித்தாயர்
ஆடற்குரவொடு வாடியுரைத்தது.

பாயும்விடையோன்புலியூரனையவென்பாவைமுன்னே
காயுங்கடத்திடையாடிக்கடப்பவுங்கண்டுநின்று
வாயுந்திறவாய்குழையெழில்வீசவண்டோலுறுத்த
நீயுநின்பாவையுநின்றுநிலாவிடுநீள்குரவே. (உ௪௧)

விரதியரைவினவல்.

வழிவருகின்ற மாவிரதியரை
மொழிமின்களென்று முன்னிமொழிந்தது.

சுத்தியபொக்கணத்தென்பணிகட்டங்கஞ்சூழ்சடைவெண்
பொத்தியகோலத்தினீர்புலியூரம்பலவர்க்குற்ற
பத்தியர்போலப்பணைத்திறுமாந்தபயோதரத்தோர்
பித்திதற்பின்வரமுன்வருமோவொர்பெருந்தகையே. (உ௪உ)

வேதியரைவினவல்.

மாதின்பின் வருஞ்செவிலி
வேதியரை விரும்பிவினாயது.

வெதிரேய்கரத்துமென்றோலேய்சுவல்வெள்ளைநூலிற்கொண்மூ
வதிரேய்மறையினிவ்வாறுசெல்வீர்தில்லையம்பலத்துக்
கதிரேய்சடையோன்கரமானெனவொருமான்மயில்போ
லெதிரேவருமேசுரமேவெறுப்பவொரேந்தலொடே. (உ௪௩)

புணர்ந்துடன்வருவோரைப்பொருந்திவினவல்.

புணர்ந்துடன்வரும் புரவலனொருபால்
அணங்கமர்கோதையை யாராய்ந்தது.

மீண்டாரெனவுவந்தேன்கண்டு நும்மையிம்மேதகவே
பூண்டாரிருவர்முன்போயினரேபுலியூரெனைநின்
றாண்டானருவரையாளியன்னானைக்கண்டேனயலே
தூண்டாவிளக்கனையாயென்னையோவன்னைசொல்லியதே. (௨௪௪)

வியந்துரைத்தல்.

வேங்கைபட்டதும் பூங்கொடிநிலையும்
நாடாவரும் கோடாய்கூறியது.

பூங்கயிலாயப்பொருப்பன்றிருப்புலியூரதென்னத்
தீங்கையிலாச்சிறியாணின்றநிவ்விடஞ்சென்றெதிர்ந்த
வேங்கையின்வாயின்வியன்கைமடுத்துக்கிடந்தலற
வாங்கயிலாற்பணிகொண்டதுதிண்டிறலாண்டகையே. (௨௪௫)

இயைபெடுத்துரைத்தல்.

சேயிழையோடு செம்மல்போதர
ஆயிழைப்பங்கனென் றயிர்த்தேமென்றது.

மின்றொத்திடுகழனூபுரம்வெள்ளைசெம்பட்டுமின்ன
வொன்றொத்திடவுடையாளொடொன்றும்புலியூரனென்றே
நன்றொத்தெழிலைத்தொழவுற்றனமென்னதோர்நன்மைதான்
குன்றத்திடைக்கண்டனமன்னைநீசொன்னகொள்கையரே. (௨௪௬)

மீளவுரைத்தல்.

கடுங்கடங்கடந்தமை கைத்தாய்க்குரைத்து
நடுங்கன்மின்மீண்டு நடமினென்றது.

மீள்வதுசெல்வதன்றன்னையிவ்வெங்கடத்தக்கடமாக்
கீள்வதுசெய்தகிழவோனொடுங்கிளர்கெண்டையன்ன
நீள்வதுசெய்தகண்ணாளிந்நெடுஞ்சுரநீந்தியெம்மை
யாள்வதுசெய்தவன்றில்லையினெல்லையணுகுவரே. (௨௪௭)

உலகியல்புரைத்தல்.

செவிலியது கவலைதீர
மன்னியவுலகியன் முன்னியுரைத்தது.

சுரும்பிவர்சந்துந்தொடுகடன்முத்தும்வெண்சங்குமெங்கும்
விரும்பினர்பாற்சென்றுமெய்க்கணியாம்வியன்கங்கையென்னும்
பெரும்புனல்சூடும்பிரான்சிவன்சிற்றம்பலமனைய
கரும்பனமென்மொழியாருமந்நீர்மையர்காணுநர்க்கே. (௨௪௮)

அழுங்குதாய்க்குரைத்தல்.

செழும்பணை யணைந்தமை
அழுங்குதாய்க் குரைத்தது.

ஆண்டிலெடுத்தவராமிவர்தாமவரல்குவர்போய்த்
தீண்டிலெடுத்தவர்தீவினைதீர்ப்பவன்றில்லையின்வாய்த்
தூண்டிலெடுத்தவராறெங்கொடெற்றப்பழம்விழுந்து
பாண்டிலெடுத்தபஃறாமரைகீழும்பழனங்களே. (௨௪௧)

உடன்போக்கு முற்றிற்று.

---

௧௭. வரைவுமுடுக்கம்.

வருத்தமிகுதிகூறிவரைவுகடாதல்.

இரவுக்குறியிடத் தேந்திழைப்பாங்கி
வரைவுவேண்டுதல் வ[illegible]வுரைத்தது.

எழுங்குலைவாழையினின்கனிதின்றிளமந்தியர்தண்
செழுங்குலைவாழைநிழலிற்றுயில்சிலம்பாமுனைமே
லுழுங்கொலைவேற்றிருச்சிற்றம்பலவரையுன்னலர்போ
லழுங்குலைவேலன்னகண்ணிக்கென்றோநின்னருள்வகையே. ()

பெரும்பான்மைகூறிமறுத்தல்.

குலம்புரி கொம்பர்க்குச்
சிலம்பன் செப்பியது.

பரம்பயன்றன்னடியேனுக்குப்பார்விசும்பூடுருவி
வரம்பயன்மாலறியாத்தில்லைவானவன்வானகஞ்சே
ரரம்பையர்தம்மிடமோவன்றிவேழத்தினென்புநட்ட
குரம்பையர்தம்மிடமோவிடந்தோன்றுமிக்குன்றிடத்தே. (௨௫௧)

உள்ளதுகூறிவரைவுகடாதல்.

இன்மையுரைத்த மன்னனுக்கு
மாழைநோக்கி தோழியுரைத்தது.

சிறார்கவண்வாய்த்தமணியிற்சிதைபெருந்தேனிழுமென்
றிறால்கழிவுற்றெஞ்சிறுகுடிலூர்துமிடமிதெந்தை
யுறாவரையுற்றார்குறவர்பெற்றாளுங்கொடிச்சியும்பர்
பெறாவருளம்பலவன்மலைக்காத்தும்பெரும்புனமே. (௨௫௨)

ஏதங்கூறியிரவரவுவிலக்கல்.

இரவருதய மேந்தறுச்சென்னிப்
பருவரலெய்திப் பாங்கிபகர்ந்தது.

கடந்தொறும்வாரணவல்சியினுடிப்பல்சியங்கங்கு
லிடந்தோறும்பார்க்குமியவொருநீயெழில்வேலின்வந்தாற்
படந்தொறுந்தீயரவன்னம்பலம்பணியாரினெம்மைத்
தொடர்ந்தொறுந்துன்பென்பதேயன்பகின்னருடோன்றுவதே. ()

பழிவரவுரைந்துப்பகல்வரவுவிலக்கல்.

ஆங்கனமொழுகு மடல்வேலண்ணலைப்
பாங்கியைய பகல்வரலென்றது.

களிறுற்றசெல்லல்களைவயிற்பெண்மரங்கைஞ்ஞெமிர்த்துப்
பிளிறுற்றவானப்பெருவரைநாடபெடைநடையோ
டொளிறுற்றமேனியன்சிற்றம்பலநெஞ்சுறுதவர்போல்
வெளிறுற்றவான்பழியாம்பகனீசெய்புமெய்யருளே. (உ௯௪)

தோழியிரந்துகூறல்.

இரவாளி னேதமஞ்சிச்
சுரிதருகுழற் றோழிசொல்லியது.

கழிகட்டலைமலைவோன்புலியூர்கருதாதவர்போற்
குழிகட்களிறுவெரீஇயரியாளிகுழீஇவழங்காக்
கழிகட்டிரவின்வரல்கழல்கைதொழுதேயிரந்தேன்
பொழிகட்புயலின்மயிலிற்றுவளுமிவள்பொருட்டே. (உ௯௫)

தாயறிவுகூறல்.

நிறைப்புறத்தச் செம்மல்கேட்ப
வெறிக்குழற்பாங்கி மெல்லியற்குரைத்தது.

விண்ணுஞ்செலவறியாவெறியார்கழல்வீழ்சடைத்தீ
வண்ணன்சிவன்றில்லைமல்லெழிற்கானலரையிரவி
னண்ணன்மணிநெடுந்தேர்வந்ததுண்டாமெனச்சிறிது
கண்ணுஞ்சிவந்தன்னையென்னைபுநோக்கினள்கார்மயிலே. (உ௯௬)

மந்திமேல்வைத்துவரைவுகடாதல்.

வரிவளையை வரைவுகடாவி
யரிவைதோழி யுரைபகர்ந்தது.

வான்றோய்பொழிலெழின்மாங்கனிமந்தியின்வாய்க்கடுவன்
றேன்றோய்த்தருத்திமகிழ்வகண்டாடிருநீண்முடிமேன்
மீன்றோய்புனற்பெண்ணைவைத்துடையாளையுமேனிவைத்தான்
வான்றோய்மதிற்றில்லைமாநகர்போலும்வரிவளையே. (உ௯௭)

காவன்மேல்வைத்துக்கண்டுயிலாமைகூறல்.

நகர் காவலின்
மிகுதி கூறல்.

நறைக்கண்மலிகொன்றையோனின்றுநாடகமாடுதில்லைச்
சிறைக்கண்மலிபுனற்சீர்நகர்காக்குஞ்செவ்வேலிளைஞர்
பறைக்கண்படும்படுதோறும்படாமுலைப்பைந்தொடியாள்
கறைக்கண்மலிகதிர்வேற்கண்படாதுகலங்கினவே. (உருஅ)

பகலுடம்பட்டாள்போன்றிரவரவுவிலக்கல்.

விரைதரு தாரோ
யிரவர லென்றது.

கலராயினர்நினையாத்தில்லையம்பலத்தான்கழற்கன்
பிலராயினர்வினைபோலிருடீண்டிமுழங்கிமின்னிப்
புலராவிரவும்பொழியாமழையும்புண்ணின்றுழைவேன்
மலராவருமருந்துமில்லையோநும்வரையிடத்தே. (உருக)

இரவுடம்பட்டாள்போன்றுபகல்வரவுவிலக்கல்.

இகலடு வேலோய்
பகல்வர லென்றது.

இறவரையும்பர்க்கடவுட்பராய்நின்றெழிலியுன்னிக்
குறவரையார்க்குங்குளிர்வரைநாடகொழும்பவள
நிறவரைமேனியன்சிற்றம்பலநெஞ்சுறாதவர்போ
லுறவரைமேகலையாட்கலராம்பகலுன்னருளே. (உசுO)

இரவும்பகலும்வரவுவிலக்கல்.

இரவும் பகலும்
வரவொழி கென்றது.

சுழியாவருபெருநீர்சென்னிவைத்தென்னைத்தன்றொழும்பிற்
கழியாவருள்வைத்தசிற்றம்பலவன்கரந்தருமான்
விழியாவரும்புரிமென்குழலாடிறத்தையமெய்யே
பழியாம்பகல்வரினீயிரவேதும்பயனில்லையே. (உசுக)

காலங்கூறிவரைவுகடாதல்.

முட்டியபொருளைச் சிந்தையில்வைத்து
வரைதருகிளவியிற் றெரியவுரைத்தது.

மையார்கதலிவனத்துவருக்கைப்பழம்விழுதே
னெய்யாதயின்றிளமந்திகள்சோருஞ்சிலம்பா
மெய்யாவரியதெனம்பலத்தான்மதியூர்கொள்வெற்பின்
மொய்யார்வளரிளவேங்கைபொன்மாலையின்முன்னினவே. ( )

கூறுவிக்குற்றல்.

ஒத்ததொவ்வா துரைத்ததோழி
கொத்தவிழ்கோதையாற் கூறுவிக்குற்றது.

தேமாம்பொழிற்றில்லைச்சிற்றம்பலத்துவிண்ணோர்வணங்க
நாமாதரிக்கநடம்பயில்வோனைநண்ணுதவரின்
வாமாண்கலைசெல்லநின்றார்கிடந்தாம்மல்லல்கண்டாற்
றாமாவறிகிலராயினென்னுஞ்சொல்லுந்தன்மைகளே. (உசுந)

செலவுநினைந்துரைத்தல்.

பாங்கிநெருங்கப் பணிமொழிமொழிந்து
தேங்கமழ்சிலம்பற்குச் சிறைப்புறக்கிளவி.

வல்சியினெண்குவளர்புற்றகழமல்கும்மிருள்வாய்ச்
செல்வரிதன்றுமன்சிற்றம்பலவரைச்சேரலர்போற்
கொல்கரிசீயங்குறுகாவகைபிடிதானிடைச்செல்
கல்லதரென்வந்தவாறென்பவர்ப்பெறிற்கார்மயிலே. (உசுச)

பொலிவழிவுரைத்துவரைவுகடாதல்.

வரைவுவிரும்பு மன்னுயிர்ப்பாங்கி
விரைதருகுழலி மெலிவுரைத்தது.

வாரிக்களிற்றின்மருப்புகுமுத்தம்வரைமகளிர்
வேரிக்களிக்கும்விழுமலைநாடவிரிதிரையி
னாரிக்களிக்கமர்நன்மாச்சடைமுடிநம்பர்தில்லை
யேரிக்களிக்கருமஞ்ஞையின்சீர்மையென்னெய்துவதே. (உசுரு)

வரைவுமுடுக்க முற்றிற்று.

கஅ. வரைபொருட்பிரிதல்.

முலைவிலைகூறல்.

கொலைவேற் கண்ணிக்கு
விலையிலை யென்றது.

குறைவிற்குங்கல்விக்குஞ்செல்விற்குநின்குலத்திற்கும்வந்தோர்
நிறைவிற்குமேதகுநீதிக்குமேற்பினல்லாளிணையி
னிறைவிற்குலாவரையேந்திவண்டில்லையனேழ்பொழிலு
முறைவிற்குலாநுதலாள்விலையோமெய்ம்மையோதுநர்க்கே. ()

வருமதுகூறிவரைவுடம்படுத்தல்.

தொடுத்தனவிடுத்துத் தோகைதோளெய்
திடுக்கண்பெரி திரவினென்றது.

வடுத்தனநீள்வகிர்க்கண்ணிவெண்ணித்திலவாணகைக்குத்
தொடுத்தனநீவிடுத்தெய்தத்துணியென்னைத்தன்றொழும்பிற்
படுத்தான்னீள்கழலீசர்சிற்றம்பலந்தாம்பணியார்க்
கடுத்தனதாம்வரிற்பொல்லாதிரவினின்றாருளே. ௨௬௭)

வரைபொருட்பிரிவையுரையெனக்கூறல்.

ஆங்கவன்வயி னீங்கலுற்றவன்
இன்னுயிர்த்தோழிக்கு முன்னிமொழிந்தது.

குன்றங்கிடையுங்கடந்துமர்கூறுநிதிகொணர்ந்து
மின்றங்கிடைநும்மையும்வந்துமேவுவனம்பலஞ்சேர்
மன்றங்கிடைமருதேகம்பம்வாஞ்சியமன்னபொன்னைச்
சென்றங்கிடைகொண்டுவாடாவகைசெப்புதேமொழியே. (௨௬௮)

நீயேகூறென்றல்.

காய்கதிர்வேலோய் கனங்குழையவட்கு
நீயேயுரை நின்செலவென்றது.

கேழேவரையுமில்லோன்புலியூர்ப்பயில்கிள்ளையன்ன
யாழேர்மொழியாளிரவரினும்பகற்சேறியென்று
வாழேனெனவிருக்கும்வரிக்கண்ணியைநீவருட்டித்
தாழேனெனவிடைக்கட்சொல்லியேகுதனிவள்ளலே. (௨௬௯)

சொல்லாதேகல்.

நிறைவலி வாட
வுரையா தகன்றது.

வருட்டிற்றிகைக்கும்வசிக்கிற்றுளங்குமனமகிழ்ந்து
தெருட்டிற்றெளியலள்செப்பும்வகையில்லைசீருக்கன்
குருட்டிற்புகச்செற்றகோன்புலியூர்குறுகார்மனம்போன்
றிருட்டிற்புரிகுழலாட்கெங்ஙனேசொல்லியேகுவனே. (௨௭௦)

பிரிந்தமைகூறல்.

தேங்கமழ் குழலிக்குப்
பாங்கி பகர்ந்தது.

நல்லாய்நமக்குற்றதென்னென்றுரைக்கேனமர்தொடுத்த
வெல்லாநிதியுமுடன்விடுப்பானிமையோரிறைஞ்சு
மல்லார்கழலழல்வண்ணர்வண்டில்லைதொழார்களல்லாற்
செல்லாவழற்கடமின்றுசென்றார்நஞ்சிறந்தவரே. (௨௭௧)

நெஞ்சொடுகூறல்.

கல்வரைநாடன் சொல்லாதகல
மின்னொளிமருங்கு நன்னொளிதளர்ந்தது.

அருந்தும்விடமணியாமணிகண்டன்மற்றண்டர்க்கெல்லா
மருந்துமமிர்தமுமாகுமுன்னோன்றில்லைவாழ்த்தும்வள்ள
திருந்துங்கடனெறிசெல்லுமிவ்வாறுசிதைக்குமென்றால்
வருந்தும்மடநெஞ்சமேயென்னயாமினிவாழ்வகையே. (உ௭உ)

நெஞ்சொடுவருந்தல்.

வெற்ப னிங்கப்
பொற்பு வாடியது.

ஏர்ப்பின்னைதோண்முன்மணந்தவனேத்தவெழிறிகழுஞ்
சீர்ப்பொன்னைவென்றசெறிகழலோன்றில்லைச்சூழ்பொழில்வாய்க்
கார்ப்புன்னைபொன்னவிழ்முத்தமணலிற்கலந்தகன்றார் [தே.
தேர்ப்பின்னைச்சென்றவென்னெஞ்சென்கொலாயின்றுசெய்கின்ற

வருந்தங்கண்டுரைத்தல்.

அழலுறுகோதையின் விழுமுறுபேதையை
நீங்கலரெனப் பாங்கிபகர்ந்தது.

கானமர்குன்றர்செவியுறவாங்குகணைதுணையா
மானமர்நோக்கியர்நோக்கெனமானற்றொடைமடக்கும்
வானமர்வெற்பர்வண்டில்லையின்மன்னைவணங்கலர்போற்
றேனமர்சொல்லிசெல்லார்செல்லல்செல்லறிருநுதலே. (உ௭௪)

வழியொழுகிவெய்புறுத்தல்.

சூழிருங் கூந்தலைத்
தோழி தெருட்டியது.

மதுமலர்ச்சோலையும்வாய்மையுமன்புமருவிவெங்கான்
கதுமெனப்போக்குறிதியினருக்குமுன்னிக்கலுழ்ந்தா
ளொதுமலர்நோக்கமொர்மூன்றுடையோன்றில்லைநோக்கலர்போ
லிதுமலர்ப்பாவைக்கென்னோவந்தவாறென்பரேந்திழையே. ()

வன்புறையெதிரழிந்திரங்கல்.

வன்கறைவேலோன் வரைவுரீட
வன்புறையழிந்தவள் மனமழுங்கியது.

வந்தாய்பவரையில்லாமயின்முட்டையிளையமந்தி
பந்தாடிரும்பொழிற்பல்வரைநாடன்பண்போவினிதே [போற்
கொந்தார்நறுங்கொன்றைக்கூத்தன்றென்றில்லைதொழார் குழுப்
சிந்தாகுலமுற்றுப்பற்றின்றிநையுந்திருவினர்க்கே. (உ௭௬)

வாய்மைகூறிவருத்தந்தணித்தல்.

வேற்றடங் கண்ணியை
யாற்று வித்தது.

மொய்யென்பதேயிழைகொண்டவனென்னைத்தன்மொய்கழற்காட்
செய்யென்பதேசெய்தவன்றில்லைச்சூழ்கடற்சேர்ப்பர்சொல்லும்
பொய்யென்பதேகருத்தாயிற்புரிகுழற்பொற்றொடியாய்
மெய்யென்பதேதுமற்றில்லைகொலாமிவ்வியலிடத்தே. (உஎஎ)

தேறாதுபுலம்பல்.

தீதறுகண்ணி தேற்றத்தேறது
போதருகுழலி புலம்பியது.

மன்செய்தமுன்னாண்மொழிவழியேயன்னவாய்மைகண்டு
மென்செய்தநெஞ்சுசிறையுநில்லாவெனதின்னுயிரும்
பொன்செய்தமேனியன்றில்லையுறாரிற்பொறையரிதா
முன்செய்ததீங்குகொல்காலத்துநீர்மைகொன்மொய்குழலே. ()

காலமறைத்துரைத்தல்.

காந்தள்கருவுறக் கடவுண்மழைக்கென்
றேந்திழைப்பாங்கி யினிதியம்பியது.

கருந்தினையோம்பக்கடவுட்பராவிநமர்கலிப்பச்
சொரிந்தனகொண்மூச்சுரந்ததன்பேரருளாற்றொழும்பிற்
பரிந்தெனையாண்டசிற்றம்பலத்தான்பரங்குன்றிற்றன்றி
விரிந்தனகாந்தள்வெருவரல்காவெனவெள்வளையே. (உஎக)

தூதுவரவுரைத்தல்.

ஆங்கொரு தூதுவரப்
பாங்கிகண் டுரைத்தது.

வென்றவர்முப்புரஞ்சிற்றம்பலத்துணின்றாடும்வெள்ளிக்
குன்றவர்குன்றுவருடாக்கூடினர்நம்மகன்று
சென்றவர்தூதுகொல்லோவிருந்தேமையுஞ்செல்லல்செப்பா
நின்றவர்தூதுகொல்லோவந்துதோன்றுநிரைவளையே. (உஅ0)

தூதுகண்டழுங்கல்.

அயலுற்ற தூதுவரக்
கயலுற்றகண்ணி மயலுற்றது.

வருவனசெல்வனதூதுகளேதிலவான்புலியூ
ரொருவனதன்பரினின்பக்கலவிகளுள்ளுருகத்
தருவனசெய்தெனதாவிகொண்டேகியென்னெஞ்சிற்றம்மை
யிருவினகாதலரேதுசெய்வானின்றிருக்கின்றதே. (உஅக)

மெலிவுகண்டுசெவிலிகூறல்.

வண்டமர் புரிகுழ லொண்டொடிமெலிய
வாடாநின்று கோடாய்கூறியது.

வேயினமென்றோண்மெலிந்தொளிவாடிவிழிபிறிதாய்ப்
பாயினமேகலைபண்டையளல்லள்பவளச்செவ்வி
யாயினவீசனமரர்க்கமரன்சிற்றம்பலத்தான்
சேயினதாட்சியிற்பட்டனளாமித்திருந்திழையே. (௨௮௨)

கட்டுவைப்பித்தல்.

மால்கொண்ட கட்டுக்
கால் கொண்டது.

சுணங்குற்றகொங்கைகள்சூதுற்றிலசொற்றெளிவுற்றில
குணங்குற்றங்கொள்ளும்பருவமுறாள்குறுகாவசுரர்
நிணங்குற்றவேற்சிவன்சிற்றம்பலநெஞ்சுறாதவர்போ
லணங்குற்றநோயறிவுற்றுரையாடுமின்னன்னையரே. (௨௮௩)

கலக்கமுற்றுநிற்றல்.

தெய்வத்திற் றெரியுமொ
எவ்வத்தின் மெலிவுற்றது.

மாட்டியன்றேயெம்வயிற்பெருநாணினிமாக்குடிமா
சூட்டியன்றேநிற்பதோடியவாறிவளுள்ளமெல்லாங்
காட்டியன்றேநின்றதில்லைத்தொல்லோனைக்கல்லாதவர்போல்
வாட்டியன்றோர்குழலார்மொழியாதனவாய்திறந்தே. (௨௮௪)

கட்டுவித்திகூறல்.

கட்டு வித்தி
விட்டு ரைத்தது.

குயிலிதன்றேயென்னலாஞ்சொல்லிகூறன்சிற்றம்பலத்தா
னியலிதன்றேயென்னலாகாவிறைவிறற்சேய்கடவு
மயிலிதன்றேகொடிவாரணங்காண்கவன்சூர்தடிந்த
வயிலிதன்றேயிதன்றேநெல்லிற்றோன்றுமவன்வடிவே. (௨௮௫)

வேலனையழைத்தல்.

வெறியாடிய வேலனைக்கூஉய்
நெறியார்குழலி தாயர்நின்றது.

வேலன்புகுந்துவெறியாடுகவெண்மறியறுக்க
காலன்புகுந்தவியக்கழல்வைத்தெழிற்றில்லைநின்ற
மேலன்புகுந்தென்கணின்றானிருந்தவெண்காடனைய
பாலன்புகுந்திப்பரிசினினிற்பித்தபண்பினுக்கே. (௨௮௬)

உள்ளவலெய்தல்.

ஆடியவெறியிற் கூடுவதறியாது
அன்னையுங்கோதை யின்னலெய்தியது.

அயர்ந்தும்வெறிமறியாவிசெகுத்தும்விளர்ப்பயலார்
பெயர்ந்துமொழியாவிடினென்னைபேசுவபேர்ந்திருவ
ருயர்ந்தும்பணிந்துமுணரானம்பலமுன்னலரிற்
றுயர்ந்தும்பிறிதினொழியினென்னாந்துறைவனுக்கே. (உஅஎ)

வெறிவிலக்குவிக்கநினைத்தல்.

அயறுறுவெறியின் மயறுறுமென
விலக்கலுற்ற குலக்கொடிநினைந்தது.

சென்றார்திருத்தியசெல்லனின்றார்கள்சிதைப்பரென்றா
னன்றோவழகிதன்றேயிறைதில்லைதொழாரினைந்து
மொன்றாமிவட்குமொழிதல்கில்லேன்மொழியாதுமுய்யேன்
குன்றார்துறைவர்க்குறுவேனுரைப்பனிக்கூர்மறையே. (உஅஅ)

அறத்தொடுநிற்றலையுரைத்தல்.

வெறித்தலைவெரீஇ வெருவருதோழிக்
கறத்தொடுநின்ற வாயிழையுரைத்தது.

யாயுந்தெறுகவயலவரேசுகவூர்நகுக
நீயுமுனிகநிகழ்ந்ததுகூறுவலென்னுடைய
வாயுமனமும்பிரியாவிறைதில்லைவாழ்த்துநர்போற்
றாயவினக்குக்கடுஞ்சூடருவன்சுடர்க்குழையே. (உஅகூ)

அறத்தொடுநிற்றல்.

செய்தவெறியி னெய்தவதறியாது
நிறத்தொடித்தோழிக் கறத்தொடுநின்றது.

ரு வண்டலுற்றேமெங்கண்வந்தொருதோன்றல்வரிவளையீ
ருண்டலுற்றேமென்றுநின்றதொர்போழ்துடையான்புலியூர்க்
கொண்டலுற்றேறுங்கடல்வரவெம்முயிர்கொண்டுதந்து
கண்டலுற்றேர்நின்றசேரிச்சென்றானொர்கழலவனே. (உகூ0)

ஐயந்தீரக்கூறல்.

விலக்குதல்விரும்பு மேதகுதோழி
யலங்கற்குழலிக் கறியவுரைத்தது.

குடிக்கலர்கூறினுங்கூறாவியன்றில்லைக்கூத்தனதாண்
முடிக்கலராக்குமொய்பூந்துறைவற்குமுரிபுருவ
வடிக்கலர்வேற்கண்ணிவந்தனசென்றுநம்யாயறியும்
படிக்கலராமிவையென்னுமறைக்கும்பரிசுகளே. (உகூக)

வெறிவிலக்கல்.

அறத்தொடுநின்ற திறத்தினிற்பாங்கி
வெறிவிலக்கிப் பிறிதுரைத்தது.

விதியுடையாருண்கவேரிவிலக்கலமம்பலத்துப்
பதியுடையான்பரங்குன்றினிற்பாய்புனல்யாமொழுகக்
கதியுடையான்கதிர்த்தோணிற்கவேறுகருதுநின்னின்
மதியுடையார்தெய்வமேயில்லைகொல்லினிவையகத்தே. (உகஉ)

செவிலிக்குத்தோழியறத்தொடுநிற்றல்.

சிறப்புடைச் செவிலிக்
கறத்தொடு நின்றது.

மனக்களியாயின்றியான்மகிழ்தூங்கத்தன்வார்கழல்க
ளெனக்களியாகிற்குமம்பலத்தோனிருந்தண்கயிலைச்
சினக்களியானைகடிந்தாரொருவர்செவ்வாய்ப்பசிய
புனக்கிளியாங்கடியும்வரைச்சாரற்பொருப்பிடத்தே. (உகங)

நற்றாய்க்குச்செவிலியறத்தொடுநிற்றல்.

கற்பினின்வழாமை நிற்பித்தெடுத்தோள்
குலக்கொடிதாயர்க் கறத்தொடுநின்றது.

இளையாளிவளையென்சொல்லிப்பரவுதுமீரெயிறு
முளையாவளவின்முதுக்குறைந்தாண்முடிசாய்த்திமையோர்
வளையாவழுத்தாவருதிருச்சிற்றம்பலத்துமன்னன்
றிளையாவருமருவிக்கயிலைப்பயில்செல்வியையே. (உகச)

தேர்வரவுகூறல்.

மணிநெடுந்தேரோ னணிதினின்வருமென
யாழியன்மொழிக்குத் தோழிசொல்லியது.

கள்ளினமார்த்துண்ணும்வண்கொன்றையோன்றில்லைக்கார்க்கடல்
புள்ளினமார்ப்பப்பொருதிரையார்ப்பப்புலவர்கடம் [வாய்ப்
வள்ளினமார்ப்பமதுகரமார்ப்பவலம்புரியின்
வெள்ளினமார்ப்பவரும்பெருந்தேரின்றுமெல்லியலே. (உகரு)

மணமுரசுகேட்டுமகிழ்ந்துரைத்தல்.

நிலங்காவலர் நின்மணத்தி
னலங்கண்டவர் நயந்துரைத்தது.

பூரணபொற்குடம்வைக்கமணிமுத்தம்பொன்பொதிந்த
தோரணநீடுகதூரியமார்க்கதொன்மாலயற்குக்
காரணனேரணிகண்ணுதலோன்கடற்றில்லையன்ன
வாரணவும்முலைமன்றலென்றேங்குமணமுரசே. (உகசா)

ஐயுற்றுக்கலங்கல்.

நல்லவர்முகமற் றல்லவர்முகமெனத்
தெரிவரிதென வரிவைகலங்கியது.

அடற்களியாவர்க்குமன்பர்க்களிப்பவன்றுன்பவின்பம்
படக்களியாவண்டறைபொழிற்றில்லைப்பரமன்வெற்பிற்
கடக்களியானைகடிந்தவர்க்கோவன்றிரின்றவர்க்கோ
விடக்களியாநம்விழாநகரார்க்கும்வியன்முரசே. (௨௯௭)

நிதிவரவுகூறுநிற்றல்.

மகிழ்தருமனத்தொடு வண்புகழ்த்தோழி
நிகழ்ந்திமடந்தைக்குத் தெரியவுரைத்தது.

என்கடைக்கண்ணினும்யான்பிறவேத்தாவகையிரங்கித்
தன்கடைக்கண்வைத்ததண்டில்லைச்சங்கரன்றாழ்கயிலைக்
கொன்கடைக்கண்டரும்யானைகடிந்தார்கொணர்ந்திறுத்தார்
முன்கடைக்கண்ணிதுகாண்வந்துதோன்றுமுழுநிதியே. (௨௯௮)

வரைபொருட்பிரிதல் முற்றிற்று.

---

௧௯. மணஞ்சிறப்புரைத்தல்.

மணமுரசுகூறல்.

வரைவுதோன்ற மகிழ்வுறுதோழி
நிரைவளைக்குநின்றுரைத்தது.

பிரசந்திகழும்வரைபுரையானையின்பீடழித்தார்
முரசந்திகழுமுருகியங்குமெவர்க்குமுன்னு
மரசம்பலத்துநின்றாடும்பிரானருள்பெற்றவரிற்
புரைசந்தமேகலைபாய்துயர்தீரப்புகுந்தின்றே. (௨௯௯)

மகிழ்ந்துரைத்தல்.

மன்னியவயிற் பொன்வருங்கோதையை
நன்னுதற்றோழி தன்னின்மகிழ்ந்தது.

இருந்துதியென்வயிற்கொண்டவன்யானெப்பொழுதுமுன்னு
மருந்துதிசைமுகன்மாற்கரியோன்றில்லைவாழ்த்தினர்போ
லிருந்துதிவண்டனவாலெரிமுன்வலஞ்செய்திடப்பா
லருந்துதிகாணுமளவுஞ்சிலம்பனருந்தழையே. (௩௦௦)

வழிபாடுகூறல்.

மனைமனைகாண வந்தசெவிலிக்குத்
தமேமலர்க்குழலி தோழிசொல்லியது.

சிரியலாவியும்யாக்கையுமென்னச்சிறந்தமையாற்
காரியல்வாட்கண்ணியெண்ணகலார்கமலங்கலந்த
வேரியுஞ்சந்தும்வியறந்தெனக்கற்பினிற்பரன்னே
காரியல்கண்டர்வண்டில்லைவணங்குமெங்காவலரே. (௩0௧)

வாழ்க்கைநலங்கூறல்.

மனைமனைச்சென்று மகிழ்தருசெவிலி
யனிமனைக்கிழத்திக் கதன்சிறப்புரைத்தது.

தொண்டினமேவுஞ்சுடர்க்கழலோன்றில்லைத்தொன்னகரிற்
கண்டினமேவுமினியவணின்கொழுநன்செழுமென்
றண்டினமேவுதிண்டோளவன்யானவடற்பணிவோள்
வண்டினமேவுங்குழலாளயன்மன்னுமிவ்வயலே. (௩0௨)

காதல்கட்டுரைத்தல்.

சோதி வேலவன்
காதல்கட் டுரைத்தது.

பொட்டணியானுதல்போயிறும்பொய்போலிடையெனப்பூ
ணிட்டணியான்றவிசின்மலரன்றிமிதிப்பக்கொடான்
மட்டணிவார்குழல்வையான்மலர்வண்டுறுதலஞ்சிக்
கட்டணிவார்சடையோன்றில்லைபோவிதன்காதலனே. (௩0௩)

கற்பறிவித்தல்.

விற்பொலி நுதலி
கற்பறி வித்தது.

தெய்வம்பணிகழலோன்றில்லைச்சிற்றம்பலமனையா
டெய்வம்பணிந்தறியாளென்றுநின்றுதிறைவழங்காத்
தெவ்வம்பணியச்சென்றாலுமன்வந்தன்றிச்சேர்ந்தறியான்
பௌவம்பணிமணியன்னார்பரிசின்னபான்மைகளே. (௩0௪)

கற்புப்பயப்புரைத்தல்.

கற்புப் பயந்த
அற்புத முரைத்தது.

சிற்பந்திகழ்தருதிண்மதிற்றில்லைச்சிற்றம்பலத்துப்
பொற்பந்தியன்னசடையவன்பூவணமன்னபொன்னின்
கற்பந்திவாய்வடமீனுங்கடக்கும்படிகடந்து
மிற்பந்திவாயன்றிவைகல்செல்லாதவனிர்ங்களிறே. (௩0௫)

மருவுதலுரைத்தல்.

இருவர் காதலு
மருவுத லுரைத்தது.

மன்னவன்றெம்முனைமேற்செல்லுமாயினுமாலரியே
றன்னவன்றேர்புறத்தல்கல்செல்லாதுவரகுணனாந்
தென்னவனேத்துசிற்றம்பலத்தான்மற்றைத்தேவர்க்கெல்லா
முன்னவன்மூவலன்றாளுமற்றோர்தெய்வமுன்னலளே. (௨௦௬)

கலவியின்பங்கூறல்.

நன்னுதன்மடந்தை தன்னலங்கண்டு
மகிழ்தூங்குளத்தோ டிகுளைகூறியது.

ஆனந்தவெள்ளத்தழுந்துமொராருயிரீருருக்கொண்
டானந்தவெள்ளத்திடைத்திளைத்தாலொக்குமம்பலஞ்சே
ரானந்தவெள்ளத்தறைகழலோனருள்பெற்றவரி
னானந்தவெள்ளம்வற்றாதுமுற்றாதிவ்வணிநலமே. (௨௦௭)

மணஞ்சிறப்புரைத்தல் முற்றிற்று.

---

௨௦. ஓதற்பிரிவு.

கல்விநலங்கூறல்.

கல்விக்ககல்வர் செல்வத்தவரெனச்
செறிகுழற்பாங்கிக் கறிவுறிவித்தது.

சீரளவில்லாத்திகழ்தருகல்விச்செம்பொன்வரையி
னாரளவில்லாவளவுசென்றாரம்பலத்துணின்ற
வோரளவில்லாவொருவனிருங்கழலுன்னினர்போ
லேரளவில்லாவளவினராகுவரேந்திழையே. (௨௦௮)

பிரிவுநினைவுரைத்தல்.

கல்விக்ககல்வர் செல்வத்தவரெனப்
பூங்குழன்மடந்தைக்குப் பாங்கிபகர்ந்தது.

வீதலுற்றார்தலைமாலையன்றில்லைமிக்கோன்கழற்கே
காதலுற்றார்நன்மைகல்விசெல்வீதருமென்பதுகொண்
டோதலுற்றாருற்றுணர்தலுற்றார்செல்லன்மல்லழற்கான்
போதலுற்றார்நின்புணர்முலையுற்றபுரவலரே. (௨௦௯)

கலங்கங்கண்டுரைத்தல்.

ஓதற்கல்வர் மேதக்கவெனப்
பூங்கொடிகலக்கம் பாங்கிகண்டுரைத்தது.

கற்பாமதிற்றில்லைச்சிற்றம்பலமதுகாதல்செய்த
விற்பாவிலங்கலெங்கோனைவிரும்பலர்போலவன்பர்
சொற்பாவிரும்பினரென்னமெல்லோதிசெவிப்புறத்துக்
கொற்பாவிலங்கிலைவேல்குளித்தாங்குக்குறுகியதே. (௩௧௦)

வாய்மொழிகூறித்தலைமகள்வருந்தல்.

நீதறுகல்விக்குச் செல்வன்செல்லுமெனப்
போதுறுகுழலி புலம்பியது.

பிரியாமையுமுயிரொன்றாவதும்பிரியிற்பெரிதுந்
தரியாமையுமொருங்கேநின்றுசாற்றினர்தையன்மெய்யிற்
பிரியாமைசெய்துநின்றேன்றில்லைப்பேரியலூரரன்ன
புரியாமையுமிதுவேயினியென்னும்புகல்வதுவே. (௨௧௧)

ஓதற்பிரிவு முற்றிற்று.

---

௨௧. காவற்பிரிவு.

பிரிவறிவித்தல்.

இருநிலங்காவற் கேகுவர்நமரெனப்
பொருசுடர்வேலோன் போக்கறிவித்தது.

மூப்பானிளையவன்முன்னவன்பின்னவன்முப்புரங்கள்
வீப்பான்வியன்றில்லையானருளால்விரிநீருலகங்
காப்பான்பிரியக்கருதுகின்றார்நமர்கார்க்கயற்கட்
பூப்பானலமொளிரும்புரிதாழ்குழற்பூங்கொடியே. (௩௧௨)

பிரிவுகேட்டிரங்கல்.

மன்னவன்பிரிவு நன்னுதலறிந்து
பழங்கணெய்தி யழுங்கல்சென்றது.

சிறுகட்பெருங்கைத்திண்கோட்டுக்குழைசெவிச்செம்முகமாத்
தெறுகட்டழியமுன்னுய்யச்செய்தோர்கருப்புச்சிலையோ
னுறுகட்டழலுடையோனுறையம்பலமுன்னலரிற்
றுறுகட்புரிகுழலாயிதுவோவின்றுசூழ்கின்றதே. (௩௧௩)

காவற்பிரிவு முற்றிற்று.

---

௨௨. பகைதணிவினைப்பிரிவு.

பிரிவுகூறல்.

துன்றுபகைதணிப்ப மன்னவன்பிரிவு
நன்னுதற்கோதைக்கு முன்னிமொழிந்தது.

மிகைதணித்தற்கரிதாமிருவேந்தர்வெம்போர்மிடைந்த
பகைதணித்தற்குப்படர்தலுற்றூர்நமர்பல்பிறவித் [பொழில்வாய்
தொகைதணித்தற்கென்னையாண்டுகொண்டோன்றில்லைச்சூழ்
முகைதணித்தற்கரிதாம்புரிதாழ்தருமொய்குழலே. (௩௧௪)

வருந்தநீதணிந்தல்.

மணிப்பூண்மன்னவன் றணப்பதில்லை
அஞ்சல்பொய்யென வஞ்சியைத்தணித்தது.

நெருப்புறுவெண்ணெயுநீருறுமுப்புமெனவிங்ஙனே
பொருப்புறுதோகைபுலம்புறல்பொய்யன்பர்போக்குமிக்க
விருப்புறுவோரைவிண்ணோரின்மிகுத்துநண்ணார்கழியத்
திருப்புறுசூலத்தினோன்றில்லைபோலுந்திருநுதலே. (௩௧௫)

பகைதணிவினைப்பிரிவு முற்றிற்று.

---

௨௩. வேந்தற்குற்றுழிப்பிரிவு.

பிரிந்தமைகூறல்.

விறல்வேந்தர் வெம்முனைக்கட்
டிறல்வேந்தர் செல்வசென்றது.

போதுகுலாயபுனைமுடிவேந்தர்தம்போர்முனைமேன்
மாதுகுலாயமென்னோக்கிசென்றார்நமர்வண்புலியூர்க்
காதுகுலாயகுழையெழிலோனைக்கருதலர்போ
லேதுகொலாய்விளைகின்றதின்றென்னரிமெதிலே. (௩௧௬)

பிரிவாற்றமைகார்மிசைவைத்தல்.

வேந்தற்குற்றுழி விறலோன்பிரிய
ஏந்திழைபாங்கிக் கெடுத்துரைத்தது.

பொன்னிவளைத்தபுனல்சூழ்நிலவிப்பொலிபுலியூர்
வன்னிவளைத்தவளர்சடையோனைவணங்கலர்போற்
றுன்னிவளைத்தார்தோன்றற்குப்பாசறைத்தோன்றுங்கொலோ
மின்னிவளைத்துவிரிநீர்கவரும்வியன்முகிலே. (௩௧௭)

வாடுேக்கிவருந்தல்.

மாருேக்கி வடிவுகிளங்தோன்
வாருேக்கி வருந்தியது.

கோலித்திகழ்சிறகொன்றினொடுக்கிப்பெடைக்குருகு
பாலித்திரும்பனிபார்ப்பொடுசேவல்பயிலிரவின்
மாலித்தனையறியாமறையோனுறையம்பலமே
போலித்திருநுதலாட்கென்னதாங்கொலென்போதரவே. (ருகஅ)

கூதிர்கண்டுகவறல்.

இருங்கூதி ரெதிர்வுகண்டு
கருங்குழலி கவலையுற்றது.

கருப்பினமேவும்பொழிற்றில்லைமன்னன்கண்ணாருளால்
விருப்பினமேவச்சென்றார்க்குஞ்சென்றல்குங்கொல்வீழ்பனிவாய்
நெருப்பினமேய்நெடுமாலெழிற்றோன்றச்சென்றாங்குநின்ற
பொருப்பினமேறித்தமியரைப்பார்க்கும்புயலினமே. (ருகக)

முன்பனிக்குநொந்துரைத்தல்.

ஆன்றபனிக் காற்றுதழிந்
தீன்றவளை பேதைநொந்தது.

சுற்றினவீழ்பனிதூங்கத்துவண்டுதுயர்கவென்று
பெற்றவளேயெனைப்பெற்றாள்பெடைசிறகாலொடுக்கிப்
புற்றிலவாளரவன்றில்லைப்புள்ளுந்தம்பிள்ளைதழீஇ
மற்றினஞ்சூழ்ந்துதுயிலப்பெறுமிம்மயங்கிருளே. (ருஉ0)

பின்பனிநினைந்திரங்கல்.

இரும்பனியி னெதிர்வுகண்டு
சுரும்பிவர்குழலி தயங்கிளேந்தது.

புரமன்றயரப்பொருப்புவில்லேந்திப்புத்தேளிர்நாப்பட்
சிரமன்றயனைச்செற்றோன்றில்லைச்சிற்றம்பலமனையாள்
பரமன்றிரும்பனிபாரித்தவாபரந்தெங்கும்வையஞ்
சரமன்றிவான்றருமேலொக்குமிக்கதமியருக்கே. (ருஉக)

இளவேனில்கண்டின்னலெய்தல்.

இன்னிளவேனின் முன்னுவதுகண்டு
மென்னகைப்பேதை யின்னலெய்தியது.

வாழும்படியொன்றுங்கண்டிலம்வாழியிம்மாம்பொழிற்றேன்
சூழுமுகச்சுற்றும்பற்றினவாற்றெண்டையங்கனிவா
யாழின்மொழிமங்கைபங்கன்சிற்றம்பலமாதரியாக்
கூழின்மலிமனம்போன்றிருளாநின்றகோகிலமே. (ருஉஉ)

பருவங்காட்டிவற்புறுத்தல்.

கார்வருமெனக் கலங்குமாதலைத்
தேர்வருமெனத் தெளிவித்தது.

பூண்பதென்றேகொண்டபாம்பன்புலியூரான்மிடற்றின்
மாண்பதென்றேயெண்ணவானின்மலருமணந்தவர்தேர்
காண்பதன்றேயின்றுநாளையிங்கேவரக்கார்மலர்த்தேன்
பாண்பதன்றேர்குழலாயெழில்வாய்த்தபனிமுகிலே. (௩௨௩)

பருவமன்றென்றுகூறல்.

காரெனக்கலங்கு மேரெழிற்கண்ணிக்
கின்றுணைத்தோழியன் றென்றுமறுத்தது.

தெளிதரற்காரெனச்சீரனஞ்சிற்றம்பலத்தடியேன்
களிதரக்கார்மிடற்றோனடமாடக்கண்ணார்முழவந்
துளிதரற்காரெனவார்த்தனவார்ப்பத்தொக்குன்குழல்போன்
றளிதரக்காந்தளும்பாந்தளைப்பாரித்தலர்ந்தனவே. (௩௨௪)

மறுத்துக்கூறல்.

பருவமன்றென்று பாங்கிபகர
மருவமர்கோதை மறுத்துரைத்தது.

தேன்றிக்கிலங்குகழலழல்வண்ணன்சிற்றம்பலத்தெங்
கோன்றிக்கிலங்குதிண்டோட்கொண்டற்கண்டன்குழையெழினாண்
போன்றிக்கடிமலர்க்காந்தளும்போந்தவன்கையனல்போற்
றோன்றிக்கடிமலரும்பொய்மையோமெய்யிற்றோன்றுவதே (.)

தேர்வரவுகூறல்.

பூங்கொடி மருளப்
பாங்கி தெருட்டியது.

திருமாலறியாச்செறிகழற்றில்லைச்சிற்றம்பலத்தெங்
கருமால்விடையுடையோன்கண்டம்போற்கொண்டலெண்டிசையும்
வருமாலுடன்மன்பொருந்தறிருந்தமணந்தவர்தேர்
பொருமாலயிற்கணல்லாயின்றுதோன்றுநம்பொன்னகர்க்கே. ()

வினைமுற்றிநினைதல்.

பாசறைமுற்றிப் படைப்போர்வேந்தன்
மாசறுபூண்முலை மதிமுகநினைந்தது.

புயலோங்கலர்சடையேற்றவன்சிற்றம்பலம்புகழு
மயலோங்கிருங்களியானைவரகுணன்வெற்பின்வைத்த
கயலோங்கிருஞ்சிலைகொண்டுமென்கோபமுங்காட்டிவருஞ்
செயலோங்கெயிலெரிசெய்தபினின்றோர்திருமுகமே. (௩௨௭)

நிலைமைநினைந்துகூறல்.

பொற்றொடிநிலைமை மற்றவணினைந்து
இருந்தேர்ப்பாகற்கு வருந்துபுபுகன்றது.

சிறப்பிற்றிகழ்சிவன்சிற்றம்பலஞ்சென்றுசேர்ந்தவர்தம்
பிறப்பிற்றுனைந்துபெருகுகதேர்பிறங்கும்மொளியார்
நிறப்பொற்புரிசைமறுகினிற்றுன்னிமடநடைப்புள்
ளிறப்பிற்றுயின்றுமுற்றத்திரைதேருமெழினகர்க்கே (௩உஅ)

முகிலொடுகூறல்.

முனைவற்குற்றுழி வினைமுற்றிவருவோன்
கழுமலெய்திச் செழுமுகிற்குரைத்தது.

அருந்தேரழிந்தனமாலமென்றேலமிடுமிமையோர்
மருந்தேரணியம்பலத்தோன்மலர்த்தாள்வணங்கலர்போற்
றிருந்தேரழிந்துபழங்கண்டருஞ்செல்விசீர்நகர்க்கென்
வருந்தேரிதன்முன்வழங்கேன்முழங்கேல்வளமுகிலே. (௩உக)

வரவெடுத்துரைத்தல்.

வினைமுற்றிய வேந்தன்வரவு
புனையிழைந்தோழி பொற்றொடிக்குரைத்தது.

பணிவார்குழையெழிலோன்றில்லைச்சிற்றம்பலமனைய
மணிவார்குழன்மடமாதேபொலிகநம்மன்னர்முன்னாப்
பணிவார்திறையும்பகைத்தவர்சின்னமுங்கொண்டுவெண்டே
ரணிவார்முரசினெடாவிக்குமாவோடணுகினரே. (௩௩௦)

மறவாமைகூறல்.

பாசறைமுற்றிப் பைந்தொடியோடிருந்து
மாசறுதோழிக்கு வள்ளலுரைத்தது.

கருங்குவளைக்கடிமாமலர்முத்தங்கலந்திலங்க
நெருங்குவளைக்கிள்ளைநீங்கிற்றிலணின்றுநான்முகனே
டொருங்குவளைக்கரத்தானுணராதவன்றில்லையொப்பாய்
மருங்குவளைத்துமன்பாசறைநீடியவைகலுமே. (௩௩க)

வேந்தற்குற்றுழிப்பிரிவு முற்றிற்று.

௨௪. பொருள்வயிற்பிரிவு.

பாட்டங்கூறல்.

பிரிவுகேட்ட வரிவைவாட்டம்
நீங்கவுற்றவன் பாங்கிக்குரைத்தது.

முனிவருமன்னருமுன்னுவபொன்னுன்முடியுமெனப்
பனிவருங்கண்பரமன்றிருச்சிற்றம்பலமனையாய்
துனிவருநீர்மையிதென்னென்றுதாநீர்தெளித்தளிப்ப
நனிவருநாளிதுவோவென்றுவந்திக்குநன்னுதலே. (௩௩௨)

பிரிவுநினைவுரைத்தல்.

பொருள்வயிற்பிரிவும் பொருவேலவனெனச்
சுருளுங்குழலிக்குத் தோழிசொல்லியது.

வறியாரிருமையறியாரெனமன்னுமாநிதிக்கு
நெறியாருஞ்சுரஞ்செல்லலுற்றார்நமர்நீண்டிருவ
ரறியாவளவுநின்றோன்றில்லைச்சிற்றம்பலமனைய
செறிவார்கருங்குழல்வெண்ணகைச்செவ்வாய்த்திருநுதலே. ()

ஆற்றாதுபுலம்பல்.

பொருட்பிரிவு மருட்டருபவனெனப்
பாங்கிபகரப் பூங்கொடிபுலம்பியது.

சிறுவாளுகிருற்றுமுன்னஞ்சின்னப்படுங்குவளைக்
கெறிவாள்கழித்தனடோழியெழுதிற்கரப்பதற்கே
யறிவாளொழிகுவதஞ்சனமம்பலவர்ப்பணியார்
குறிவாழ்நெறிசெல்வரன்பரென்றம்மகொடியவளே. (௩௩௪)

ஆற்றாமைகூறல்.

ஏழை யழுங்கத்
தோழி சொல்லியது.

வானக்கடிமதிற்றில்லையெங்கூத்தனையேத்தலர்போற்
கானக்கடஞ்செல்வர்காதலரென்னக்கதிர்முலைகண்
மானக்கனகர்தருமலர்க்கண்கண்முத்தம்வளர்க்குந்
தேனக்கதார்மன்னனென்றேவிளிச்சென்றதேர்பொருளே. ()

நிலைபெயர்ந்துரைத்தல்.

தலைவன்பிரியத் துயருறுமனத்தொடு
நிலைபெயர்த்திட்டுத் தேமொழிமொழிந்தது.

சுருடருசெஞ்சடைவெண்சுடரம்பலவன்மலயத்
திருடருபூம்பொழிலின்னுயிர்போலக்கலந்திசைத்த
வருடருமின்சொற்களத்தனையும்மறந்தத்தஞ்சென்றோ
பொருடரக்கிற்கின்றதுவினையேற்குப்புரவலரே. (௩௩௬)

போருத்தமறிந்துரைத்தல்.

பொருள்வயிற்பிரிவோன் பொருத்தநினைந்து
சுருளுறுகுழலிக்குத் தோழிசொல்லியது.

மூவர்நின்றேத்தமுதலவனாடமுப்பத்துமும்மைத்
தேவர்சென்றேத்துஞ்சிவன்றில்லையம்பலஞ்சீர்வழுத்தாப்
பாவர்சென்றல்குநரகமனையபுனையழற்கான்
போவர்நங்காதலரென்னுமுரைப்பதுபூங்கொடியே. (௩௩௭)

பிரிந்தமைகூறல்.

எதிர்நின்றுபிரியிற் கதிர்நீவாடுதற்
குணர்த்தாதகன்றான் மணித்தேரோனென்றது.

தென்மாத்திசைவசைதீர்தரத்தில்லைச்சிற்றம்பலத்து
ளென்மாத்தலைக்கழல்வைத்தெரியாடுமிறைதிகழும்
பொன்மாப்புரிசைப்பொழிற்றிருப்பூவணமன்னபொன்னே
வன்மாக்களிற்றொடுசென்றனரின்றுநம்மன்னவரே. (௩௩௮)

இரவுறுதுயரத்தீற்கிரங்கியுரைத்தல்.

அயிறருகண்ணியைப் பயிறருமிரவினுட்
டாங்குவதரிதெனப் பாங்கிபகர்ந்தது.

ஆழியொன்றீரடியும்மிலன்பாகன்முக்கட்டில்லையோ
னூழியொன்றாதனநான்குமைம்பூதமுமாறொடுங்கு
மேழியன்றாழ்கடலும்மெண்டிசையுந்திரிந்திளைத்து
வாழியன்றோவருக்கன்பெருந்தேர்வந்துவைகுவதே. (௩௩௯)

இகழ்ச்சிநினைந்தழிதல்.

உணர்த்தாது பிரிந்தாரென
மணித்தாழ்குழலி வாடியது.

பிரியாரெனவிகழ்ந்தேன்முன்னம்யான்பின்னையெற்பிரியிற்
றரியாளெனவிகழ்ந்தார்மன்னர்தாந்தக்கன்வேள்விமிக்க
வெரியாரெழிலழிக்கும்மெழிலம்பலத்தோனெவர்க்கு
மரியானருளிலர்போலன்னவென்னையழிவித்தவே. (௩௪௦)

உருவுவெளிப்பட்டுநிற்றல்.

பொருள்வயிற்பிரிந்த வொளியுறுவேலவன்
முங்கழற்கடத்துப் பூங்கொடியைநினைந்தது.

சேணுந்திகழ்மதிற்சிற்றம்பலவன்றெண்ணீர்க்கடனஞ்
சூணுந்திருத்துமொருவன்றிருத்துமுலகினெல்லாங்
காணுந்திசைதொறுங்கார்க்கயலுஞ்செங்கனியொடுபைம்
பூணும்புணர்முலையுங்கொண்டுதோன்றுமொர்பூங்கொடியே. ()

நெஞ்சொடுநோதல்.

வல்லழற்கடத்து மெல்லியலைநினைந்து
வெஞ்சுடர்வேலோ னெஞ்சொடுநொந்தது.

பொன்னணியிட்டியவோட்டருநெஞ்சமிப்பொங்குவெங்கா
னின்னணிநிற்குமிதென்னென்பதேயிமையோரிறைஞ்சு
மன்னணிதில்லைவளநகரன்னவன்னநடையாண்
மின்னணிநுண்ணிடைக்கோபொருட்கோநீவிரைகின்றதே. ()

நெஞ்சொடுபுலத்தல்.

அழற்கடத் தழுக்கமிக்கு
நிழற்கதிர்வேலோ னீடுவாடியது.

நாய்வயினுள்ளகுணமுமில்லேனைநற்றொண்டுகொண்ட
தீவயின்மேனியன்சிற்றம்பலமன்னசின்மொழியைப்
பேய்வயினும்மரிதாகும்பிரிவெளிதாக்குவித்துச்
சேய்வயிற்போந்தநெஞ்சேயஞ்சத்தக்கதுன்சிக்கனவே. (௩௪௩)

நெஞ்சொடுமறுத்தல்.

கன்னெறிசென்ற நாறிணர்த்தாரோன்
சேணெறியஞ்சி மீணெறிசென்றது.

தீமேவியநிருத்தன்றிருச்சிற்றம்பலமனைய
பூமேவியபொன்னைவிட்டுப்பொன்றேடியிப்பொங்குவெங்கா
னாமேடக்கவொழிந்தனம்யாநெஞ்சம்வஞ்சியன்ன
வாமேகலையைவிட்டோபொருடேர்ந்தெம்மைவாழ்விப்பதே. ()

நாளெண்ணிவருந்தல்.

சென்றவர்திறத்து நின்றுநனிவாடுங்
குழிருங்கூந்தற்குத் தோழிநனிவாடியது.

தெண்ணீரணிசிவன்சிற்றம்பலஞ்சிந்தியாதவரிற்
பண்ணீர்மொழியிவளைப்பையுளெய்தப்பனித்தடங்க
ணுண்ணீருகவொளிவாடநீடுசென்றார்சென்றநா
ளெண்ணீர்மையினிலனுங்குழியும்விரலிட்டறவே. (௩௪௫)

ஏறுவரவுகண்டிரங்கியுரைத்தல்.

நீடியபொன்னி னெஞ்சநெகிழ்ந்து
வாடியவன் வரவுற்றது.

சுற்றம்பலமின்மைகாட்டித்தன்றொல்கழறந்ததொல்லோன்
சிற்றம்பலமனையாள்பரமன்றுநின்கோட்டின்வண்ணப்
புற்றங்குதர்ந்துநன்றுகொடும்பொன்னுர்மணிபுலம்பக்
கொற்றமருவுகொல்லேறுசொல்லாநின்றகூர்ஞ்செக்கரே. (௩௪௬)

பருவங்கண்டிரங்கல்.

மன்னியபருவ முன்னியசெலவின்
இன்னலெய்தி மன்னனேகியது.

கண்ணுழையாதுவிண்மேகங்கலந்துகணமயிலொருக்
கெண்ணுழையாத்தழைகோலிநின்றாலுமின்மலர்வாய்
மண்ணுழையாவுமறிதில்லைமன்னனதின்னருள்போற்
பண்ணுழையாமொழியாளென்னளாங்கொன்மன்பாவியற்கே. ()

முகிலொடுகூறல்.

எனைப்பலதுயரமோ டேகாநின்றவன்
தனைக்காதற்குத் தணிந்துசொல்லியது.

அற்படுகாட்டினின்றாடிசிற்றம்பலத்தான்மிடற்றின்
முற்படுநீண்முகிலென்னின்முன்னேன்முதுவோர்குழுமி
விற்படுவாணுதலாள்செல்லறீர்ப்பான்விரைமலர்தூய்
நெற்படுவான்பலிசெய்தயராநிற்குநீணகர்க்கே. (௩௪௮)

தேர்வரவுகூறல்.

வேந்தன்பொருளொடு விரும்பிவருமென
ஏந்திழைப்பாங்கி யினிதியம்பியது.

பாவியைவெல்லும்பரிசில்லையேமுகில்பாவையஞ்சீ
ராவியைவெல்லக்கருக்கின்றபோழ்தத்தினம்பலத்துக்
காவியைவெல்லுமிடற்றோனருளிற்கதுமெனப்போய்
மேவியமாநிதியோடன்பர்தேர்வந்துமேவினதே. (௩௪௯)

இளையரெதிர்கோடல்.

செறிகழலவன் றிருநகர்புகுதர
எறிவேலிளைஞ ரெதிர்கொண்டது.

யாழின்மொழிமங்கைபங்கன்சிற்றம்பலத்தானமைத்த
வூழின்வலியதொன்றென்னையொளிமேகலையுகளும்
வீழும்வரிவளைமெல்லியலாவிசெல்லாதமுன்னே
சூழுந்தொகுநிதியோடன்பர்தேர்வந்துதோன்றியதே. (௩௫௦)

உளமகிழ்ந்துரைத்தல்.

பெருந்திருவோடு திருமனைபுகுந்தவன்
வளமனைக்கிழத்தியோ டுளமகிழ்ந்துரைத்தது.

மயின்மன்னுசாயலிம்மானைப்பிரிந்துபொருள்வளர்ப்பான்
வெயின்மன்னுவெஞ்சுரஞ்சென்றதெல்லாம்விடையோன்புலியூர்க்
குயின்மன்னுசொல்லிமென்கொங்கை யென்னங்கத்திடைக்குளிப்
பத், துயின்மன்னுபூவணைமேலணையாமுன்றுவளுற்றதே. (௩௫௧)

பொருள்வயிற்பிரிவு முற்றிற்று.

---

௨௫. பரத்தையிற்பிரிவு.

கண்டவர்கூறல்.

உரத்தகுவேலோன் பரத்தையிற்பிரியத்
திண்டேர்வீதியிற் கண்டோருரைத்தது.

உடுத்தணிவாளரவன்றில்லையூரன்வரவொருங்கே
யெடுத்தணிகையேறினவளையார்ப்பவிளமயிலேர்
கடுத்தணிகாமர்கரும்புருவச்சிலைகண்மலரம்
படுத்தணிவாளிளையோர்சுற்றும்பற்றினர்மாதிரமே. (௩௫௨)

பொறையுவந்துரைத்தல்.

கள்ளவிழ்கோதையைக் காதற்றோழி
உள்ளவிழ்பொறைகண் டுவந்துரைத்தது.

சுரும்புறுகொன்றையன்றொல்புலியூர்ச்சுருங்குமருங்குற்
பெரும்பொறையாட்டியையென்னின்றுபேசுவபேரொலிநீர்க்
கரும்புறையூரன்கலந்தகன்றானென்றுகண்மணியு
மரும்பொறையாகுமென்னாவியுந்தேய்வுற்றழிகின்றதே. ௩௫௩)

போதுப்படக்கூறிவாடியழுங்கல்.

பொற்றிகழரவன் மற்றிகழ்தில்லைப்
பிரிந்தனூரனோ டிருந்துவாடியது.

அப்புற்றசென்னியன்றில்லையுறாரினவருறுநோ
யொப்புற்றெழினலமூரன்கவரவுள்ளும்புறம்பும்
வெப்புற்றுவெய்துயிர்ப்புற்றதம்மெல்லணையேதுணையாச்
செப்புற்றகொங்கையர்யாவர்கொலாருயிர்தேய்பவரே. (௩௫௪)

கனவிழந்துரைத்தல்.

சிலவிற்றடக்கைத் தீம்புனலூரனைக்
கனவிற்கண்ட காரிகையுரைத்தது.

தேவாசுரரிறைஞ்சுங்கழலோன்றில்லைசேரலர்போ
லாவாகனவுமிழந்தேனனவென்றமளியின்மேற்
பூவாரகலம்வந்தூரன்றரப்புலம்பாய்நலம்பாய்
பாவாய்தழுவிற்றிலேன்விழித்தேனரும்பாவியனே. (௩௯௫)

விளக்கொடுவெறுத்தல்.

பஞ்சணைத்துயின்ற பஞ்சின்மெல்லடி
அன்பனொடூடமுங்கிச் செஞ்சுடர்க்குரைத்தது.

செம்முகநீலமலர்தில்லைச்சிற்றம்பலத்தரற்குக்
கைம்முகங்கூம்பக்கழல்பணியாரிற்கலந்தவர்க்குப்
பொய்ம்முகங்காட்டிக்கரத்தல்பொருத்தமன்றென்றிலையே
நெய்ம்முகமாந்தியிருண்முகங்கீழுநெடுஞ்சுடரே. (௩௯௬)

வாரம்பகர்ந்துவாயின்மறுத்துரைத்தல்.

வார்புனலூரனேர்திகழ்தோள்வயிற்
கார்புரைகுழலி வாரம்பகர்ந்தது.

பூங்குவளைப்பொலிமாலையுமூரன்பொற்றோளிணையு
மாங்குவளைத்துவைத்தாரேனுங்கொள்கனள்ளாரரணந்
தீங்குவளைத்தவில்லோன்றில்லைச்சிற்றம்பலத்தயல்வா
யோங்குவளைக்கரத்தார்க்கடுத்தோமன்னுருவரையே. (௩௯௭)

பள்ளியிடத்தூடல்.

பிடிவர்கம்பிற் றொடிவர்கோதை
ஆடவன்றன்னோ டூடியுரைத்தது.

தவஞ்செய்திலாதவெந்தீவினையேம்புன்மைத்தன்மைக்கெள்ளா
தெவஞ்செய்துநின்றினியின்றுனைநோவதெனத்தன்முத்தன்
சிவன்செய்தசீரருளார்தில்லையூரநின்சேயிழையார்
நவஞ்செய்தபுல்லங்கண்மாட்டேன்றொடல்விடுநற்கலையே. ()

சேவ்வணிவிடுக்கவில்லோர்கூறல்.

பாற்செலுமொழியார் மேற்செலவிரும்பல்
பொல்லாதென்ன வில்லோர்புகன்றது.

தணியுறப்பொங்குமிக்கொங்கைகடாங்கித்தளர்மருங்குல்
பிணியுறப்பேதைசென்றின்றெய்துமாலரவும்பிறையு
மணியுறக்கொண்டவன்றில்லைத்தொல்லாயநல்லார்கண்முன்னே
பணியுறத்தோன்றுநுடங்கிடையார்கள்பயின்மனைக்கே. (௩௯௯)

அயலறிவுரைத்தவளழுங்கமெய்தல்.

உலகியலறியச் செலவிடையுற்ற
விழுத்தகைமாதர்க் கழுக்கஞ்சென்றது.

இரவணையும்மதியேர்நுதலார்நுதிக்கோலஞ்செய்து
குரவணையுங்குழலிங்வெளாலிக்குறியறிவித்
தரவணையுஞ்சடையோன்றில்லையூரனையாங்கொருத்தி
தாவணையும்பரிசாயினவாறுநந்தன்மைகளே. (௩௯௦)

செவ்வணிகண்டவாயிலவர்கூறல்.

மணிக்குழைப்பூப்பிய அணர்த்தவந்த
துயிலமைக்கண்ட வாயிலவருரைத்தது.

சிவந்தபொன்மேனிமணிதிருச்சிற்றம்பலமுடையான்
சிவந்தவந்தாளணியூரற்குலகியலாறுரைப்பான்
சிவந்தபைம்போதுமஞ்செம்மலர்ப்பட்டுங்கட்டார்முலைமேற்
சிவந்தவஞ்சாந்தமுந்தோன்றினவந்துதிருமனைக்கே. (௩௯௧)

மனைபுகல்கண்டவாயிலவர்கூறல்.

கடனறிந்தூரன் கடிமனைபுகுதர
வாய்ந்தவாயிலவ ராய்ந்துரைத்தது.

குராப்பயில்கூழையிவளின்யிக்கம்பலத்தான்குழையா
மராப்பயினுண்ணிடையாரடங்காரெவரேயினிப்பண்
டிராப்பகனின்றுணங்கிர்க்கடையித்துணைப்போழ்திற்சென்று
கராப்பயில்பூம்புனலூரன்புகுமிக்கடிமனைக்கே. (௩௯௨)

முகமலர்ச்சிகூறல்.

பூம்புனலூரன் புகமுகமலர்ந்த
தேம்புனைகோதை திறம்பிறருரைத்தது.

வந்தான்வயலணியூரனெனச்சினவாண்மலர்க்கண்
செந்தாமரைச்செவ்விசென்றசிற்றம்பலவன்னருளான்
முந்தாயினவியனேக்கெதிர்நோக்கமுகமடுவிற்
பைந்தாட்குவளைகள்பூத்திருள்சூழ்ந்துபயின்றனவே. (௩௯௩)

காலநிகழ்வுரைத்தல்.

இகழ்வதெவன்கொ னிகழ்வதிவ்வாறெனச்
செழுமலர்க்கோதை புழையருரைத்தது.

வில்லிகைப்போதின்விரும்பாவரும்பாவியர்களன்பிற்
செல்லிகைப்போதினெறியுடையோன்றில்லையம்பலஞ்சூழ்
மல்லிகைப்போதின்வெண்சங்கம்வண்டூதவிண்டோய்பிறையோ
டெல்லிகைப்போதியல்வேல்வயலூரற்கெதிர்கொண்டதே. ()

எய்தலெடுத்துரைத்தல்.

சிரியவுலகிற் றிகழ்தரக்கூடி
வார்புனலூரன் மகிழ்வுற்றது.

புலவித்திரைபொரச்சீறடிப்பூங்கலஞ்சென்னியுய்ப்பக்
கலவிக்கடலுட்கலிங்கஞ்சென்றெய்திக்கதிர்கொண்முத்த
நிலவிநிறைமதுவார்ந்தம்பலத்துநின்றோனருள்போன்
றுலவியலாத்தனஞ்சென்றெய்தலாயினவூரனுக்கே. (ந௬ரு)

கலவிகருதிப்புலத்தல்.

மன்னியவுலகிற் றுன்னியவன்பொடு
கலவிகருதிப் புலவியெய்தியது.

செவ்வாய்துடிப்பக்கருங்கண்பிறழச்சிற்றம்பலத்தெம்
மொய்வார்சடையோனருளின்முயங்கிமயங்குகின்றாள்
வெவ்வாயுயிர்ப்பொடுவிம்மிக்கலுழ்ந்துபுலர்ந்துநைந்தா
ளிவ்வாறருள்பிறர்க்காகுமெனநினைந்தின்னகையே. (ந௬௬)

குறிப்பறிந்துபுலந்தமைகூறல்.

குறிப்பினிற்குறிப்பு நெறிப்படநோக்கி
மலர்நெடுங்கண்ணி புலவியுற்றது.

மலரைப்பொருவடிமானுந்தமியண்மன்னனொருவன்
பலரைப்பொருதென்றிழிந்துநின்றாள்பள்ளிகாமனெய்த
வலரைப்பொருதன்றழல்விழித்தோனம்பலம்வணங்காக்
கலரைப்பொருச்சிறியாளென்னைகொல்லோகருதியதே. (ந௬எ)

வாயிலவர்வாழ்த்தல்.

தலைமகளது தகவுடைமை
நிலைதகுவாயி னின்றோருரைத்தது.

வில்லைப்பொலிநுதல்வேற்பொலிகண்ணிமெலிவறிந்து
வல்லைப்பொலிவொடுவந்தமையானின்றுவான்வழுத்துந்
தில்லைப்பொலிசிவன்சிற்றம்பலஞ்சிந்தைசெய்பவரின்
மல்லைப்பொலிவயலூரன்மெய்யேதக்கவாய்மையனே. (ந௬அ)

புனல்வரவுரைத்தல்.

புனலாடுகவெனப் புனைந்துகொண்டு
மனைபுகுந்தவனை வையமுரைத்தது.

சூன்முதிர்துள்ளுநடைப்பெடைக்கிற்றுணைச்சேவல்செய்வான்
றேன்முதிர்வேழத்தின்மென்பூக்குதர்செம்மலூரன்றிண்டோண்
மான்முதிர்நோக்கினல்லார்மகிழத்தில்லையானருளே
போன்முதிர்பொய்கையிற்பாய்ந்ததுவாய்ந்தபுதுப்புனலே. ()

தேர்வரவுகண்டுமகிழ்ந்துகூறல்.

பயின்மணித்தேர்செலப் பரத்தையர்சேரிக்
கயன்மணிக்கண்ணியர் கட்டுரைத்தது.

சேயேயெனமன்னுதீம்புனலூரன்றிண்டோளிணைக
டோயீர்புணர்தவந்தொன்மைசெய்தீர்சுடர்கின்றகோலந்
தீயேயெனமன்னுசிற்றம்பலவர்தில்லைநகர்வாய்
வீயேயெனவடியீர்நெடுந்தேர்வந்துமேவினதே. (௩௭௰)

புனல்விளையாட்டிற்றம்முளுரைத்தல்.

தீம்புனல்வாயிற் சேயிழைவருமெனக்
காம்பனதோளியர் கலந்துகட்டுரைத்தது.

அரமங்கையரெனவந்துவிழாப்புகுமவ்வவர்வா
னரமங்கையரெனவந்தணுகும்மவளன்றுகிராற்
சிரமங்கையனைச்செற்றோன்றில்லைச்சிற்றம்பலம்வழுத்தாப்
புரமங்கையரினையாதையகாத்துநம்பொற்பரையே. ௩௭௧)

தன்னைவியந்துரைத்தல்.

அரத்தத்துவர்வாய்ப் பரத்தைத்தலைவி
முனிவுதோன்ற நனிபுகன்றது.

கனலூர்கணைதுணையூர்கெடச்செற்றசிற்றம்பலத்தெம்
மனலூர்சடையோனருள்பெற்றவரினமரப்புல்லு
மினலூர்நகையவர்தம்பாலருள்விலக்காவிடின்யான்
புனலூரனைப்பிரியும்புனலூர்கணப்பூங்கொடியே. (௩௭௨)

நகைத்துரைத்தல்.

வேந்தன்பிரிய வேந்திழைமடந்தை
பரத்தையைநோக்கி விரித்துரைத்தது.

இறுமாப்பொழியுமன்றேதங்கைதோன்றினென்னெங்கையங்கைச்
சிறுமான்றரித்தசிற்றம்பலத்தான்றில்லையூரன்றிண்டோள்
பெறுமாத்தொடுந்தன்னபேரனுக்குப்பெற்றபெற்றியினே
டிறுமாப்பொழியவிறுமாப்பொழிந்தவிணைமுலையே. (௩௭௩)

நாணுதல்கண்டுமிகுத்துரைத்தல்.

மன்னவன்பிரிய நன்மனைக்கிழத்தியை
நாணுதல்கண்ட வாணுதலுரைத்தது.

வேயாதுசெப்பினடைத்துத்தமிவைகும்வீயினன்ன
தீயாடிசிற்றம்பலமனையாடில்லையூரனுக்கின்
றேயாப்பழியெனநாணியென்கண்ணிங்ஙனேமறைத்தாள்
யாயாமியல்பிவள்கற்புநற்பாலவியல்புகளே. (௩௭௪)

பாணன்வரவுரைத்தல்.

இகல்வேலவனால் வறியாப்பாணனைப்
பூங்குழன்மாதர்க்குப் பாங்கிபகர்ந்தது.

விறலியும்பாணனும்வேந்தற்குத்தில்லையிறையமைத்த
திறலியல்யாழ்கொண்டுவந்துநின்றார்சென்றிராத்திசைபோம்
பறலியல்வாவல்பகலுறைமாமரம்போலுமன்னோ
வறலியல்கூழைநல்லாய்தமியோமையறிந்திலரே. (௩௭௫)

தோழியியற்பழித்தல்.

தன்மகனைத் தகவிலனெனச்
சில்மொழிதற்பாங்கி நீங்குசெப்பியது.

திக்கினிலங்குதிண்டோளிறைதில்லைச்சிற்றம்பலத்துக்
கொக்கினிறகதணிந்துநின்றாடிதென்கூடலன்ன
வக்கின்னகையிவணையவயல்வயினல்குதலாற்
றக்கின்றிருந்திலனின்றசெவ்வேலெந்தனிவள்ளலே. (௩௭௬)

உழையரியற்பழித்தல்.

அரத்தவேலண்ணல் பரத்தையிற்பிரியக்
குழைமுகத்தவளுக் குழையருரைத்தது.

அன்புடைநெஞ்சத்திவள்பேதுறவம்பலத்தடியா
ரென்பிடைவந்தமிழ்துறநின்றாடியிருஞ்சுழியற்
றன்பெடைநையத்தகவழிந்தன்னஞ்சலஞ்சலத்தின்
வன்பெடைமேற்றுயிலும்வயலூரன்வரம்பிலனே. (௩௭௭)

இயற்படமொழிதல்.

வரிசிலையூரன் பரிசுபழித்த
உழையர்கேட்ப வெழிலகையுரைத்தது.

அஞ்சார்புரஞ்செற்றசிற்றம்பலவரந்தண்கயிலை
மஞ்சார்புனத்தன்றுமாந்தழையேந்திவந்தாரவரென்
னெஞ்சார்விலக்கினுநீங்கார்நனவுகனவுமுண்டேற்
பஞ்சாரமளிப்பிரிதலுண்டோவெம்பயோதரமே. (௩௭௮)

நினைந்துவியந்துரைத்தல்.

மெல்லியற்பரத்தையை விரும்பிமேவினோன்
அல்லியங்கோதையை யகனமர்ந்துரைத்தது.

தெள்ளம்புனற்கங்கைதங்குஞ்சடையன்சிற்றம்பலத்தான்
கள்ளம்புகுநெஞ்சர்காணுவிறையுறைகாழியன்னா
ளுள்ளம்புகுமொருகாற்பிரியாதுள்ளியுள்ளுதொறும்
பள்ளம்புகும்புனல்போன்றகத்தேவரும்பான்மையளே. (௩௭௯)

வாயில்பெறாதுமகன்றிறநினைதல்.

பொற்றொடிமாதர் நற்கடைகுறுகி
நீடியவாயிலின் வாடினன்மொழிந்தது.

தேன்வண்டுறைதருகொன்றையன்சிற்றம்பலம்வழுத்தும்
வான்வண்டுறைதருவாய்மையன்மன்னுகுதலையின்வா
யான்வண்டுறைதருமாலமுதன்னவன்வந்தணையா
னுன்வண்டுறைதருகொங்கையெவ்வாறுகொனண்ணுவதே. ( )

வாயிற்கணின்றுதோழிக்குரைத்தல்.

பெருந்தகைவாயில் பெறாதுநின்
றருந்தகைப்பாங்கிக் கறியவுரைத்தது.

கயல்வந்தகண்ணியர்கண்ணிணையான்மிகுகாதரத்தான்
மயல்வந்தவாட்டமகற்றுவிரதமென்மாமதியி
னயல்வந்தவாடரவாடவைத்தோனம்பலநிலவு
புயல்வந்தமாமதிற்றில்லைநன்னாட்டுப்பொலிபவரே. (௩௮௧)

வாயில்வேண்டத்தோழிகூறல்.

வைவேலண்ணல் வாயில்வேண்டப்
பையரவல்குற் பாங்கிபகர்ந்தது.

கூற்றாயினசினவாளியெண்ணீர்கண்கள்கோளிழித்தாற்
போற்றான்செறியிருட்பொக்கமெண்ணீர்கன்றகன்றபுனிற்
றீற்றாவெனநீர்வருவதுபண்டின்றெம்மீசர்தில்லைத்
தேற்றார்கொடிநெடுவீதியிற்போதிரத்தேர்மிசையே. (௩௮௨)

தோழிவாயில்வேண்டல்.

வாயில்பெறாது மன்னவனிற்ப
வாயிழையவட்குத் தோழிசொல்லியது.

வியந்தலைநீர்வையமெய்யேயிறைஞ்சவிண்டோய்குடைக்கீழ்
வயந்தலைகூர்ந்தொன்றும்வாய்திறவார்வந்தவாளரக்கன்
புயந்தலைநீரப்புலியூரானிருக்கும்பொருப்பிற்
கயந்தலையானைகடிந்தவிருந்தினர்கார்மயிலே. (௩௮௩)

மனையவர்மகிழ்தல்.

கன்னிமானேக்கி கனன்றுநோக்க
மன்னியமனையவர் மகிழ்ந்துரைத்தது.

தேவியங்கண்டிகழ்மேனியன்சிற்றம்பலத்தெழுது
மோவியங்கண்டன்னவொண்ணுதலாடனக்கோகையுய்ப்பான்
மேவியங்கண்டனையோவந்தனனெனவெய்துயிர்த்துக்
காவியங்கண்கழுநீர்ச்செவ்விவெளவுதல்கற்றனவே. (௩௮௪)

வாயின்மறுத்துரைத்தல்.

மடவரற்றோழி வாயில்வேண்ட
அடல்வேலவ னாருளுரைத்தது.

உடைமணிகட்டிச்சிறுதேருருட்டியுலாத்தருமிக்
கடைமணியைத்தந்தபின்னர்முன்னூன்முகன்மாலறியா
விடைமணிகண்டர்வண்டில்லைமென்றேகையன்னார்கண்முன்னங்
கடைமணிவாணகையாயின்றுகண்டனர்காதலரே. (௩அ௫)

பாணனொடுவெகுளுதல்.

மன்னியாழ்ப்பாணன் வாயில்வேண்ட
மின்னிடைமடந்தை வெகுண்டுரைத்தது.

மைகொண்டகண்டர்வயல்கொண்டதில்லைமல்கூரர்நின்வாய்
மெய்கொண்டவன்பினரென்பதென்விள்ளாவருள்பெரியர்
வைகொண்டவூசிகொற்சேரியின்விற்றெம்மில்வண்ணவண்ணப்
பொய்கொண்டுநிற்கலுற்றேபுலையாத்தின்னிபோந்ததுவே. ()

பாணன்புலந்துரைத்தல்.

கருமலர்க்கண்ணி கனன்றுகட்டுரைப்பப்
புரியாழ்ப்பாணன் புறப்பட்டது.

கொல்லாண்டிலங்குமழுப்படையோன்குளிர்தில்லையன்னாய்
வில்லாண்டிலங்குபுருவநெரியச்செவ்வாய்துடிப்பக்
கல்லாண்டெடேல்கருங்கண்சிவப்பாற்றுகறுப்பதன்று
பல்லாண்டடியேனடிவலங்கொள்வன்பணிமொழியே. (௩அஎ)

விருந்தோடுசெல்லத்தணிந்தமைகூறல்.

பல்வளை பரிசுகண்
டில்லோ ரியம்பியது.

மத்தக்கரியுரியோன்றில்லையூரன்வரவெனலுந்
தத்தைக்கிளவிமுகத்தாமரைத்தழல்வேன்மிளிர்ந்து
முத்தம்பயக்குங்கழுநீர்விருந்தொடென்றுமுன்னங்
கித்தக்கருங்குவளைச்செவ்வியோடிக்கெழுமினவே. (௩அஅ)

ஊடறணிவித்தல்.

தோன்றலைத் துணையொடு தோழிகண்டு
வான்றகைமடந்தையை வருத்தந்தணித்தது.

கவலங்கொள்பேய்த்தொகைபாய்தரக்காட்டிடையாட்டுவந்த
தவலங்கிலாச்சிவன்றில்லையன்னாய்தழுவிம்முழுவிச்
சுவலங்கிருந்தநந்தோன்றற்றுணையெனத்தோன்றுதலா
லவலங்களைந்துபணிசெயற்பாலையரசனுக்கே. (௩அ௯)

அணைந்தவழியூடல்.

தெளிபுனலூரன் சென்றணைந்தவழி
ஒளிமதிநுதலி யூடியுரைத்தது.

சேருந்திகழ்வயற்சிற்றம்பலவர்தில்லைநகர்வாய்
வேருந்திகழ்கண்ணியிளையார்வெகுள்வர்மெய்ப்பாலன்செய்த
பாருந்திகழும்பரிசினமேவும்படிறுவவேங்
காருன்றெருடறெருடரேல்விடுதீண்டலெய்கைத்தலமே. (௩௱௰)

புனலாட்டுவித்தமைகூறிப்புலத்தல்.

ஆங்கதனுக் கழுக்கமெய்தி
விங்குமென்றுமலை விட்டுரைத்தது.

செந்தார்நறுங்கொன்றைச்சிற்றம்பலவர்தில்லைநகரோர்
பந்தார்விரலியைப்பாய்புனலாட்டிமன்பாவியெற்கு
வந்தார்பரிசுமன்றாய்நிற்குமாறென்வளமனையிற்
கொந்தார்தடந்தோள்விடங்காலயிற்படைக்கொற்றவரே. (௩௱௰௧)

கலவிகருதிப்புலத்தல்.

கலைவனால்கு மலையகன்றன்னொடு
கலவிகருதிப் புலவிபுகன்றது.

மின்றுன்னியசெஞ்சடைவெண்மதியன்விதியுடையோர்
சென்றுன்னியகழற்சிற்றம்பலவன்றென்னம்பொதியி
னன்றுஞ்சிறியவரில்லெமதில்லநல்லூரமன்னோ
வின்றுன்றிருவருளித்துணைசாலுமன்னெங்களுக்கே. (௩௱௰௨.)

மிகுந்துரைத்தூடல்.

நாடொறு மில்லுஞ்சுட்டி
ஆடற்பூங்கொடி யூடியுரைத்தது.

செழுமியமாளிகைச்சிற்றம்பலவர்சென்றன்பர்சிந்தைக்
கழுமியகூத்தர்கடிபொழிலேழினும்வாழியரோ
விழுமியநாட்டுவிழுமியநல்லூர்விழுக்குடியீர்
விழுமியவல்லகொல்லோவின்னவாறுவிரும்புவதே. (௩௱௰௩)

ஊடவிடவாடியுரைத்தல்.

வாடா வூட
லிடா வாடியது.

திருந்தேனுயநின்றசிற்றம்பலவர்தென்னம்பொதியி
லிருந்தேனுயவந்திணைமலர்க்கண்ணினின்னோக்கருளிப்
பெருந்தேனெனநெஞ்சகப்பிடித்தாண்டநம்பெண்ணமிழ்தம்
வருந்தேலதுவன்றிதுவோவருவதொர்வஞ்சனையே. (௩௱௰௪)

துனியொழிந்துரைத்தல்.

தருநியிலூரன் மிருபுநநோக்கிப்
பனிமலர்க்கோதை துனியொழிந்தது.

இயன்மன்னுமன்புதந்தார்க்கென்னிலையிமையோரிறைஞ்சுஞ்
செயன்மன்னுஞ்சீர்க்கழற்சிற்றம்பலவர்தென்னம்பொதியிற்
புயன்மன்னுகுன்றிற்பொருவேறணையாப்பொம்மென்னிருள்வா
யயன்மன்னும்யானைதுரந்தரிதேருமதரகத்தே. (௩௱௬௫)

புதல்வன்மேல்வைத்துப்புலவிதீர்தல்.

புதல்வனது இறம்புகன்று
மதரரிக்கண்ணி வாட்டந்தவிர்ந்தது.

கதிர்த்தநகைமன்னுஞ்சிற்றவ்வைமார்களைக்கண்பிழைப்பித்
தெதிர்த்தெங்குநின்றெப்பரிசளித்தானிமையோரிறைஞ்சு
மதுத்தங்கியகொன்றைவார்சடையீசர்வண்டில்லைநல்லார்
பொதுத்தம்பலங்கொணர்ந்தோபுதல்வாவெம்மைப்பூசிப்பதே. ()

கலவியிடத்தூடல்.

சிறடிக்குடைந்த நாறிணர்த்தாரவன்
றன்மைகண்டு பின்னுந்தளர்ந்தது.

சிலைமலிவாணுதலெங்கையதாகமெனச்செழும்பூண்
மலைமலிமார்பினுதைப்பத்தந்தான்றலைமன்னர்தில்லை
யுலைமலிவேற்படையூரனிற்கள்வரிலென்னவுன்னிக்
கலைமலிகாரிகைகண்முத்தமாலைகலுழ்ந்தனவே. (௩௱௬௭)

முன்னிகழ்வுரைத்தூடறீர்த்தல்.

முன்னிகழ்ந்தது நன்னுதற்குரைத்து
மன்னுபுனலூரன் மகிழ்வுற்றது.

ஆறூர்சடைமுடியம்பலத்தண்டரண்டம்பெறினு
மாறூர்மழவிடையாய்கண்டிலம்வண்கதிர்வெதுப்பு
நீறூர்கொடுநெறிசென்றிச்செறிமென்முலைநெருங்கச்
சீறூர்மரையதளிற்றங்குகங்குற்சிறுதுயிலே. (௩௱௬௮)

பரத்தையைக்கண்டமைகூறிப்புலத்தல்.

பரத்தையைக்கண்ட பவளவாய்மாதர்
அரத்தநெடுவே லண்ணற்குரைத்தது.

ஐயுறவாய்நம்மகன்கடைக்கண்டுவண்டேருருட்டு
மையுறுவாட்கண்மழவைத்தழுவமற்றுன்மகனே
மெய்யுறவாமிதுன்னில்லேவருகெனவெள்கிச்சென்றாள்
கையுறுமான்மறியோன்புலியூரன்னகாரிகையே. (௩௱௬௯)

ஊதியமெடுத்துரைத்தூடறீர்த்தல்.

இரும்பரிசிலேற்றவர்க்கருளி
விரும்பினர்மகிழ மேவுதலுரைத்தது.

காரணிகற்பகங்கற்றவர்நற்றுணைபாணரொக்கல்
சீரணிசிந்தாமணியணிதில்லைச்சிவனடிக்குத்
தாரணிகொன்றையன்றக்கோர்தஞ்சங்கநிதிவிதிசே
ரூருணியுற்றவர்க்கூரன்மற்றியாவர்க்குமூதியமே. (௪௦௦)

பரத்தையிற்பிரிவு முற்றிற்று.

திருக்கோவையார் முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

பாட்டுமுதற்குறிப்பகராதி.